


கவிஞர் வாலியின்
பாண்டவர் பூமி
ஒரு மதிப்பீடு

பேராசிரியர் முனைவர்
ந சுப்பு ரெட்டியார்







எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.



1916 2016
ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publication

கவிஞர் வாலியின்

பாண்டவர் பூமி
ஒரு மதிப்பீடு

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

ஒரு படைப்பு வந்ததும் அதனை உடனே
திறனாய்வு செய்து நூல் வெளியிடும்
நல்லதொரு மரபினை அடியெற்றி
படைக்கப்பெற்றது இந்நூல்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-938927-4-9

eBOOK ~ மின் நூல்

கவிஞர் **வாலி**யின்

பாண்டவர் பூமி

ஒரு மதிப்பீடு

அருங்கலைக்கோன், சடகோபன் பொன்னடி, சேவா ரத்னா,
தமிழ்ப்பேரவைச் செம்மல், கலைமாமணி, ஆய்வுத்தமிழரசு,
பொதுமறைச் செம்மல், வைணவ இலக்கிய மாமணி

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

முன்னாள் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்





1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

கவிஞர் வாலியின் **பாண்டவர் பூமி** ஒரு மதிப்பீடு

முதற்பதிப்பு – 2002
இரண்டாம் பதிப்பு - 2018

PRICE: Rs.675.oo

Published by:
ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications
AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN: 978-81-938927-4-9

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095



அன்புப்படையல்

வீடுதோறும்
விகடன் மூலம்-

கமகமவென்று
கமழ்கின்றது-

நயத்தகு-
நகைச்சுவை வாசனை;
நாடு மறக்குமா-அதை
நல்கிய வாசனை?

இருபதாம் நூற்றாண்டில்
இருந்தமிழில்...

ஏடு நடத்திய
ஏந்தல்களில்
ஏற்றம் மிக்கவர்
எஸ். எஸ். வாசன்!

வாசன்-
வண்ணத்தமிழ் நேசன்;
நல்ல எழுத்துக்கு
நாளும் தாசன்!

என்னைப் பெரிதும்
ஈர்த்தவர்;

தமியேன்-
துறையூர் வாசியாய்...
இருந்த நாளிலேயே-என்
இதயத்தில் அன்பை வார்த்தவர்;

இருந்த நாள்வரை
இணையும் ஈடும் இன்றி-
அகில மெங்கும்
ஆனந்த விகடன் மூலம் ஆர்த்தவர்!

விகடனில்
வெளிவந்த...

'பாண்டவர் பூமி'
பற்றி-

அடியேன் எழுதிய
ஆய்வை-

நான்
காதல் செய்யும் வாசனுக்குக்-
காணிக்கை ஆக்குகிறேன்.

டாக்டர் ந. சுப்புரெட்டியார்

சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ் மொழித்துறை

டாக்டர் வ. ஜெயதேவன்
பேராசிரியர் - தலைவர்

சென்னை-600 005
11—3—2002

அணிந்துரை

இந்தியத் திருநாட்டிற்கு எத்தனையோ பெருமைகள் உள்ளன. அவற்றுள் அதன் இதிகாசப் பெருமை மிகவும் சிறப்பாகக் குறிக்கப்படுகிறது. இராமாயணம், மகாபாரதம் என்னும் இருபெரும் இதிகாசங்களின் தாயகமாக இந்தியா திகழ்வதே அத்தகு சிறப்பிற்குக் காரணம் ஆகும்.

சுவாமி விவேகானந்தர் கூறும் பின்வரும் கருத்துகளைக் கூர்ந்து படித்தால் இந்திய இதிகாசப் பெருமையை நன்கு தெரிந்துகொள்ளலாம்:

"There are two great epics in the Sanskrit language, which are very ancient. They embody the manners and customs, the state of society, civilization. etc., of the ancient Indians. The oldest of these epics is called Ramayana, 'The Life of Rama'. ...Rama and Sita are the ideals of the Indian nation. All children, espicially girls, worship Sita. The height of a woman's ambition is to be like Sita, the pure, the devoted, the all-suffering.

Mahabharata means Great India or the story of the great descendants of Bharata. This epic is the most popular one in India; and it exercises the same authority in India as Homer's

poems did over the Greeks. The internal conflicts between righteousness and filial affection in the of the god-fearing, yet feeble, old, blind King Dhritarashtra, the majestic charecter of the grandsire Bhishma; the noble and virtuous nature of the royal Yudhishthira, and of the other four brothers, as mighty in valour as in devotion and loyalty; the peerless charecter of Krishna. unsurpassed in human wisdom; and not less brilliant, the charecters of the women-the stately queen Gandhari, the loving mother Kunti, the ever-devoted and all suffering Draupudi-these and hundreds of other charecters of this Epic and those of Ramayana have been the cherished heritage of the whole Hindu world for the last several thousands of years and form the basis of their thoughts and of their moral and ethical ideas. In fact, the Ramayana and the Mahabharat are the two encyclopaedias of the ancient Aryan life and wisdom. portraying an ideal civilization which humanity has yet to aspire after.

When you study these charecters. you can at once find out how different is the ideal in India from that of the West. The West says, 'Do! Show your power by doing.' India says, Show your power by suffering. "The West has solved the problem of how much a man can have; India has solved the problem of how little a man can have." [Swami Vivekananda. My India: The India Eternal, Calcutta: The Ramakrishna Mission Institute of Culture,1996, 2nd reprint, pp.14-15]

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வடமொழியில் இயற்றப்பட்ட இந்த இதிகாசங்கள் இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் அம்மொழி மரபுகளுக்கேற்பக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் படைக்கப்பட்டுள்ளன: முழுமையாக வும் பகுதியாகவும் படைக்கப்பட்டுள்ளன. செய்யுள், உரைநடை என்னும் இருவகை நடையிலும் படைக்கப்

பட்டுள்ளன. நாட்டுப்புறக் கதைகளிலும் கதைப்பாடல்களிலும் பிற கலைவடிவங்களிலும் படைக்கப்பட்டுள்ளன. இக்கால இலக்கிய வடிவங்களிலும் பல்வேறு கலை வடிவங்களிலும் படைக்கப்பட்டுள்ளன. பல்வேறு ஊடகங்கள் வாயிலாகவும் படைக்கப்பட்டுள்ளன. திரைப்படம், வானொலித் தொடர், தொலைக்காட்சித் தொடர், மேடை நாடகம், பள்ளி, கல்லூரி மேடைகள், இலக்கிய விழாக்கள், சொற்பொழிவு, கவியரங்கம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம், ஆய்வு எனப் பல நிலைகளிலும் முறைகளிலும் இந்த இதிகாசக் கதைகள் நாடு முழுவதும் பரவியுள்ளன.

காலந்தோறும் நிகழும் இத்தகைய நன்முயற்சிகளின் தொடர்ச்சியாகக் கவிஞர் வாலி இக்காலத்தில் மிகவும் செல்வாக்குற்றுத் திகழும் புதுக்கவிதை வடிவில் கம்பராமா யணம், வில்லிபாரதம் ஆகியவற்றைத் தழுவி முறையே *அவதார புருஷன், பாண்டவர் பூமி* என்னும் அழகிய பனுவல்களை எளிய இனிய தமிழில் படைத்துள்ளார். கவிஞர் வாலியின் அவதார புருஷன் வெளிவந்த உடனேயே அதனை நன்கு ஆராய்ந்து தமிழ் மூதறிஞர் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் தனது 82-வது அகவையில் கவிஞர் வாலியின் அவதார புருஷன்-ஒரு மதிப்பீடு என்னும் ஆய்வு நூலை 1997-இல் அழகுற வெளியிட்டதைத் தமிழுலகம் நன்கறியும். அவ்வாறே, கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி வெளிவந்த உடனேயே அதனையும் நன்கு ஆராய்ந்து இப்போது *கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி-ஒரு மதிப்பீடு* என்னும் இந்த ஆய்வு நூலைத் தனது 87-ஆவது அகவையில் பேராசிரியர் சுப்பு ரெட்டியார் வெளியிட்டுள்ளார். ஒரு படைப்பு வந்ததும் அதனை உடனே திறனாய்வு செய்து நூல் வெளியிடும் நல்ல மரபைப் பேராசிரியர் தமிழுக்குத் தோற்றுவித்திருப்பது மிகவும் பாராட்டற்குரியது.

திரைப்படப் பாடலாசிரியராகவும் கவியரங்கக் கவிஞராகவும் பொய்க்கால் குதிரைகள் முதலிய படைப்புகள்

வாயிலாகவும் கவிஞர் வாலி தமிழுலகிற்கு நன்கு அறிமுக மானவர். புகழ்பெற்ற படைப்பாளியான அவர், புகழ்பெற்ற இராமன் கதையை அவதார புருஷன் என்னும் தலைப்பிலும் புகழ்பெற்ற பாரதக் கதையைப் பாண்டவர் பூமி என்னும் பெயரிலும் புகழ்பெற்ற புதுக்கவிதை வடிவில் படைத்ததன் வாயிலாகப் புகழின் உச்சியை எட்டியுள்ளார். அன்னாரின் பாண்டவர் பூமி குறித்த பேராசிரியர் சுப்பு ரெட்டியாரின் மதிப்பீட்டை இனி நோக்கலாம்.

கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி - ஒரு மதிப்பீடு என்னும் இந்த நூல், நூல்முகம் நீங்கலாகப் பன்னிரண்டு இயல்களைக் கொண்டுள்ளது. திருமாலின் தசாவதாரங் களுள் கிருஷ்ணாவதாரமே ஆழ்வார்களை மிகவும் ஈர்த்தது. பாரதியாரும் கண்ணனைக் கதாநாயகனாகக் கொண்டு கண்ணன் பாட்டுப் பாடினார். தூது போனவன் ஏற்றம் சொல்வது பாரதம் என்னும் ஸ்ரீவசனபூஷண வாக்கும் எழுந்தது. சௌலப்பியமே வடிவெடுத்தவன் கண்ணன். கண்ணன் இல்லையென்றால் பாரதமே இல்லை. இவ்வாறு கண்ணன் பெருமை பேசிப் பாரதத்தை ஆசிரியர் நூல்முகம் என்னும் பகுதியில் அறிமுகப்படுத்துகிறார். அன்றியும், கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி என்னும் பெயர் அந்நூலுக்குப் பெருந்துமாற்றையும் இப்பகுதியில் புலப் படுத்துகிறார்.

தோரணவாயில் என்னும் முதல் இயல் பாரதக் கதை மாந்தர்களை அறிமுகப்படுத்திப் பாண்டவர் பூமியில் கவிஞர் வாலி செய்துள்ள புதுமைகளைச் சுட்டிக் காட்டுகிறது. விதுரனின் திருமணம், கண்ணனை விதுரன் மனைவி வரவேற்றமை, விதுரனின் முற்பிறப்பு வரலாறு போன்றவை வில்லியில் இல்லை என்பதை எடுத்துக்காட்டி இத்தகைய மாற்றங்கள் பாண்டவர் பூமி என்னும் காவியத்தின் கதை யோட்டத்திற்கும் சுவைக்கும் துணை செய்வனவாக உள்ளன

என ஆசிரியர் ஆராய்ந்து கூறியுள்ளார். வாலி செய்துள்ள வியாதனின் படைப்பு சீர்திருத்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது என்றும்,

பிறப்பால் நானொரு
புளிஞன் எனினும்
தெய்வானுக் கிரகத்தால்—நான்
தெளிஞன்

என்று தொடங்கிக் கவிஞர் வாலி விளக்கும் கருத்துகள் யாவும் உபநிடதக் கருத்துகளையும் விஞ்சுமாறு அமைந்துள்ளது என்றும் ஆசிரியர் கூறும் திறம் பாராட்டத்தக்கது. பெரும்பாலும் வியாசரை அடியொற்றியே பாண்டவர் பூமி நடை போடுகிறது என்பதை முதல் இயல் தெளிவுபடுத்துகிறது.

அடுத்து வரும் இயல் பாண்டவர் பூமியின் வருணனை வளத்தை விதந்துரைக்கிறது.

அந்தத்
தீர்த்தங்கரையின்—
திவ்வியத்தை அள்ளி—
புலவோர்
வார்த்தைக் கரையில்
வைத்ததுண்டு, அதன்—
வனப்பும்—
வசீகரமும்—
தவசிகளின் நெஞ்சையும்
தைத்த துண்டு!

அந்த—
மண்ணழகில்—
மன்னவர்க்குப்
பெண்ணழகும்—
கைத்த துண்டு
நூறிடத்தில் தாவி—

நொந்த நெஞ்சங்களும்—அந்த
ஓரிடத்தில் ஒன்றி—
மொய்த்த துண்டு!

இத்தகைய வருணனைகள் பலவற்றை வகைப்படுத்தி எடுத்துக்காட்டி இவற்றில் படிப்போர் மனம் ஈடுபட்டு மகிழ்வதை ஆசிரியர் சுட்டிக்காட்டிச் செல்லும் பாங்கு பாராட்டற்குரியது.

காவிய மாந்தர்கள்-அறிமுகம் பற்றி அமைகிறது. சகுனியை அறிமுகம் செய்யும்போது அவன்மீது கவிஞர் வாலி கொண்ட சினமும் சேர்ந்தே வெளிப்படுகிறது என்பதை ஆசிரியர் பின்வரும் எடுத்துக்காட்டால் விளக்குகிறார்:

தீய
வர்க்கத்தை—
மொத்தமாக—
குத்தகைக்கு எடுத்தவன்
சுத்தமாக—
சத்தியத்தை விடுத்தவன்
... ...
சகுனி, அவன்
ஆணுருக் கொண்ட
ஆயிரம் கூனி
... ...
சூதாடுவதிலும்—
சூதை உள்வைத்து—
வாதாடுவதிலும்
அவன்போல்—
ஆருக்கும் வராது—அத்துணை
ஆகடவிகடம்

இவ்வாறு ஐம்பத்தைந்து கதைமாந்தர்களையும்

ஆசிரியர் அறிமுகப்படுத்திக் கவிஞர் வாலியின் ஆற்றலைப் புலப்படுத்துகிறார்.

அடுத்துவரும் இயல் பாண்டவர் பூமியின் அணிநலன் களை ஆராய்கிறது. கவிஞர் வாலியின் உருவகிக்கும் ஆற்றலை ஆசிரியர் பின்வரும் எடுத்துக்காட்டுவழி விளக்குகிறார்:

அழகு—
அங்கமெல்லாம்
அப்பிக் கிடக்கும்
அளகபாரத்தில்
ஐப்பசி மேகம்
கப்பிக் கிடக்கும்
விழி விளக்குகள்
வெளிச்சத்தைத்
துப்பிக் கிடக்கும்
உதட்டுப் பூக்கள்
உள்ளிருக்கும் கள்ளால்
உப்பிக் கிடக்கும்

இவ்வாறே கவிஞர் வாலியின் உவமிக்கும் ஆற்றலையும் எடுத்துக்காட்டுகள் பலவற்றின் வாயிலாக ஆசிரியர் புலப்படுத்துகிறார். காட்டாகப் பின்வருவனவற்றைக் குறிக்கலாம்:

விதையிலிருந்து எழுகின்ற
விருட்சம் போல்—அவன்கை
கதையிலிருந்து எழுந்தது
...

முற்றுப்புள்ளி வைத்த
வாக்கியம் போல்—
முடிந்து போனாள்

அடுத்துவரும் இயல் பாண்டவர் பூமிவழி வெளிப்படும் கவிஞர் வாலியின் சொல்லாட்சிச் சிறப்பைச் சான்று காட்டி விளக்குகிறது.

மூவரசு காத்து வந்த
முத்தமிழை—அந்தப்
பூவரசு சுற்றி வந்து
பெற்றவன் நான்

எனக் கவிஞர் வாலி தன்னைப் பற்றிக் கூறும்போதும்,

பிள்ளையார் சுழியைப்
பிள்ளையாரே போட்டு
எழுதிய ஒரே கதை
இந்தக்கதைதான்

என மகாபாரதத்தைக் கூறும்போதும்,

இன்னும்
இறவாதிருக்கும்
ஒரு கதை, கிராமத்து
மண்ணும்
மறவாதிருக்கும்
ஒரு கதை, இதன்
மகத்துவத்தைப் பேச—என்
கவித்து வத்திற்கு ஏது
அருகதை?

உப்புக் கடலின்
உள்ளீ டெல்லாம்—ஒரு
செப்புக் குடமா
செப்பக் கூடும்?—நாகம்
கக்கும் மணியின்
கீர்த்தியை முழக்கி—சிறு
நாக்குப் பூச்சியின்
நாக்கா பாடும்?

திருப்பதிக் குடையின்
தெய்வீகத்தை—ஒரு
நாய்க் குடை கூறியா
நானிலம் அறியும்?—நிலத்தைப்
பேர்க்கும் ஈட்டியின்
பெருமை ஈதென—ஓலை
ஈர்க்குப் பேசியா
ஊர்க்குப் புரியும்?

எனத் தன்னடக்கமாகக் கூறும்போதும் அற்புதமாகச் சொல் வீச்சு வெளிப்படுவதை ஆசிரியர் அழகாக எடுத்துக்காட்டு கிறார். பழமொழி ஆட்சி, சொல்-பொருள் நயப்பகுதிகள், மரபுத் தொடர்கள் எனத் தலைப்பிட்டு ஆசிரியர் கவிஞர் வாலியின் பன்முகப்பட்ட கவிதைச் சிறப்புகளைப் புலப்படுத்துகிறார். சான்று இதோ:

ஞாயிறு வனப்பை—
தரையில் பூத்த—
திங்கள் கண்டது
அதன்—
செவ்வாய் வியந்து
'அடடா
அற்புதன்' என்றது
அந்த—
வியாழன் நிகர்த்த—துர்
வாசன் அருளால்—சொக்க
வெள்ளி நிகர்த்த—ஒரு
வெளச்சம் 'பளிச்'சென—
சனித்து நின்றது, ஒப்பின்றித்
தனித்து நின்றது

அடுத்துவரும் இயல் பாண்டவர் பூமியில் இடம் பெற்றுள்ள கிளைக்கதைகளை விளக்குகிறது. அதனை அடுத்துவரும் இயல் பாண்டவர் பூமியின் ஒன்பான் சுவைகள்

குறித்துப் பேசுகிறது. தொடர்ந்து வரும் இயல்களில் முறையே கிருட்டிணன் தூது, கவிஞர் வாலியின் கிருட்டிண பக்தி, உண்மைகளும் படிப்பினைகளும், கீதையின் சாரத்தின் சாரம் ஆகியவற்றை ஆசிரியர் விளக்குகிறார். முடிவுரையில் இந்த ஆய்வின் முடிவுகளைத் தொகுத்துரைக்கிறார் ஆசிரியர். '*கவிஞர் வாலியின் புதுக்கவிதையில் அமைந்த பாண்டவர் பூமி பொதுமக்களின் சொத்தாக அமைந்துவிட்டது. புலவர் கட்கும் எட்டும் போக்கிலும் அமைந்துள்ளது. இதனை இவ்வுலகுக்கு வழங்கிய உபகரித்த கவிஞர் வாலி 'தமிழ் வியாசர்' என்று கருதும் அளவுக்கு உயர்ந்துவிடுகின்றார். தமிழர் நெஞ்சங்களில் நிலையான இடத்தைப் பெற்றுத் திகழ்பவருமாகின்றார்*' என்பது நூலாசிரியர் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் கண்ட முடிபு, கொண்ட துணிபு.

இத்தகு இனிய நூலைப் படைத்த பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களுக்கு நமது பாராட்டுகள். தமிழ் உலகம் இந்நூலை நன்கு வரவேற்கும் என நம்புகிறேன்.

வ. ஜெயதேவன்

நூல்முகம்

என்கண்ணை மறந்துஉன்இரு கண்களையே
    என்அகத்தில் இருத்திக் கொண்டு
நின்கண்ணால் புவியெல்லாம் நீஎனவே
    நான்கண்டு நிறைவு கொண்டு
வன்கண்மை மறதியுடன் சோம்பர்முதல்
    பாவம்எல்லாம் மடிந்து நெஞ்சில்
புன்கண்போய் வாழ்ந்திடவே கோவிந்தா!
    எனக்கமுதம் புகட்டு வாயே![1]

—பாரதியார்

'கவிஞர் வாலியின் அவதார புருஷன்—ஒரு மதிப்பீடு' என்பதைத் தொடர்ந்து 'கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி—ஒரு மதிப்பீடு' என்ற என் நூல் தமிழுலகத்திற்குப் 'பிரவேசம்' ஆகிறது. முன்னது இராமனது 'மெய்யைத்' திறனாய்ந்தது; பின்னது கிருட்டிணனது 'பொய்யைத்' திறனாய்கின்றது. 'இரண்டுமே நமக்குத் தஞ்சம்' என்பது வைணவ சம்பிரதாய நம்பிக்கை.

கண்ணனைப் பற்றிப் பாரதியார் கூறுவது:

பிறந்தது மறக்குலத்தில்—அவன்
    பேதமற வளர்ந்ததும் இடைக்குலத்தில்[2]

கண்ணன் அம்புலிக் குலத்தில் பிறந்தவனாயினும் வளர்ந்தது ஆயர்கள் நடுவே ஆயர்பாடியில். அவன்

---

1. பா. க. தோ. பா. கோவிந்தன் பாட்டு-3
2. கண்ணன் பாட்டு-கண்ணன் என் தந்தை-4

மக்கள் மனத்தில் காட்சியளிப்பது இடையனாகவே. ஆழ்வார் பெருமக்களும் இந்நோக்கில்தான் கண்ணனைப் பற்றி அதிகமாகப் பாடியுள்ளனர். பாரதக் கதையில் ஏனைய காவிய மாந்தர்கள் ஆற்றிய பங்கைவிட கண்ணன் ஆற்றிய பங்குதான் பன்மடங்கு அதிகமானது. கண்ணனைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள்தாம் இலக்கியங்களிலும் அதிகமாக இடம்பெற்றுள்ளன. இதனால்தான் பாரதியாரும் கண்ணனைக் கதாநாயக னாகக் கொண்டு 'கண்ணன் பாட்டு' என்ற நெஞ்சை நெகிழ வைக்கும் இலக்கியத்தைப் படைத்தருளினார். கண்ணன் இல்லையென்றால் 'பாரதமே' இல்லை என்ற அளவுக்குக் கண்ணன் பெரும் புகழ் பெறுகின்றான்.

இராமன் கதை—இராம காதை; இராமாயணம். பாண்டவர்—கௌரவர் கதை பாரதம். கண்ணனைப் பற்றி தனிக் கதை இல்லையாயினும் (பாகவத புராணத்தைத் தவிர) பாரதத்தை நினைக்கும்போது கண்ணனே நம் மனக்காட்சியில் தென்படுகின்றான். 'தூது போனவன் ஏற்றம் சொல்வது பாரதம்' என்ற ஸ்ரீவசனபூஷண வாக்கும் எழுந்தது. சௌலப்பியமே வடிவெடுத்தவன் தேவகிமைந்தன்; நந்தகோபனின் வளர்ப்புப் பிள்ளை.

பூமியைப் பற்றிய வழக்கு காரணமாக எழுந்த பாரதத்திற்கு வாலியார் 'பாண்டவர் பூமி' என்ற பெயரிட்டு வழங்கினார். கௌரவர் தோற்று பூமி பாண்டவர் வசப்பட்டதால் 'பாண்டவர் பூமி' என்ற பெயர் நன்கு பொருந்துவதாயிற்று.

வில்லியும் நல்லாப் பிள்ளையும் புலவர்கட்கு மட்டும் விருந்தாக இருந்தனர். நம் அருமை இராஜாஜி அவர்கள் மக்கள் மனத்திற்கு உகந்த உரைநடையில் 'வியாசர்

விருந்து' என்ற தலைப்பில் பொதுமக்கட்கு எட்டச் செய்தார்கள். இன்று நவீன இலக்கிய தளமாக அமைந்த புதுக்கவிதையில் 'பாண்டவர் பூமி'யைப் படைத்து பொதுமக்கள் விருந்தாக்கியுள்ளார் கவிஞர் வாலி. அகிலம் புகழும் ஆனந்தவிகடனில் வாரந்தோறும் தொடர்ச்சியாக கிட்டத்தட்ட மூன்றாண்டு காலம் வெளிவந்த போதே இதன் நாடியை பொதுமக்கள் அறிந்து கொண்டார்கள். அத்தொடர்கள் ஒன்றுதிரண்டு நூல் வடிவத்தால் பொதுமக்கட்குக் கிட்டுகின்றது. இராமாயணத்தை விட பாரதம் பெரிய இதிகாசம். 'பன்னி யுரைக்கில் பாரதம்' என்ற ஆழ்வார் வாக்கும் இதனை உறுதிப்படுத்தும். ஆதலால் அக்கதை திருப்பதி 'பெரிய லட்டு' போல் பொதுமக்கள் கைக்குக் கிடைத்துள்ளது.

சிறுவயது முதல் (பத்தாண்டுப் பருவம்) இன்றுவரை பொதுவாக இலக்கியங்களிலும் சிறப்பாக பக்தி இலக்கியங்களிலும் ஈடுபடச் செய்து வருகின்றான் எம்பெருமான் ஏழுமலையான். 'பாண்டவர் பூமி'யில் ஆழங்கால் பட்டு அநுபவித்த அநுபவமே இப்போது 'கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி—ஒரு மதிப்பீடு' என்ற மகுடத்தில் வெளிவருகின்றது. கோலார் தங்கவயலில் கிடைக்கும் தங்கத்திற்கு 'காரட்டு மாற்று' அமைப்பது போல் கவிஞர் வாலியின் உள்ளத்திலிருந்து வெளிவந்த 'பாண்டவர் பூமி'க்கு ஒரு மதிப்பீடு இது. பன்னிரண்டு நோக்குகளில் மிக்க கவனத்துடன் நோக்கப் பெற்றதன் விளைவு இது. இதன் எழுத்துப்படியை முற்றும் நோக்கி அச்சேறிய நிலையில் பார்வைப் படிமங்களையும் சரிபார்த்து உதவிய என் அபிமான புத்திரி டாக்டர் M. B. சியாமளா எம்.ஏ.,எம்.ஃபில், பிஎச்.டிக்கு அடியேனின் ஆசி கலந்த நன்றி.

'காரட் மாற்று' கண்ட இந்த 'ஆற்றுப்படை' நூலுக்கு அரியதோர் அணிந்துரை வழங்கிச் சிறப்பித்தவர் பேராசிரியர் டாக்டர் வா. ஜெயதேவன் (பேராசிரியர்–துறைத்தலைவர் தமிழ் மொழித்துறை) அவர்கள். இவர் 1975–இல் நான் வல்லுநர் குழுவில் இருந்தபொழுது விரிவுரையாளராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர். அதன் பிறகு நான் 1978–இல் திருப்பதியில் ஓய்வு பெற்றுச் சென்னை வந்தபிறகு என்னுடன் நெருங்கிப் பழகியவர். இலக்கியத்துறையில் நான் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியராகப் பொறுப்பேற்றபிறகு இவருடன் மேலும் பழக்கம் நெருக்கமாயிற்று. படிப்படியாக இவரும் தம் உழைப்பின் காரணமாக துணைப் பேராசிரியர், என்று உயர்ந்துள்ளார். இவர்தம் சமத்துவ குணம் என்னை மிகவும் கவர்ந்தது. எவருடனும் இன்முகத்துடன் பழகும் பெற்றியர். அதிர்ந்து பேசார். விதிகட்குப் புறம்பாக யார் நடந்தாலும் சீற்றத்துடன் எதிர்ப்பவர். இத்தகைய நல்லவர், வல்லவரின் அணிந்துரை பெற்றது இந்நூலின் பேறு; ஏன்? என் பேறுங்கூட. அணிந்துரை நல்கிய அரிய நண்பருக்கு என் இதயங்கனிந்த நன்றி என்றும் உரியது.

திருவரசு புத்தக நிலையத்தார் இந்நூலின் கைப் படியை அன்புடன் ஏற்று சிறப்புடன் வெளியிட்டமைக்கு அடியேனின் நன்றி என்றும் உரியது. 'பாண்டவர் பூமி'க்கு ஆற்றுப்படை போல் அமைந்த இந்தத் திறனாய்வு நூலுக்கு தமிழ்கூறும் நல்லுலகில் நல்ல வரவேற்பு இருக்கும் என்பது அடியேனின் அதிராத நம்பிக்கை.

எண்பத்தாறு அகவை வரையிலும் தமிழ்த் தொண்டு புரிவதற்காகவே இவ்வுலகில் நல்ல உடல் நலத்துடனும் கண் ஒளியுடனும் அடியேனை வைத்திருக்கும் 'வேங்கடம் மேவிய விளக்கு'–'அகலகில்லேன் இறையும் என்று

அலர்மேல் மங்கை உறை மார்பன்'–இத்தகைய பல நற்பணிகளுக்காகவே வைத்திருக்கின்றான் என்பது அடியேனின் அதிராத நம்பிக்கை. அப்பெருமானுக்கு எண்ணற்ற சரணாகதி வணக்கங்கள்.

கண்ணன் திருவடி
எண்ணுக மனமே
திண்ணம் அழியா
வண்ணம் தருமே [3]

அடியேன்
ந. சுப்பு ரெட்டியார்

AD—13, அண்ணா நகர்
சென்னை–600 040
26–12–2001
(வைகுண்ட ஏகாதசி)

3. பா. க. தோ. பா. கண்ணன் திருவடி-1

உள்ளுறை

தோரணவாயில்

அப்பழுக்கற்ற களங்கமிலா வமிசத்தில் தோன்றியவர்களின் கதையை விளக்குவது 'அவதார புருஷன்' என்ற புதுக்கவிதைக் காவியம். அங்குக் காணும் நால்வரும் காக்கும் கடவுளின் அமிசமாய்த் தோன்றிய கதாநாயகர்கள்.

'பாண்டவர் பூமி' அம்புலி வமிசத்தில் தோன்றியவர்களின் கதையை விளக்குவது. அம்புலி களங்கமுள்ளவன். களங்கமிலாப் பகுதிக்குக் குறிக்கோளாக இருப்பவர்கள் வெள்ளை நிறத்து வாரிசாகத் தோன்றிய உத்தமபுத்திரர்கள்-பாமரர் முதல் படித்தவர்கள் வரை போற்றும் பாண்டவர்கள். அம்புலியின் களங்கமுள்ள பகுதிக்கு குறிக்கோளாக நிற்பவர்கள் கண்ணிலான் வாரிசாகத் தோன்றிய கவுரமற்றவர்கள்-யாவரும் தூற்றும் கவுரவர்கள். பாண்டவர்கள் பால்நிற வண்ணனின் வாரிசாக இருப்பினும் தேவர்களின் அமிசமாகக் கோபக்கார முனிவர் வழங்கிய மந்திரத்தின் மூலம் கோதில்லா குந்தி தேவியின் வயிற்றில் உதித்தவர்கள். கவுரவர்கள் கற்புக்கரசி, காந்தாரியின் உள்ளத்தில் அழுக்கு ஆறாக ஓடிய அழுக்காற்றின் விளைவாக வெளிப்பட்ட மாமிச பிண்டத்தின் மூலம் தாழிகளின் வழியாக வந்தவர்கள். பாண்டவர்களின் பிறப்பு நேரிய வழியில் அமைந்தது; அவர்கள் வாழ்வும் நேரிய வழியிலேயே சென்றது. கவுரவர்களின் பிறப்பு கோணல் வழியில் குடம் மூலம் அமைந்தது. 'முதற்கோணல் முற்றும் கோணல்' என்ற முதுமொழிக்கிணங்க அவர்கள் வாழ்வும் கோணலாகவே சென்றது.

'பாண்டவர் பூமி' என்ற காவியம் 'பூமி' பற்றிய வழக்கின் கதை. பூமி யாருக்குச் சொந்தம்? அஃது இறைவனுக்குத்தான் சொந்தம்! அது தனக்குத்தான் சொந்தம் என்று கொண்டாடிய மாவலிக்குப் பாடம் கற்பித்தான் இறைவன்-திரிவிக்கிரமாவதாரத்தின்

மூலம். இங்கு விழிஒளி இல்லானும் வெள்ளை வண்ணனும் விசித்திர வீரியனின் விழுதுகள். தந்தையின் சொத்து பிள்ளைகட்குப் பொது; இஃது உலக வழக்கு. இந்த சாதாரண உலக நீதியைக்கூட உணராமல் முரண்டு பிடிக்கின்றான் துரியன். இந்த முரண்பாடே 'பாண்டவர் பூமி' என்ற கதையாக வளர்கின்றது. இதில் உபநிடதம் எனக் கருதத்தகும் 'கீதை' பிறக்கவும் காரணமாகின்றது.

திருதராட்டிரன் காந்தாரியையும், பாண்டு குந்தி, மாத்தியையும், விதுரன் அறவழி வாழ்ந்த உத்தமன் தேவகன் புத்திரியையும் மணந்தனர் என்று வாலியார் கூறுவர். வில்லிபாரதத்தில் விதுரனுக்குத் திருமணம் நடைபெற்றதாகக் குறிப்பு இல்லை. கண்ணன் தூது சென்ற சமயம் கண்ணன் விதுரன் குடிலுக்கு எழுந்தருளியபோது விதுரன் மனைவி வரவேற்றதாக வாலியில் குறிப்பு உண்டு. வில்லியில் அஃது இல்லை. விதுரன்தான்,

"சுருதி நீ எய்தற்கு
என்ன மாதவம் செய்தது
இச்சிறு குடில்?" [1]

என்று கூறியதாகக் குறிப்பு உள்ளது. விதுரன் மாணி என்பதுதான் வில்லியின் கருத்து.

துரோணன், கிருபன் இவர்களின் பிறப்பு வரலாறுகள் விரிவாக விளக்கப்பெற்றுள்ளன. அவர்கள் அரச குடும்பத்தினருக்கு ஆசாரியர்கள் ஆன விவரங்களும் தரப்பெற்றுள்ளன. வில்லியினின்று இவை சிறிது வேறுபாடுகளுடன் காணப்பெறினும், காவியத்தின் கதையோட்டத்திற்கும் சுவைக்கும் துணை செய்வனவாக உள்ளன.

விதுரனின் முற்பிறப்பு வரலாறு வில்லியில் இல்லை. வாலியார் தம் காவியத்தில் அதனை விவரமாகத் தருகின்றார். தருமதேவதையே மகரிஷி மாண்டவ்யரின் சாபத்தால் அம்பிகையின் அடிமைப்பெண் வயிற்றில் விதுரனாய்ப் பிறக்கின்ற செய்தி வில்லியில் இல்லை; வாலியார் இதனைத் தம் காவியத்தில் அமைத்திருப்பது காவியத்திற்குப் புது மெருகூட்டுவதாக அமைகின்றது. பெண் ஆணாகப் பிறக்கும் செய்தி ஒரு புதிர்.

1. கிருட்டினன் தூது-78

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுறிந்து
வேந்தனும் வேந்து கெடும் (குறள்–899)

என்ற குறளுக்கு விளக்கம்போல அமைந்துள்ளது தருமதேவதைக்கு ஏற்பட்ட சாபம்.

அம்பையின் வரலாறு பல மாற்றங்கள் பெற்றுள்ளன. அம்பை ஓர் இயைக்கியின் அருளால் சிகண்டியாகப் பிறந்தாள் என்பது வில்லியில் காணப்படுவது. பெண்ணாகப் பிறந்தவள் ஆணாக மாறு கின்றாள். ஆனால் பாண்டவர் பூமியில் அம்பை தவம் செய்து முருகனிடமிருந்து பெற்ற பூமாலையைப் பாஞ்சால மன்னனின் மாளிகை வாயிலில் மாட்டிவிட்டு மறைகின்றாள். முக்கண்ணனை நோக்கித் தவம் செய்ய அவன் இவள் முன் தோன்றி "இப்பிறப்பில் அவள் குறிக்கோள் நிறைவேறாது; இன்னொரு பிறப்பில் பீஷ்மன் உன்னால் மாய்வான்" என்று கூறி மறைகின்றாள். அம்பையும் அக்கினிப் பிரவேசம் செய்து மாய்கின்றாள். துருபதன் மகளாகப் பிறக்கின்றாள்; சிகண்டி என்ற பேர் பெறுகின்றாள். வளர்ந்தபின் வாசலில் கண்ட மாலையை சூடிக்கொள்கின்றாள். வீடுமனின் பகை வருமே என்ற கவலை துருபதனுக்கு. மகளைக் காட்டில் விட, அவள் ஒரு கந்தருவனைச் சார்ந்து அவனது சித்தால் சிகண்டி ஆண் ஆகின்றாள். அரண்மனை திரும்பியவளை மன்னன் ஆணாகக் கண்டு பரவசப்படுகின்றான். வீடுமன் பற்றிய பயத்தையும் விடுகின்றான்.

வாலியார் படைப்பில் தரும் வியாதனின் படைப்பு சீர்திருத்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. தருமவியாதன் ஒரு கசாப்புக் கடைக்காரன்; தோலுரித்து ஆட்டைத் தொங்கவிட்டு வாணிகம் செய்பவன் இவன்; கவுசிகன் எனும் அந்தணன் பழ நூல்களை ஆய்ந்து அறத்தை நுவலுபவன். கதையில் கசாப்புக் கடைக்காரன் அந்தணனுக்கு அறக்கருத்துகளை எடுத்துக் காட்டும் வாய்ப்பு பெறுகின்றான். இங்கு புலால் விற்பவன் புலவனாகப் பேசுகின்றான். ஊன் விற்கும் தொழில் உயிர்க்கொலையை அடிப்படையாகக் கொண்டது. இத்தொழில் புரிபவன்மீது பச்சாதாபப் படுவதாகக் கவுசிகன் கூறும்போது பதிலுத்தரமாகக் கறிக்கடைக்காரன் பேசுகின்றான் குறுநகையுடன்:

பிராமணனே! உன்—
பச்சாதாபம்
பொருளற்றது;
இறைச்சி விற்பவனும்—என்
இதய இல்லம்—
இருளற்றது; ஓர்—

அந்தணனாயினும்—நீ
அடைந்த அறிவு—
அருளற்றது. அனைத்தும்—
தெய்வசித்தம்—எனத்
தேராததால்—அது
தெருளற்றது!

பிறப்பால் நானொரு—
புளிஞன்; எனினும்—
தெய்வானுக் கிரகத்தால்—நான்
தெளிஞன். (II—220)

என்று தொடங்கி விளக்கும் கருத்துக்கள் யாவும் உபநிடதக் கருத்து களையும் விஞ்சுமாறு அமைந்துள்ளது. கதையில் புளிஞனன்-அந்ததணன் உரையாடல் அமைத்தது வாலியாரின் புரட்சிகரமான நோக்கு. யுயுச்சு என்ற காவிமாந்தனின் படைப்பும் அற்புதம். வில்லியில் காணப்படாதது.

பல கிளைக்கதைகள் பொருத்தமாக அமைந்திருப்பது காவியத்தின் சுவையை மிகுவிப்பதாக உள்ளது. அவற்றைப் படித்து இடம் நோக்கிச் சிந்தித்தால் உண்மை தெளிவாகும்.

சிலப்பதிகாரம் சிந்தாமணி காவியங்கள் எழுந்தபிறகு அவற்றையெல்லாம் படித்தபின் தண்டியார் பெருங்காப்பிய இலக்கணம் வரைந்தார். பிற்காலத்தில் காவியம் படைப்பார்க்கு அஃது ஒரு வழிகாட்டியாக இருந்தது எனினும் அதன் நேர்வழி நின்று எவரும் காவியம் படைத்தாகத் தெரியவில்லை.

புதுக்கவிஞர்கள் அதனை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. அவதார புருஷனைப் படைத்தபோதும் பாண்டவர் பூமியைப்

படைக்கும் போதும் கவிஞர் வாலி தமக்கெனத் தாமாக ஒரு நியதியை வகுத்துக்கொண்டு காவியத்தைப் படைக்க முற்படுகின்றார். கம்பனார் படைத்தது போலவோ வில்லியார் படைத்தது போலவோ ஆர அமர உட்கார்ந்து கொண்டு மனத்தை ஒருமுகப்படுத்திக் காவியம் படைத்தவரல்லர் கவிஞர் வாலி. அப்பெருங்கவிஞர்கள் தம் படைப்பு முடிந்ததும் புலவர்கள் பொதுமக்கள் கூடிய ஒரு பேரவையில் தம் படைப்புகளை அரங்கேற்றம் செய்ததாக வரலாறு கூறுகின்றது.

'பாண்டவர் பூமி' அகிலம் போற்றும் 'ஆனந்தவிகடனில்' வாரந்தோறும் கோயில் பிரசாதம்போல சிறிது சிறிதாக வாசக அன்பர்கட்குக் கட்டுரைகளாகக் கிடைத்துக்கொண்டிருந்து. கிட்டத்தட்ட மூன்றாண்டு காலமாக அவை வரிசைப்படுத்தப் பெற்று நூல் வடிவம் பெற்றது. ஆதலால் பாண்டவர் பூமியைக் 'கட்டுரைக் காவியம்' என்று திருநாமத்தால் வழங்கலாம்.

இந்த நூல் மூன்று பகுதிகளாக அமைந்தது. மூன்றிலும் அமைந்த கட்டுரை விவரங்கள்:

முதற் பாகம்-	62	கட்டுரைகள்
இரண்டாம் பாகம்	57	,,
மூன்றாம் பாகம்	38	,,
ஆக மொத்தம்	157	கட்டுரைகள்

முதல் பாகம் தனி நூலாகவும், இரண்டு மூன்று பாகங்கள் சேர்ந்ததைத் தனி நூலாகவும் ஆனந்தவிகடன் வெளியீடாக நமக்குக் கிடைத்துள்ளன. இவற்றிலும் அவதார புருடனில் யுத்த காண்டம் ஒரே பாய்ச்சலில் முடிவு பெற்றது போல ஈண்டும் யுத்த காண்டத்தை அதே போக்கில் முடித்துக்கொள்கின்றார் வாலியார். பெரும்பாலும் வியாச பாரதத்தை அடியொட்டியே காவியம் அமைந்துள்ளது. இராஜாஜியின் 'வியாசர் விருந்தும்' ஒரு சிறிது உதவியிருக்கலாம் எனத் தோன்றுகின்றது. எனினும் பாரதியின் பாடல்கள், ஆழ்வார்களின் பாசுரங்கள் (குறிப்பாக விட்டுசித்தனின் பாசுரங்கள்) இவற்றின் தாக்கங்களைப் பாண்டவர் பூமியில் காண முடிகின்றது. அவற்றை ஆங்காங்கு பல இடங்களில் காட்டியுள்ளேன். இந்த

நுலின் மகுடமாக அமைந்திருப்பது கீதை காட்டும் பாதை. இராமன் எழுத்தில் காட்டாததை வாழ்ந்து காட்டினான். ஈண்டுக் கண்ணன் வாழ்ந்து காட்டியதுடன் எழுதியும் காட்டியுள்ளான். அந்த எழுத்துதான், இந்து சமய சாத்திரமாகிய 'பிரஸ்தான திரயம்' [2] என்பதில் கீதையும் ஒன்றாக அமைந்திருப்பது.

விகடனில் கட்டுரைகள் வரும்போதே கோயில் பிரசாதத்தை உண்டு மகிழ்வது போல் அவற்றைப் படித்து மகிழ்ந்தேன். நூலின் அவதாரம் என் கைக்குக் கிட்டியதும் எழுதத் தொடங்கினேன். கண்ணப்பன் கண்ணுதலப்பனுக்கு வழங்கிய அமுதைச் சுவைத்தது போல் மனத்தால் சுவைத்துச் சுவைத்து மகிழ்ந்து இந்நூலாக வடித்தேன். முன்னுரை (தோரணவாயில்) முடிவுரை நீங்கலாக நூல் ஒரு பதிகம்போல் பத்து இயல்களாக அமைந்துள்ளது. இந்த நூல் என் மனம் உரைத்த உரைகல்லாக அமைந்துள்ளது. வேறு பலர் படித்தால் வேறுவிதமாக அமைதலும் கூடும். படிப்போர் புதுக்கவிதையில் பரவசப்பட வேண்டும் என்பதையே என் நோக்கமாகக் கொண்டு நான் கூற வேண்டியவற்றை வாலியார் வாக்கிலேயே அமைத்துள்ளேன். அதனால் நூலும் நீண்டது; நீண்டாலும் வாசகர்க்கு வாலியாரின் கவிதையையும் படித்துச் சுவைக்க வாய்ப்பு தருகின்றது என்ற பெருமிதமும் மகிழ்ச்சியும் என்பால் எழுகின்றன. நூல் முடியும் வரை கண்ண பெருமானே எனக்கும் வழிகாட்டிக் கொண்டிருந்தான் என்பது என் அதிராத நம்பிக்கை.

2 திரயம்-மூன்று; உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம் பகவத் கீதை என்பவை

வருணனை வளம்

காவியங்களிலும் இதிகாசங்களிலும் வரும் வருணனைகள் அவற்றின் 'வண்ணக்கோலங்களாக' அமைந்து அவற்றிற்குச் சுவையூட்டுகின்றன; படிப்போருக்கும் மகிழ்ச்சியை நல்குகின்றன. இந்த வருணனைகள் எல்லாம் மரபுக் கவிதைகளில் அமைந்தவை. மரபுக் கவிதைகள் சொல்லாட்சிக்குப் பெயர் போனமையால் அவை ஆங்கெல்லாம் அற்புதமாக அமைந்திருப்பதில் வியப்பொன்றும் இல்லை.

வாலியாரின் 'பாண்டவர் பூமி' புதுக்கவிதையில் அமைந்திருந்தபோதிலும் அங்கும் சொல்வளத்திற்குக் குறைவில்லை. வாலியாருக்குச் சொல்வளம் கைவந்த சரக்கு. பாண்டவர் பூமியில் வருணனைகள் அமைந்திருக்கும் நேர்த்தியை நோக்குவோம். நம் நோக்கும் சில தலைப்புகளில் அமைகின்றது.

1. இயற்கை

இயற்கை ஐம்பெரும் பூதங்களால் ஆனது. அவற்றில் இப்பூமி அழகு கொழிக்கும் அற்புத உருண்டை. இப்படி அழகு கொழிப்பதற்குக் கதிரவனே முதற் காரணம், இதனால்தான் பாரதியார் கதிரவனைக் காதலனாகவும் பூமியைக் காதலியாகவும் காண்கின்றார்.[2] இந்த இரண்டும் இணங்கி இணைந்து இயங்குவதால்தான் இவ்வுலகிலுள்ள நிலைத்திணையும் இயங்குதிணையும் தோன்றி நிலை பெற்றுள்ளன. பூமியிலுள்ள தாவரங்கள் கதிரவன் ஒளியைக் கொண்டு வாழ்கின்றன.

2 பா. க. ஞாயிறு வணக்கம்-3

அவை கதிரவனிடமிருந்து ஒளியையும் வெப்பத்தையும் நேரே விழுங்குகின்றன. இந்த உலகில் தாவரங்களைத் தவிர வேறு எந்தப் பொருள்களும் பகலவனிடமிருந்து ஆற்றலைப் பெறும் திறனை அடையவில்லை. பூமியில் அழகு கொழிப்பதற்கு இதுவே காரணம். "செம்பொன்னை யுருக்கி வார்த்தாலெனக் காட்சி அளிக்கும் அந்திவான் செக்கரழகும், கொண்டல் கொண்டலாக ஓடும் புயலின் அழகும், அது பொழியும் மழையின் அழகும், அத் தண்புனல் மணற் கற்களை அரித்தோடும் அருவியின் அழகும், பச்சைப் பசேலெனப் பெருங்காட்சியளிக்கும் பொருள்களின் அழகும், அவற்றில் பச்சைப் பாம்பெனப் பின்னிக் கிடக்கும் பசுங்கொடிகளின் அழகும், அவற்றினின்றும் அரும்பியுள்ள நகை மலரின் அழகும்" (திரு.வி.க. முருகன் அல்லது அழகு) நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. பாவேந்தரின் 'அழகின் சிரிப்பு' என்ற நூல் ஓர் அழகுக் களஞ்சியம். இந்த அடிப்படையில் வாலியார் காட்டும் வருணனைகளைக் காண்போம்.

(1) (அ) **கங்கைக் கரை:** வேட்டை நடத்திய சந்தனு இளைப்பாற வருகின்றான் கங்கைக் கரைக்கு.

அதே–
கங்கைக் கரை;
காகங்கள்–
கரையும் கரை;
கிரௌஞ்சங்கள்–
இரையும் கரை;
பட்சி வர்க்கங்கள்–
உறையும் கரை;
பட்சி எச்சங்கள்
இறையும் கரை!

ஒரு வாய்–
நீர் வேண்டி.....
ஒன்றுக்கும் உதவாக் கரை–
வந்தாலும் உதவும் கரை!

தினப்படி–
தாகத்திற்கு–
தண்ணீர் குடிக்க வரும்–
தென்றலுக்கும்....
இக்கரை நீர்மீதுதான்–
அக்கறை; ஏனெனில்–
இக்கரை நீர்தான்–
சர்க்கரை!
எனினும்–
இக்கரை நெடுக....
வண்டிவண்டியாய்–
மண்டிக் கிடந்தது–
வண்டல் கறை; அதைத்
துடைக்க முயன்று–
தோற்றுப் போனது–
தண்ணீர் நுரை! (I — பக்29-30)

என்று கரையின் வருணனை நடைபெறுகின்றது. இதில் கரை, கறை, நுரை என்று முடியும் சொற்களின் ஓசை நயம் வருணனையை வளப்படுத்துவதைக் காண்கின்றோம்.

(1) (ஆ) 'பிராமணக் கோடி': *மகாநதியின் படுகையிலே உள்ள பல படித்துறைகளில் ஒன்று இது. பிரபலமான ஒன்று. இதைப்பற்றி வாலியார் வருணிப்பது:*

அந்தத்
தீர்த்தங்கரையின்–
திவ்வியத்தை அள்ளி–
புலவோர்

வார்த்தைக் கரையில்-
வைத்ததுண்டு; அதன்—
வனப்பும்—
வசீகரமும்—
தவசிகள் நெஞ்சையும்
தைத்த துண்டு!

அந்த—
மண்ணழகில்—
மன்னவர்க்குப்
பெண்ணழகும்—
கைத்த துண்டு;
நூறிடத்தில் தாவி—
நொந்த நெஞ்சங்களும்—அந்த
ஓரிடத்தில் ஒன்றி—
மொய்த்த துண்டு!

கங்கைக்
கரைகளிலேயே—அங்குதான்...

கிளி கொஞ்சும்; மாலைக்
கதிரவனின்—மஞ்சள்
ஒளி கொஞ்சும்; ஊர்சுற்றி—
ஓய்ந்துபோன—உச்சிமலை
வளி கொஞ்சும்; வந்து—
ஓய்வெடுப்பார் உள்ளமெல்லாம்—
களி கொஞ்சும்!

பார்க்கும் இடமனைத்தும்—
பச்சைப் பசேலென்று—
பசுமையை
வார்க்கும் சோலை; பட்சிகள்
ஆர்க்கும் சோலை!
சதா—நிலம்
சதுப்பாயிருப்பதால்—உடல்
வேர்க்கும் கவலை—எந்த
வேர்க்கும் இல்லை!

அந்த வண்ணச் சோலையின்—
வயிற்றுப் பகுதியில்—ஒரு
வசந்தமண்டபம் உண்டு;
அங்குதான்—
அத்தினபுரி ராஜ குடும்பம்—
ஆடிப்பாடி ராத்தங்கும்
சித்திராண்ணங்கள் உண்டு! (I— பக் 168—169)

வருணனைக் காட்சியில் படிப்போர் மனம் ஈடுபட்டு மகிழ்கின்றது.

(2) இடிம்பவனம்: *இடிம்பன் வாழ்ந்த இடம். அடர்த்தியாயிருந்த அந்த அடவியின் நடுவே ஓர் அழகான இடம்.*

அந்தம் மிகுந்த—
அந்த இடம்—ஒரு
துறக்கம்போல்—
துலங்கியது;
இலட்சணம் என்னும்
இலக்கியத்திற்கு—ஓர்
இலக்கணம்போல்—
இலங்கியது!

அதற்குக் காரணம்—
அந்தப் பிரதேசம்...
தானாக உண்டாகவில்லை; ஒரு—
தவசி உண்டாக்கியது!

ஏற்கெனவே—
இயற்கையோடு—
இயைந்திருந்த வனப்பை—அந்த
ரிஷியின் ஆன்மபலம்—
ரெண்டாக்கியது!

இருக்கு முதலான-
ஈரிரண்டு வேதங்களை—அவர்
உருப்போட்டவர்;
உருப்போட்டு—
உருப்போட்டு—அவை
ஓங்கி வளர—உள்நாக்கில்
எருப்போட்டவர்!

....

வருஷம் முழுவதும்—
வசந்தோத்சவம் போல் —
வளமாக இருந்தது—அந்த
வளாகம்; அந்த—
வளாகத்தின்—நடு
வயிற்றில் நாபிபோல்—
தித்திக்கும் தீர்த்தமொடு—ஒரு
தடாகம்!

அந்தத்
தடாகத்தைச் சுற்றிலும்—
தழையத் தழைய—
தழைச் சேலையை
கட்டிக்கொண்டு—
தலைநிறையப் பூவோடு—
தீர்க்க சுமங்கலிகளாக—
தருக்கள்; அந்தத்—
தருக்களின் மேல்—
தங்கிக் கொண்டு—
உருக்கமுடன்—
ஒவ்வொரு நாளும்—
குழல் போல் கூவும்—சாரங்கக்
குழுக்கள்!
வெயில்;
மழை;

காற்று;
அனைத்தும் அங்கு மிதம்;
ஆனந்தம் அபரிமிதம்! (I–பக் 305–306)

படிப்போர் மனத்தில் காட்சி சமீபித்து நின்றுவிடுகின்றது.

(3) பனிவரை: *இஃது இமயமலைச் சாரலுக்குப் பாண்டு தன் துணைவியர் இருவருடன் வரும் நிலையில் வருவது:*

நுனி வரை—பரவை—
நுரைபோல் வெளுத்த—
பனிவரை!—அங்கு
நெடுகப் பார்க்கலாம்—
நிட்டையில் இருக்கும் —பல
முனிவரை!—ஆயினும்
அவர்களில் ஆரும்—
அறியவொண்ணார்—அந்த
முதுவரை வயதினை—
இதுவரை!

பூமி—
பார்த்ததில்லை—அந்தப்
பெருவரை பெருமைக்கு—
ஒருவரை வகுத்துரைத்த
ஒருவரை!

புல்பூண்டு முதலான—
பல்லுயிரையும்—காக்கக்
கடவரை; காமாட்சி
கண்வரை—தனது
வசத்தில் வைத்திருக்கும்—
வடவரை! அந்தத்
தடவரை!
அதன்பேர் இமயம்! (I–பக்–101)

இஃது இமய மலையை வருணிப்பது. இதிலும் 'வரை' என்று இறும் சொற்களின் ஒலிநயம் வரையறையின்றி வருணனையை வளப்படுத்துவதைக் காணலாம்.

(4) ஆயர்கள் ஆராதனைக்குரிய கிரி: இதன் வருணனை வாலியார் வாக்கில் அமைகின்றது.

தண்ணீர்க் குழந்தைகளை—தம்
பன்னீர்க் குடங்களில்—
தாங்கி வரும்.....

நிறைமாத கர்ப்பிணிகளின்—
நிழல் மேகங்கள்
நீள்விசும் பெனும்
நெடுஞ்சாலையில் நடக்கையில்...

அசதி மேலிட்டு—
ஆடுசதை கடுத்தால்—அவை
அக்கடா என்று—
ஆசுவாசப் படுத்திக் கொள்ள....

அந்த—
மார்க்கத்தில்—ஒரு
முசாபரி பங்களா உண்டு;
ரம்மியம் மிகுந்த—
ரைவத பர்வதம் என்று!

மந்த மாருதம்—
மெல்ல மேய்ந்திடும்—அந்த
மலையின் முடியில்—அனிச்சி
மலர்கள் மடியில்....

வேலை முடிந்து—
வீடு திரும்பும்—
மாலை வெயிலும்—சற்று
மல்லாந்து துயிலும்!

இஃது இமய மலையை வருணிப்பது. இதிலும் 'வரை' என்று இறும் சொற்களின் ஒலிநயம் வரையறையின்றி வருணனையை வளப்படுத்துவதைக் காணலாம்.

(4) ஆயர்கள் ஆராதனைக்குரிய கிரி: *இதன் வருணனை வாலியார் வாக்கில் அமைகின்றது.*

தண்ணீர்க் குழந்தைகளை—தம்
பன்னீர்க் குடங்களில்—
தாங்கி வரும்.....

நிறைமாத கர்ப்பிணிகளின்—
நிழல் மேகங்கள்
நீள்விசும் பெனும்
நெடுஞ்சாலையில் நடக்கையில்...

அசதி மேலிட்டு—
ஆடுசதை கடுத்தால்—அவை
அக்கடா என்று—
ஆசுவாசப் படுத்திக் கொள்ள....

அந்த—
மார்க்கத்தில்—ஒரு
முசாபரி பங்களா உண்டு;
ரம்மியம் மிகுந்த—
ரைவத பர்வதம் என்று!

மந்த மாருதம்—
மெல்ல மேய்ந்திடும்—அந்த
மலையின் முடியில்—அனிச்சி
மலர்கள் மடியில்....

வேலை முடிந்து—
வீடு திரும்பும்—
மாலை வெயிலும்—சற்று
மல்லாந்து துயிலும்!

அருவிமகள்–
அடவு பிடிக்கும்–
ஓசையும் ஒயிலும்–ஊரார்க்கு
உணர்த்துமந்த சயிலம்!

ஓர்–
அந்தம் அற்ற–
அந்தம் பெற்ற–
அந்தப் பர்வதம்–
ஆயர் குலத்தவர்–
அனைவர்க்கும்–
ஆராதனைக் குரிய தெய்வதம்! (II பக்–42–43)

வளமான வருணனை படிப்போரை 'வாருங்கள்! வாருங்கள்!' என்று வரவழைக்கும் வண்ணம் மிக்க தெய்வப் பருவதம்!

ஆழ்வார் பாசுரங்களில் இம்மலை 'கோவர்த்தனம்' என்ற பெயரால் சுட்டப்பெறுகின்றது. வடமதுரையிலிருந்து சுமார் 20 கி. மீ. தொலைவிலுள்ளது. மரங்கள் நிறைந்து அழகான காட்சி தருகின்றது.

குரவிற் கொடிமுல்லைகள் நின்று
உறங்கும் கோவர்த்தனம் [3]

என்று வருணிப்பர். கோவர்த்தனத்தைப் பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார் ஆகிய மூவரும் மங்களாசாசனம் செய்துள்ளனர். கண்ணன்மீது காதல் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாத நிலையிலுள்ள ஆண்டாள்,

கற்றன பேசி வசவு உணராதே
காலிகள் உய்ய மழைதடுத்துக்
கொள்ளக் குடையாக எய்தி நின்ற
கோவர்த்தனத்து என்னை உய்த்திடுமின். [4]

3 பெரியாழ். திரு. 35: 11
4 நாச். திரு. 12: 8

என்று தன்னைக் கோவர்த்தன மலையருகே கொண்டு போய் விடுமாறு வேண்டுகின்றாள்.

நம்மாழ்வார் கண்ணன் கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்த நிகழ்ச்சியை,

> உண்ண வானவர்கோனுக்கு ஆயர் ஒருப்படுத்த
> அடிசில் உண்டதும்
> வண்ண மால்வரையை எடுத்து மழை
> ....காத்ததும்...
> எண்ணும் தோறும் என்நெஞ்சு எரிவாய்
> கொழுந்து ஒக்கும் [5]

என்ற பாசுரத்தில் ஆழங் கால் பட்டு அனல் வாய்ப்பட்ட மெழுகுபோல் உருகுகின்றார். திருவரங்கப் பெருமான்மீது மோகித்த நிலையில் ஆழ்வார் பாசுரம் தாய்ப் பாசுரமாக வடிவெடுக்கையில்,

> கொழுந்து வானவர்கட்கு என்னும்; குன்று ஏந்தி
> கோநீரை காத்தவன் என்னும் [6]

என்று மகள் அநுபவமாக வெளிப்படுவதை எண்ணி நாமும் அந்நிலையை எட்ட முயல்கின்றோம்.

(5) காம்யக வனம்:

> அந்த–
> அடவியின் பெயர்
> காம்யக வனம்; அதைக்
> கண்டபின் மீளாது–
> காண்போர் கவனம்; அங்கு–
> காலையும் மாலையும்–
> கேட்கலாம்–கருங்
> குயில்களின் கவனம்!

---

5 திருவாய் 5. 10: 5
6 திருவாய் 7-2: 8

மலை—
முடியிலிருந்து—
தலைகுப்புறத்—
தரையில் விழுந்தும்...

கால்முட்டியாலோ—
கைமுட்டியாலோ—
சின்னச்—
சிராய்ப்புக்கூட இல்லாமல்....

பாட்டுப்—
பாடிக்கொண்டே—
படுகுஷியாய் நடக்கும்—
பசும் புனலும்;

புலரியில்—சீதப்
புனலில்—
கழுத்தோடு—
குளித்துவிட்டு...

கடம்ப மரத்தின்—
கிளையில் குந்தி—இலைகளால்
உடம்பு துடைத்துக் கொள்ளும்—
உள்ளான்களும்;

காலையில்—
கண்விழித்ததும்—
கண்ணாடி பார்த்தால்
காரிய சித்தி என்று...

பூவில் பூத்தி ருக்கும்
பனித்துளியில்—தனது
முகம் பார்த்து முடிகோதி—
முரலும் வண்டுகளும்;
கறுப்பில் நடந்தால்—
காலிடற நேரும் என்று—
பொருப்பில் உட்கார்ந்தே—ராப்
பொழுதைக் கழித்துவிட்டு....

வெளிச்சம் வந்ததும்–
விழிகளின் விளிம்பிலுள்ள–
புளிச்சை போகப்–
பூஞ்சுனையில் மூஞ்சி கழுவி....

வனம் சுற்ற–
வெளிக் கிளம்பும்–
வடகாற்றும்;

கீழ்த்திசைக் கிரணம் வந்து–
வாழ்த்திசை பாடியபின்....

முகைக் கதவை
மெல்லத் திறந்து–
நகை புரியும்
நளினிவாழ் நளினங்களும்;

சேய்மையில் கேட்கும்–
சீயங்களின் கர்ச்சனையும்–
கர்ச்சனை கேட்டு–மலஜலம்
கழித்தபடியே–தனது
கன்றுகளுடன் விரையும்–
சதைக் குன்றுகளின் பிளிறல்களும்;

வரிப் புலியின்–
உருமல்களும்;
வரிக் குதிரைகளின்
செருமல்களும்;

கீழா நெல்லியின்–
கிளைமேலிருந்து–
கீச்சு கீச் சென்று–
கிரௌஞ்சங்கள்

தமக்குள் பரிமாறிக் கொள்ளும்–
தகவல்களும்;
அலகுகளை–
அகலத் திறக்கும்–

அழகிய மயில்களின்—
அகவல்களும்;

ஈரும் பேனும்—
எடுத்துவிட்டு—பின்
சேரும்—
செங்குரங்குகளும்;

பத்தடிக்குப்—
பத்தடி—
தத்தில் தாவும்
தங்க மான்களும்;

இன்னும்—
எவ்வளவோ! எவ்வளவோ!
அடடா! அனைத்தும்—
அந்த ஆரண்யத்தின்—
அழகுக்கு
அழகு செய்தது; அந்த—

அழகுமிகு—
அழகு—
உதிட்டிரன் மனத்தில்
உவகையைப் பெய்தது! (II- பக். 158—160)

இந்த வருணனையைப் படிக்கும் நமக்குஅந்த வனத்தையே நம் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்து கின்றது. நம்மையும் யுதிஷ்டரனின் குழுவில் ஒருவராக நினைக்கச் செய்துவிடுகின்றது (Empathatic Feeling).

(6)அர்ச்சுனன் வந்த இடம்: *ஓராண்டுத் தீர்த்த யாத்திரையாகப் புறப்பட்ட தனஞ்செயன் தமிழகத்தில் வந்த காட்டைப் பற்றிய வருணனை:*

தண்ணீர் மேகம்–
தாழப் பறந்து–
தலையைத் தடவி–

அடிக்கடி–
அன்பு காட்டும்– ஓர்
அடர்ந்த அடவி!

கால்போன போக்கில் நடந்து–
கரடு முரடுகளைக் கடந்து–

புள்ளும்;
பொறி வண்டும்;
சிறுகாலும்;
சிற்றோடையும்;

கானம் பழகும்– அந்தக்
கானம் புகுந்தான்....
....
விஜயன்–
விஜயம் செய்த இடம்...

வேத வித்துகள்–
விடியுமுன்–
ஸ்நானம் செய்கின்ற–
சானவியின் உற்பத்தி
ஸ்தானம்!
....
அந்த–
ஆரண்யத்தில்...

ரிஷிகள்;
ரிஷிபத்தினிகள் தவிர–
மீதி வாசிகள்–
ஆதி வாசிகள்!

ஆதலால்–
அவர்கள் பராமரிப்பில்....

தோப்பும்—
துரவுமாய்;
வயலும்—
வாய்க்காலுமாய்....

அந்தப் பிரதேசமே—பசுமை
அப்பிக் கிடந்தது; எங்கும்
கலப்படமற்ற தூய்மை—
கப்பிக் கிடந்தது!

அர்ச்சுனன்—
ஆற்றுப்—
படுகையில் உள்ள—
படிகளில் இறங்கினான்; ஊதை—
படுகையில்—உடலம்
புளகித்துக் கிறங்கினான்!

குடுகுடு வென்று—
குறுக்கும் நெடுக்குமாக—
சடுகுடு ஆடும்;
சரளி வரிசை பாடும்....

காற்றிசை; தெங்கின்
கீற்றிசை; தண்சுனை—
ஊற்றிசை; தொய்யிலின்—
நாற்றிசை ஆகியவை—
நாற்றிசை பரவும் நாழியில்—
மேற்றிசை புகுந்தான்....

வெய்யோன்; ஆயிரம்—
கையோன்!

ஆம்!
அது—
ஆகாயத்திடம்—
நிலம்—
நிலாப் பிச்சை—கேட்டுச்

சரணடையும்—
சாயரட்சை!

கங்குல்—மண்மேல்
கவியத் தொடங்கியது;
கறுப்புக் குப்பை—
கொஞ்சம் கொஞ்சமாகக்—
குவியத் தொடங்கியது! (II—பக்.24—25)

இங்கு வருணனை நம் சிந்தையில் படமாகிறது. சொல்லாட்சி நம் உள்ளத்தைச் சொக்க வைக்கின்றது!

(7) மாண்டவ்யர் வாழ்ந்த இடம்: *காட்டு வருணனை பல இடங்களில் வருகின்றன. அவற்றில் ஒன்று மகரிஷி மாண்டவ்யர் வாழ்ந்த காடு. அக்காட்டைப் பற்றிய வாலியாரின் வருணனை;*

அதுவொரு—
பெரிய காடு; அங்கு—
ஓங்கி நிற்கும்
ஒவ்வொரு மரமும்—ஒரு
பெருமாள் மாடு!

காற்றின் கை— கொஞ்சம்
காதருகே வந்தால் போதும்...
ஒரு
காரண—
காரியமின்றி—
தலையை ஆட்டும்—அந்தத்
தருக்களின் கூட்டம்!

அந்த
முல்லை நிலத்தின்
மார்பின் மேல்—
யாரோ
பிரம்மோபதேசம் செய்து—
போட்டுவிட்ட—

யக்ஞோபவீதம் போல்...
நெளிச்சலும் வளைச்சலுமாய்
நதியொன்று ஓடும்;
காலையும் மாலையும்—
அலைகள்
சந்தி செய்வதுபோல்—
காயத்திரியை ஓதும்!

அந்தப்
புனலில் படுகையில்—ஒரு
பர்ணசாலை; அதன்
வலமும் இடமும்
வாசப்பூக்கள் வனைந்த—
வர்ண சாலை!

பிரதிதினமும்—
புலரியில்...
அந்தப்
பர்ணசாலையை—ஒரு
பிரதட்சிணம் வந்து—அதன்
நுழை வாயிலின் நேரே—
நெடுஞ்சாண் கிடையாக—
நிலத்தில் விழுந்து—
நமஸ்கரித்து விட்டுத்தான்...
தன்
பணிகளைத் தொடங்கும்—
பனிமலைக் காற்று! (II—பக்.71)

இந்த அற்புதமான வருணனையில் தொடங்குகின்றது இந்தக் கட்டுரை. சில கட்டுரைகளின் தொடக்கம் அற்புதமாக அமைந்துள்ளது என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு. பர்ணசாலை—வர்ணசாலை இணையை எண்ணி ஓர்ந்து மகிழலாம்.

2. சூரிய மண்டலம்

இயற்கையின் முக்கிய பகுதி இது. பார்த்தனுக்குப் பரந்தாமன் வழங்கிய திவ்விய சக்சுவை நாம் பெற்று இந்த அகிலத்தை அண்ணாந்து நோக்கினால் எவற்றைக் காண்போம்? கதிரவன் ஒரு மீனம்போல் தோன்றுவான். நெடுந்தூரம் வானிற் சென்றால் அவன் ஒரு சிறுமீன் போலாகிவிடுவான். வானவெளியில் காணப்பெறும் அண்டங்களில் கதிரவனும் ஒன்று. அண்டங்களின் அதிசயங்களை மணிவாசகப் பெருமான்,

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்னெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன்

என்று கூறுவார். தேசீய கவி பாரதி,

நக்க பிரானருளால் – இங்கு
நடைபெறும் உலகங்கள் கணக்கிலவாம்!
தொக்கன அண்டங்கள்–வளத்
தொகைபல கோடிபல் கோடிகளாம்! [8]

என்று பகர்வான். சூரியமண்டலத்தில் சூரியன் குடும்பத் தலைவன்; கோள்களும், சிறுகோள்களும், வால்மீன்களும், எரிமீன்களும் அவன் பெற்றெடுத்த குழவிகள். நம் பூமியையும் புதன், செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ இவற்றைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும் துணைக் கோள்கள் இவனுடைய பேரப் பிள்ளைகள். இவர்களுள் வால்மீன்கள் மட்டிலும் இவனுக்கு அடங்காப்பிள்ளைகள்; இவை அவனை ஓர் ஒழுங்கில் சுற்றி வருவதில்லை, சூரியனும், பூமியைச் சுற்றிவரும் சந்திரனும் நம் கண்ணுக்குப் புலனாகுபவர்கள்.

---

7 திருவாசகம் - திருவண்டப்பகுதி அடி (1-4)
8 பா. க. தோ. பா. கோமதியின் மகிமை - 4

சூரியனுக்கு அடுத்து இருப்பது புதன். இதனை அடுத்து வரிசையாக வெள்ளி பூமி, செவ்வாய், சிறுகோள் திரள்கள், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ என்ற முறையில் வெவ்வேறு வட்டங்களில் வலம் வந்து கொண்டுள்ளன. இவை பொதுவாக நாம் சூரிய குடும்பத்தைப் பற்றி அறிந்துகொள்ளத் தக்கவை.

* * *

துருவாசர் அருளிய மந்திரத்தைச் சோதித்துப் பார்க்க நினைத்த குந்தி செக்கர் சோதியைச் சிந்தையில் வைத்து ஓதினாள். ஆதித்தன் நேர்வந்து நின்றான்: வாலியார் கூறுவார்:

**ஞாயிறு வனப்பை–
தரையில் பூத்த–
திங்கள் கண்டது;
அதன்–
செவ்வாய் வியந்து–
'அடடா!'
'அற்புதன்!' என்றது;
அந்த–
வியாழன் நிகர்த்த–துர்
வாசன் அருளால்–சொக்க
வெள்ளிநிகர்த்த–ஒரு
வெளிச்சம் 'பளிச்'சென–
சனித்து நின்றது; ஒப்பின்றி–
தனித்து நின்றது! (I–பக்.90)**

இதில் வாரத்தின் ஏழு நாட்களும் அமைந்து இயற்கை எழிலுக்கு ஒரு பொலிவினைத் தருகின்றன.

பகவலன் ஒளி : *குந்தியை நாடி வந்த '**தினமணி**'யைக் கூறும்போது:*

அது—
வீசியது ஒளி ! கண்
கூசியது வெளி !
குந்திக்கு முன்னால்—
கூப்பிடு தூரத்தில் நின்றான்—
மறை
வந்திக்கும் வெய்யன்;
நூறாயிரம் அரும்புகளை—
நொடியில் அவிழ்க்கும்—
ஓராயிரம் கையன் !

அவன்—
விசும்பில் வேர்விட்ட—
வெங்கனல் விருட்சம்;
அந்த
விருட்சம்—தனது
வெளிச்ச விழுதுகளை—
நிதம் நிதம்—
நிலத்தில் இறக்கும்;
இறக்காவிடில்
இயற்கை இறக்கும்! [9]

அவன்—
நெடுவானில் நிறுவிய—
நெசவுக் கூடம்;
அந்த
நெசவுக் கூடம்—
நெய்து கொடுக்கும்—
வெய்யில் ஆடையை—

---

9 'ஆதவனே ஆற்றலின் மூலம்' என்பது தத்துவம். அந்த ஆற்றலால் தான் நிலைத்திணை, இயங்குதிணை அனைத்தும் இயங்கி உலகம் நிலை பெற்றுள்ளது.

கையில் வாங்கி...
வையம்—
வைகறைப் போதில்—
கட்டிக் கொள்ளும்;
இல்லையேல்—
இருட்டுச் சுவரில்
முட்டிக் கொள்ளும்!

ஒவ்வொரு நாளும்—
ஒளிப் புடவையை—
இரவில்—அவன்
இரவல் தராவிடில்...

அம்புலிகூட—
அமரக் கூடும்—
அம்மணமாக;
சம்மணமாக!

அவன்—
காயத்திரி மந்திரத்தின்—
கதாநாயகன்; அவனுக்கு
உசாத்துணையால் விளங்கும்—
உஷாநாயகன்!

அவன்—
காலை உணவு கடும்பனி; பிறகு—
மாலை வரையில் கடும்பணி!
ஆயினும்—
அன்றாடம்...
அக்கினி கோத்திரத்தில்—
அந்தணர் வழங்கும்—
அக்கிர தாம்பூலமும்—
அவிப் பாகமும்...
அவனது—
பகல் நேரப்
பசியாற்றும்!

ஒரு சுருக்க மில்லாத—
அருக்கன் புகழை—
சுருக்க முடியுமோ—
சொல்லில்?—ஓர்
அலகு இலாத—அவன்
அருளொளி இல்லையேல்—
உலகு உழன்றிடும்—
அல்லில்! (I—பக்.90—91

அற்புதமான வருணனை. அறிவியல் கருத்தும் அமைந்த அழகான வருணனை! உலகுக்கெல்லாம் உயிர் ஊட்டும் ஆதவன் இல்லையேல் இந்த அவனி சூனியம் ஆகிவிடும்.

3. செயற்கை

இயற்கை வருணனை வாலியார் காவியத்தில் இடம் பெற்றதுபோல செயற்கையால் ஏற்பட்டவையும் இடம்பெறு கின்றன. கண்ணன் கருத்துப்படி பாண்டவர்க்காக நகர் ஒன்றை நிர்மாணித்தான் விசுவகர்மா என்னும் தேவ சிற்பி.

(1) இந்திரப் பிரஸ்தம்:

காரியம் யாவையும்—ஒரு
கவித்துவத்தோடு செய்தான்;
காடு என்னும்—அகல
ஏடு எடுத்து—அதில்
வீடு
என்னும்—
விருத்தம் நெய்தான்!

அடடா!
அவனுக்கு
கல்லே சொல்லானது;
கட்டடமே கவிதையானது!

விதையிலிருந்து எழுகின்ற—
விருட்சம்போல்—அவன்கை
சுதையிலிருந்து எழுந்தன...

சுந்தரமான மாடங்கள்;
சோபிதமான கூடங்கள்;
மூவாயிரம் கால்கள்—
முளைத்த மகால்கள்!

ஒரு—
கந்தையை—
காசிப்பட்டாக்கும்—
விந்தையைக் கற்றவன் அவன்;

ஒரு—
சொத்தையை—
சீத்தாப் பழமாக்கும்—
வித்தையைப் பெற்றவன் அவன்!

விண்ணிலும் சரி;
மண்ணிலும் சரி;
எந்த—
சிற்பிக்கும்—அவனது
சிற்றுளி—கலையைக்
கற்பிக்கும்!

பனை—
ஓலையைப் போலே—உலர்ந்த
சோலையை பாவித்து...
அதில்—தேன்
அருந்துகின்ற—
ஈக்கள் வந்து—வாயில்
ஈ புகுந்தது தெரியாமல்—
வாசிக்கவும்—
நேசிக்கவும்...

பூக்கள் என்னும்—வெண்
பாக்கள் புனைந்தான்;

நெடு—
நாளாய்—வெற்றுத்
தாளாய்க் கிடந்த—
தடாகத்தின்மேல்—அழியாத
தண்ணீர்க் கவிதை வனைந்தான்!

அழுக்கு மேகங்கள்—
கழுத்து சுளுக்க—
அண்ணாந்து பார்க்குமாறு—
அரண்மனைகள் ஆக்கினான்;
அவை—உப்பரிக்கைகள்—எனும்
ஒப்பரிய கைகள் நீட்டி—
உச்சிவான் நீலத்தை—
வழிக்குமாறு ஊக்கினான்!

அரண்மனையைச் சுற்றி—
அர்த்த ராத்திரியில்...

வெள்ளி மீன்கள்—
விளக்குகளாய் மின்னும்—
தகழிகள் எனும்படி—
அகழிகள் அகழ்ந்தான்;
அங்ஙனம்—
அகழ்ந்தது குறித்து—
அடடா! என்று—
அவனே தன்னைப் புகழ்ந்தான்!

சுற்றிலும்—
சீதளத் தென்றலின்—
குடியிருப்பாக—சிறுசிறு
குன்றுகள் சமைத்தான்!

அவற்றின்—
அகன்ற மார்பின்—

வழியே
வழிவது...

'உத்தரீயமா?
உருக்கிய ஈயமா?'
என—
எவரும்
அய்யுறும்படி—ஓர்
அருவியை அமைத்தான்!

மைந்து மிக்க—
ஐந்து பேருக்கும்...

தனித்தனி—
திருமாளிகை கட்டினான்;
வானவில்லை—
ஒட்டப் பிழிந்து—அதன்
வண்ணங்களை வாங்கி—அந்த
மாளிகைமேல் கொட்டினான்!

மொத்தத்தில்—மகா
வித்தகன் விசுவகர்மா...

சுந்தர கோளமாய் இருந்த
காட்டுப் பகுதியை—ஒரு
சுந்தர கோளமாய் மாற்றினான்;
'இனி—
இது—
இந்திரன் பெயரால்—
இந்திரப் பிரஸ்தம்—
என விளங்கும்!'
என்று...

கண்ணபிரான்—தனது
குழல்வாயால் சாற்றினான் (II– 13-14)

இதில் தன் பாசத்திற்கும் நேசத்திற்கும் பாத்திரனான அர்ச்சுனனின் தந்தை இந்திரனுக்கும் நினைவுச்சின்னம் ஏற்படுத்தினான் கண்ணன்—கார்மேக வண்ணன் என்று கருதலாம்.

(2) மயன் மண்டபம்: *வெந்து விபூதியான காண்டவ வனத்தில் இறவாதிருந்தவர்களில் ஒருவன் மயன் எனும் கல்தச்சன். இவன் மண்டோதரியின் அச்சன். இலங்கேசன் இவனது மருமகன். அசுரர்களின் ஆஸ்தான சிற்பியாய் ஆனவன்.*

தன்னை உயிர் தப்புவித்த காண்டீபனுக்குக் கைம் மாறாக இந்திரப் பிரஸ்தத்தில் ஒரு மாபெரும் மாளிகையை எழுப்பினான். இதனை நிறுவுவதற்குப் பதினான்கு மாதங் களாயின. வாலியார் வாக்கில் இதோ அந்த மாளிகை:

சிற்பி மயன் சிருட்டித்த—
சபையின் சோபிதம்—எவரும்
சொல்லத் தரமன்று; ஈடாகச்—
சொல்லவும் இல்லையொரு
மன்று!

பிறவாக் கவிஞன்—இங்கு
பிறந்து—பூமிமேலெழுதிய
இறவாக் கவிதை—என
எழுந்து நின்ற...

அந்த—
மணிமண்டபம்—ஒரு
மகோன்னத மாகும்; அதன்—
குடுமியில்—தனது
குதிகால் தடுக்கி—
குட்டிக் கரணம் அடிக்கும்—
குழந்தை மேகம்!

விருட்சங்கள் நிறைந்த–
வளாகம்; அந்த
வளாகத்தின் நடுவில்–ஒரு
வெந்நீர்த் தடாகம்!

ஆக...
ஆங்காங்கு–
அழகும்–
அதிசயமும் ஒழுங்கும்...
அந்த மண்டபம்–
ஆரையும் அசத்தியது;
மயனை–மேடு
மலையளவு உசத்தியது!

வெள்ளியங்கிரியின்–
வடபுறத்திலுள்ள–
'பிந்துசரஸ்' எனும்–
பெருநகரிலிருந்து–

படிகங்கள்;
பரல்கள்;
பவளங்கள்;
பதுமராகங்கள்...

இவற்றையெல்லாம்–தான்
இயற்றும் சபைக்கு–
எழிலூட்ட–மயன்
எடுத்து வந்தபோது...

வருணன்–
வைத்திருந்த–
'தேவதத்தன்' எனும்–
திருச்சங்கையும்;

கணங்கள் நேர்வந்து–
கை கலந்தாலும்–சில
கணங்களில் பொடிக்கவல்ல–
கதாயுதம் ஒன்றையும்...

கூடவே–
கொண்டுவந்தான்; பீமனுக்கு–
கதையையும்–விஜயனுக்கு
கைச்சங்கையும் தந்தான்!

நன்றிக் கடனை–
நறுவிசாகச் செலுத்திவிட்டு–
மயன் சென்றான்; ஊரார்
மனத்தில் நின்றான்! (II– பக்:79-82)

அற்புதமான வருணனை. இது நன்னகரின் நடுவே அமைந்துள்ள ஓர் அழகிய பூங்காபோல் காட்சி அளிக்கின்றது. நளினமான சொற்றொடர்கள் மண்டபத்தை நம் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்தத் துணை புரிகின்றன; கதையும் சங்கும் பின்னால் நடக்க விருக்கும் போரில் ஆற்றவல்ல பங்கினை முற்கூறியதாகவும் கருதலாம்.

(3) பாஞ்சாலநகர் அலங்காரம்: *அவைப் பெரியோர் தெரிவித்த தெள்ளிய கருத்தைச் செவியால் ஏற்ற துருபதன் மகள் சுயம்வரத்திற்கு நாள் குறித்தான்; நாட்டார்க்கெல்லாம் சேதி அறிவித்தான். நகர் அலங்காரம் செய்யப் பெற்றது. இதனை வாலியார் விளக்குவது :*

பூஞ்சாளம் பிடித்த–
பாத்திரத்தை–
கலாய் பூசி–
கவினுறச் செய்தல் போல்...
பாஞ்சாலம்–
பூராவுமே–
பள்ளம் மேடு இன்றி–
புதுப்பிக்கப்பட்டது;
மண்சட்டை அணிந்திருந்த–
வீதிகளுக்கு–மாதர் கூட்டம்
மாக்கோலச் சட்டையை–
மாட்டி விட்டது!

வீட்டுச்சுவர் ஒவ்வொன்றும்—
வண்ணச் சுண்ணங்களை—
எடுத்துப் பூசிக் கொண்டு—
இந்திரவில்லாய் நின்றது;
காற்றே—ஒரு
கைத்துடைப்பமாய் மாறி—
வீட்டுக்
குறடுகளில் உள்ள—
குப்பை களைகூட்டிச் சென்றது!

அட்டகாசமாக—
அங்குலம் அங்குலமாக—
அழகுபடுத்தப்பட்டது—
அரண்மனை;
திரும்பிய—
திசையெலாம்—தேர்ந்த
கலைஞர்தம்—
கைவினை!

பட்டு விரிப்புகள்;
பாவை விளக்குகள்;
படுதாச் சித்திரங்கள்;
பஞ்சலோகச் சிலைகள்'
செம்பொன் தகடுவேய்ந்த—
சிங்காதனங்கள்; அவற்றில்—
கொம்பன் கொம்பாலான—
கைப்பிடிகள்;

இன்னும்—
எவரது
புருவங்களையும்—நெற்றிப்
பொட்டுக்கு ஏற்றும்—
பல்பொருள்கள்;
தலைமுறை தலைமுறையாய்
வரும்
தொல்பொருள்கள்...

இப்படி—
எங்கு நோக்கினும்—
செப்பரும் சோபிதம்;
செவ்விய சௌமியம்! (I– பக்:326–327)

(4) சுயம்வர மண்டபம் : அலங்காரம் செய்யப் பெற்ற அழகிய ஊரிலுள்ள அரண்மனையில் சுயம்வர மண்டபமும் அற்புதமாக எழுந்தது.

ஒரு—
சுயம்வர மண்டபம்—
சொர்ணாபிஷேகம்
செய்தாற்போல்—
தகதக வென்று—
தயாரானது; காண்போர்க்கு—
கிறக்கத்தை உண்டு பண்ணும்—
கிளி கொஞ்சும் அழகில்—அது
துறக்கத்திற்கே—
தாயா ரானது! (I– பக்:327)

இந்தக் காவியத்தில் இயற்கையும் செயற்கையும்—கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பும் கைபுனைந் தியற்றிய கவின்பெறும் வனப்பும்—கைகோத்த வண்ணம் அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம்.

(5) ஏகசக்கரம்: பகாசுரன் வசித்து மக்களைக் கொன்ற பகுதி. இந்த ஊரைப் பற்றி வாலியார் வருணிப்பது:

ஏக சக்கரம்—
எனும் ஊர்; முன்னம்
யோக சக்கரம்—
'ஓஹோ!' என சுழன்ற ஊர்;

ஏகப் புகழை—
ஏந்திக் கொண்டு—மூக்கில்
யாகப் புகையை—
யாண்டும் சுமந்த ஊர்!

எழுதாக் கிளவியை—
முழுதாய்க் கற்றார்—நெறி
வழுவாது வாழ்ந்த ஊர்;
கன்றுகள்; கறவைகள்—
கூட்டமாய் மேய்ந்திடும்—
குன்றுகள் சூழ்ந்த ஊர்!

சௌஜன்னியம் எனும்—
சரட்டினில்—
சகல ஜனங்களையும்—ஒரு
ஒரு சரமாய்க் கோத்த ஊர்;
அத்வைதம் என்னும்—
அரிய அரவிந்தம்—அங்குள்ள
வித்வான்களின்—உள்ள
வாவியில் பூத்த ஊர்!

ஏக சக்கரத்தின்—
இத்துணை பெருமைகளையும்—
காலசக்கரம்—சமீபத்தில்
கிழித்துப் போட்டது;
நகுதல் என்பதை—
நகரத்து மாந்தரின்—
உதடுகளிலிருந்து—
வழித்துப் போட்டது! (I– பக்:308)

வாழ்வும் தாழ்வும் சக்கரம்போல் சுழன்று வருவதால் இந்த ஊர் பெயர்ப்பொருத்தம் அமைந்த ஊர் போல் தோன்றுகிறது.

(6) பிள்ளை விளையாட்டுகள்:

இவற்றிற்கும் வாலியார் காவியத்தில் இடம் உண்டு.

பஞ்ச—
பாண்டவர்களும்;
பார்வை இல்லாதவன்—
பிள்ளைகளும்...

இருதாய் மக்கள்—
என்றில்லாமல்—
ஒருதாய் மக்களாய்—
ஒன்றாகவே...
உண்டார்கள்;
உறங்கினார்கள்;
விழித்தார்கள்;
விளையாடினார்கள்!

ஆனால்—
அந்த...
விளையாட்டுதான்—
விரைவிலேயே—
வினையானது; அந்த வினை—
சன்மப் பகை—
சூல்கொண்ட—
சினையானது!

....
எல்லாமே—
இளவட்டங்கள்;
தளதளவென்று கொதிக்கும்
இள ரத்தங்கள்!
விளையாட்டில்—
வரத்தானே செய்யும்—
உப்புச்சப்பில்லாத—
ஊமை யுத்தங்கள்!

பீமன்தான்—
பிரதான காரணம்; அவன்—
துதிக்கை இல்லாமல்
தோற்றிய வாரணம்!

தன்—
பங்காளிகளை—அவன்
பிரியமாகத் தழுவினாலும்...
விலா எலும்புகளில்—
விரிசல் விழும்;
வீவு நேர்ந்தாற்போல்—அலறல்
வீரிட்டெழும்!

துரியோதனன்—
தம்பிகளில்...
ஏழெட்டுப் பேரை—
இடக்கையாலும் வலக்கையாலும்

தலைமுடியைப் பற்றித்
தூக்கி...
அலைமுடியைச் சூடிய—
ஆற்றில்...
மூச்சுமுட்ட—
முக்கியெடுப்பான்;
'குய்யோ முறையோ' என்று—
கூவிய பின்னால்...
குற்றுயிரும் குறையுயிருமாய்—
கரையில் விடுப்பான்!

பிள்ளைகள் மரமேறிப்
பழங்கள் பறிக்க...
பீமன்—மரத்தைப்
பிடித்து உலுக்க...
பழங்களோடு—
பிள்ளைகளும் உதிரும்;
உதிர்ந்த இடத்தில்—
வழிந்து கிடக்கும் உதிரம்!

பீமன் முதுகில்—
பிள்ளைகளெல்லாம்—
கங்காருபோல—
குதிரை தாண்டும்;
பீமன் தாண்டினால்—
பிள்ளைகளை மீட்க—
ஆறேழு அடிகள்
அகழ வேண்டும்!
பெரிதும் இவையெல்லாம்—
பிள்ளமையால்—
பீமன் புரிந்த பிழைகள்; தன்
நெஞ்சத்தறியில்—துரியோதனன்
நெடும்பகை ஆடையை—
நெய்ய உதவிய இழைகள்! (I— பக்:163-4)

இவற்றைப் படிக்கும்போது நம்மைப் பிள்ளைப் பருவத்திற்கு இழுத்துச் சென்று நிகழ்ச்சிகளைக் குமிழியிடச் செய்கின்றன!

(4) கடவுள்கள்

வாலியார் படைத்த 'பாண்டவர் பூமி'யில் கடவுள்களும் காட்சி தருகின்றனர். அவர்கள் பற்றியே வருணனையும் அதி அற்புதமாக அமைந்துள்ளது.

(1) முருகன்: திருமண நிகழ்ச்சியில் வீடுமன் செயலால் ஏமாற்றமடைந்து, மனம் முறிந்த நிலையில் சொர்ணமலைச் சாரலில் ஆங்குள்ள பாகூத நதிக்கரையில் பன்னிரண்டு ஆண்டுகள் நிட்டையில் இருந்தாள்அம்பை. முருகன் காட்சி தருகின்றான், எப்படி?

அம்பையின் முன்—
அழகொளிரத் தோன்றியது...
ஏத்துவார்
எவர்க்கும்—

ஏறு முகம் காட்டும்—
ஆறுமுகம்!
கவலைக்
கடல் வீழ்ந்தார்—
குறைமுகம் கண்டால்...
குறைதீர்த்துக் கரைசேர்க்கும்
துறைமுகம்!

தரைமுகம்—
பார்த்து நடந்த—வள்ளிப்
பாவையை மணந்த—
துரைமுகம்!
அன்பில்—
அமிழ்முகம் பார்த்தால்—
அருள்முகம் காட்டும்—
தமிழ்முகம்!

பழ
மறைமுகம் தனக்குள்
மறைமுகமாய் வைத்திருக்கும்—
இறைமுகம்!

பனிசடையில்—
பிறைமுகம் காட்டுகின்ற—
பெம்மான் பெற்றெடுத்த—
நிறைமுகம்!

ஈராறு ஆண்டுகள்—தன்னை
இடையறாது ஏந்தி...
எண்ணமாலை தொடுத்த—
அம்பைக்கு—ஒரு
வண்ணமாலை கொடுத்தான்;
வேலேந்தும் பெருமான்; திரு—
வேங்கடத்தான் மருமான்! (I— பக்:51-52)

இந்த வருணனையில் 'துறைமுகம்', 'துரைமுகம்', 'தமிழ் முகம்', 'மறைமுகம்', 'இறைமுகம்', 'பிறைமுகம்', 'நிறை முகம்' என்ற சொற்கள் நளினமாக நாட்டியமாடி **'ஆறுமுகத்தை'** அற்புதமாகக் காட்டி நிற்பதை அநுபவித்து மகிழ்கின்றோம்.

(2) சூரியன்: துருவாசர் தனக்கு அளித்த மந்திரங்களைச் சோதித்துப் பார்க்கக் கருதுகின்றாள் குந்திதேவி. இது திருமணம் ஆகாத நிலையில். செக்கர் சோதியைச் சிந்தையில் வைத்து ஓத, நேர்வந்து நின்றான் ஆதித்தன். அவன் வந்த நிலையை வாலியார் காட்டுவது:

தர்ம
சாத்திரம் யாவும்—
தோத்திரம் செய்யும்—அத்தகு
சூரியச் செம்மல்...

உதிரச் சிவப்பாய்—திரு
உடலம் விளங்க; அதன்மேல்
உபவீதமீபோல்—வெண்பட்டு
உத்தரீயம் துலங்க;

பீதக ஆடையும்—
பைம்பொன் அங்கியும்—
மாதவ மேனியை—
மருவியிருக்க;
கனக—
மண்டலங்கள் போல்—செவி
மடல்களில்—அழகு
குண்டலங்கள் கனக்க;

கோடானு
கோடி—
திவசங்கள் கழிந்தாலும்—அவன்
திருமேனி கழியாத—வச்சிரக்
கவசங்கள் சொலிக்க;

‘முத்தாரம்! முழுநிலவை—
ஒத்தாரம்! முளரிப்பூங்
கொத்தாரம்! மொத்தத்தில்—
பத்தாரம்! அத்துணையும்—
புத்தாரம்!’ எனும்படி—
விதவித ஆரங்கள்...
அவனது—
வித்தாரம் நிறைமார்பில்—
அவனிடம்—ஓர்
உத்தாரம் வாங்காமல்—
விளையாடிக் கிடக்க...

சௌந்தர்யமும்—
சௌலப்பியமும்—
சேர்ந்தாற்போல்—
சேவை தந்து...
அன்பொழுக—
அணுகினான்—
யாதவன் மகளை; குந்தியெனும்—
மாதுளம் மடலை! (I– பக்:91-92)

திருமண மாப்பிள்ளை வருவதுபோல் கம்பீரமாக வருகின்றான் சூரிய பகவான்; காயத்திரி மந்திரத்தின் கதாநாயகன். ‘உடலழகும், உடையழகும், அணிகளின் அழகும், அவனிடம் விளையாடிக் கிடப்பனவாகக் கூறுவது’ கவிஞரின் கற்பனைத் திறனைக் காட்டுகின்றது.

5. முனிபுங்கவர்கள்

பாண்டவர் பூமியில் முனிவர்களும் தலைகாட்டு கின்றனர்; அவர்களுள் வனவாசகாலத்தில் பலரைக் காணலாம். காவியத்தில் வருபவர்களில்:

(1) வியாசர்: இவரைப் பற்றிய வருணனை:

விழி! – நோன்பின்
உக்கிர வெக்கையைக்
கக்கிடும் அக்கினிக்
குழி!

உதடு!
வாய்க்குள் சுரக்கும்–உபநிடத
வாய்க்காலைத் தேக்கி வைக்கும்–
மதகு!

சடை!–வெண்
சாமரங்கள் தொங்குகின்ற–
கடை!

தாடி!–கடுந்
தவசியெனக் காட்டுகின்ற
ஆடி! (I– பக்:64-65)

சூத்திரம்போல் வருணனை சுருக்கமாக அமைந்திருந் தாலும் விழி—குழி, உதடு—மதகு, சடை—கடை, தாடி— ஆடி என்ற சொல்லிணைகள் வீசும் ஒளி 'பளிச் பளிச்'சென்று வீசிக் கொண்டிருப்பதைக் கண்டு மகிழலாம்.

(2) நாரதன்: *நான்முகனின் மைந்தன். ஓய்வின்றி உலகம் சுற்றுவது இவனது தொழில். இவனைப் பற்றிய கவிஞரின் வருணனை:*

நாரத முனிவன்–ஒருநாள்
நேரில் வந்தான்; வழமைபோல்–
தண்ணீர் மேகமெனும்–
தேரில் வந்தான்!

நாரதன் முகத்தில்–
நாளும்–

மிகுதல் என்றிருப்பது—
நகுதல்!

....

அந்த—
அப்பன்காரன்—

இன்னார்க்கு—
இன்னது என்பதை—
இறுதி செய்து...

எல்லார் தலையிலும் எழுதி—
இட்டிருப்பான் நெட்டெழுத்து;

ஆனால்—
அவனது—
பிள்ளையாண்டான் நாக்கில்—
பச்சை குத்திப்
பட்டிருப்பதோ எட்டெழுத்து!

நாராயண மந்திரம்—
நகர்வலம் வர உதவுவது—
நாரதன்—
நாரதம்!

தாள்மூட்டு வலிக்க.
திரிலோகமும் திரிந்து—
கோள்மூட்டும்—ஒரு
கலகப் பிரியன்—நாளும்
ஓயாமல் சுற்றும்—இந்த
உலகப் பிரியன்!

இவன்—
கோள் மூட்டுவான் என்று—
கோள்களே பயப்படும்;
எனினும்—
இந்த ...

'நாரதன் கூறும் கோள்—
நன்மைக்கான கால் கோள்!'
என்பது—
பின்புதான் புலப்படும்!

பாரதம் பாடிய—வியாச
பகவானுக்கு—பாகவதம்
சொன்ன
நாரதன்தான்...

குறுமுனி—தனது
கமண்டலத்தில்—
வேகமாய் வந்த—காவிரி
வெள்ளத்தை வாங்க—
அதையொரு
காகமாய் வந்த கணபதியால்—
கவிழ்க்கச் செய்தவன்;

சர்ப்பத்தில் படுத்தவன்—
சீர்த்தியை—லீலாவதி
கர்ப்பத்தில் படுத்தவன்—
காதுகளில் பெய்தவன்!

இவன்—
மீட்டப் பிறந்தது—
மகதி யாழாகும்; இவன்—
மீட்டாது விடுத்தால்—அது
அகதி யாழாகும்!

அந்தப்
பொற்புள்ள யாழ்—மிகவும்
கற்புள்ள யாழ்!

நாரதன் மீட்டினால்—அதில்
நல்லிசை பிறக்கும்;
வேறொருவன் மீட்டினால்—
அந்த
வீணை உடனே இறக்கும்!

இசைகொண்ட இசை—
இவனது இசை; இவன்—
இசைக்கு இசையும் எண்திசை!

ஆம்!
நாரத கானம்—கேட்டால் [10]
நெகிழ்ந்து போகும்—
நிலம்; நீர்; வானம்!

அடர்சடையில்—
ஆறுமுகம் காட்டும்—
அஞ்சுமுகத்தான் பிள்ளை—அந்த
ஆறுமுகம்—வள்ளியின்
அறிமுகம் பெற்றது—கோள்
கூறுமுகம் கொண்ட—இந்த
குணாளனால் தான்;
எனினும்—
இந்த—
குணாளன்—எவர்க்கும்
மணாளன் ஆகாதவன்; பலர்—
மணம் புரிய தூது போயும்—
தான்
மன்மதனால் வேகாதவன்! (II– பக்:14-15)

அற்புதமான வருணனை! இதில் நகைமுகன்—நான்முகன், நெட்டெழுத்து—எட்டெழுத்து, தாள்மூட்டு—கோள்மூட்டு, கலகப்பிரியன்—உலகப்பிரியன், சர்ப்பத்தில்—கர்ப்பத்தில், மகதியாழ்—அகதியாழ், பொற்புள்ள—கற்புள்ள, ஆறுமுகம்—ஆறுமுகம்—அறிமுகம்—கோள் கூறும்முகம், மணாளன்—குணாளன் என்ற இணைகள் குறிப்பிடும் பொருள் நயம் ஆர அநுபவித்து மகிழத்தக்கவை. சில

10 'நாரதகான சபை' என்ற பெயரில் சென்னையில் ஒரு பெரிய மண்டபம் உள்ளது. அதில் பல சிறப்பு நிகழ்ச்சிகள் பலரால் நடைபெறும்.

தொடர்களால் கதைவானம் நம் மனவானத்தில் காள்கொள்ளும்!

(3) மந்தபாலர்: *காண்டவ வனத்தில் வாழ்ந்த முனிவர்; தண்ணீர் எள் இறைக்க வாரிசு இல்லாமல் ஏங்கி நின்றவர். இவர் வரலாறு படித்து இன்புறத்தக்கது, (II—பக்:68—78) இவரைப் பற்றிய வாலியாரின் வருணனை:*

ஒரு—
முனிவர் இருந்தார்—
முன்னம்; பிற—
முனிவர் குனிவர்—அவர்
முன்னம்!

அவர்
அத்தகு...
மகாசீலர்; பெயர்
மந்த பாலர்!

அஞ்சு வயதிலிருந்தே—
அஞ்சுதல் போக்கும்—
அஞ்சை ஓதிஓதி—
அஞ்சை அவித்தவர்; அளவிலா
அருள்வலி குவித்தவர்!

ஆண்டுகள் கணக்கில்—
அமர்ந்தது அமர்ந்தபடி...

ஆன்மீகம் துலங்க—அவர்
ஆற்றும் தவத்தில்—அவர்மேல்
வான்மீகம் கிடுகிடென—
வளர்வதை ஓரார்;
தவம் முடியாது—குடிலுக்குத்
திரும்பி வாரார்!

தவத்தைக் கெடுக்க—
தேவமாதர் வரின்—

மூர்க்கம் கொண்டு—
முனிவர் முனிவர்;
பெண்மையின்
நாற்றம் நீங்கினால்தான்—
சீற்றம் தணிவர்!

இந்திரியங்களைக் கட்டி—
இந்திரியத்தைக் கட்டியவர்;
வேட்கைகளை—பிரமசரிய
வாளால் வெட்டியவர்! (II—பக்:68)

சுருக்கமான வருணனைதான் எனினும், இங்கும் சீலர்—பாலர், அஞ்சு—அஞ்சுதல்—அஞ்சை—அஞ்சலி, ஆன்மீகம்—வான்மீகம், முனிவர்—முனிவர், இந்திரியங்களை—இந்திரியத்தை என்ற சொல் இணைகள் காட்டும் பொருள் நயம் நம் உள்ளத்தைச் சொக்க வைக்கின்றன!

(4) மாண்டவ்யர்: *முன்வினை முனிவர்களையும் விட்டு வைக்காது என்பதற்கு இவர் ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றார். தருமதேவதையே இவரது சாபத்தில்தான் விதுரனாய்ப் பிறந்தாள் என்ற வரலாற்றுடன் தொடர்பு கொண்டவர். இவரைப்பற்றி வாலியாரின் வருணனை:*

அந்த மண்குடிலில்தான்—
மகரிஷி மாண்டவ்யர்—
வெகுகாலமாக—
வாசம் செய்கிறார்;

....

அவர்
ஆசைப்பசி—
அற்றவர்; ஆதலால்—
வேசைப்பசி—
விட்டவர்; நாதன்

பூசைப்பசி—
பெற்றவர்; நான்மறை
ஓசைப் பசி—
உற்றவர்!

உருப்பசி வரினும்—அவருள்
உடற்பசி எழாது—அகம்
அறப்பசி யலாது—பிறிதொரு
புறப்பசி கொள்ளாது!

அவர்—
'ஆன்மப் பசி—என்றும்
மேன்மைப் பசி!'—என
ஆய்ந்தறிந்த—
அருந் தபசி!

அத்தகு தபசிக்கும்—ஓர்
அபவாதம் வந்தது;

....

ஓர்
அக்கினி நட்சத்திரம்—
ஆரம்பமாகும் நேரம்;

....

ஆசிரமத்தின்—
வாசலில் உள்ள...
உத்தியானம் நடுவே—
உட்கார்ந்திருந்தார்—
மத்தியானம்—நெடிய
மனத்தியானம் செய்த
வண்ணம்...
மகரிஷி—
மாண்டவ்யர்!

மௌன ஊசியைக் கொண்டு—
மேலுதட்டையும் கீழுதட்டையும்

மெல்லத் தைந்திருந்தார்;
இணைபிரிய–
இடந் தராமல்...
மேலிரண்டு இமைகளையும்–
கீழிரண்டு இமைகளையும்–
ஆலிங்கனத்திலேயே–
அமிழ்த்தி வைத்திருந்தார்!

அதன்பின்–
நெஞ்சம் உடுத்தியிருந்த–
நினைவு ஆடைகளை–
அகற்றினார்; அதை–
நிர்வாணமாக்கி–நீண்ட
நிட்டையில் அமர்த்தினர்! (I–பக்:71-73)

கதைக்குப் புறம்பான இவர்தம் 'பிரவேசம்' விதுரன் அவதாரத்தை நமக்கு விளக்குவதால் இவரும் நமக்கு இன்றியமையாதவராகின்றார். இவர்தம் வருணனையில், உருவகங்கள் தாண்டவமாடுகின்றன. ஆசைப்பசி—வேசைப்பசி—பூசைப்பசி—ஓசைப்பசி—உருப்பசி—உடற்பசி—அறப்பசி—புறப்பசி—ஆன்மப் பசி இச்சொற்களின் நளின நடனங்கள் அரும்தபசியை அற்புதமாகக் காட்டுவதை நாம் அநுபவித்து மகிழ்கின்றோம்!

(6) அழகின் தத்துவம்

அழகு என்பது ஒரு தத்துவம். உலகில் அழகுக்கு ஒரு வரையறை காண்பது, இவ்வடிவத்தைப் படைப்பவரின் 'தொழிற்குறைவினாலேயன்றி, அழகென்னும் பொருளுக்கோ எல்லை இல்லை' என்று சித்தாந்தம் செய்து காட்டுவன் கம்பநாடன் சூர்ப்பணகையின் வாய்மொழியாக. இந்த அழகு காதலர்களை ஒருவர்பால் மற்றொருவரை ஈர்க்கும் பெற்றியது. சிலசமயம் பால் வேற்றுமையின்றி ஈர்க்கும் தன்மையது. சீதையைக் கண்டவுடன்,

அரவிந்த மலருள் நீங்கி
அடியிணை படியில் தோயத்
திருஇங்கு வருவாள்–கொல்லோ
என்றகம் திகைத்து நின்ற [11]
[அரவிந்தம்–தாமரை; இணை–இரண்டு;
திரு–இலக்குமி; அகம்–மனம்]

எனத் திகைத்து நின்ற சூர்ப்பணகை அழகு தன்னைப் படுத்தும் பாட்டைச் சொல்லுகின்றாள்;

கண்பிற பொருளிற் செல்லா;
கருத்தெனில் அஃதே; கண்ட
பெண்பிறந் தேனுக் கென்றால்
என்படும் பிறருக்கு [12]

என்கின்றாள். "சிறந்த மகளிரைக் கண்ட ஆடவர்க்குக் கண்ணும் கருத்தும் அவ்வடிவத்தை விட்டு நீங்காமல் அதிலே பதிந்து அழுந்துதல் உலகியற்கை; அங்ஙனமின்றி இவளழகு பெண்பாலாகிய எனக்கே கண்ணும் கருத்தும் வெளிச் செல்லாதபடி வியப்பைத் தருகின்றதே! இஃது ஆடவருக்கு எந்நிலையை விளைவிக்குமோ!" என அதிசயித்துத் திகைத்து நிற்கின்றாள் 'அழியா அழகுடையானிடம்' தன் மனத்தைப் பறிகொடுத்த சூர்ப்பணகை.

தாடகையின் வரலாறு கூறி அவளை முடித்தற்கென்று இராமனைக் கானகத்தில் நடத்திச் சென்ற விசுவாமித்திரன் இராமனது தோளழகில் ஈடுபட்டு அவனை,

ஆடவர் பெண்மையை
அவாவும் தோளினாய்! [13]
[அவாவும்–விரும்பும்]

11 கம்ப. ஆரணிய சூர்ப்பணகை-60
12 மேலது-60
13 பாலகா, தாடகைவதை-41

என்று விளித்துப் பேசுகின்றான். இராமனது தோளினது அழகின் சிறப்பு நோக்கி 'ஆடவரும் மனத்தால் மகளிர் தன்மையை அடைந்து அத்தோளினால் தழுவப் பெற வேண்டுமென்று காதல் கொள்ளுமாறு உள்ளவனே!' என்கின்றான். மகளிர் 'அழியா அழகுடையானின்' தோளழகில் ஈடுபட்டுக் காதல் கொள்வர் என்பது கூறவேண்டுவதில்லை. 'ஆடவர்' என்று பொதுப்படக் கூறியதனால் முற்றத்துறந்த முனிவரும் இவனழகில் துவக்குண்டு ஈடுபட்டு நைவர் என்பது பெறப்படும். தண்டகாரணிய முனிவர்கள் இவனழகில் ஈடுபட்டுத் தழுவிக் கொள்ள நினைத்ததை யாவரும் அறிவர். இந்த நிலையைக் கிருஷ்ணாவதாரத்தில் இவர்கள் கோபியராகப் பிறந்து தம் நினைவை—ஆர்வத்தை—நிறைவேற்றிக் கொண்டனர் என்பது வரலாறு.

பக்தர்களை இவ்வழகு ஈடுபடுத்தும் பாடு சொல்லுந்தரமன்று. அழகிய மணவாளனின் ஒவ்வோர் உறுப்பினழகிலும் ஈடுபட்டுப் பேசிய திருப்பாணாழ்வார்,

கொண்டல் வண்ணனைக்
  கோவ னாய் வெண்ணெய்
உண்ட வாயன்
  என்உள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணியரங்
  கன்என் அமுதினைக்
கண்ட கண்கள்
  மற்றொன்றினைக் காணாவே. [14]

[கொண்டல்–மேகம்; வண்ணன்–நிறத்தன்;
அண்டர்கோன்–நித்தியசூரிகட்குத் தலைவன்]

என்று முத்தாய்ப்பாகக் கூறுவர். சூடிக்கொடுத்த சுடர்க்கொடி அழகிய மணவாளரை, 'என் அரங்கத்து இன்னமுதர், குழல் அழகர் வாய் அழகர், கண் அழகர்,

14 அமலனாதிபிரான்-10

கொப்பூழில் எழுகமலிப் பூ அழகர்!" [15] என்று பேசி அவன் அழகில் ஆழங்கால்படுவர். மணக்கால் நம்பிகள்—அழகிய மணவாளனைக் காட்டி—ஆளவந்தாரைப் பக்தி நெறிக்குத் திருப்பின வரலாறும் உண்டு. பிள்ளை உறங்காவில்லி தாசரையும் பொன்னாச்சியாரையும் அழகிய மணவாளரின் எழிலுருவத்தைக் காட்டி அவர்களை விஷய காமத்தினின்றும் பகவத் விஷய காமத்திற்குக் கொண்டு செலுத்திய பெருமையை எம் பெருமானார் பெறுகின்றார்.

நம்மாழ்வார் திருமாலிருஞ்சோலை அழகரின் திருமேனி அழகில் ஈடுபட்டத் திறம் தனிச்சிறப்பு வாய்ந்தது. கற்பகத் தரு கப்பும் கிளையுமாகப் பணைத்துப் பூத்தாற்போலே நிற்கின்றான் எம்பெருமான். அவனது அழகு வெள்ளம் அலைமோதி ஆழ்வார்மீது பாய்கின்றது. எம்பெருமானை நோக்கி வினவுகின்றார்:

முடிச்சோதி யாய்! உனது
  முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீ நின்ற
  தாமரையாய் அலர்ந்ததுவோ?
படிச்சோதி ஆடையொடும்
  பல்கலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ?
  திருமாலே! கட்டுரையே. [16]

[முடி-தலை; அடி-திருவடி; படிச்சோதி-
இயற்கையான காந்தி; கடி-திருவரை]

என்ற திருப்பாசுரத்தில், "நின் திருமுக மண்டலத்தின் காந்தி மேல் மூலமாகக் கிளர்ந்து கிரீடச் சோதியாக ஆயிற்றா? நின் திருவடிகளின் ஒளிதான் ஆசன பதும மாகத் தென்படு கின்றதா? நின் திருவரையின் சோதிதான் படிச்சோதி ஆடையாயும் பல்கலனாயும் கலந்ததுவோ!

15 நாச். திரு. 11 ; 2
16 திருவாய் 3-1:1

அடியேனுக்குத் தெரிய அருளிச் செய்ய வேண்டும்" என்கின்றார். ஓவ்வோரழகில் ஈடுபடுகின்ற காலத்தில் அஃதொன்றே சிறந்ததாய்த் தோன்றி நிற்கும் தன்மையை இப்பாசுரத்தில் தெரிவிக்கின்றார் ஆழ்வார். இந்நிலை இராமன் மிதிலை மாநகரில் உலாப் போந்தபோதுஅவனது திருமேனியழகினைக் கண்ட மாதரின் நிலையை நினைவூட்டுகின்றது.

தோள்கண்டார் தோளே கண்டார்;
   தொடுகழல் கமலம் அன்ன;
தாள்கண்டார் தாளே கண்டார்;
   தடக்கை கண்டாரும் அஃதே;
வாள்கொண்ட கண்ணார் யாரே
   வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கொண்ட சமயத் தன்னான்
   உருவுகண் டாரை யொத்தார். 17

[கமலம்-தாமரை; தாள்-திருவடி; வாள்கொண்ட-வாளையொத்த; ஊழ்-பெருமை; உருவு-வடிவு]

ஒவ்வோர் உறுப்பையும் கண்டவர்கள் அழகிலேயே அழுந்திவிட்டார்கள். அதனதன் அ ஓர் எல்லையிலாமையாலே அதனதனினின்றும் கவனத்தைப் பிறிதொன்றில் திருப்ப முடியாது அதனதல அழகிலேயே ஆழ்ந்து விட்டார்கள் என்பதைத் தெரிவிக் கின்றான் கவிஞன். இந்த அடிப்படையிலும் அடுத்துவரும் பெண்ணின் பெருமையின் அடிப்படையிலும் வாலியாரின் வருணனையின் சிறப்பைக் காணலாம்

பெண்ணின் பெருமையைத் தெளிவாக அறிய வேண்டு மானால் தமிழ் முனிவர் திரு.வி.க. அவர்களின் **'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை'** என்ற நூலைப்

17 பாலகா.உலாவி-19

படித்து அறிந்து கொள்ளலாம்.[18] இங்கு, 'பாண்டவர் பூமியில்' வாலியார் 'மூப்பும் மரணமும் அற்ற மாமுனிவர் மார்க்கண்டேயருடன் தருமபுத்திரன் உரையாடுங்கால் 'பெண்ணின் பொறை நிறை' தருமன் பேச்சாக 'முழுவீச்சில்' அமைக்கின்றார்.

'மாதரார் மேன்மை—
மகரிஷியே!
ஓதற்கரியது; அது—
ஓதக் கடலினும் பெரியது.

மண்—
மகிமையுறக் காரணம்—
பெண்; பெண்ணில்லையேல்—
மண்ணின் மகிமை மண்!

அரிவை என்று நாம்—
அழைப்பது—அணிகள்
அணிந்த—
அறிவை;

தெரிவை என்று நாம்—
தெரிவது—தெய்வ குணங்களின்
செறிவை;

பாவை என்று நாம்—
பகர்வது—பண்ணைப் பயிற்றும்
பாவை;

18 இதனை நான் திருச்சி புனித குசையப்பர் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் மாணவனாக இருந்தபோது (1934-36) மேலை அரண்சாலையில் அக்காலத்தில் இருந்த மாவட்ட வாரிய நூலகத்தில் படித்து அறிந்து கொண்டேன். அதன் முகவுரை என்னைக் கவர்ந்து பின்னர் அறிவியல் அடிப்படையில் 'இல்லற நெறி' (1954) என்ற நூல் எழுதி வெளியிடவும் (கடித உத்தியில்) அதனை அப்பெருமகனாருக்கே அன்புப் படையலாக்கவும் தூண்டியது என்பதை நினைவுகூர்கின்றேன்.

பூவை என்று நாம்—
புகல்வது—பொறையைப்
பிலிற்றும்
பூவை;

நங்கை என்று நாம்—
நவில்வது—நம்மில் சரிபாதி
பங்கை;

வனிதை என்று நாம்—
விளிப்பது—வாழ்வில் வாய்த்த
இனிதை!

பெண்—இங்ஙனம்
பலவகையான
பேருடையாள்;
பேறுடையாள்! [19]

'உயிருக்கு இல்லை—ஓர்
உத்திரவாதம்!' எனும்—
உண்மையைப் பெண்மை—
உணர்ந்த போதும்...

சூல்கொள்ளும் ஆசை—
அதற்குள்
கால் கொள்ளும்; அதன் பொருட்டு—
மணாளனோடு மால் கொள்ளும்;
திரு—
மார்பிரண்டில் பால் கொள்ளும்!

பெறும்—
பிள்ளைகளில் சில...

வயிற்றிலும்—
உதைக்கும்; தாயை
வெளியிலும்
உதைக்கும்!

---

19 அரிவை, தெரிவை, மங்கை, மடந்தை, பெதும்பை, பேரிளம் பெண்-என்று வயதிற்கேற்ற பெயர் கொண்டிருப்பதை உலா இலக்கியங்களில் காணலாம்.

எனினும்—
ஈன்றவள் இதயம்...

உதைக்கும் காலுக்கு—
'வலிக்குமே, வலிக்குமே!' என்று—
பதைக்கும்!

அடடா! என்ன—
அற்புதம்!
'பெண்' எனும் பதம்—
பேசரும் உன்னதம்!

சாவுள உயிர்கள்தாம்—
சனிப்பவை யாவும்; எனினும்—
பூவுள உயிர்களில்—
'பெண்ணின் பெருந்தக்க—
யாவுள? யாவுள?' என—
யாண்டும் யாவரையும்—என்
நாவுள நாள்வரையில்—
நானிங்கு வினவுவேன்!'

தருமன்இங்ஙனம்—
தன் கருத்தைச் சொன்னதும்...

ஏற்றார் மார்க்கண்டேயர்—ஓர்
எழுத்து விடாது அதை; (II—பக்:215-16)

இங்கு மார்க்கண்டர் வாயில் வைத்து பேசுவது யார்? வாலியாரல்லவா? 'உதைக்கும் காலுக்கு வலிக்குமே, வலிக்குமே' என்ற கவிஞரின் கூற்று தாயின் நுண்ணுணர்வைச் சுட்டும் கவிஞரின் நுண்ணுணர்வையும் சுட்டி விடுகின்றது!

6 (அ) இனி, பெண்ணின் அழகு பற்றிய வருணனைகளைக் காண்போம். *இலக்கியங்களில் இந்த அழகுபற்றி தான் அதிகமாக வருணிக்கப் பெறுகின்றது. பெண் காவிய*

மாந்தர்களின் இந்த அழகோவியங்களைக் காணலாம். ஆண்டுக் கண்டு மகிழ்க (இயல்-3). *ஈண்டும் சிலவற்றைப் பட்டு கத்திரித்த மாதிரி சுருக்கமாகக் காட்டுவோம்.*

(1) சத்தியவதியைக் *குறிப்பிடும்போது,*

அவள்—
பரதவர் குலத்துப்
பாவை!—இந்தப்
பூவில்—எந்தப்
பூவிலும் இல்லாத
வாசத்தை—தன்
கேசத்தில்—
வைத்திருக்கும் பூவை! (I—பக்:32)

(2) பிருதை (குந்தி)யைக் *குறிப்பிடும்போது,*

—அவளது
கொப்பூழ்க் கொடியைக்
கத்திரிக்கும் போதே—
வனப்பு மிக்கவள் என—
வையம் வழங்கிவிட்டது—
விருதை!

அவள்
அமாவாசை இல்லாத—
வெண்கதிர்;
அத்தமனம் இல்லாத—
செங்கதிர்; ஓர்
ஆடவன் வந்து—
அறுவடை செய்யாது—
மண்கதிர்போல்—பருவம்
முதிர்ந்து நிற்கும்—ஒரு
பெண்கதிர்! (I—பக்:84-85)

(3) **சித்திராங்கதையைக்** *குறிப்பிடும்போது*

பூங்காவில்—
பூப்பறித்த—
பூ—
வெறும் பூவல்ல; பாண்டிய—
வேந்தன் பெற்றெடுத்த—
நறும்பூ!

அரும்பு என்றிருந்தும்—அது
அலர்ந்த பின்பும்—ஒரு
சுரும்பு தொடவொண்ணாத—
சுத்தப்பூ; சுந்தரப் பூ

....
வெண்பூ என—நகும்
பெண்பூ எனினும்—
நாணாப்பூ—அந்த
நாண்பூ; அது
அறுபது சதவிகிதம்—ஓர்
ஆண்பூ! (II—பக் 30)

(4) அழகியாக மாறி வந்த **இடிம்பியின்** அழகைக் *குறிப்பிடும்போது,*

இலேசு பட்டதாக—
இல்லை—அவளது
இலாவண்யம்; ஈர வெளிச்சம்—
இறைக்கும் முகம்—
இரு பிறையும் முயற்கறையும்
இலா மதியம்!

கொடி—
மின்னலடித்தது
இடையில்; குளிர்
தென்னலடித்தது
நடையில்!

இரு—
மொச்சை உட்கார்ந்த—
முலாம் பழங்களை—ஒரு
கச்சை தாங்கியது; மோக—
நச்சை உமிழ்கின்ற—
நயனங்களில்—காம
இச்சை துலங்கியது!

அவள்—
கன்னங்கள்—
கிட்டப் பறந்து—மட
அன்னங்கள்—தம்
முகம் பார்க்கும்;

'பூக்கள்—
புளித்து விட்டன!' என்று—தேன்
ஈக்கள்—அவளது
இதழ்களிடம் கள் கேட்கும்!

கண்கள்—
காதுகளில் இடிக்கும்;
கூந்தல்—
குதிகாலைப் பிடிக்கும்!

ஒரு—
சௌந்தர்ய—
சூறாவளி...
மாவீரன் பீமன்முன்—
மையம் கொண்டது;
'அது—
தன்னைக் கடக்குமோ? இல்லை

தன்னைக் கடத்துமோ?' என்று—
அவன் மனம்—ஓர்
ஐயம் கொண்டது! (I—பக்:294)

இதனைப் படிக்கும் நம்மை சூர்ப்பணகை மேற் கொண்ட அழகை நினைவுகூறச் செய்கின்றது.

(5) ஊர்வசி: இவள் ஓர் தேவதாசி. இந்திரன் சபையை அலங்கரிப்பவள். இவள் அழகைப்பற்றி வாலியார் வரைவது:

இருகண் வைத்து—
இந்திரன் காத்த விஜயன்மேல்—
ஒரு கண் வைத்தவள்—
ஊர்வசி; ஊர்வசி—
ஊர்ப்பட்ட அழகோடு—தேர்
ஊர்ந்தபடி—திருவீதி
ஊர்வலம்வரின்—உருகுவான்
ஊர்வாசி!

தேவமாது ஆயினும்—அவள்
தேவர்களையே தேம்ப வைத்த—
பாவமாது;
மூவா மருந்துண்டு—
முதுமைக்கு முதுகு காட்டிய—
ஜீவமாது!

கார் வசிக்கும் குழல்;
கைவாள்—
கூர் வசிக்கும் கண்;
செய்யுள்—
சீர் வசிக்கும் மொழி;
தரளத்
தார் வசிக்கும் முறுவல்;

இளந்தெங்கு—
ஈர்வசிக்கும் மார்பு;
திருமாரன்—
தேர்வசிக்கும் மருங்கு;
விலாமிச்சை—

வேர் வசிக்கும் சருமம்;
எழுதவொண்ணா—
ஏர்வசிக்கும் தேகம்;
என்றிலங்கும்—
ஊர்வசிக்கும் மேலான—
ஓரழகை—அமராவதி
ஊர் வசிக்கும் பெண்டிரில்
ஒருத்தியும் பெற்றதில்லை; வேறு—
பார் வசிக்கும் பாவையர்க்கும்—
பேரெழில் இதுபோல்—
உற்றதில்லை! (II—பக்:180)

ஊர்வசியின் அழகை அவள் வாக்கினாலேயே தெரிவிக்கும் வாய்ப்பை அமைக்கின்றார் கவிஞர் வாலி.

.... நான்
திருமாலின்
தொடையில்[20] பிறந்தவள். தேவ
தாசிகளில் சிறந்தவள்!
....
அழகு என்றதொரு சொல்
அகராதியில் இடம் பெற—
அடியாள்தான் காரணம்; என்—
அழகுதான் அழகின் பூரணம்!

ஆம்! நான்தான்
அந்தத்தின் அந்தம்;
அலகிலா ஆனந்தம்—அருளும்
அந்தம் என்வசம் அனந்தம்!

உலகத்தை வளைத்திடும்—
வனப்பை—என்னுள் வைத்து
உலகத்தை வளர்த்தது—
காலம்; தேவர்—

20 திருமாலின் தொடையில் (=ஊரு) பிறந்ததால் ஊர்வசி என்ற பெயர் பெற்றதாகக் கூறுவார் வாலியார். நான்முகன் படைப்பிலேயே இவளைத் தொடையழகியாகப் பிறப்பித்தான் என்ற கதையும் உண்டு.

முப்பத்து—
முக்கோடிப் பேர்க்கும்—
மூளை மழுங்க—நான்தான்
மூலம்!

என் கண்கள்—ஐயம்
இடாவிடில்—ஏது
நெடுவானுக்கும் கடலுக்கும்—
நீலம்?

நான் கொடுத்த—கூந்தல்[21]
நாற்றம் பெற்றுதான்—
ஏற்றம் பெற்றது—
ஏலம்!

என் முகத்தைப் பார்த்தபின்—தன்
மண்டை கனத்திற்கு—ஒரு
முழுக்குப் போட்டது
அழுக்கு நிலா;

நான்—
பேசுவதைக் கேட்டபின்—
பெரிதாக—தன்னைப் பற்றிப்
பீத்துவதை நிறுத்தியது—
பழுத்த பலா!

கோவைப் பழமென்று—
கொத்த வந்தபோதுதான்—என்
அதரச் சிவப்பு—கிளிகளின்
அலகுகளில் ஒட்டியது;

என் ஒயிலைக் கண்டு—தோல்வியை
ஒப்புக்கொண்டு—கை
ஒப்பம் இங்கு—கொடிமின்னல்
கப்பம் கட்டியது!

21 கொங்குதேர் வாழ்க்கை (குறுந்) என்ற பாடலில் அடங்கியுள்ள கதையை நினைக்கச் செய்கின்றது.

இனியவளே!
இந்த...
உருப்பசியின்—
உருவைக் கண்டால்—யார்க்கும்
உருப்பெறும் உடற்பசி;
உண்டாகாது குடற்பசி! (II—பக்:186)

(6) **ஜாலவதி:** *தேவலோகத்திலுள்ள அப்சரசுகளில் ஒருத்தி. மகரிஷி கௌதமரின் மகன் சரத்வான் புரியும் கடுந்தவத்தைக் கெடுக்க இந்திரனால் அனுப்பப் பெற்றவள். இவள் அழகைப்பற்றி வாலியார் வரைவது:*

தேவ வனத்தில்—
தேன் பிலிற்றும்...
ஜாதிப்பூக்களில்—
ஜகத் ஜோதியாய்—
ஜ்வலிக்கும் ஒரே பூ—
ஜாலவதி!
ஜாடைகள்—
ஜாலரா தட்ட...
சதங்கைகள்—
ஜதிகள் சொல்ல...
நாணம்—
நட்டுவாங்கம் செய்ய..
நளின—
நடைபயிலும்—ஒரு
நீல நதி; நீண்ட—
சடைபுரளும்—அந்த
ஜாலவதி!
ஜாலவதியின்—
ஜாலத்தில் அவதியுறா—ஆண்
ஜாதி என்பது—எந்த
ஜகத்திலும் இல்லை; மனத்தை—

மோகிக்க வைக்கும்—
மோகத்தில் சேர்க்கும்—அந்த
மோகன முறுவல்—எந்த
முகத்திலும் இல்லை!

கச்சுக்குள் இருப்பினும்—
கரகங்கள்—வானோரைப்
பிச்சுக்குள் இருத்தும்—
பேராற்றல் பெற்றவை; பட்டுக்
கலைக்குள் இருப்பினும்—
கதலிகள்—இமையாரை
வலைக்குள் இருத்தும்—
வசீகரம் உற்றவை!

இன்னொரு விசுவாமித்திரன்—
எனக் கணக்கிட்டு—நூறு
விழுக்காடு—விரகத்தில்
விழுக்காட்ட...
அடங்கா—
ஆசையெனும்—
அழுக்காற்றில்—
முழுக்காட்ட...
ஜாலவதி—எனும்
கோலமதி—
வானிலிருந்து—
வையம் இறங்கியது;
வையமே—அதன்
வனப்பு வெளிச்சத்தில்—
ஒளிமயமாய்ப் பிறங்கியது!

உக்கிரம் மிகுந்த
ஒரு நோன்புக்கு—ஊறுசெய்ய
வக்கிரம் முயன்றது; சரத்வான்—
முன்நின்று—அது

முயற்கூடொத்த முகங்காட்டி—
மோக நடம் பயின்றது!

உள்தொண்டையில்
ஓராயிரம் கோகிலங்களை—
உட்கார்ந்து பாடச் சொல்லி...
சிங்கார சங்கீதத்தை—
சரத்வான் செவிகளில்—தன்
குரல்வழியே துப்பினாள்—
கோதை! கால்நடக்கும்—
ஊதை! (I—பக்:191-192)

(7) தமயந்தி *என்ற பெண்ணின் அழகைப் பேசும்போது வாலி சொல்லில் வரைவது:*

அவள்—
அமாவாசையை—
அளக பாரமாய்—
அள்ளி முடித்த...

அம்புவி—
அம்புலி!

'எந்த நாளில்—
இந்த—
நிலத்து நிலா—
நம்மைப் பிடிக்கும்—
கிரகணம் நேரும்? பாணிக்
கிரகணம் நேரும்?'
என்று—
இராகுவும் கேதுவும்
நின்று ஏங்குவர்;
நெடுமூச்சு வாங்குவர்!

அக்கினி—அவள்
அழகு வெப்பத்தில்—
அடிக்கடி வெந்து—
அஸ்தியானான்;

....

அவள்—
அசுத்தமற்ற அபரஞ்சி!

....
வண்டு வந்து—
வாய் வைத்து உறிஞ்சி—
எச்சிற் படுத்தாத—
ஈரக் குறிஞ்சி!

அகலவிழி—
அவியாசோதி; திருவாய்—
அருள்மொழி—
அரிகாம்போதி!

வன்னம் மிகுந்த—அவ்
வஞ்சி நடை பார்த்தால்—
அன்னம் உண்ணாது
அன்னம்!

தென்னங்காயைத்
தாங்கும் இடையோ—மின்னின்
பின்னம் எனும்படி—
சன்னம்!

பாதாதி கேசம்—
பார்த்தால் தெரியும்—
பளிச்சென்று—ஒரு
பவித்திரம்; தெய்வக்—
காரிகை சிறப்பைக்
கூறவொணாது—கைகட்டி
நிற்கும்...
காரிகை கற்ற—
கவித்திறம்! (II—பக்:191-192)

(8) உலூபி *என்ற நாகமங்கையின் வனப்பை வருணிக்கும் போது வருவது:*

உலூபியோடு—
உவமித்தால்—ஒரவிழியால்

உடற்பசி ஊட்டும்–
உருப்பசி ஒரு குரூபி!

உலூபி விஷயத்தில்–தானோர்
உலோபி அல்லவென்று–
விரிஞ்சன் அவளுக்கு–அழகை
வாரிக் கொடுத்திருந்தான்;
நால்வகை இரணியத்தை–
நெய்யாயுருக்கி–அவளது
தோல்வகை முழுவதையும்–
அதில்
தோய்த்து எடுத்திருந்தான்!
அவள்–
பாதம் முளைத்த–பாரி
ஜாதம்; பனிவிழிகள்
சீதம் விளைக்கும்–தனுர்
மாதம்!

இரண்டு புஜம்–
இடம் வலம்–இருச்சுவரும்
ஏமாம் புஜம்;
வஸ்திரம்–
உடுத்திவரும்–மன்மதனின்
அஸ்திரம்!

நூபுரம் ஒலிக்க வரும்–மணி
கோபுரம்;
ராக்கொடி சொலிக்க வரும்–
சிறு பூங்கொடி! (II–பக்:26) [22]

(9) **பாஞ்சாலி:** *சூதாட்டத்தில் இறுதியாகப் பாஞ்சாலியைப் பந்தயப் பொருளாக தருமன் வைக்கத் துணிந்த நிலை: வாலியார் வாக்கில் வருவது:*

22 இவள் காவிய மாந்தர்கள்-அறிமுகத்தில் இடம் பெறவில்லை.

அல்குலில்—
அரும்பாத—
ஓர்—
உயிர்ப் பூவை; ஈர்—
ஆக்கைகள் ஆக்காத—
ஆக்கையை;
சுக்கிலம் விளைக்காத—
சுயம்புவை; சுத்த—
சுக்கிலம் என சொலிக்கும்—
சுடர்விழியை;
ஐவருக்கென்றே ஊற்றெடுத்த—
ஐராவதியை; ஆளருடன்—
அருந்ததியைப் பார்த்த—
அருந்ததியை;
ஓதத் தாமரையை—
ஒத்து இருக்கும்—இரு
பாதத் தாமரையை—படிமிசை
பாவி நடக்கும்—ஒரு
சீதத்தாமரையை; தீயில் பூத்த—
வேதத் தாமரையை;

துருபதனின்—
துக்கமெனும்—
இருட்டை விரட்டவந்த—
இருட்டு நிற இந்துவை;
வெற்பை நிகர்த்த—
கற்பை—தன்னுள்
பொதிந்து வைத்திருக்கும்—
பொற்பை;
எம்மனை புகினும்—
செம்மனை எனும்படி—
அம்மனை பொலியச் செய்யும்—
அம்மனை... (II—பக்:140)

மிக்க மனவேதனையுடனும் மனஇறுக்கத்துடனும் தாம் சூதர் சபையில் இருக்கும் ஒருவராகக் கருதி வாலியார் ஈண்டு உரைப்பது. அதே பண்புகளுடன் பாரதி:

பாவியர் சபைதனிலே—புகழ்ப்
  பாஞ்சால நாட்டினர் தவப்பயனை,
ஆவியில் இனியவளை,—உயிர்த்
  தணி சமந்துலவிடு செய்யமுதை,
ஓவியம் நிகர்த்தவளை,—அரு
  ளொளியினைக் கற்பனைக் குயிரதனைத்
தேவியை, நிலத்திருவை—எங்குத்
  தேடினும் கிடைப்பருந் திரவியத்தை,

படிமிசை இசையுறவே—நடை
  பயின்றிடும் தெய்விக மலர்க்கொடியைக்
கடிகமழ் மின்னுருவை,—ஒரு
  கமனியக் களவினைக் காதலினை
வடிவுறு பேரழகை—இன்ப
  வளத்தினைச்... [23]

என்று பாரதியின் கூற்றை, அதை விடச் சற்று வேகமாக, ஆழமாக, எதிரொலிப்பதைக் காண முடிகின்றது. படிக்கும் நாமும் சபையில் இருக்கும் ஒருவராகக் கருதி, நம்மை மறந்து வேதனையுறுகின்றோம்.

6 (ஆ) அடுத்து ஆணின் அழகுபற்றிய சில வருணனைகளைக் காண்போம். *அழகியாக வந்த இடிம்பியின் மனம் (1) பீமனைப் பற்றி எண்ணும்போது, வருவது:*

கொல்ல நினைத்தவள்—
பீமனைப்
புல்ல நினைத்தாள்;
தின்ன நினைத்தவள்—பீமனைப்
பின்ன நினைத்தாள்!

23 பாரதியார்-பாஞ்சாலி சபதம்-துகிலுரிதற் சருக்கம்-243,244

சல்லிசாக நினைத்து—யாரை
சாப்பிட வந்தாளோ—
அவனழகு
வள்ளி சாக அவளை—
விழுங்கியதைக் கண்டாள்;
ஆண்மோகம் என்னும்
ஆலம் பாதித்து—அங்கமெலாம்
நீள நெடுக—ஏகத்துக்கு
நீலம் பாரித்து நின்றாள்!

பீமனின்—
வலிவையும் பொலிவையும்—
வர்ணிக்கலானாள்; தன்—
வசமற்றுப் போனாள்!

அடடா!
ஆணுக்கு ஆண்—
ஆசைப்படும்—
அழகன் இவன்; இளங்—
குமரியரை அமளியில்—இடை
குழையக் குழையக் குலவும்—
குழகன் இவன்; உடல்—
வனப்பெனும் ஏர்கொண்டு—
என்
நினைப்பெனும் நிலம் உழும்—
உழவன் இவன்; என்—
வாலைப் பருவமெனும்—
சோலைக்கு வாய்ந்த—
கிழவன் இவன்!

மதன்கணை பாய்ந்து—மையல்
மதம் பிடிக்கும்—மாதரார்
மனவேழத்தை அடங்கும்—
மாவுத்தன் இவன்; அனு—
ராகக் குதிரையின்—
ரௌத்திரம் தணித்து—கல்யாண

ரதத்தில் பூட்டவல்ல—
ராவுத்தன் இவன்!

பொருப்பு வில்லி—எரித்த
கருப்பு வில்லி—
சனித்தானா மீண்டும்?—
இவனோடு
சல்லா பித்தல் வேண்டும்!

நான்—
தொத்தத் தோதான—
தோளன்; என்—
அன்புக்கு உரிய—
ஆளன்! (I—பக்:292-93)

அரக்கியல்லவா? கனபாடி அவள், தன் உடலுக்கேற்ற வாளிப்பைப் பீமனின் வாளிப்பு நன்கு பொருந்தியிருப்பதாகக் கருதிக் கணிக்கின்றாள்.

(2) அபிமன்யு: *இவன் சுபத்திரையின் மூலம் பார்த்தன் பெற்ற பிள்ளை. இவன் அழகுபற்றி வாலியார் விளக்குவது:*

வாளிப்புக்கு—ஒரு
வியாக்கியானம்; எந்த—
வில்லிக்குமில்லை—அவனை
விஞ்சிய ஞானம்; பற்பல—
வித்தகர் தந்தது—அவனது
வித்தியாதானம்; இந்த—
வயதிலேயே— அவன் புகழ்
விரிந்த வானம்!

ஒருபோதும்
வைத்த குறி...

அகலாது அவன் வாளி; அவன்
அத்துணை அறிவாளி; அவன்—

வெஞ்சமர்க் கேணியில்–வெற்றி
வெள்ளத்தை அள்ளும் வாளி!

....
விசும்பிலிருந்து–கறுப்பு
வில்லியல்லவோ–
விஜயம் செய்திருக்கின்றான்–
விஜயம் மகனாய் இத்தரைக்கு!

உள்ளூர அபிமன்யுவும்–
உத்திரையை இச்சித்தான்;
ஓரக் கண்ணால் அவனும்–அவ்
ஓவியத்தைப் பட்சித்தான்;
பாராதது போல்–சில போழ்து
பாசாங்கு செய்து சிட்சித்தான்;
ஆக மொத்தம்–அவன்
அவளது காதலை ரட்சித்தான்! (II–பக்:292)

இரத்தின மனச்சுருக்கமான இதில் அபிமன்யுவின் அழகும் அவன் காதலும் தெளிவாகின்றன.

(3) **அர்ச்சுனன்:** *இவனுடைய அழகை வாலியார் ஊர்வசியின் வாக்கில் வைத்து நமக்குக் காட்டுகின்றார்.*

'அடடா! என்ன–
ஆஜானுபாகு வானவன்!
இவனில்–
அரைக்கால்வாசி–இங்கு
ஆவானா ஒருவானவன்!

ஊனுடன்–
உயிருடன் வந்து–வனப்பில்
வானுடன் போட்டியிடும்–
மானுடன்!

முழங்கால்–
முட்டியைத் தொடும்–

நீண்ட கை அமைந்த—
ஆண்டகை!

எரிக்காது
ஈசன் விட்டதால்—
மரிக்கா திருக்கும்—மற்றொரு
மன்மதன்!

அழகன்;
குழகன் எனப்படும்—
அந்தவேள் கந்தவேள் நிகர்—
இந்தவேள்!

மீதி—
மிச்சமின்றி—அச்சோ!
ஆதி அந்தம்—ஓர்
அப்பழுக்கற்ற அந்தம்! (II—பக்:182)

7. காமஇச்சை

மனிதன் பிறந்தநாள் தொட்டு சுடுகாடோ இடுகாடோ ஏகும்வரையில் அவனை ஆட்டிவைப்பது காமம். பல பொருளுடைய இச்சொல் மனிதனின் பல்வேறு இச்சைகளைப் பாங்குற எடுத்தோதினும் அவன் மங்கையர் மீது கொள்ளும் காமமே வலியது; பல்வேறு திசைகளில் அவன் குடுமியைப் பிடித்து ஆட்டுவது. இந்த உணர்வை புலப்படுத்தும் முறைகளில் ஆண்களிடமும் பெண் களிடமும் வேறுபாடுகள் காணப்படும். ஆண்கள் புலப் படுத்தும் முறையில் வேகமும் விறுவிறுப்பும் அதிகமாக இருக்கும். ஒரு சில பெண்களிடமும் இம்முறை காணப் படுவதுண்டு. பாண்டவர் பூமியில் காணப்படும் முறைகளை ஈண்டு நோக்குவோம்.

7 (அ) ஆண்கள் விரகவேதனை:

(1) **கீசகன்:** *விராட மன்னனின் மைத்துனன்; கீழ்மைகளின் மொத்தம். அவன் 'சைவந்தரி' என்ற பெயரில் உள்ள திரௌபதியின்மீது காதல் கொள்ளுகின்றான். அவனது விரகவேதனையை அவன் வாய்மொழியாலே கூறும் வாலியார்:*

"அன்பே! உனது—
ஆசையெனும் முட்டையை—
அலுங்காது நலுங்காது—என்
அகத்தினில் வைத்து...

அன்றாடம் காக்கிறேன்—
....
அடை; அடைந்த பிற்பாடு—
அந்தப்புரத்துக் கதவுகளை—
அடை; ஆலிங்கனச் சிறையில்
அதிகாலை வரையில்—எனை நீ
அடை; அடிக்கடி பிழிய—
எனை
அனுமதி; அதரங்கள்—தேன்
அடை; ஆறாய் விரகம்—
என்னுள் அங்கங்கு பெருக—
அணைத்து நீ
அடை; அடையும் இன்பத்தில்—
அம்பது சதவிகிதம்—நீயும்
அடை; ஆதி ஜன்மத்தில்—நீ
அடியனிடம் பட்ட கடனை—
அடை; அடை மொழிக்குள்—
அடங்கா அழகே! அனுசரி!
பின்...

அடைமழைதான் ஆனந்தம்
மூச்சு விடாது மொழிந்தான்; அசடு
வழிந்தான்! (II—பக்:261)

(2) அர்ச்சுனன்: *இவன் உலூபியோடு இன்பந் துய்த்தலை வாலி வர்ணிப்பது:*

அர்ச்சுனன்—
அவளோடு...

விடியவிடிய—கண்
விழித்தான்; அவள்
வனப்பை—உதடுகளால்
வழித்தான்; நாகலோகக்
குமரியோடு—கூடிக் குலவிக்
கொழித்தான்; அவளது—
ஆசைகளை—ஆனமட்டும்
அழித்தான்; அடங்காத—
விரகத்தை—வேரோடு
ஒழித்தான்; விட்டுவிட்டு—
கட்டில் கவிதை—எழுதிஎழுதிக்
கிழித்தான்; அவளது—
பொன்னாரங்களை—
இடைஞ்சலென்று
பழித்தான்; அவள் சிலிர்க்க—
சுட்டு விரலால்—அடிவயிற்றில்
சுழித்தான்; அழகிய—
கொப்பூழை
முத்தாடி—மேலுமதைக்
குழித்தான்; ஆக மொத்தம்—
கன்னாபின்னாவென்று—
கங்குலைக்
கழித்தான்!

புலர்ந்தது காலை;
மலர்ந்தது சோலை;
உலூபியின் இடுப்பில் போய்—
உட்கார்ந்தது சேலை! (II—பக்:27-28)

(3) சந்தனு : *இவன் தண்ணீர் மங்கையிடம் கொண்ட விரக வேதனை:*

மோகனப் புனலில்—அவனை
முழுக் காட்டினாள்; அதில் தன்
முனை முறியா முனைப்பை—
முழுக்கக் காட்டினாள்!
....
'ஆர் நீ?' என வினவினாள்!
அவன்—
வினாவிற்கு—அவள்
விடையளிக்க விரும்பாது...
வார்த்தைகளை—தன்
வாய்க்குள் சிறைவைத்து—
உதடுகள் என்னும்
கதவுகளை—மௌனச்
சாவியால் பூட்டினாள்; முறுவல்
சின்னதாய்க் காட்டினாள்!

தோளில்—
செந்தனு தாங்கும்
சந்தனு...
பேசா—
மடந்தையே!—என்னை
வருத்தும் விரகத்திற்கு—
உடந்தையே! நெஞ்சைச் சுடும்—
நெருப்பு வல்லியே! சேலை கட்டும்—
கறுப்பு வில்லியே!—ஆசை
வேள்வியில்—இன்னும்
வார்ப்பதேன் நெய்? நான்—
வெந்தது போதும்! எனைநீ—
விவாகம் செய்! நானொடு
வெற்றுப் புள்ளி அல்ல;
வேந்தன்! என் வேட்கைக்கு—
முற்றுப்புள்ளி வை!' (I—பக்:10-11)

(4) அர்ச்சுனன்: *சித்திராங்கதையுடன் இன்பந் துய்த்தலைக் கவிஞர் வாலி கழறுவது:*

வடக்குக்குத் தெற்கு—
வாழ்க்கைப்பட்டு—சுகம்
தொடக்கமானது—அறைத்
தாழ்ப்பாள் இட்டு!

ஒவ்வொரு நாளும்—ஊர்
ஓசைகள் ஒய்ந்ததும்—
சித்திராங் கதைக்கு—விஜயன்
சேலையானான்;
விடியும்வரை—அதே
வேலையானான்!

மேனிக்கு மேனி—
தீனியானது;
செவ்வாய்க்குச் செவ்வாய்—
சீனியானது!

நாளும் இதுபோல்—நழுவின
நான்கு தோள்கள்; அதில்—
தொலைந்து போயின—
தொண்ணூறு நாட்கள்! (II—பக்:34)

(ii) சுபத்திரையைப் பற்றியது:

சுபத்திரையின் நினைவு—
அவனை
சதா சர்வகாலம்—
உபத்திரவப் படுத்தியது;
வனவாச காலம் முடிந்தும்—
வீடு திரும்பாமல்—காதல்
விளையாடலில் மடுத்தியது!

புறப்பட்டான்—
பிரபாச தீர்த்தம் விட்டு;

....
பத்துக்கல் போனதும்–
பலமாக...

பிடித்தது மழை;
இடித்தது முகில்;
அடித்தது ஊதை;
கடித்தது குளிர்! [24]

மேகம்–
தெப்பமானது;
உள்ளம்–
வெப்பமானது!

காதல் என்னும்–
கணப்பு–
நெஞ்சுக்குள்–தகதகென
நீறுபூத்துக் கிடந்தது; அது–
உமிழ்ந்த–
உஷ்ணம்–அவனது
நாடிகள்–
நரம்புகளில் நடந்தது!

சற்று தூரம்–
சென்றதும்...
....
ஆலமரத்தின்–
அடியில் ஒதுங்கியபின்...

சந்யாசி சித்தம்–
சுபத்திரையை நாடியது–நாடி;
தன்யாசி ராகத்தில்–
தானம் பாடியது!

அம்மான் ஈன்றெடுத்த–
அம்மான்; ஆயர்குலப்

24 Biting Chillness என்பதன் தமிழாக்கம் போல் தோன்றுகின்றது.

பெம்மான் உடன்பிறந்த—
செம்மான்...

முகத்திரை உள்ளே—
முறுவல் வழிய—அர்ச்சுனன்
அகத்திரை தோன்றி—
அதிசயம் ஊட்டினாள்; ஆடை—
அணிமயில் அவனை—
அணிமையில் வரச் சொல்லி—
தன்
பனிமடல் விழியில்—ஒரு
தனிமடல் எழுதிக் காட்டினாள்!

அனைத்தும்—
நனவுபோல் வந்த—
கனவு என்றறிந்து—
நண்பகல் வெய்யிலில் வைத்த
நவநீதமாய்...

விஜயன்—
உருகினான்; விரகத்தில்—
விழிகள்—
செருகினான்; ஆல—
மரத்தடியில் நின்று—
'மானே! மயிலே!' என்று—
பிதற்றுமளவு—பித்தம்
பெருகினான்! (II—பக்:39-40)

(5) நகுஷனின் விரகவேதனை: *இந்திரபதவியை ஏற்ற நகுஷனுக்கு இந்திராணியின்மீது ஒரு கண். ஒருநாள் அவன் மங்கையரோடு நீராடுகையில் இந்திராணியை நேர்காண நேர்ந்தது. உடனே அவன் உள்ளம் ஓடிப் போய் அவள்மீது ஊர்ந்தது.*

சசிதேவியின்—
சவுந்தர்யம்—அவனை

சாப்பிடவிடாமல்—
சயனிக்க விடாமல்—
சங்கடம் செய்தது; அவனுள்—
சரசவேலை நெய்தது;
அவன்மேல்—
சரமழையை—அநங்கன்
சாபமும் பெய்தது!

அவனுக்கு—
அன்றைய—
இராப்பொழுதானது—உறக்கம்
இராப் பொழுதானது! (II—பக்:317-18)

7 (ஆ) பெண்களின் விரகம்

(1) இடிம்பி : *இவள் ஓர் அரக்கி. இவளது காம வேதனை சூர்ப்பணகையின் விரக தாபத்தையொத்தது. வீமன்மீது:*

'நான்—
தொத்தத் தோதான—
தோளன்; என்
அன்புக்குரிய—
ஆளன்! இந்த
மன்மதனுக்கு—நான்
மாலையிடுவேன்; இவன்
சயனிக்க—நான்
சேலையிடுவேன்!'

தனக்குத்
தானே...
வீமனின் வாளிப்பை—
விளம்பி—உளம்
இடிந்து நின்றாள்—
இடிம்பி!

அவள்—
மனத்தை—
மன்மத அவத்தை—
மர்த்தனம் செய்தது; அந்த—
மர்த்தனம் தாளாது—அவனது
மாதனம் இரண்டும்—கோர
நர்த்தனம் செய்தன.

அத்தனம் காட்டும்—
அடங்காத் தனம் கண்டு—இனி
மெத்தனம் காட்டல்
மடத்தனம் என்று—'உளம்—
ஒத்தனம்! வா!' என—
வீமனை வளைப்பதில்—அவள்
எத்தனம் காட்டினாள்;
ஒரு—
மந்திரத்தால்—சுந்தர
மங்கையாய் மாறி—வீமன்
முன்சென்று—அவனுக்கு
மையல் ஊட்டினாள்!

....

உத்தரவிட்டான்—என்
உடன்பிறந்தான் எனக்கு—
உன்னைக் கொல்ல!
கொல்வந்தேன்; ஆனால்—
கொல்லப்பட்டேன்; அந்தக்
கொடுமையை என்சொல்ல!

ஆம்! உன்—
அழகும் ஆண்மையும்—என்னை
அடித்துத் தள்ளியது; உன்பால்—
'போ, போ!' என்று—எனது
பொல்லாத ஆசை—என்
கழுத்தைப்
பிடித்துத் தள்ளியது!

இனி நீ—
எனக்கு—
இரை யல்ல;
இறை! என்—
மனந்தளவில்—நீ
மாமன்முறை!

என் உள்ளத்தைக் காத்தது—உன்
உடல் வாகு; எனக்கு—
மாலையிட்டு—நீயென்
மணாளன் ஆகு!

திருமணம் ஆனபின்—
தினம் தினம்...
விடியும் வரை—தாள்
விலகா திருக்கும் அறை; அங்கு
விளையும் இன்பத்திற்கு—ஏது
வரையறை!

என்—
மனத்தைப் புரிந்துகொள்: திரு
மணத்தைப் புரிந்துகொள்! (I—பக்:293-95)

இஃது அரக்கப் பெண்ணின் விரகதாபம்.

(2) **ஊர்வசி :** *தேவதாசி; துடை அழகி (ஊரு—துடை). அத்தனின் வேண்டுகோட்கிணங்க உம்பருலகு சென்ற பார்த்தன்மீது தன்னைப் பறி கொடுக்கின்றாள். வானுலகில் இந்திரன் ஒதுகீடு செய்து அதில் வாழும் அர்ச்சுன னிடத்திற்கே சென்று விடுகின்றாள்.*

அவளை—
வாஞ்சையோடு—
வரவேற்று—காஞ்சன
ஊஞ்சலில் இருத்தி—
உபசார மொழிகளை வார்த்தாள்!

இந்த நிலையில் அவளது விரகவேதனையை அவளாலேயே நினைக்கச் செய்துவிடுகின்றார் வாலியார். இங்கு அவர் உளவியல் வல்லுநர்போல் செயற்படுகின்றார்.

சிறுகால் மலர்த்தும்—
சீதளப் பூமேல்—
அறுகால் மல்லாந்து—கண்
அயர்தல் போல்...

ஒருகால் இவனெனக்கு—
உடன்பட்டால்—நான்
இருகால் பரப்பி—இவனது
இளமார்பில் புரள வேண்டும்;

மர்த்தனம் புரியும்—மத்து
நர்த்தனம் புரிய...

தயிரில் வெண்ணெய்—
திரளுதல் போலே—
இவனாலென்
உயிரில் ஓரின்பம்!
திரள வேண்டும்!

ஆசைப் பெருக்கில்—ஓர்
ஆயிரம் கிருதி—எனை
ஆக்கத் தூண்டும்—இவன்
ஆகிருதி!

இங்ஙனம்—தன்
எதிர் நிற்கும்...
விஜயனின்—உடல்
வாளிப்பைப் பார்த்தாள்; முனம்—
வேர்த்தறியா ஊர்வசி—
வாளிவாளியாய் வேர்த்தாள்!

மார்க்கச்சு—வேர்வை
மழையில் நனைந்து—
தீர்க்கச்சு என்றாக...

'இந்திர புருஷனையும்—
இரண்டாய்ப் பட்சமாக்கும்—
சுந்தர புருஷனே!

இந்த—
யுவதியை—
ஆட்டுவிக்கும்—
அவதியை...

இங்கு நான்—
என்னென்று சொல்வேன்;
உன் துணையின்றி—நானந்த
உருவிலியை எவ்வாறு
வெல்வேன்?

தென்றல் என்னும்—
தேரினில் ஏறி—தினம்
தேன் கரும்போடு—
திரிகின்ற பாவி—
பூச்சரம் சூடிய—
பூச்சரம் என்று—புலவோர்
பாச்சுரம் சூடிய—
பாவைமேல் இன்று—

தீச்சரம் போலொடு—
பூச்சரம் பாய்ச்சுகிறான்;

காமம் என்னும்—
கரியடுப்பில் கனல் மூட்டி—
ஏமம் என்று—அதில்
எனை வைத்துக் காய்ச்சுகிறான்!

இரவு—
அரவுபோல கடிக்கிறது;
இடை—
இடையறாது துடிக்கிறது!

அன்னத்தூவி–
அதிகம் தூவி–
அமர்க்களமாய் விரித்த–
அமளியில்...
கொட்டாவிமேல்–
கொட்டாவிவிட்டு–நான்
கொட்டு கொட்டென்று–
முழித்துக்
கிடந்ததுதான் மிச்சம்;
வந்ததென்னவோ–கண்
உறக்கமல்ல; அச்சம்!

மாளிகை–எனக்கு
மயானமாகத் தெரிந்தது;

சப்பிரமஞ்சம்–
சிதையாக எரிந்தது;

காமத்தீ ஈமத் தீயாக–என்
கட்டை அதில் எரிந்தது;

சேடியர் பாடிய சோபனம்–
சரம கவியாய் விரிந்தது!

பள்ளியானது கொள்ளியானதும்–
பொசுக்கென எழுந்தேன்;
பீதி–
பிடர்பிடித்துத் தள்ள–
வீதி கடந்து–உன்
விடுதி வந்து விழுந்தேன்!'

உள்ளத்தில் உள்ளதை–ஊர்வசி
ஒன்றுவிடாது கொட்டினாள்;
தன்–
விரகமென்னும் தமுக்கை–அவள்
விஜயன்முன் கொட்டினாள்! (II–பக்:183-85)

(3) **சுபத்திரை:** *கண்ணனின் தங்கை; அவனது ஆருயிர் மங்கை. இவளது விரகவேதனையை வாலியார் கூறுவது:*

சாயரட்சைகளில் தளர்ந்தாள்!

தூர நிலாவாயிருக்கும்—
ஈர நிலாவைக் கூட—எரியும்
கார நிலாவாய் எண்ணி—ஓர்
ஓர நிலாவாய்...

அவள்—
அமர்ந்திருப்பாள்—
அந்திவேளையில்—
அந்தப்புர மூலையில்!

காரணம்—
காதல் காய்ச்சல்;
உடம்பு பூராவும்—
ஒரே ஓய்ச்சல்!

....
சமய—
சந்தர்ப்பம் தெரியாது...
கட்டிப் பிடித்து—திடுமென்று
கண்ணாமூச்சி ஆடும் தென்றலை—
திட்டித் தீர்ப்பாள்;
கைவசம் உள்ள—
வசவையெல்லாம்—அதன்மேல்
கொட்டித் தீர்ப்பாள்!

அவளது—
அன்புள்ள கிளி...

பஞ்சரம் உள்ளிருந்து—வெகு
பிரியமாய்ப் பேச—
வெஞ்சரம் போல்—அதன்
ஓசை பாய்ந்து உட்செவி கூச...

தாய்க்கு அடுத்தபடி—
தன்னை நேசிக்கும் கிளியை—
வாய்க்கு வந்தபடி ஏசுவாள்;
கையில் கிடைத்தன எடுத்து—
கிளிக்கூண்டின் மீது—
கண்மண் தெரியாது வீசுவாள்!

பசும்பொன் வட்டிலில்—
பாங்கியர் தரும்...
பழம்பால்—அவளுக்குப்
பழம் பாலாய்ப் புளித்தது;

தூண்டுநிலா நெற்றியில்—
வேர்வை
தூறல்—தூறலாய்த் துளித்தது;
மயிற்கண் விசிறியால்—
மெல்ல விசிறினாலும்—அவளது
அயிற்கண் சிவந்து வலித்தது;
மெத்தைமேல் கிடந்தும்—கண்
மூடாத பெண்ணுக்கு—இராப்பொழுது
நத்தைபோல் ஊர்ந்து சலித்தது!

பருவம்—அவளைப்
புரட்டி எடுத்தது;

நித்தியப்படி
நிசியானால்...

விரகம்—அவளது
விழி விளிம்பில் தொங்கும்—
தூக்கத்தைப் பறிக்கத்
துரட்டி எடுத்தது!

குதிரைகளின்—
கடிவாளங்களைப் பற்றி—

அவள்—
அசுரவேகத்தில்...

தேரோட்டவல்ல–
தோகை என்பது–
துவாரகையில் எல்லோர்க்கும்–
தெரியும்; அத்தகு–
தேரோட்டவல்லவள்–இரவில்
தேகத்தில் மொய்க்கும்–
ஈயோட்டத் தெம்பில்லாதிருந்தது–
எத்துணை பேர்க்குப் புரியும்?

மோகம்–
மண்டையில் உட்கார்ந்தால்–
தேகம்–
தொய்ந்து போகாதா? ஆசைப்
பிரம்பு–
போடுபோடென்று
போட்டால்–
நரம்பு–
நைந்து போகாதா?

ஊனிலும்–
உளத்திலும்–ஒரு
மாசறு மங்கைக்கு–
கேசவன் தங்கைக்கு–

இரவு நேரங்களில்
இத்தகு–
மரணாவஸ்தைகள் ஏற்பட
மூல காரணம்...

அவளது–
அத்தைமகனான–
அர்ச்சுனனின்–
அபார அழகு; அந்த–
அழகுதான்–
அவள் மனத்தை–
அன்றாடம்–
ஆழக் கொத்தும் அலகு! (II–பக்:37-38)

(4) சித்திராங்கதை: *மணலூர் மன்னவன்—மாண்புடை தென்னவன் மகள் இவள். இந்த,*

சித்திராங்கதை—அர்ச்சுனனை
செய்தாள் சித்திரவதை!

அவள்—
அழகென்னும் சுத்தியால்—
அடித்த அடியில்...

தனஞ்செயன்—
துண்டு துண்டானான்; மனம்—
திருகிப் பிழியப்படும்—ஈரத்
துண்டு என்றானான்!

விழிகளால் விஜயனை—
வள்ளிசாக—
விழுங்கிவிட்டு—பிறகு
போனால் போகிறதென்று—
பாதியைத் துப்பிவிட்டுப்
போனாள்...

வாய்
பேசாப்பூ என நின்ற—அந்த
ரோசாப்பூ; பாண்டிய—
ராசாப்பூ! புருஷனைக் கண்டு—
கூசாப்பூ! (II—பக்:32-33)

8. அர்ச்சுனன் தவநிலை:

அர்ச்சுனன் பாசுபதம் பெற அரனை நோக்கித் தவஞ்செய்யும்போது அவனுக்கு இயல்பாக அமைந்த சூழ்நிலையை வாலியார் வருணிப்பது:

அர்ச்சுனன் தவம் கண்டு—
அடங்கியிருந்தது—
காற்றுகூட—
கப்சிப் என்று; அது—
பாட்டுப் பாடப்—
பிரியப் பட்டால்—

திருவாயைத் திறக்கும்—சற்று
தூரச் சென்று!

விஜயன் விரதத்திற்கு—ஒரு
விக்கினம் வராதபடி—
விலங்குகளெல்லாம்—
வால்சுருட்டி விலகிப் போயின;
ஒய்யாரமாய் ஒசிந்தால்—
ஓசை எழும் என்று—
ஓதிய மரங்கள்
ஓவியங்கள் ஆயின!

அரவங்கள் கேட்குமென—
அரவங்கள்
சருகுகளில் ஊராமல்—
சகதிகளில் ஊர்ந்தன;
நதியும் நாணலும்—
நிசப்தமாகச் சேர்ந்தன!

தண்ணீர் அருவி—
தொப்பென்று குதிக்காது—
வரையின் சரிவில்—
வழுக்கியவாறு இறங்கியது;
காச்சு மூச்சென்று
கத்தும் புள்ளினம்—
மூச்சுப் பேச்சின்றி—
மவுனத்தில் பிறங்கியது!

விஜயன் உதடுகள் வழி—
வெளிப்போந்த—
'சிவாய நம' எனும்—
சப்தம் மட்டும்—ஓர்
அடிநாதமாய்—
அடவியெலா மொலித்தது; அந்த
சிவானந்த லஹரியில்—
சொக்கிச் சுருண்டு கிடந்த—

சுந்தரவனம்—தெய்வ
சந்நிதியாய் சொலித்தது! (II—பக்:171-72)

இங்கு வில்லிபாரதத்தில் அர்ச்சுனனின் தவநிலையை வருணிக்கும் பாடல்கள் படித்து அநுபவிக்கத் தக்கவை.[25]

ஊர்வசியின் காமஇச்சை வருணனையைப் படித்த சிலர் இது 'விறலி விடு தூது', 'கூளப்பன் நாயகன் காதல்', போன்ற நூல்களில் காணப்படும் வருணனைபோல் விரசமாகக் காணப்படுகிறதாகக் குறை சொல்வர். இரசத்தைப் பற்றிய கொள்கைகளை அறிந்திருந்தால் இவர்கள்[26] தம் கருத்தை மாற்றிக் கொள்வர். அல்லது 'பச்சையம்' என்ற புதுக்கவிதைப் பற்றி அறிந்திருந்தாலும் போதும். இதனை ஈண்டு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

சி.பி.மணி என்பார் 'பச்சையம்' என்ற ஒரு புதுக்கவிதை படைத்துள்ளார். இதனை இந்த ஆசிரியரின் நூல் ஒன்றில்[27] விளக்கப் பெற்றுள்ளது.

பாலுணர்ச்சியைப் பச்சையாக எழுதக்கூடாது என்று சிலர் கூறும் குற்றச்சாட்டுக்கு சி.பி.மணி கூறும் எதிர்ப்பு தான் 'பச்சையம்' என்ற கவிதை. கவிதையின் முற்பகுதி;

வாலை இளநீரை வாய்வழியால்
வாரிப் பருகும் இவர்கள்
இளமை கொடுக்கும் துணிவில்
இடித்துக் களிக்கும் இவர்கள்
வயது வழங்கிய வாய்ப்பில்
அமர்ந்து சிலிர்க்கும் இவர்கள்
இருவரைக் கட்டிலேற்ற ஊதி
முழக்கி ஊர்கூட்டும் இவர்கள்
இருளில் இரகசியமாய் வெட்கி
மருவி மயங்கும் இவர்கள்

25 வில்லிபாரதம்-அர்ச்சுனனின் தவநிலை-செய் (37-42)
26 இந்நூல்-இயல் 7 இல் இதனைக் காணலாம்.
27 புதுக்கவிதை-போக்கும் நோக்கும் (பாரி நிலையம், பிராட்வே, சென்னை-600 108)-பக் 430-35. இப்போது இந்நூல் இரண்டாவது பதிப்பாக வெளிவர உள்ளது.

எல்லாம் இவர்கள்தான்—வேறு யார்
சொல்வார்கள் கூடாதாம் பச்சையம்.

'எழுதுவன எல்லாம் எழுத்தாளர்களின் சொந்த அநுபவம் ஆகுமா? என்று வினவும் பாங்கில், "எழுத்திலே பச்சை என்றால் எழுத்தாளர் மனசிலே பச்சை என்றாகுமா? நாடகத்தில் பாத்திரங்கள் பேசுவ தெல்லாம் ஆசிரியர் பேச்சா? 'நரகம்' எனது நரகமா? நரகத் தலைவனின் நரகமா? என்றெல்லாம் வினாக்களை எழுப்பி விட்டுக் கவிஞரே பேசுகிறார் பல செய்திகளை:

பற்பசையில் முத்துச்சரம்
எண்ணெயில் தாழ்கூந்தல்
செருப்பில் மலரடி
உடையில் சிலையுரு
பவுடரில் பட்டழகு
சோப்பினில் நட்சத்திரம்
விற்றிடுவாள் விளம்பரத்தால்
முலைக் கோண வலைக்குமரி

இப்படிப் பல அடிகள்—விளம்பரத்தில் பெண்ணைப் பலவகையிலும் பயன்படுத்தப் பெறுவதைப்—பார்ப்போரிடம் காம விகாரத்தை ஏற்படுத்தும் வகையில் 'இச்சைக்கு வழிபாடு எங்கும் எப்போதும்' நடைபெறுவது சுட்டிக் காட்டப் பெறுகின்றது. நடைமுறையில் நடைபெறும் 'அசிங்கங்களை' அடுக்கடுக்காக எடுத்துக் காட்டி எழுத்தில் வருவன குற்றமல்ல என்பதை வலியுறுத்துகின்றார். இதனைப் படிப்பவர்கள் வாலியாரின் வருணனையில் வருவன குற்றமல்ல, இயல்பாக இலக்கியங்களில் வருவனவே என்பதை உணர்வார்களாக.

மேற்காட்டப்பெற்ற வருணனைகள் யாவும் புதுக் கவிதை அமைக்கும் இலக்கிய தளமாக அமைந்து காவியத்தைக் கவின்பெறச் செய்கின்றன என்பதை அறிந்து மகிழ்கின்றோம்; பெருமிதமும் கொள்ளுகின்றோம்.

காவிய மாந்தர்கள்-அறிமுகம்

கதை மாந்தர்களை வாசகர்கட்கு அறிமுகம் செய்யும் கலையைக் கம்பனிடம்தான் கற்க வேண்டும். பரதன் ஓடத்தில் செல்லும்போது தன் அண்ணன்மாரை குகப் பெருமானுக்கு அறிமுகம் செய்துவைப்பதைக் கம்பனில் கண்டு மகிழலாம். அக்கலையெல்லாம் **'அவதார புருஷன்'** எழுதி அவனியின் புகழெல்லாம் தன்பால் குவித்துக் கொண்ட வாலியாருக்கு அத்துப்படி! அந்தக் கலைஞானம் கவிஞர் வாலிக்குப் **'பாண்டவர் பூமி'**யில் கைகொடுத்து உதவுகின்றது. அதனை ஈண்டுக் காணலாம்.

1. கங்கை: உலகில் ஆறுகளின் கரையில் வாழ்ந்தவர் களிடமிருந்துதான் நாகரிகம் முகிழ்த்ததாக வரலாறு கூறும். ஆகவே இங்கும் கங்கையே முதல் இடம் பெறுகின்றது அறிமுகத்தில்.

சக்கர வாளப் பட்சிகள்
சல்லாபிக்கும்–ஒரு
சரத் ருதுவில்....
சாதகப் புள்ளெல்லாம்
சாதகம் புரியும்–ஒரு
சாயரட்சையில்...
வனமகளின் வார்குழலை–
வாரி வகிர்ந்தெடுத்த–
நேர் வகிடுபோல்–ஒரு
நீர் வகிடுபோல்....
அந்த
முல்லை நிலத்தை
முத்தமிட்டு....

ஓடிவந்த
கங்கையானது—ஆடை
சூடிவந்த
மங்கையானது!

ஆம்!
வானதிப் பெண்—ஒரு
மானிடப் பெண்—என
வடிவம் தாங்கினாள்; இந்திர
வில்லின் சாலத்தை—
விசும்பின் நீலத்தை—இரு
விழிகளில் வாங்கினாள்!

பாதாதி கேசம்—
பளிச்சிட்டது—அவளது
பிரகாசம்; அதனைப்
பார்த்துப் பார்த்துப்
பிரமித்தது அந்தப்
பிரதேசம்! (I—பக்:9-10)

கங்கைதான் 'பாண்டவர் பூமி'என்ற காவியம் பிறக்க அமைந்த விளைநிலம்; அதற்கு நீர் பாய்ச்சியதும் அந்த ஆறுதான் பெண்வடிவில்!

2. சந்தனு: *இவன்தான் 'பாண்டவர் பூமி' பிறக்கக் காரணமான விதை. 'கங்கை' நிலத்தில் ஊன்றிய விதை.*

புருஷோத்தமனாகிய—இந்தப்
புருவன்....
பேரனுக்குப் பேரனுக்குப்
பேரனாகத்தான்—
பேரரசன் சந்தனு—
பிறந்து வந்தான்! (I—பக்:29)

....
கங்கைப் படுகையில்—சீதளக்
காற்று படுகையில்—
முகை விரித்த பூக்கள்—
நகை விரிக்கையில்...
வெண்
புரவிமேல்—ஓர்
இரவிபோல்—
வந்து இறங்கினான்—
வணக்கத்திற்குரிய....
அம்புலிகுலத்து
அரசன்! ஆயிரம்
வெம்புலி நிகர்த்த
வீரபுருஷன்!—அவன்தான்
அத்தினபுரத்தில் அரசோச்சும்...
சந்தனு என்னும்
சக்கரவர்த்தி! புகழ்வாசம்—
சந்ததம் வீசும்
சந்தன வத்தி! (I—பக்:10)

மேலும் இவனைப்பற்றிய அறிமுகத்திற்கு இந்தச் சந்தன வத்தியின் வாசனைதான் (யமுனைக்கரையில்) பரதவ குலத்து வந்த சத்தியவதியின் கேசத்து வாசனையுடன் கலந்தது. அம்புலி குலம் ஆல்போல் தளைக்கவும் அருகு போல் வேர் ஊன்றவும் இந்தக் கலப்புதான் முதற் காரணமாயிற்று.

3. **தேவவிரதன்:** *இவனைப்பற்றிய அறிமுகம் இது:*
அதே—
கங்கைக் கரை;
....
தீர்த்தக் கரை
நேர்த்தியை—சந்தனு

பார்த்துக் கொண்டிருக்க...
திடுமெனக் குறைந்தது—
தண்ணீர் வரத்து—
திகைப்பில் நின்றான்—சில
நொடி
தேகம் மரத்து!

பின்—
தொலைவில் பார்த்தான்; ஒரு
சினனப் பையன்....
கலைவில் கையேந்தி—
கணைகளைக் கொண்டு—ஓர்
அணையெடுத்தான்; கங்கை
ஆற்றைத் தடுத்தான்!
ஆர்வம் உந்த—
அரசன்....
அவனிடம் சென்றான்;
'ஆர் நீ' என்றான்!

பதில் சொல்ல—
பையன் தன்வாயைப்
பையத் திறக்குமுன்....
பையனை—கருப்
பையினில் வைத்திருந்து—
பிரசவித்த கங்கையே—
பிரசன்னமாகி....

'மன்னா!
உன்னால் என்னில்—
உதித்த எண்மரில்—
ஒருவன்—இந்தச்
சிறுவன்!
வசிஷ்டரிடம் கற்றான்—
பல் வித்தை;
பரசுராமரிடம் பெற்றான்

வில் வித்தை!
இவன்தான்—உன்
மண்ணுக்கு இனி—
மிராசு; இவனது—
நுவலற்கரிய
நுழைபுலத்தை
நிறுக்க—இந்தத்
தராதலத்தில் இல்லை—
தராசு!

இவன் பெயர்—
தேவவிரதன்; நற்குணம்—
யாவும் ஒன்றாய்—
மேவும் வரதன்!
இந்தா!—உனது
மகனைப் பிடி! —திருப்பித்
தந்துவிட்டேன்—வாக்குத்
தந்தபடி!' என்று—
தனயனை—அவன்
தந்தையிடம் தந்துவிட்டு—
மறைந்தாள் கங்கை; ஈசன்—
முடிமேலிருக்கும் தண்ணீர்
மங்கை! (I—பக்:29-31)

தேசாந்தரம் சென்ற மகன் திரும்பி வரும்போது ஒரு தந்தை பெறும் மகிழ்ச்சியைப் போல தேவவிரதனைக் காணும்போது மகிழ்ச்சி அடைகின்றான் சந்தனு!

4. சத்தியவதி: *சந்தனு பூசிக்கொள்ளப் போகும் சந்தனத்தை அறிமுகம் செய்யும் பாங்கு இது:*

ஒருநாள்—
யமுனைக் கரையில்—சந்தனு

உலா வருகையில்...
வழிநெடுக—சிறு
வாடை வீசியது;
வாடையில் நறு
வாடை வீசியது!
அவன்—
மூக்கு நுனியை
முதலில் அது—
முத்தமிட்டது; பின்பு
மூக்குக்குள்ளேயே—
முகாம் இட்டது!

'எந்தப் பூவில்—
வாசம் செய்யும்—
வாசம் இது?'
என்று அறிய...
வாசத்தையே—தனக்கு
வழிகாட்டியாக—
அழைத்துக்கொண்டு—
அரசன் சென்றான்!
சிறிது தூரம்—
சென்றபின்தான்...
வாடையில் வந்த—நறு
வாடையை வீசியது—நூல்
ஆடையில் நின்ற—பால்
ஆடையென்று கண்டான்!

அவள்—
பரதவர் குலத்துப்
பாவை! —இந்தப்
பூவில் —எந்தப்
பூவிலும் இல்லாத
வாசத்தை—தன்
கேசத்தில்—
வைத்திருக்கும் பூவை!

வலைச் சேரியில்—
உலவும்
வாசனைச் சேரி;
நெய்தல் நிலத்தில்—
பெய்த—
நறுமண மாரி!

அவள் பெயர் சத்தியவதி;
அவளொரு சந்தன நதி! (I—பக்:31-32)

'வாடையில் வந்த நறுவாடை' 'நூல் ஆடையில் நின்ற பால் ஆடை' என்ற கவிஞரின் அறிமுகம் நவநீதம் போல் இனிக்கின்றது.

சத்தியவதி—தன் பிறப்புபற்றித் தானே அறிமுகம் செய்துகொள்வது இது[1] *:*

'என்—
இனிய மகனே!
இப்போது நான்
சொல்லப் போவது—
இமாலய ரகசியம்! இதை—
மற்றவர் அறியாது—உன்
மனத்துள் புதைத்து வைத்தல்—
மிகமிக அவசியம்!

உன்—
பிதாவை மணக்குமுன்பே—
நானொரு
பிள்ளைக்குத் தாய்; அதுபற்றிப்
பேசாதிருந்து—இந்நாள்தான்
பேசுமென் வாய்!
கேள்! மகனே—என்
கதையும் புரியும்; இந்த—

1 விடுமனைத் தனியே அழைத்துச் சென்று வெளியிடுவது இது-வமிசவிருத்தியைப்பற்றிச் சிந்தித்தபோது.

விருட்சத்தின்–
விதையும் தெரியும்!
நான்...
மானிடம் மடிசுமந்த–
மகவில்லை; ஒரு
மீனிடம் விளைந்த பிள்ளை!

வெகுநாள் முன்னம்...
'வசு' என்னும் பெயரில்–
இருந்தான் ஒரு மன்னன்;
இணையில்லா விற்பன்னன்!

சுக்கில பட்சத்து–
சந்திரனாய் வளர்ந்த–அவன்
சுக்கிலத்தை...
ஒரு–
சேல் உண்டது; அது–
சூல் கொண்டது!
வலையெறியும்
மீனவன் கையில்–அந்த
மீன் வர...
மீன்வழி–
நான் வர...
வலைஞர் குலத்து–
வளர்ப்பு மகளானேன்;
பூப்பெய்தி–
வனப்பு மலரானேன்! (I–பக்:63)

5–7: அம்பை! அம்பிகை! அம்பாலிகை!: *இவர்களைப் பற்றிய அறிமுகம் இது:*

இந்தக்
கன்னியர் மூவரும்...
காசிராஜனின்–
கருமூலம் விளைந்த

2 இந்நிலையில் தான் சந்தனு சத்தியவதியை மணந்தான்.

கருவூலம்!
மன்னன்—தன்
மணிவிழிகளில்
தாங்கி நின்ற
திரிசூலம்!

தேவரும்—
யாவரும்—
மோகித்து நின்ற—இந்த
மூவரும்...

வங்கம்; கலிங்கம்;
கோசலம்; புண்டரம்—
ஆகிய—
தேசங்களுக்கும்
அப்பால்—
அழகு வெளிச்சம்
அடித்து நின்ற...
முத்தமிழ்!
முச்சங்கம்!
முப்பால்!

(அ) அம்பை!

விழியில் வைத்திருப்பாள்—
அம்பை!
அப்பழுக்கற்ற
மனம்கொண்ட—
தும்பை!
அந்தம் ஆதி
அந்தம் கொழிக்கும்—
ரம்பை!
கொடியிடை
தேடி நிற்கும்—கொழு
கொம்பை!

(ஆ) அம்பிகை!

அரண்மனைத் தாமரை; எனவே—
தேனெடுக்கத் துணியாது—
தும்பிகை!
இன்னொரு—
கன்னி கைபட்டாலும்—
கன்றிப் போகும்—இளங்
கன்னிகை!
பொன்னகை பொலிவைப்
புறங்காணும்—தகத்தகாய
புன்னகை!
தூரிகை தொட்டெழுதாச்
சித்திரம் என்றிருக்கும்—
காரிகை!

(இ) அம்பாலிகை!

அம்பை; அம்பிகை—
ஆகியோர் அழகை—
அப்பால் நிறுத்துபவள்—
அம்பாலிகை!
விண்மேனகை
வெள்குமாறு விளங்கும்—
மண்மேனகை!
வண்ணமேனி—ஒரு
மோக மாளிகை!—அவள்
வாய் வார்த்தை—ஒரு
ராக மாலிகை! (I—பக்:39-40)

இதில் சில விளையாட்டுகளும் மங்கையரும் ஆடி நமக்கு அறிமுகம் ஆகி நம்மை மகிழ்விக்கின்றன!

(8) வியாசன்: *சத்தியவதியின் மூலமே அறிமுகம் ஆகின்றான் இந்த மாமுனிவன்.*

'யமுனையைக் கடக்க—
யார்வந்து வேண்டினாலும்—
நான்
ஓடம் ஓட்டுவேன்; சுழித்து—
ஓடும் நீரில் ஓடக் கோலால்—
ஓவியம் தீட்டுவேன்!
ஒருநாள்—என்
ஓடத்தில்—ஒரு
முனிவன் ஏறினான்; என்
முன் கதையைக் கூறினான்!
என்—
மேனிசுமந்த
மீன்வாடையை—அந்த
ஞானி மாற்றினான்; [3]
தேவரும் நுகர்ந்தறியா—ஒரு
திவ்விய மணத்தை—என்
தேகத்தில் ஏற்றினான்!
பராசரர் எனும்—
பெயர்கொண்ட—அந்த
மகரிஷி—என்பால்
மோகம் வைத்தான்; என்—
தேகத்தோடு—தன்
தேகத்தை வைத்தான்!

பின்—
வையம் புகழும்—ஒரு
பையனை—என்
கருவில் வைத்தான்;
கருவில் வைத்த பிள்ளை—

3 அவள் 'மச்சகந்தி' என்ற பெயரால் வழங்கப் பெற்றாள்; பராசரரால் 'பரிமளகந்தி'யானாள் (வில்லி பாரதம்)

கைக்கு வந்ததும்–என்னைக்
கன்னியாகவே–பழைய
உருவில் வைத்தான்! [4]
நான்–
மடிசுமந்த–திரு
மகனின் பெயர்...
வியாசன்!–ஞான
விலாசன் ! (I–பக்:63-64)

ஈண்டுக் கவிஞர் தம் கூற்றாக அறிமுகம் செய்யாமல் காவியமாந்தர் ஒருவரால் அறிமுகம் செய்வது தனித்தன்மை வாய்ந்தது.

இவர் கவிஞர் வாலியின் மூலமாகவும் அறிமுகம் பெறுகின்றார்.

மீன்வழி வந்த–
மீனவப் பெண்ணின்–
ஊன்வழி வந்த–
உத்தமர்;

வான்வழி வந்த–
நான் மறைகளையும்–
வாங்கித் தொகுத்த–
வித்தகர்;

பராசர மகரிஷியின்–
புத்திரர்; வியாசரென்று–
புகழ்சால் பெயர் படைத்த–
புங்கவர்! (I–பக்:334)

4 முதலில் திருமணம் ஆகாமுன் சூரியன் குந்தியைப் புணர்ந்து கன்னனை ஈன்ற பின்னர் அவளைக் கன்னியாகச் செய்தது போல!

இது பட்டு கத்திரித்த மாதிரி நேரான அறிமுகம்; சூத்திரம் போன்ற சுருக்கமான அறிமுகம். வாலியார் இவனைப் பற்றி:

விழி!—நோன்பின்
உக்கிர வெக்கையைக்
கக்கிடும் அக்கினிக்
குழி!

உதடு!
வாய்க்குள் சுரக்கும்—உபந்டத
வாய்க்காலைத் தேக்கி வைக்கும்—
மதகு!

சடை!—வெண்
சாமரங்கள் தொங்குகின்ற—
கடை!

தாடி!—கடுந்
தவசியெனக் காட்டுகின்ற
ஆடி!

ஆயினும்...
அவனது—
தோற்றத்தையும்—
தோற்றத்தில் எழும்—துர்
நாற்றத்தையும்—
நினைத்துப் பார்த்தால்...

வியாசன்—சற்று
விகார மானவன்—ஆனால்—
அறம் எனும் மொழிக்கு—
அகார மானவன்.

ஊனை—
எண்ணாதவன்;
ஊனை
உண்ணாதவன்!

மெய்—
மெலிந்தவன்;
மெய்யுணர்வு—
மலிந்தவன்!

அவன்—
முஞ்சி கட்டிய—
முப்புரி நூல்...
நெஞ்சில் புரள—
நடை பயிலும்
நன்னெறி நூல்!
நீறு—
அணிந்துலவும்—நிர்மல
ஆறு! (I—பக்:64-65)

என்று அற்புதமாகப் படம்பிடித்துக் காட்டுவார்!

9. சிகண்டி: *துருபதன் மகளாகப் பிறந்தவள். பீஷ்மனின் உயிரை வாங்கப் பிறந்தவள். முற்பிறப்பில் அம்பை; அக்கினியில் குதித்து இறந்தவள்.*

துருபதன் மகளாக—மண்மிசை
திரும்பவும் பிறந்தாள்!
சீர்பெற்றாள்.
'சிகண்டி' என்று—
பேர் பெற்றாள்!
வளர்ந்த பின்—
ஒருநாள்...
மனை—
வாசலில்—மாருத
ஊசலில் ஆடிய—
வாச மாயை[5] —

5 இது அம்பைக்கு முருகப்பெருமான் அருளியது. பாஞ்சால மன்னன் மாளிகை வாயிலில் மாட்டிவிட்டு மறைந்தாள் அம்பை.

சிகண்டி கண்டாள்; எடுத்துச்
சூடிக் கொண்டாள்!

'இது—
பீஷ்மனின் பகைவர—
ஏதுவாகும்'—என...
காவலன்—
கவலைப்பட்டான்; மகளைக்
காட்டில் விட்டான்!
காட்டில்—ஒரு
கந்தருவனைச் சந்திக்க...
அவனது சித்தால்—சிகண்டி
ஆண் ஆனாள்;[6] மீண்டும்
அரண்மனைக்குப் போனாள்!
மகள்—
மகனாக மாறியதில்—மன்னன்
பரவசப் பட்டான்—பீஷ்மன்
பயத்தை விட்டான்!

'சிகண்டிவசம்—இனி
சந்தனு மகன் உயிர்!'—என
ஏடெடுத்து—எமன்
எழுதி வைத்தான் உயில்! (I—பக்:58)

10. திருதராட்டிரன்: *பாரதக் கதை முழுவதும் காட்சி அளிக்கும் இவன் அறிமுகம் இன்றியமையாதது. சத்தியவதியின் வேண்டுகோட்கிணங்க வியாசன் மூலம் அம்பிகையின் புதல்வனாக அவனிக்கு வந்தவன்.*

அகோரமான—வியாசனின்
ஆகிருதியைக் கண்டதும்—

6 சிகண்டி பெண்ணாகப் பிறந்து உடனே ஆணாக மாறினாள் என்று வில்லிபாரதம் கூறும். இதனை கண்ணன், வீடுமன் ஆகிய இருவரே அறிவர். துருபதனும் அறியான். (இது ஒரு Genetic Transformation)

அம்பிகை—கண்களை
அச்சத்தால் மூடினாள்;
அவன் முகம் காணாமலே—
அவனோடு—அழகிய
அமளியில் கூடினாள்!
பள்ளி நீங்கிய—ஞானப்
பள்ளியிடம்...

'அன்பு மகனே!
அம்பிகையின் வயிற்றில்—
அருங்குணத்தவனாய்—ஓர்
ஆண்மகன் அவதரிப்பானா?
அரசு முடியை அவன்
தரிப்பானா?'
என்று—
வினவினாள் சத்தியவதி;
விளக்கினான் சதுர்வேதி!

'அம்மா!
அம்பிகை மகன்—பத்தாயிரம்
தும்பிகள் பலம் கொண்டு—
பிறப்பான்; ஒரு நூறு—
பிள்ளைகளைப் பெற்றெடுத்துச்
சிறப்பான்; ஆயினும்...
பெற்றவள்
பிழையால்—பார்வையைத்
துறப்பான்!'

வியாசன்—
விளம்பியது கேட்டு...

'அந்தகன் முடிபுனைந்து—
அரசோச்ச முடியாதே!'
என்று—
எண்ணிக் குமைந்தாள்—
சத்தியவதி; (I—பக்:66-67)

11. பாண்டு: *வியாசன் மூலம் அவனை அம்பாலிகை பெற்றெடுத்தாள்.*

வியாசனை—மீட்டும்
வரவழைத்து—
அம்பாலிகையை—
அணுகுமாறு வேண்டினாள்;
'அருள் செய்க!' என—அவன்
அன்பு மனத்தைத் தூண்டினாள்!

வியாசனின்—
விகாரத் தோற்றம் கண்டு...
வாயடைத்துப் போய்—
அம்பாலிகை வெடவெடத்து—
ஆதிஅந்தம்
வெளிறினாள்; அபலைப் பெண்
போல்—
வெருவினாள்; ஆயினும்...
வேறு வழியின்றி—வியாசனை
மருவினாள்!

....

'அருமை மகனே! அம்பாலிகை—
அன்னை ஆவாளா?'—

....

என்று—
வினவினாள்; வியாசன்—
விநயத்தோடு விளம்பினான்!

'அன்னையே!
அம்பாலிகைக்கு—ஓர்
ஆண்மகன் பிறந்து...
எல்லோர்க்கும் இனியனாய்—
இசையொடு இலங்குவான்;
மைவரைபோல்—மன்னும்
ஐவரைப் பெற்று—அவன்
மாமறைபோல் துலங்குவான்;

ஆனால்...
அடியேன்—
சுகிக்கையில்—அம்பாலிகை
சுண்ணமாய் வெளுத்ததால்—
அவள்
சூல்கொண்ட பிள்ளையும்—
வெள்ளைத்
தோல்கொண்டு விளங்குவான்!' (I—பக்:67-68)

12. விதுரன்: *அம்பிகையின் அடிமைப் பெண்ணுக்கு வியாசன் மூலம் பிறந்தவன். இரண்டாம் முறை அம்பிகை ஒரு தப்புச் செய்தாள்!*

அவள்—வியாசனின்
அருவருப்பான—
ஆகிருதிக்கு அஞ்சி...
தன்—
அடிமைப் பெண்ணை—
அலங்கரித்து—அவனிடம்
அனுப்பினாள்; அவள்—
வியாசனைக் கண்டு—
வெருவாது மருவி—அவனைத்
திருப்திப்படுத்தித்
திரும்பினாள்!

தான்—
சயன அறையைச்
சேர்ந்த பின்பு—அங்கு
நேர்ந்தவற்றை
நேர்ந்தபடி—தன்
தாயிடம்—வியாசன்
தெரிவித்தான்; அடுத்தொரு—
அதிசயத் தகவலையும்—
அறிவித்தான்!

'அன்னையை!—என்னை
ஆராதித்த—அந்த
அடிமைப் பெண்ணின்—
அடிவயிற்றில்...
உலக ஒழுக்கங்களெல்லாம்—
ஒன்று திரண்டது போன்ற—
ஒருவன்—
உதிக்கப் போகிறான். இந்தப்
பூப்பந்தில் உள்ளவர்க்கு—
புதிய புதிய நீதிகள்—அவன்
விதிக்கப் போகிறான்!
அம்மா!—அவன்
அறக்கடவுளின்
அம்சம்; அவன்—
நிழலில் தழைக்கும்—இந்த
நிலாவம்சம்! (I—பக்:69-70)

....

தரும தேவதைக்கு—
மகரிஷி மாண்டவ்யர்—
தந்த சாபத்தால்...

அவள்—
அம்பிகையின்—
அடிமைப் பெண் வயிற்றில்...
விதுரனார்—
விளைந்தாள்; இன்றும்
வையம் புகழும்—அந்த
விதுர நீதியை—அவள்தான்
வரைந்தாள்! (I—பக்:77)

13. **காந்தாரி:** *இவளுடைய அறிமுகம் 'உப்பு சப்பென்றி'ருந்தாலும், அதிலும் மின்னொளி வீச்சு உண்டு.*

காந்தார நாடு—அவன்(=வீடுமன்)
கவனத்திற்கு வந்தது; அங்கு
காந்தாரி என்றொரு—
கஸ்தூரிமான் இருப்பதை—
காற்று—அவனது
காதுகளுக்குத் தந்தது!
காந்தாரியின் தந்தை—
காந்தார நாட்டரசன்—நல்ல
சுபாவன்—எனப்
புகழ் கொண்ட—
சுபாலன் !
சுபாலன் மகளுக்கு—நூறு
சேய்கள் பிறக்குமென்று—
வரம்—
வழங்கியிருந்தான்—
கண்ணுதற்கடவுள்—கபாலன்!

அந்தணர்கள் மூலம்—
அனைத்தும் அறிந்து...
பீஷ்மன்—
மணம் பேசினான்;
புரவலன்—
மனம் கூசினான்!

....
'கண்ணில்லை—
கணவனுக்கு! பின்—
எனக்கெதற்கு—
விழி விளக்கு?' எனக்
கண்களைத் துணியினால்—
கட்டினாள் துணிவினால்—
காந்தாரி!—கால் முளைத்த
கற்பு நெறி! (I—பக்:82-83)

இதில் 'காந்தாரி!—கால் முளைத்த கற்பு நெறி!' என்ற தொடர் காவியம் முழுதும் வீசும் ஒளிவிளக்கு!

14. குந்தி: இவளது அறிமுகம் தலையைச்சுற்றி வளைத்து கையால் மூக்கைத் தொடுவது போல் அமைகின்றது!

அவன்—
ஆயர்குலத்து—
அரசு;
அனைத்து யாதவர்க்கும்—
அருள் நிழல் பரப்பும்—
ஆல்;
வன்கணாளர்க்கு—
வாய் கசக்கும்—
வேம்பு;
உழுவலன்பர்க்கு—
உள்நாக்கினிக்கும்—
மா;
வெருவலர்க்கு—
வேங்கை;
விருந்தினர்க்கு—
வாழை!

....
இடைச்சேரி—
இடையறாது—
ஏத்தும் புனிதன்!

அந்த
அரசனின் பெயர்—
சூரன்!—மயிற்
பீலியைச் சூடும்
பரந்தாமன் கண்ணன்—அவன்
பேரன் !
கோமகன் சூரனுக்கு—ஒரு
குலக்கொடி உண்டு;

பூமகள் நிகர்த்த—அந்தப்
பூவையின் திருநாமம்—
பிருதை!—அவளது
கொப்பூழ்க் கொடியைக்
கத்திரிக்கும் போதே—
வனப்பு மிக்கவள் என—
வையம் வழங்கிவிட்டது
விருதை!

....

குந்தி போஜன்—என்றொரு
கொற்றவன்!—மடியில்
குந்தி போஜனம் உண்ண—ஒரு
குழந்தை அற்றவன்!

அவன்...
அரசன் சூரனுக்கு—
அத்தை மகனென்று—
ஆனவன்; நட்பில்
அத்தியந்த மாகிப்
போனவன்!

ஆதலால்...
அருஞ்சொத்தாய்—
ஆணிமுத்தாய்—
அன்பின் வித்தாய்—
அருள்பூங் கொத்தாய்—
தன்—
மடியில் தவழ்ந்த—
மகள் பிருதையை—
குந்தி போஜனுக்கு—சூரன்
கொடுத்தான் தத்தாய்!
அப்படிக்
கொடுப்பதாய்—முன்னம்
கொடுத்திருந்தான் வாக்கு;
கொடுத்த வாக்கை—

காத்தது சூரனின் நாக்கு!
'குந்திதேவி!' என்று—
குந்திபோஜன்—தத்துப்
புத்திரிக்கு—ஒரு
புதுப்பெயர் கொடுத்தான்;
'பிருதை' எனும்—
பழைய பெயரை—
பிருதையின் நாக்கிலிருந்தே
பெயர்த்து எடுத்தான்!

குந்தி—கோதகன்ற
குணத்திலும் மனத்திலும்—
முந்தி நின்றாள்; (I—பக்:83-88)

குந்திதேவிக்கு—ஒரு
கொழுநனைத் தேட—
குந்திபோஜன்—
குறித்தான் தேதி;
சுயம்வரம் நடத்த—
சுற்றுவட்டாரத்து—
வேந்தர்களுக்கு—
விடுத்தான் சேதி!

....
மணிக்கரங்களில்—
மலர்மாலையை ஏந்தியபடி...
மைய மண்டபத்தில்—குந்தி
பையப் புகுந்தாள்;

அங்கு—வெள்ளிப்
பூண்டு நிறத்துப்
பாண்டுவும் வந்திருந்தான்;
....

குந்தியின்
பார்வைப் பறவை—
பறந்து சென்று— மெல்லப்
பாண்டுமேல் போயமர...

....

—தன்
கைம்மாலையை—வெள்ளைக்
கைம்மாபோல்—ஆங்கு
கொலுவிருந்த—பாண்டு
கழுத்தினில் போட்டாள்! (I—பக்:96-98)

குந்தியின் இந்த நீளமான அறிமுகம் 'போர்' அடிக்காமல் சில சொல் விளையாட்டுகள் நம்மை முறுவலிக்கச் செய்துவிடுகின்றன.

15. **மாத்திரி:** இவளைப் பற்றிய அறிமுகமும் இன்றியமையாதது. இவள் மத்திர தேசத்து மன்னவன் சல்லியனின் சகோதரி. பாண்டுவிற்கு இரண்டாவது மனைவியானவள். இவளைப்பற்றிய அறிமுகம் இது.

சல்லியனின்
சகோதரி—
மெல்லியலாள்
மாத்திரி!—அவள்
பொன்னவிர் மேனியில்—
புறப்படும் வெளிச்சத்தில்—
பகலாய் மாறும்—
ராத்திரி!

அவள்—
நீலோற்பல
நேத்திரி!—அந்த
நேத்திரம் இரண்டும்
நெய் நெருப்பின்றி—எரியும்
பூத்திரி!

அவள்!
பொறையும்—
நிறையும்
பீஷ்மனுக்குப்

பிடித்திருந்தது; நற்
பண்பு–அவளை
பற்றுக் கோடாய்ப்
பிடித்திருந்தது!

பீஷ்மன்–
பெண்ணின் அண்ணனிடம்–
பெண் கேட்டான்;
பெண்ணின் அண்ணன்–
பீஷ்மனிடம்–
பொன் கேட்டான்!

....
பாண்டுவின் கைத்தலம்
பற்றினாள் மாத்திரி; நல்ல
செய்யுள் கையுள்–சேரும்
செம்பொருள் மாதிரி! (I–பக்:99-100)

இதுவும் சிறப்பான அறிமுகம்; திருமணத்துடனும் சுருக்கமான அறிமுகமும் கூட. வரதட்சினைக்கு எதிரான செயலை இங்குக் காண்கின்றோம். இது பரிசம் போடும் வழக்கம்.

16. துருவாசர்: இவரது அறிமுகமும் இன்றியமையாதது. இந்த கோபமா முனிவர்[7] அருளிய மந்திரத்தால்தான் பாண்டு வம்சம் தழைத்துப் பார்புகழும் பரவசம் அடைந்தது. இவர்பற்றிய அறிமுகம் இதோ:

சந்தமும்–
சினம் என்னும்–
துர்வாசம் வீசும்–
....
துர்வாசர்!
துவராடை புனைந்த–
சர்வேசர்!
எழுதாக் கிளவியை

7 குந்தி போஜனுக்கு ஓராண்டு காலம் அதிதியாக வந்தவர்.

எழுதி வைத்தாள்–
நாவின் கிழத்தி–அவர்
நாவில் அழுத்தி;
மூவுலகும் நிற்கும்–அந்த
முனிவரை வழுத்தி!

அவர்
தவம்புரிந்தால்–
சிவம் வரும்;
தவம் புரியாமலே–
சினம் வரும்!

அவர்–
வெகுளியின்
மிகுதியில்...

வானத்தை நோக்கினால்–
வானம் நசுங்கும்;
பூமியை நோக்கினால்–
பூமி பொசுங்கும்;
வாரியை நோக்கினால்–
வாரி சுருங்கும்;
வெற்பை நோக்கினால்
வெற்பு நொறுங்கும்!

மனத்தை அடக்கியவர்; தலை–
கனத்தை அடக்கியவர்; ஆசை–
இனத்தை அடக்கியவர்; அற்ப–
சினத்தை அடக்காது விட்டார்;
சொற்களில் அநேகரைச்
சுட்டார்!

கோபம்–அவர்
குரல் வளையில்–
கபம் போல்–
கட்டியிருக்கும்;
சாபம்–அவர்
செந்நாவில்–

உமிழ்நீர் போல்—
ஒட்டியிருக்கும்!

இவை
இரண்டையும்—அவர்
எப்போது
எவர்மீது—
துப்புவார் எனச்
செப்புதல் சிரமம்;
அதற்குத்
தப்பிப்பதும்—
தப்பிக்காததும்—
அவரவர் கருமம்!

அத்தகு—
அறநெருப்பை—தன்
அரண்மனையில்—
அதிதியாக ஏற்றதில்...
குந்தி போஜனுக்கு—
குதுகலம் பாதி; 'கோபம்—
தலையெடுக்குமோ?'—எனக்
குலை நடுக்கம் பாதி! (I—பக்:86-87)

....

குற்றமற்ற முனிவர்க்கு—
குற்றேவல் செய்தாள்—
குந்தி!—காலடியிலேயே
குந்தி!

அவர்
போகுமிடமெல்லாம்—
போனாள்—
பாதரட்சை போல்; பகற்
பொழுதை விடாது—
பின்பற்றும்
சாயரட்சை போல்!

....
அவர்
விழிக்குமுன் விழிப்பாள்;
அவர்—
படுத்தபின் படுப்பாள்!

இன்னணம்...
ஈராறு மாதங்கள்
உண்டி மறந்து—
உறக்கம் மறந்து—ஒரு
தொண்டிச்சியாயிருந்து—
தொண்டுபுரிந்து...
கோபக்கார முனிவரை—
குளிர்வித்தாள் குந்தி; அவர்
வரமொன்று கொடுத்தார்—
தனது
உள்ளுணர்வு உந்தி!

'மகளே!—உனக்கொரு
மந்திரோபதேசம் செய்கிறேன்!
எந்த தேவதையை—நீ
எண்ணிக் கொண்டு—இந்த
மந்திரத்தை
மனனம் செய்தாலும்...
அந்த தேவதையின்
அம்சத்திலே—ஒரு
சேய் உன்னிடம்—
ஜனனம் செய்யும்!' (I—பக்:188-89)

இந்த அறிமுகம் குந்திக்கு நல்மருந்து; பாண்டவ வம்சம் தழைக்க ஒரு சொல் விருந்து. நஞ்சுள்ள இடத்திலும் அமிழ்தம் பிஞ்சுவிடும் என்பதை நெஞ்சறியச் செய்யும் கொஞ்சம் உண்மையுமாகும்.

17. யுதிட்டிரன்: *பாண்டுவின் மூத்த பிள்ளை; அறக்கடவுள் அம்சமாகப் பிறந்தவன். முனிவன் சாபத்தால் மனைவியரை மருவத்தடையிருந்ததால் இந்த ஏற்பாடு.*

'அறக்கடவுளை
அழைத்து—அவன்
அம்சத்தில்—ஓர்
ஆண்மகவை ஈந்திடுக!' என்று—
அன்பு மனையாளுக்கு—ஓர்
ஆணையிட்டான்!

தென்புலம் ஆளும்—
தரும தேவனை—குந்தி
அன்புடன் துதித்தாள்; திரு
மந்திரம் ஓதி—அவன்
மலரடி தன்னை—தனது
புந்தியில் பதித்தாள்!
ஆங்கு—உடனே
அறக்கடவுள் வந்தான்; அவளை

ஆரத்தழுவி—ஓர்
ஆண்மகவைத் தந்தான்!

தகவு மிக்க—அந்த
மகவு தான்—
தரும புத்திரன்;
யுகம் கடந்தும்—புகழ்
முகம் காட்டும்
யுதிஷ்டிரன்! (I—பக்:113)

....
ஓர்
ஊனிலிருந்து—
உயிரை வாங்கத்தான்—எமன்
வானிலிருந்து—
வையகம் இறங்குவான்;
இம்முறை—அவன்
இறங்கி வந்தது—
ஓர்—
இறப்புக்காக அல்ல;
பிறப்புக்காக!

மரணம்—
மட்டுமல்ல;
'ஜனனமும் அவனால்—
சாத்தியமாகும்!' என்றும்—
சிறப்புக்காக!

ஆம்!
காலன்—ஒரு
கருப்பைக்கு வழங்கினான்—
பாலன்!

எமனின் எச்சத்தை—
ஏற்றுக் கொண்டது—
கொண்டவன் சொற்படி—
குந்தியின் கும்பி;
அந்த—
அந்தகன் தயவால்—ஒரு
தந்தையென்றானான்—
அந்தகன் தம்பி!

அதோ!
பாண்டுவின்—
பர்ணசாலையில்...

ஒரு
தடுக்கில் கிடக்கும்—
தங்க விக்கிரகம்தான்...

குந்தியின் வழியே—அவள்
உந்தியின் வழியே—
புறம் வந்த—
அறம்;
இராவும்
பகலும்—பாவங்களை
அராவும்
அரம்!

பறவையைக் கறவையைப்
பார்த்தவாறே—அந்த
வண்ண மணிப்பிள்ளை—
விரல் சூப்பும்! 'அது—
பிள்ளையல்ல; பிறப்பெடுத்த
பேரறம்!' என்று—
கறவையும் பறவையும்
கரம் கூப்பும்!

ரிஷிகளும்—
ரிஷி பத்தினிகளும்—
'அறந்தான் சேய்!' என்று—
அள்ளியெடுத்துக் கொஞ்சினர்;
அங்ஙனம் கொஞ்சுவதில்
அன்னை குந்தியையும்
அத்தன் பாண்டுவையும்
அவர்கள் மிஞ்சினர்!

ஆவின்பால்;
ஆட்டின் பால்;
புடவைத்
தலைப்பால் முகம் மறைத்துத்
தாய் கொடுக்கும்
தலைப்பால் எனப்படும்
தாய்ப்பால்...

ஆக—
அனைத்தும் பருகி—
அன்றாடம் வளர்ந்தது...

காலனின்—
காமத்துப்பால்—
ஆக்கியளித்த—
அறத்துப்பால்! (I—பக்:120-22)

இந்த அறிமுகம் 'தேனும் பாலும் கன்னலும் அமுதமும்' கலந்து பருகும்போது நாம் பெறும் சுவையையும் விஞ்சும்படி செய்துவிடுவதை அநுபவித்து மகிழ்கின்றோம்!

18. துரியன் முதலிய நூற்றுவர்: *நிலவு வம்சத்தில் நிலவின் களங்கத்திற்கு அறிகுறியாக அமைந்தவர்கள் இவர்கள். இவர்களைப் பற்றிய அறிமுகம் அற்புதமாக அமைந்துள்ளது. இவர்களில் துரியன், துச்சாதனன், விகர்ணன், துச்சலை பெயர்களே கதையோட்டத்திற்கு மிகவும் இன்றியமையாதவை. எனினும் வாலியார் நூறு பேரின் பெயர்களையும் தமது காவியத்தில் குறிப் பிட்டுள்ளார். ஆயினும் அப்பட்டியல் ஈண்டுக் காட்டப் பெறவில்லை. இவர்கள் பற்றிய அறிமுகம்:*

காட்டில்—
குந்திதேவி—ஓர்
ஆண் குழந்தைக்கு—
அன்னையான செய்தி...

காற்று வாக்கில்—
கண்ணிலா மன்னன்—
காதுக்கு வந்தது; உடனே—
காழ்ப்புணர்ச்சி—
காந்தாரி என்னும்—
மாதுக்கு வந்தது!

மூவெட்டு—
மாதங்களாக—
கருவுற்றிருக்கிறாள்—
காந்தாரி; இன்னும்
கைக்கு வந்தபாடில்லை—ஒரு
புழு; பூச்சி!

....

காந்தாரி—
கடுப்பானாள்; புகையும்—
அடுப்பானாள்! அவளைப்
பிய்த்துப் பிடுங்கியது—ஒரு
பிள்ளையைப் பெறாமை; அந்தப்
பெறாமை பெற்றெடுத்தது—ஒரு

பிள்ளையை; அதன் பேர்
பொறாமை!

அழுக்காறு—
அவள் உள்ளத்தை—
அழுக்கு ஆறாக ஆக்கியது;
அதுவே—
அவளது கருப்பத்தை—
அழிக்க அவளை ஊக்கியது!

ஒரு—
குழவியை ஈனாத
கும்பியை—ஒரு
குழவியை எடுத்துக்
குத்தினாள்

....
கிழிந்தது உதரம்;
வழிந்தது உதிரம்; வெளியே
விழுந்தது வந்து—ஒரு
மாமிசப் பந்து!

இறைச்சி உண்டையை—
ஈரைம்பது குடங்களிலும்
நிறைத்தான் தவசி;

சில
அமாவாசைகள்—
ஆயின; சில—
பௌர்ணமிகள்—
போயின!

ஒருநாள்...
ஒரு நூறு குடங்களில்—
ஒன்று விண்டது; அதன்—
உள்ளிருந்து—ஓர்
ஆண் சிசு—
வெளியே வந்தது!

அந்த—
ஆண்மகவுதான்...
துரியோதனன் என்றும்...
சுயோதனன் என்றும்—
பின்னாளில்—புகழ்
பூத்தவன்; தாழியில்—
முளைத்த கௌரவர்களில்
மூத்தவன் !

ஆனால்—
அவன் பிறந்தபோது...
தேசமெங்கும் தோன்றின—
துர்நிமித்தங்கள்

....
ஆக மொத்தம்—எங்கும்
அமங்கல சப்தம்!

....
திருதராட்டிரன்—
திகைத்துப் போனான்;
அலகை அதன் கைகொண்டு—
அறைந்தாற்போலானான்! (I—பக்:114-18)

இந்த துர்நிமித்தங்கள் அவன் பின்னால் புரிய இருக்கும் அட்டகாசங்கள், அநியாயச் செயல்கள் முதலியவற்றிற்கான அறிகுறிகள் எனப் பழியிலா விதுரன் பகர்ந்தான்.

19. பீமன்: *யுதிஷ்டிரனின் தம்பி இந்த நம்பி. இவனைப் பற்றிய அறிமுகம் இது:*

'நாயகியே!—எனக்கு நீ
நலம் பொருந்திய மகனை—
நல்கியது போல—ஒரு
பலம் பொருந்திய மகனை—
பெற்றுத் தருக! வாயு—

பகவானைப் பிரார்த்தித்து—
பிள்ளையைப் பெறுக!'

இங்ஙனம்...
பாண்டு வேண்ட—குந்தியின்
பச்சாதாபத்தைத் தூண்ட....
மாருதத்தை அழைத்தாள்—
மந்திரத்தைச் சொல்லி; யாதவர்—
மரபில் வந்துதித்த—
மாணிக்கவல்லி!

காற்றுக்கான பிரார்த்தனை—
காற்றுவாக்கில்—
ககனத்திற்குச் சென்றது;
கால் வந்து—
குந்தியின் முன்னே—
கால்கொண்டு நின்றது!

வேண்டினாள்—தான்
விரும்பிய வரத்தை;
காலின் காலடியில்—
கவிழ்த்தாள் சிரத்தை!

அவளை—
அன்போடு—
ஆதரத்தோடு...
தொட்டது காற்று; அடி—
வயிறெனும்—ஊன்
வயலில்—மெல்ல
நட்டது காற்று!
காற்று நட்ட—
நாற்று...
பீமனாக விளைந்தது; பாண்டு
பட்ட கவலையைக் களைந்தது!

மாதாவின்—
மடியிலிருந்து—

மாருதத்தின் மைந்தன்—
மண்ணில் விழுந்ததும்...

பூமி அதிர்ந்தது;
ஆலயந்தோறும்—
அமர்ந்திருக்கும்—
சாமி அதிர்ந்தது;
சாமியின்—
வலக்கரம்—
வாங்கி நிற்கும்—
நேமி அதிர்ந்தது!

'பிறந்திருப்பது—
புயலா?—சிறு
பயலா!' எனப்
பட்டிமன்றம் நடத்தினர்...
பாண்டுவின்—
பர்ணசாலையை—
சுற்றியிருக்கும்
சாதுக்களும்—
சாதுக்களோடு—
சம்சாரம் நடத்தும்—
மாதுக்களும்!

பீமன் பிறந்த—
பத்தாம் நாளில்...
இடுப்பில் பிள்ளையை—
எடுத்துக்கொண்டு—
குளிக்கப் போனாள்—
குந்தி; அவள்—
குளித்து முடித்துக்
குடிலுக்குத் திரும்புகையில்—

புலியொன்று நின்றது—அவள்
பார்வைக்கு முந்தி!

அரண்டாள்;
மிரண்டாள்;

....
புலி துரத்த...
புலியை விட
கனவேகமாக—
கிலி துரத்த...
குந்தி ஓடினாள்—

....
ஒக்கலில் 'சிக்'கென—
ஒட்டிய குழந்தை—
'பொக்'கென விழுந்தது—
பள்ளத்தாக்கில்!

பிழைத்துக் கிடந்தது—
பிள்ளை; சுக்குநூறாய்—
பொடித்துக் கிடந்தது—
பாறை!

சூறைக்கு—
சனித்த பிள்ளை—
பாறைக்கு—
பயப்படுமா?

....
பாண்டுவும் குந்தியும்—
பயந்தனர்; பின்னர்
பயம் அடங்கி—
வியந்தனர்! (I—பக்:123-25)

இந்த அறிமுகமும் சிறப்பாக அமைந்துள்ளது பொரி விலங்காய் சாப்பிட்டநுபவிப்பது போல் அநுபவிக்கின்றோம்!

20. அர்ச்சுனன்: *பார்த்தனை நினைக்கும்போதே பரந்தாமனும் காட்சி அளிப்பான். ஆயிரங்கண்ணன் அருளிய பிள்ளை பற்றிய அறிமுகமும் ஆச்சரியமானது; வியக்கத்தக்கது. இதோ அறிமுகம்!*

'சந்திரன் வம்சத்தில்—
சந்ததியொன்று—அந்த
இந்திரன் அம்சத்தில்—
இருப்பது நன்று'
என—
எண்ணினான்—
இரு—
தனயர்க்கு ஏற்கெனவேயே—
தாதையான் பாண்டு;

....
வெள்ளை வண்ணனின்—
விருப்பத்திற்கேற்ப—
வெள்ளை வாரணனை—
வரும்படி வேண்டினாள்...
முனிவன் உபதேசித்த—
மந்திரம் ஓதி;

....
தவளத்
தந்தியில் ஏறி—தரைக்கு
இந்திரன் வந்தான்—கோதை
குந்தியைத் தழுவி—ஒரு
குழந்தையைத் தந்தான்!

அந்த
ஆண்மகவுதான்—
அர்ச்சுனன்;
பங்குனியில் பிறந்த
பல்குனன் !

ஆயிரம் கண்ணன்—
அருளிய பிள்ளை—
கோமளம் சொன்னால்—
கொள்ளையோ கொள்ளை!
'வாழிய' என்று—

வானுலகு—
வாழ்த்தை வழங்கியது;
தேவகணம்—
துந்துபி முழங்கியது!
ககனத்திலிருந்து—
கொட்டியது பூமாரி; அதில்
குளித்தது குந்தியின்—
குடல் சுரந்த தேன்வாரி!

வாசவன் வழங்கிய
வாரிசின் வனப்பு—
மீசுரம் என்றொரு
பாசுரம் படித்து—
அதன்
முளரிபூங் கன்னத்தில்—
முத்தம் வைத்தது—
மந்த மாருதம்; வெற்பின்—
முகடு நீங்கி—பிள்ளை
முகம் பார்க்க வேண்டி
வந்த மாருதம்!

சதசிருங்க மலை வாழும்—
சகல ரிஷிகளும் வந்து—
அர்ச்சுனனைப் பார்த்தனர்;
ஆசீர்வாதங்களை வார்த்தனர்! (I—பக்:127-28)

பார்த்தன் அறிமுகம் பட்டு கத்திரித்த மாதிரி சுருக்கமாகவும் அமைந்தது; மனஉருக்கமாகவும் சமைந்தது. பரந்தாமனின் கீதோபதேசத்தைக் கேட்க வேண்டியவனல்லவா?

21–22 நகுலன், சகாதேவன்: *ஐவர்களில் இந்த இருவர் ஒருத்தி வயிற்றில் உதித்தவர்கள்; பஞ்சபாண்டவர்கள் என வழங்கக் காரணமானவர்கள். இணையான அஸ்வினி தேவர்கள் அருளால் வந்தவர்கள். இவர்கள் பற்றிய அறிமுகம் இது:*

பாண்டுவின் வேண்டுகோளை
ஏற்று...
மாத்திரிக்கும்—அந்த
மந்திரத்தை—குந்தி
உபதேசித்தாள்;
அவளும்—ஓர்
அன்னையாக—உடன்
உபகரித்தாள்!

'இந்தப்
பெண்ணொரு மலடு! எனப்
பேசுமோ உலகு?'—என்று
அஞ்சியிருந்த மாத்திரி—
அச்சம் நீங்கினாள்;
மூத்தாள் குந்தி—மானம்
காத்தாள் என்று—அவள்
மலரடியைத் தன்—
மனத்தில் தாங்கினாள்!

இனியதோர்—
இளவேனிற் காலத்தில்...

அஸ்வினி தேவர்களை—தன்
அகத்தில் வைத்து ஆராதித்து—
அழைத்தாள் மாத்திரி—ஒருநாள்
அர்த்த ராத்திரி!

அஸ்வினி தேவர்கள்—
அக்கணமே வந்தனர்; மாத்திரியை

ஆரத் தழுவி—அவளுக்கு
ஆளுக்கொரு மகவைத் தந்தனர்!

இருவர் வழங்கிய—அந்த
இருவர்தாம்...
நகுலன் !
சகாதேவன் ! (I—பக்:128-30)

இது மிகச் சுருக்கமான அறிமுகம். கதை யோட்டத்திற்குக் கை கொடுத்து உதவப் போதுமானது. இவர்கள் பிறப்பு பாண்டுவின் மைந்தர்கள் 'பஞ்ச பாண்டவர்கள்' என வழங்கக் காரணமாயிற்று.

23. சகுனி: இவனைப்பற்றி அறிமுகம் செய்யும்போது அவன்மீது கவிஞர் வாலி கொண்ட சினத்தின் சாயையும் சேர்ந்து வெளிப்படுகின்றது.

—தீய
வர்க்கத்தை—
மொத்தமாக—
குத்தகைக்கு எடுத்தவன்;
சுத்தமாக—
சத்தியத்தை விடுத்தவன்!

தூரத்து உறவல்ல;
துரியோதனனுக்கு—அவன்
தாய்மாமன்; மருகனை—
நூறுதல் பொருட்டு—
நூறு வழி சொல்லும்—
நோய் மாமன்!

உத்தமி காந்தாரியின்—
உடன்பிறப்பு; அவளாலும்—
கழிக்க முடியாத—
கடன் பிறப்பு!
அந்த—
சிறியன் பெயர்—
சகுனி! அவன்—
ஆணுருக் கொண்ட—
ஆயிரம் கூனி!

அவன்—
மூவகை மலங்களின்

மொத்தக் கலவை; அவனது—
முக்கிய தொழில்—
மூளைச் சலவை!

அப்பழுக்கற்ற—
ஆர் மூளையும்...
சகுனியின்—
கலவைக்குப் பின்—

அண்டா அண்டாவாய்—
அழுக்கை அள்ளி அப்பிக்கும்;
அதன் பிறகு—
அவன்...
அஞ்சும் மூணும் ஆறு என்றால்—
அப்படியே அதை ஒப்பிக்கும்!
மாச்சரியம் கொண்டு—
மாற்றாரைக் கவிழ்ப்பதில்—
தீட்சண்யமானவன்;
ஆச்சரியக் குறியே—
ஆச்சரியப் படும் அளவு—
ஆச்சரிய மானவன்!

அவன்—
கவறு ஆடினால்—தாயக்
கட்டை கூடத்
தவறு செய்யாது; நெஞ்சில்—
எழும் எண்—
எண்ணியபடி—
விழும் பொய்யாது!

சூதாடுவதிலும்—
சூதை உள்வைத்து...
வாதாடுவதிலும்
அவன்போல்—
ஆருக்கும் வராது—அத்துணை
ஆகடவிகடம்; அவன்—

நீலகண்டன்—
நெஞ்சுக்குள் நிற்காத—
ஆலகால விடம்!

சகப்புரட்டனான—
சகுனி மாமன்தான்—

கெட்ட—
பெண்ணாவிபோல—
துரியோதனனைப்
பிடித்துப் பாடம் நடத்தும்—
அண்ணாவி!

அப் பாவி அக்குளில் சிக்கி—
ஆடுகின்ற துரியோதனனை—ஓர்
அப்பாவி! உடல்—
விட்டாவி பிரிந்தாலும்—மாமன்
விரலசைக்காது விடமாட்டான்—
கொட்டாவி!
சகுனி மாமன்—
சமிக்ஞை செய்தால்தான்...
துரியோதனன்—
துலக்குவான் பல்லை;
திருவாய் திறந்து—
துப்புவான் சொல்லை!
மருகனுக்கு—
மூக்கு அரித்தாலும்...
மாமன்—
சொன்னால்தான்—
சொறிவான்; மாமன்—
சொல்லாவிடினும்—அவன்
மேல்
சொல்லொணா அன்பை—
மருகன்
சொரிவான்!

விதியானது—இங்ஙனம்
வகுத்து வைத்தது—
துரியோதனனுக்கு —ஒரு
தீய பந்தம்; இந்த—
தீய பந்தம்—

துரியோதனனைப் பொசுக்க
வந்த—
தீப்பந்தம் (I—பக்:164-65)

நீளமான அறிமுகம்; இன்றியமையாத அறிமுகம். இன்றும் பாமர மக்களின் மனங்களிலும் வாழ்பவன் சகுனி. அவர்கள் வாக்கில் எடுத்துக்காட்டாக நின்று வாழ்பவன். பாரதக் காவியத்திற்கே முடுகுவிசை போன்றவன்.

24. **கிருபாச்சாரியன்:** *இவனைப்பற்றிய அறிமுகம் இது:*

மகரிஷி கௌதமரின்—
மகன் மகன்....
கீர்த்திமிகு
கிருபாச்சாரியன்!

அஸ்திரத்தால்—
அனைத்தையும்—
அஸ்தி ஆக்கவல்ல—
அதிசய ஆரியன்!

புல்லேந்தும் கை—
வில்லேந்தியதுய; புரிநூலின்
தொட்டில் போன்ற
தோளில்—அம்புப்
புட்டில் தொங்கியது!

சதுர் வேதம் நா—
தனுர் வேதம் ஓதியது; எதிலும்—
நெறியைப் பார்க்கும்
கண்—எய்யும்
குறியைப் பார்த்தது!

சாதியில் அவனொரு—
வேதிய னாயினும்—
சத்திரியன் போல்—
சமர்க்குணம் பூண்டவன்;
பாரப்பில் பிறந்த
பரசுராமனை—
வார்ப்பில் மீண்டும்—
வடித்தது போன்றவன்! (I—பக்:189)

இவனும் இவன் சோதரியும் நாணல்தண்டில் உதித்தவர்கள். கௌதமரின் மகன் சரத்வானின் தவத்தைக் கெடுக்க ஜாலவதி என்னும் அப்சர மாதை அனுப்பினான். சரத்வான் சித்தம் தளர்ந்து சஞ்சலப்படுகையில் அவனிடமிருந்து வெளிப்போந்த வீரியம் வெளிப் போந்து தீர்த்தங்கரை நாணல் தக்ஷன்மீது விழுந்து இருபெரும் பிரிவுகளாகி ஓர் ஆண்மகவாகவும் பெண்மகவாகவும் மாறியது. அழுதுகொண்டு கிடந்த இரு குழவிகளையும் வேட்டை நிமித்தம் அவண் போந்த சந்தனு எடுத்து வளர்த்தான்—கிருபன் கிருபி எனப் பெயரிட்டு. காளைப் பருவம் எய்திய கிருபனுக்கு கௌதமர் வில் மல் முதலான வித்தைகளில் பயிற்சி அளித்தார். இருவரையும் பீஷ்மன் பேணிக் காத்தான்.

25. **துரோணன்:** *துரோணனைப் பற்றிய அறிமுகம் இது:*

கங்கைக் கரையில்
கொலுவிருந்து—அந்தக்
குடில்! அந்தக்
குடில்—தோற்றத்தில்
குறில்; ஏற்றத்தில் நெடில்!

....
குடிலில்—
குடியிருந்தவர்.....

ஒரு—
புண்ணியர்;

....

பெயர்..........
பரத்துவாசர்! நதிப்
புறத்துவாசர்!

நாளும் தேயம்—
நமஸ்கரிப்பது—அவரது
நாமதேயம்!

அவர்....
தவசிகளிலே—ஒரு
தனி; சுய—
முனிவைக் கொண்டு—
முனிவை முறித்த—
முனி!

....
அவர்—
அந்தியும் சந்தியும்
ஒய்வு—
ஒழிவு இனி—
ஓமம் வளர்ப்பவர்;
ஓமம் வளர்த்து—உலக
சேமம் வளர்ப்பவர்;
கணப்பொழுது—ஒருநாள்
காமம் வளர்த்தார்!
'காபிர்த்தானம்' என்று—
கங்கைக் கரையில்—

....
'கிருதாசி' என்னும்—

குமரியொருத்தி—
குளிப்பது கண்டு—மனம்
குப்பையாக ஆனார்.

....
நீரில்—
நின்றுகொண்டிருந்தவளின்—
நூலாடையை—காற்று
நீக்க...

பரத்துவாசர்—பெண்ணழகைப்
பார்வையால் மாந்தினார்;

சொல்லாமல்—
சுக்கிலம் நழுவ....
பத்திரமாய்—அதையொரு
பாத்திரத்தில் ஏந்தினார்!

அந்த சுக்கிலம்—
ஆண் சேயானது;
அந்தப் பாத்திரம்—
அதற்குத் தாயானது!

தாதுவைத்
தாங்கிய பாத்திரத்திற்கு—
துரோணம் என்று பெயர்;
ஆதலால்...
அந்த—
துரோணத்தில்
தோன்றிய—
துரோணன் என்று பெயர்!

பரத்துவாசர்—
பிதாவானார்;
குடத்தில் பிறந்து—தவ
மடத்தில் வளர்ந்த—தன்
குலக் கொழுந்திற்கு...

பின்னாளில்—அவரே
பிரகஸ்பதி ஆனார்!

காசிப முனிவரிடம்—தான்
கற்றறிந்த....
மனுதர்மத்தை—
தனு தர்மத்தை—
....
தன் கன்றுக்கு—அவர்
கற்பித்தார்; மகனின்
புத்திகூர்மை கண்டு—மனம்
புஷ்பித்தார்! (I—பக்:195-98)

இதற்கு முன்னர் பிறிதோர் இடத்தில் கவிஞர் வாலி—

கிருபனின் சகோதரி—
கிருபையை....
பின்னாளில்—மணம்
புரிந்து கொண்டவன்—
வில்லாண்மை மிக்கவன்;
வணங்கத் தக்கவன்!
அவன்போல்—
ஆருமில்லை....
பாணம் எய்வதில்—
வாணன்! அவன்முன்—
வில்லெடுப்பவன்—
வீணன்!

வில்புகழ் வீரருள்—அத்தகு
தொல்புகழ் வாய்ந்த—அந்தத்
தூயவன் திருநாமம்—
துரோணன்! (I—பக்:195)

என்று அறிமுகப்படுத்தியுள்ளார். இரண்டு அறிமுகங்களும் துரோணனை இன்னான் என்று புரிந்துகொள்ளுகின்றோம்.

26. துருபதன்: *'பாண்டவர் பூமி'க்கு பக்கபலமாக இருப்பவன். அறிமுகம் சிறியதாயினும் கதைக்கு ஆணிவேர்.*

வடபாஞ்சாலத்தின்—
வேந்தன் பெயர்—
பிருஷதன்! அந்த—
பிருஷதனின்—
பிரியகதன்—
துருபதன்!

பிருஷகனும்—
பரத்துவாசரும்—
பிராதாக்கள் போல்—
பழகினர்;

தம்
தாதைகளைத் தொடர்ந்து....
துரோணனும்—
துருபதனும்—
உடன் பிறப்புகளாய்—
ஒழுகினர்!

அப்போது—தன்
அளப்பரிய—
அன்பின் வெளிப்பாடாய்—
துரோணனுக்கு—
துருபதன்—
ஒரு
வாக்குத்தத்தம்
செய்தான்; பெரு—
விருட்டியாய்—வாஞ்சையைப்
பெய்தான்!

'துரோணனே! உயிர்த்
தோழனே!
....
நான்—

ஒன்றுரைப்பேன்; கேள்! இது—
உலகறிய நானேற்கும் சூள்!

என் தந்தைக்குப் பிறகு—
தேசம்....
என் கைக்குவரும்;
என் கைக்கு வந்தபின்—
தேசத்தில்—
செம்பாதி....

உனக்கதை—என்மனம
உவகையோடு தரும்!'
இங்ஙனம்—
இதயமார—
இயம்பிவிட்டு....

துருபதன்—
துரோணனை—
மார்போடு மார்பாய்—
மருவினான்; அந்தத்
தழுவலில்—
துரோணனும்—
ஒவ்வோர் அங்கமாய்—
உருகினான்; உயரிய
நட்பெனும் நறவத்தை—
பானை பானையாய்ப்
பருகினான்; விழிகள்—
செருகினான்!

....

துருபதன்—
திருமுடி தரித்து—
தேயத்தை ஆண்டான்;
துரோணன்—
தருப்பையைப் பிடித்து—
தவநெறி பூண்டான்! (I—பக்:198-200)

இந்த அறிமுகம் போதும் இப்போது; தொடர்ந்து கதைப்பின்னலில் முக்கியமான இடங்களில் தென் படுவான்.

* * *

காலத்தின் கோல மாற்றத்தில் துருபதன் வேள்வியொன்று இயற்றுகின்றான். அதன் நோக்கம்:

'துரோணனை மாய்க்க—
தனயன் வேண்டும்!' (I—பக்:252)

என்பது.

27. **அசுவத்தாமன்:** துரோணனின் மகன் அசுவத்தாமனைப்பற்றிய அறிமுகம் இதோ:

கிருபனின் தங்கை—
கிருபையை—
துரோணன்—வாழ்க்கைத்
துணையாய் ஏற்றான்;
இல்லற நோன்பை—
வனத்திலேயே
இல்லாளோடு நோற்றான்!

தலையெடுத்தது—
தாம்பத்தியம்;
தீர்ந்தது துரோணனின்—
தனிமைப் பத்தியம்!

கிருபி—
கருவுற்றாள்;
ஒரு—
பவித்திரப் பொழுதில்—
பனிக்குடம் உடைந்து...

பையில் இருந்ததை—
கையில் பெற்றாள்!

அமரேசன் ஏறிவரும்—
அசுவத்தின் பெயர்—
‘உச்சைச் சிரவம்’—மிக
காம்பீர்ய…
…ரமாயும் இருக்கும்—அது
கனைக்கும் அரவம்!

துரோணனின் பிள்ளை—
தோன்றியவுடனே...

அந்த—
அமரேசனின்—
அசுவம் போல—
கனைத்தான்; பெற்றோர்—
காதுகளை—குடத்தேனில்
நனைத்தான்!

ஓர்
அசரீரி
அறிவித்தபடி...

தன்
மகனுக்கு—துரோணன்
‘அசுவத்தாமன்’ என்று—
பெயரிட்டான்; பெரிதும்
பெருமைப்பட்டான்!

கிருபி—தன் மடி
கீண்டுவந்த—நிலாக்
கீற்றை....
கீழே விடாமல்—
கொஞ்சினாள்;
கண்ணுக்குள்
வைத்துக்கொண்டே—
துஞ்சினாள்!

நாளாக...
நாளாக...
அசுவத்தாமனின்–
அழகும் அறிவும்– 'இந்த
அசுவத்தை அவன்–
விரும்பிக் கேட்டாலும்–
வாங்கித் தரவேண்டும்!' எனும்–
வெறியை...
துரோணனின் சிந்தையில்–
தூவின; அவனைப்
பொருள்கொண்டு வருமாறு–
பல திசைகளுக்கும் ஏவின!

அருளுக்கு அலைபவன்–
அதீதமான பிள்ளைப் பற்றால்
பொருளுக்கு அலைந்தான்;
பாவம்!
பொருள் கிட்டாது உலைந்தான்!

....

அசுவத்தாமன்
அசுரப் பசியில் அழுதான்...

ஆவின் பால் தராது–அரிசி
மாவின் பால் தந்தான்; 'இதுவா–
பசுவின் பால்!' எனக் கேட்கும்–
சிசுவின் பால்...
பதில் சொல்ல
முடியாது–கொல்லன்
பட்டறைபோல் வெந்தான்! (I–பக்:200-01)

இவ்வளவு போதும் துரோரணன் தனயனை அறிமுகம் செய்ய காவியத்திலும் அவன் பங்கு சிறியது; ஆனால் உயிராயது!

28. கர்ணன்: *கர்ணனைப்பற்றிய அறிமுகம் சற்று விநோதமானது. அது இது:*

ஒரு—
மங்கையில் உதித்து—அவளால்
சங்கையில் உடனே—அகல
கங்கையில் விடப்பட்டவன்;
அந்த—
கங்கையில்—ஒருவன்
முங்கையில்—அவனது
அங்கையில் அகப்பட்டவன்!

அவன்தான்—
அருள்மிகு—
கர்ணன்! அழகிய
கவசாபரணன்!

அவன்—
கன்னி வயலில்—
கதிர் விளைத்த—
கதிர்;
குணநலன்கள்—
கொட்டிக் கிடக்கும்—
குதிர்;
அவன் பிறப்பு—
அவனுக்கே ஒரு—
புதிர்;

ஆயினும்—
ஆர்அவனுக்கு—
எதிர்?

அவன்—
உடை உடுத்திய
கொடை!
இருகை பொருந்திய—
ஈகை!

சருமம் என்பொடு—
சஞ்சரிக்கின்ற—
தருமம்!

தானம் தருவதற்கே—
தேக மெடுத்து—
வானம் நீங்கி—இந்த
வையம் இறங்கிய—அட்சய
ஏனம்!

வள்ளன்மை எனும்—
வாழ்வு நூலுக்கு—
வியாக்கியானம்; அவன்—
வழங்கல் எனும்—
வண்மை மொழிக்கு—
வியாகரணம்!

'இல்லை' என்பது—அவன்
கல்லாத சொல்; அவன்—
எடுத்தாளும் நிகண்டில்—அது
இல்லாத சொல்!

ஈதல்—அவன்
இதயம் ஓம்பும்—முதற்
காதல்!

உதாரம்—அவன்
உவந்து மணந்த—
முதல் தாரம்!

ஈயென—நுரை
ஈரலைக் கேட்பினும்—ஈர்த்து
ஈவான்; ஈவதற்காகவே
சாவான்!

ஔதார்யம் எனும்—
ஔஷதம் கொண்டு...

தீனர்களின்
தரித்திர நோயை—
தீர்த்து வைக்கும்—
தன்வந்திரி!

சகலரும் அணுக—
சாத்திய மாகும்படி—
சௌலப்பியம் மிக்க—
தயாநிதி!

ஒவ்வொரு நாளும்—அவன்
உள்ளங்கை அரிக்கும்;

ஒருவருக்காவது—
ஒரு துளியாவது—
உபகரித்தால்தான்—அவன்
உண்டசோறு செரிக்கும்!

இன்னும்—
எத்துணையோடு சொல்லலாம்—
கன்னன் சிறப்பு; எனினும்—
ஈ காக்காய் தவிர—
எவருக்குத் தெரியும்—அத்தகு
ஈகையன் பிறப்பு? (I—பக்:212-14) [8]

கர்ணனுடைய குணச்சிறப்புகளை அறிந்துகொள்ள இந்த அறிமுகமே போதும். இதிலும் சில 'சொல் விளையாட்டுகள்' நம்மை முறுவலிக்கச் செய்து விடுகின்றன!

29. **ஏகலைவன்:** *'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்ற முதுமொழிக்கிணங்க_ஒரு சிறு வேடச் சிறுவனும் காவியத்தில் இடம் பெறுகின்றான். அவனது அறிமுகம் இது:*

8 இதற்குமேல் அவன் பிறப்பு முதலியவை நிறுத்தப் பெற்றன.

அவன்—ஒரு
வனவாசி;
ஆயினும்—குரு
விசுவாசி!
அவன்—
வசித்து வந்த
வனப்பிரதேசம்...
சதா—
சிலுசிலு என இருக்கும்—ஒரு
சௌந்தர்யமான காடு;

....

அழகு கொழிக்கும்—
அந்த வனத்தின்—
மையத்தில் இருந்தது—ஒரு
மழைநாள் ஏரி;
அதைச் சுற்றித்தான்—
அமைந்திருந்தது—
வேட்டுவர் வாழும்—அந்த
வேடசேரி!

'இரண்ய தனுஸ்'
என்பவன்...
அங்கு—
வாழுகின்ற—
வேடர்களின் வேந்து;

....

அந்த—
மன்னனுக்கு—ஒரு
மகன் உண்டு;

....

கொலைத் தொழில்—அவன்
குலத்தொழில்; அவன்—
கும்பிக்கு அதுதான்—
கூழ் தந்தது!

அது—
அவன் குற்றமல்ல; அத்தகு—
வேடுவப் பிறப்பை—அவனுக்கு
ஊழ் தந்தது!

வேட்டையாடுவதில்—
வெறிகொண்டவன்; அந்த—
வெறியிலும்—ஒரு சில
நெறிகொண்டவன்!
இணையைப் புணரும்—
பிணையைப் பார்த்தால்—
கணையைத் தொடமாட்டான்;
சினையாய் இருக்கும்—
சிறுத்தையை—அம்பின்
முனையால் சுட மாட்டான்!

....
அவன்—
வாழ்க்கையில்—கை
வில் ஓர் அங்கம்; வில்—
வேதத்தை—அவன்
விரிவாகக் கற்க—
விரும்பினான்; வந்தது—
வில்லங்கம்!

காற்றுவாக்கில்—ஒருநாள்
கேள்விப்பட்டான்...
துரோணரின்—
தவப்பள்ளியைப் பற்றி;

உடனே—
ஓடிப்போய்...
துரோணரின்—
திருவடித் தாமரைகளில்—
இருந்த தூசியை—
எடுத்தான்—
தனது—
தலையால் ஒற்றி!

'அருள்மிகு–
அய்யனே!
என் பேர் ஏகலைவன்;
எந்தை வேடர் தலைவன்!
வில்லின்மீது–எனக்கு
விலக்கவொண்ணா இச்சை;
என்னையே–
ஏந்தி வந்தேன்–
பாத்திரமாய்; தாங்கள்–
போட வேண்டும் ஞானப்பிச்சை!'

இங்ஙனம்–
இருகரம் கூப்பி–
இறைஞ்சினான்...
ஏகலைவன் ! எதிலும்
ஏகாக்கிர சித்தமுள்ள
இளங்கலைஞன்!

துரோணர்–ஒரு
தர்ம சங்கடத்தைக் கண்டார்;
தனக்குத்தானே பேசிக் கொண்டார்!

....
'இளைஞனே! உன்னை
எனது சீடனாகவே–நீ
எண்ணிச் செயல்படு; புகழ்
எய்துவாய்! சிந்தாகுலம் விடு!'
என...
ஆசிகூறி–ஏகலைவனை
அனுப்பிவிட்டார்; எனினும்–
அவன் பொருட்டு–கொஞ்சம்
அனுதாபப்பட்டார்!

சில திங்கள்கள்–
சென்ற பிறகு...

அவரவர் தேரில்–ஒருநாள்
ஆரணியத்திற்கு வேட்டையாட–

அர்ச்சுனன்; துரியோதனன்—
ஆகியோர் சென்றனர்!

பக்கல் நின்ற—ஒரு
பரட்டைத்தலையனைக்
கண்டு—
குக்கல் ஒன்று—விடாது
குரைப்பதைக் கண்டனர்!

ஏழு அம்புகளை—அவன்
எடுத்து—தன்
கைவில்லில்—ஒரே
கொத்தாக வைத்தான்;
அவற்றை—
நொடியில் ஏவி—அந்த
நாயின் வாயைத் தைத்தான்!

அர்ச்சுனன் முதலானோர்—
அதைப் பார்த்து வியந்தனர்;
'ஆர் நீ? ஆர் உன் குரு?' என
ஆர்வமுடன் வினவினர்!

ஏகலைவன்—ஓர்
இளம் புன்னகையை—
அவர்கள் மீது வீசினான்;
அதன் பிறகு பேசினான்!

'என் பேர் ஏகலைவன்;
என் தந்தை வேடர் தலைவன்!
நான்—
தனுர்வேதம் பயிலும்—
மாணவன்; ஆசாரியர்—
துரோணரின் சீடனென்று
ஆனவன்! (I—பக்:238-41)

போதுமான அறிமுகம். வாசகர்க்கு ஏகலைவனைப் பற்றி அறிந்து கொள்ளச் சாலும் இது.

30. திருஷ்டத்துய்மன்: *துருபதன் வேள்வியில் முளைத்த மகன்.*

அந்த—
அனலில் முளைத்தான்—ஓர்
ஆண்மகன்; அவன்தான்—
'திருஷ்டத்துய்மன்' என்னும்—
தலைமகன்! (I—பக்:252)

வேள்வி வயலில்—
விளைந்த—
இந்த—
இளம் நாற்று—
துரோணன் உயிரைத்
தின்னப் பிறந்த கூற்று! (I—பக்:252) [9]

பாஞ்சாலி: *இவளும் வேள்வித் தீயில் எழுந்த நெருப்பு.*

அதே—
நெருப்பில் எழுந்தது—ஒரு
நெருப்பு; அந்த—
நெருப்பு ஏற்ற நிறம்—
கறுப்பு!

அந்தப்
பத்தினி நெருப்பின் பெயர்—
பாஞ்சாலி; அவள்தான்—
தீயரைத் தீய்க்கப் பிறந்த—
திரிசூலி! (I—பக்:252)

அறிமுகங்களிலேயே இவர் தம் பிறப்பின் நோக்கம் குறிப்பிடப் பெற்றுள்ளது.

31. யுயுத்சு: *வில்லியில் இல்லாத கதை மாந்தன்; கவிஞர் வாலியால் படைத்துக் காட்டப் பெறுபவன். இவன் பற்றிய அறிமுகம் இது:*

9 வேள்வியை இயற்றியவர்கள் யாஜர், உபயாஜர் என்ற உடன்பிறந்த பிராதாக்கள்; வேதம் ஓதி உணர்ந்த ஞாதாக்கள்.

அந்த—
யுயுத்சு...
யாரோ எவரோ இல்லை;
மன்னன் திருதராஷ்டிரனின்—
மற்றொரு பிள்ளை!

ஆனால்...
நூற்றுவர் கணக்கில்—
வராதவன்;
நூற்றுவர் குணங்களைப் பெறாதவன்!

....
இருபத்துநான்கு மாதங்கள்—
இடுப்பு வலியோடு—முன்னம்
கருவுற்று இருந்தாளே—
காந்தாரி...

அவ்வமயம்—
அந்தப் புரத்தில்...

மணிவிழி இல்லா—
மன்னனுக்கு—
பணிவிடை புரிய—
பணிக்கப் பட்டிருந்தாள்...

வணிகர் குலத்தில்—
வந்துதித்த—ஓர்
அணிவிளக்கு;
ஊழியம் புரியும்—
தோழியர் இனத்தில்—
அவளொரு
விதிவிலக்கு!

"இதுதான் வனப்பின்—
இலக்கணம்!"
என்று—
தாபிதம் செய்ததுபோல்—ஒரு

10 இவன் வரலாறு மேலும் தெளிவாக, வாலியார் தொடர்கின்றார்.

சோபிதம்!
சதுர்முகன்—
செருக்கோடு செதுக்கிய—
சிருஷ்டி; அந்த—
சிருஷ்டியை ரசிக்க—
திருதராஷ்டிரனுக்கு—ஏது
திருஷ்டி?

எனினும்...
காமத்திற்குக்
கண்ணெதற்கு?
கண்ணிலா மன்னனால்—
கருவுற்றாள்—அந்தப்
பெண் விளக்கு!

அவளுக்குப் பிறந்த—
அருமை மகன்தான்...

யுயுத்சு—என்னும்
யுவன்;
உத்தம குணங்களில்—
உதிட்டிரனுக்கு இணை—
அவன் !

'பஞ்ச—
பாண்டவர்களை—
அத்தினபுரத்திலிருந்து—
அப்புறப்படுத்த வேண்டும்!'
எனும்—துரியன்
எண்ணத்தை—யுயுத்சு
ஏற்கவில்லை;[12]
எனினும்—தன் குரல்

11 பொலிகாளைக்கும் இவனுக்கும் வேறுபாடு இல்லை!

12 வில்லி படைத்துக் காட்டும் நூற்றுவரில் கடைக்குட்டி 'விகர்ணனை' ஒத்தவன்.

எடுபடாது என்று—அவன்
எதிர்க்கவில்லை! (I—பக்:269-70)

32. புரந்தரன்: இவனது அறிமுகமும் இன்றியமையாதது. அரக்கு மாளிகையை அழிக்கும் திட்டத்தில் பெரும்பங்கு கொண்டவன். இவன் பற்றிய அறிமுகம் இது.

புரோசனன்—கட்
புலனில்லாப் புரவலனின்—
அமைச்சரவையில்—ஓர்
அமைச்சன்;
பஞ்சமா பாதகங்களுக்கு—
அஞ்சா நீசன்!

துரியோதனன்—
தூக்கிப் போடும்...
ஆட்டெலும்புக்கு—வால்
ஆட்டும் நாய்; துரியன்—
உரைக்கும் வண்ணம்—
குரைக்கும் வாய்!

துரியோதனன்—ஒரு
திட்டத்தை—அந்த
நீசனிடம் கூறினான்;
நிறைவேற்றக் கோரினான்!

'புரோசனனே! எனைப்
போன்றவனே! என்—
மற்றொரு மெய்யே!
மூன்றாம் கையே!

பாண்டவர்—
போய்ச் சேருமுன்...
நீ வாரணாவதற்கு [13]

13 வாரணாவதம் என்பது-இப்போது 'வாரணாசி' 'வடகாசி' என்று வழங்கப் பெறும் தலம். 1968 - அக்டோபர் - நவம்பரில் நான் துணைவியுடன் 26 நாட்கள் இங்குத் தங்கி நாடோறும் விசுவநாதரைச் சேவித்தேன் கங்கையில் அதிகாலையில் நீராடிய பிறகு.

விரைந்து செல்; நான்—
வகுத்துரைப்பதை—நினைவில்
வரைந்து செல்!

வாரணாவதத்தில்—ஒரு
வண்ண மாளிகையை—
உருவாக்கு
குந்தியையும்—அவள்
குமாரர்களையும்—அதில்
குடியேற்று!

அந்த மாளிகையை—
அமைக்க...

எரியூட்டினால்—
எளிதில் பற்றும்—
பொருள்களை—
பயன்படுத்து; அதற்கு—
அரக்கால்—
ஆடை உடுத்து!

சுவர்களுக்கான—
சாந்துக் கலவையில்...

சணல்; மணல்—
இட்டு—அவற்றோடு
குங்குலியம்; கர்ப்பூரம்—
கொட்டு!
மொத்த—
மாளிகையையும்—
மெழுகு கொண்டு—
மெழுகு; அவர்களை
அயர்த்த வேண்டும்—அதன்
அழகு!

அவர்களிடம்—
அன்போடு பழகு; அவர்கள்—

நம்பும்படி—
நாணயமாய் ஒழுகு!

சிறிது நாட்கள்—
சென்றபின்...

அன்னையோடு
அந்த ஐவரும்—
தூங்கும் பொழுது—
தீ வை!

அந்த வேலையை—
அடுத்தவனிடம் கொடுக்காதே;
நீ வை!

குந்தியும்—அவளது
குமாரர்களும்—
வெந்து சாவார்கள்;
வியனுலகு போவார்கள்!

பழியை—செந்
தழல் சுமக்கும்; மணி
முடியை—என்
தலை சுமக்கும்!' (I—பக்:272-74)

சரியான அறிமுகம்! இருவர் முகமும் ஒன்றாக இருப்பதை நமக்கு அறிவிக்கின்றது!

33. இடிம்பன்: *இவன் ஓர் அரக்கன். அரக்கு மாளிகை பீமனால் அக்கினிக்கு இரையாக்கப் பெற்று அதினின்று தப்பிய ஐவரும் குந்தியும் அநேக காவதம் கடந்து இறுதியில் ஓர் ஆலின் கீழ் தங்குகின்றனர். இவர்கள் தங்கி யிருந்த ஆலமரத்திற்குச் சற்று அணிமையில் ஓர் ஆச்சாமரம்.*

ஆகாயம்—
அளாவி நின்ற—அந்த
ஆச்சா மரத்தில்...

'இடிம்பன்!'
என்றோர்—
இராக்கதன் இருந்தான்; நா—
உலர்ந்தால்—அவன்
உதிரம் அல்லாது—
உதகம் அருந்தான்!

அந்த—
வல்லரக்கன்—
வாய்—கண
வாய்; வன—
விலங்குகளை—
வேக வைக்கும்—காள
வாய்!

பாதாதிகேசம்—
பீதி உண்டாக்கும்—
பூதாகாரம்;—
கோரமுகம்;
கோரைப் பல்; குரல்
கர்ண கடூரம்!

பட்சிகள் பெரிதாயிருப்பின்—
பட்சிப்பான்;
பட்சிகள் சிறிதாயிருப்பின்—
ரட்சிப்பான்.

மரக்
கொம்புமேல்—மணிச்
செப்புபோல்...

ராக்குருவி உட்கார்ந்தால்—
ரசிப்பான்;
ராசாளி உட்கார்ந்தால்—
புசிப்பான்!

சிகையும்—
சிலிர்த்த மீசையும்—

செம்பட்டை; அவன்—
கால் முளைத்து—
காடு நடக்கும்
கரிக்கட்டை!

கரியை—தன்
கரிய நகத்தால்—காய்
கறியைப் போல் நறுக்குவான்;
அரியை—தன்
அனல் மூச்சால்—அடுப்புக்
கரியைப் போல் கருக்குவான்;

ஆளிகளை—தனது
அக்குளில் வைத்து—அதக்கித்
தூளிகள் ஆக்குவான்;
செயிர்மிகு—கருஞ்
சிறுத்தைகளின் வால்சுழற்றி
உயிர்களைப் போக்குவான்!

மண்புழுவாய்த் தெரிவான்;
மலைப்பாம்பாய் விரிவான்;
மறைவான்; கண்ணில்—
நிறைவான்; நிறைய—
மாயங்கள் புரிவான்; (I—பக்:290-91)

இவ்வாறு இடிம்பனை நமக்கு வாலியார் அறிமுகம் செய்து அவனை நம் மனக்கண்முன் நிறுத்துவார்.

34. இடிம்பி: *இவளை நமக்கு அறிமுகம் செய்வது காவிய ஓட்டத்துக்கு இன்றியமையாதவள் என்பதால்!*

இத்தகு—
இடிம்பனுக்கு—ஓர்
இளையவள் உண்டு;
இடிம்பி என்று!

அவள்
அகோரத்தின்—
அகாரம்;
அவ்வளவு—
விகாரம்!

ஒரு—
பொருப்பை—
பெண்ணாக்கியது போல்—
உரம்;
நெருப்பை—
நீராட்டியது போல்—
நிறம்!

அவள்
மனத்திற்கு—
மிகமிகப் பிடித்தது.
மறம்;
அவளைக் கண்டால்—
ஆறு கல் தூரம்—
அப்பால் நிற்கும்
அறம்!

அண்ணன் அளித்த—
அன்பு மாலையாய்—அன்றாடம் ஓர்
என்பு மாலையை—
ஏற்றிருப்பாள் தங்கை;

ஈர இறைச்சியை—
எதிரில் கண்டால்—இளம்
கன்றுகள் போல் குதிக்கும்—
குன்றுகள் போன்ற கொங்கை!

இடிம்பி தான்—
இடிம்பனுக்கு—
இடக்கரம்;
வலக்கரம்! அவள்—

வருகை—
தராது—அவனுக்கு
இருகை—
இராது!

ஆச்சாமரத்தில்—
அமர்ந்திருந்த—

இடிம்பனின் நாசி—மூச்சை
இழுத்து இழுத்துவிட்டது;
மனிதவாடை—அவன்
மூக்குக்குப் பட்டது!

'இடிம்பியே! என்—
இளையவளே!
வாடையில்—
வருகிறது—நர
வாடை; நாவில்
ஊறுகிறது—
உமிழ்நீர்—
ஓடை!

செல்!
சென்று—சுவர்களைக்
கொல்!
இறைச்சியோடு—
என் எதிர்வந்து—
நில்!

மனித—
மாமிசம் தின்று—
மாதங்கள்—
மூன்றானது இன்று!'

புகன்றான் அண்ணன்; தீப்
புகையுமிழும் கண்ணன்;
புறப்பட்டாள் இடிம்பி;
புலால்; புண்ணீர் விரும்பி! (I—பக்:291-92)

இந்த இருவர்களைக் கவிஞர் வாலி அறிமுகம் செய்கின்றபோது 'அவதார புருஷனில்' வரும் இராவணன், சூர்ப்பணகை நம் நினைவிற்கு வருகின்றனர். அங்கு அண்ணனிடமிருந்து எந்தவிதத் தாக்கீதுமின்றி சூர்ப்பணகை செயற்படுகின்றாள். இங்கு அண்ணன் சொற்கேட்டு இடிம்பி செயற்படுகின்றாள்! அங்கு சூர்ப்பணகை அழகிய மாதாக மாறி இராமனை அணுகுகின்றாள். இங்கு இடிம்பி அழகி உருவங்கொண்டு பீமனை நாடுகின்றாள்.

35. **கடோத்கஜன்:** இவன் அறிமுகம் மிகவும் சிறியதுதான். பாரதப் போரில் ஒருநாள் இரவில் நடந்த போர் அற்புதமானது. அதில் கடோர்த்கஜனின் போர் விசித்திரமானது.

ஈன்றவள் சொற்கேட்டு–
இடிம்பியை மணந்தான்–
பீமன்! மற்றதை–
கவனித்துக் கொண்டான்–
காமன்!

பீமனுக்கும் இடிம்பிக்கும்–
பிறந்தது ஒரு பிள்ளை;
பேரனை–
எடுத்துச் சுமக்க–குந்தியின்
இடுப்புக்கு கொடுப்பினை
இல்லை!

அதற்குக் காரணம்–
அசையும்–
மலைபோல் இருந்தது–அந்த
மதலை; மருட்டும்படி–
கொடூரமாயிருந்தது–அதன்
குதலை!

கல்லொத்த புஜன்! பெயர்—
கடோத்கஜன்! (I—பக்:305)

வாலியாரும் இவன் அறிமுகத்தை இத்துடன் நிறுத்திக் கொண்டார்.

36. பகாசுரன் : *இவன் ஓர் அரக்கன். ஒரு வேதியன் வாய் மூலம் கவிஞர் வாலி அறிமுகம் செய்து வைக்கிறார் நமக்கு.*

இந்த—
ஊரிலிருந்து—யமுனை
உற்பத்தியாகும் இடம்...

....
அந்த இடத்தில்—
அநாதி காலமாக...

வாய் பிளந்த ஒரு பிலம்; அது—
வல்லரக்கன் ஒருவனுக்கு—
வாய்த்த வாசஸ்தலம்!

அந்த—
அரக்கனின் பெயர்—
'பகன்'—கோர
முகன்!

அவன்—மனித
ஊன் விரும்பி—இந்த
ஊர்க்குள் புகுந்து...

ஆடவர்;
பெண்டிர்;
இளையோர்;
முதியோர்...
என—
பேதா பேதமின்றிப்—பிடித்துப்
புசித்து வந்தான்; புசித்தது—

போதாமல்—அடிக்கடி
பசித்து வந்தான்!

பாதி ஊர்—
பகாசுரன் வாய்க்குள்;
மீதி ஊர்—
மரணபயமெனும் நோய்க்குள்!

ஊர்கூடி—ஓர்
ஒப்பந்தம் போட்டது; அதற்கு—
ஒப்புக் கொள்ளுமாறு—
பகனிடம் உருக்கமுடன்
கேட்டது!

வீட்டுக்கு ஒருவர்—தினமும்
காட்டுக்கு வருவர்...
இரு—
எருதுகள் பூட்டிய—
வண்டியோடும்; வண்டி நிறைய—
உண்டியோடும்!

மனிதனையும்—
மாடுகளையும்—
படையலாய் அனுப்பும்—சாப்
பாடுகளையும்...

அசுரன் உண்டு—
அமைதி கொள்ளலாம்;
வார்த்தை மீறினால்—
ஊரையே கொல்லலாம்! (I—பக்:316-17)

இந்தக் காவிய மாந்தனின் அறிமுகம் காவிய வளர்ச்சிக்குத் துணையாகாவிடினும் பீமனது வலிமைக்கும் அவன் உண்ணும்உணவின்அளவுக்கும்அளவுகோலாகஅமைகின்றது!

37. திரௌபதி : *இவளுக்கு மூன்று பெயர்கள் உண்டு என்பதைக் கவிஞர் வாலி,*

'முப்பெயர் கொண்ட—
மோகனம் அவள்'

என்பார்.

(1)ஒளியெனும்
உளிகொண்டு—
ஒரு—
சிற்பத்தை—
செதுக்கினான்...

தீயெனும்—
தபதி; அவள்தான்—
துருபதன் மகள்—
திரௌபதி.

(2) அரசன்—
பாஞ்சாலன் மகள்—
பாஞ்சாலி—நெய்யாலுழுத
வேள்வி வயலில்—
விளைந்த சாலி!

(3) அவள்—
சிவப்பு நெருப்பு—
சிருட்டித்த—
கறுப்பு நெருப்பு; அந்தக்
கறுப்பு நெருப்புக்குள்—
கனன்றபடி இருக்கும்
கற்பு நெருப்பு!

அவள்—
திருமேனி—கன்னங்
கருமேனி!

ஆயினும்—
அந்தக் கிருட்டிணம்...
ஒளியை உமிழ—ஒடி
ஒளியும் இருட்டினம்!

அருமை மகளின்—மேனி
கருமை கண்டு—
காவலன் பெயரிட்டான்—
'கிருஷ்ணை!' என்று!

'திரெளபதி;
பாஞ்சாலி;
கிருஷ்ணை!'
என—
முப்பெயர் கொண்ட—
மோகனம் அவள்;

இத்துடன் நிற்காமல் கவிஞர் வாலி இவளை அற்புதமாகத் தொடர்ந்து அறிமுகம் செய்கின்றார்.

உலகத்து—
உயிர்களெல்லாம்...
தாயில் தொடங்கும்;
தீயில் அடங்கும்!

ஆனால்...
அவளது—
ஆக்கையை அழிக்காமல்
ஆக்கியது அனலாம்; ஆதலால்—
நெருப்பை அவளிருந்த
கருப்பை எனலாம்!

செந்தீ சுமந்த—அந்த
பெண் தீ...

இருவர்—
இயற்றிய—
காமத்தில் பிறந்தவளல்லள்;
ஒருவன்—
ஓம்பிய—
ஓமத்தில் பிறந்தவள்!

....

வாரி நீலத்தை—
வாரி வழித்து—தனது
அப்பு விழிகளில்—
அப்பி நின்றவள்;

கொண்டல் கருமையை—
தண்டல் செய்து—தனது
கொண்டை முழுவதும்—
கொட்டிக் கொண்டவள்!

ஓர்—
ஊறல் போல்—
உதடுகளில்—ஊறும்
தேறல்; அவள்—
திருவாய்ச் சிரிப்பில்—
தெரியும்—அந்தத்
தேறலின் தூறல்!

மிடறு—
வலம்புரி;
நாபி—
நீர்ச்சுழி;
மாதனம்—
தெங்கு தந்த—
சீதனம்;
தொடை—
துவச தம்பத்தின்—
கொடை!

'உண்டா?
இல்லையா?'—எனும்
வினாவிற்கு—எவரும்
விடை கூறமுடியாத—
இடை;
'ஒரு கால்—
இருகால் கொண்டு—

இளங்கால்–
இங்ஙனம் உலவுதோ?' என்று–
நகரத்தார்–
நினைக்கும்படி–
நளினம் மலிந்த–
நடை!

அளகம் முதல்–
அடிக்கணைவரை–கவிஞர்க்கு
புளகம் விளைக்கும்–
பொற்புடை வனிதை; சந்தனக்
களபம் போலே–
கருங்குழல் மணக்க–
துளபம் போலே–
துளங்கும் புனிதை! (I–பக்:322-23)

பாரதக் கதை முழுதும் ஒளிவீசும் ஐந்து விளக்கு போன்றவளாதலால் இவள் அறிமுகம் இன்றியமையாதது. 'யாயின்றிப் பிறந்த யட்சிணி'. இவளை நினைந்தே பாரதி 'பாஞ்சாலிசபதம்' என்றே அற்புதமான தனிச் சிறுகாவியத்தையே தந்து தனிப்புகழ் பெற்றான்.

37. **உலூபி:** *இவள் ஒரு நாகலோகக் கன்னிகை; அர்ச்சுனன் கங்கையாற்றில் இறங்கி நீச்சலிடுகையில் அவனை நாகலோகத்திற்குக் கடத்திச் சென்றவள். இவளை அறிமுகம் செய்யும் வாலியார்:*

ஐராவத நாக குலத்தின்–
அரசன் 'கௌரவ்யன்!'
அரசனாயினும்–ஆரும்
அண்டுமளவு சௌலப்யன்!

அவனது–
அன்புமகள்–
அர்ச்சுனனை–

அள்ளிச் சென்ற–
அல்லி மடல்!

அந்த–
அந்தமிகு–

நாகமங்கையின்–
நாமம் 'உலூபி;
உலூபியோடு
உவமித்தால்–ஓர விழியால்
உடற்பசி ஊட்டும்–
உருப்பசி ஒரு குரூபி!

....
உலூபி–
ஊனுயிர் உருகி–
உன்மத்தம் பெருகி–
உணர்வுகள் மறுகி...

விஜயனை நெருங்கினாள்
விஜயன் நொறுங்கினான்!

அர்ச்சுன–
அவளோடு...
விடிய விடிய–கண்
விழித்தான்;

....
புலர்ந்தது காலை;
மலர்ந்தது சோலை;

....
பிறகு–
பிரியமுள்ள விஜயனை...

அவள்–
கங்கைக் கரையில்–
கொண்டுவந்து விட்டாள்;
பின்பு–அவளொரு
பிள்ளையைப் பெற்றாள்!

அவன் பெயர்—
"அரவான்'; (II—பக்:26-28) [14]

இவளது அறிமுகமும் காவிய வளர்ச்சிக்குப் பயன் இல்லை. 'ஆற்றுமணலை எண்ணினாலும் எண்ணலாம்; அர்ச்சுனனின் மனைவியரை எண்ணி முடியாது' என்ற பழமொழிப்படி 'உலூபி' அந்தக் கூட்டத்தில் ஒருத்தி என்று அறிகின்றோம்.

38. நாரதன்: *போகிற போக்கில் நாரதனை அறிமுகம் செய்கின்றார் வாலியார் இந்திரப் பிரஸ்தம் வந்த நாரதனை.*

நாரதன் முகத்தில்—
நாளும்—
மிகுதல் என்றிருப்பது—
நகுதல்!

இந்த—
நகைமுகன் தந்தை—அந்த
நான்முகன்!

அந்த—
அப்பன்காரன்—

இன்னார்க்கு—
இன்னது என்பதை—
இறுதி செய்து...

எல்லார் தலையிலும் எழுதி—
இட்டிருப்பான் நெட்டெழுத்து;

ஆனால்—
அவனது—
பிள்ளையாண்டான் நாக்கில்
பச்சை குத்தப்
பட்டிருப்பதோ எட்டெழுத்து!

14 இந்த 'அரவான்'தான் பாரதப் போருக்கு முன்னர் 'களபலி'க்கு ஒப்புக் கொண்டவன்.

நாராயண மந்திரம்—
நகர்வலம் வர உதவுவது—
நாரதன்—
நாரதம்!

தாள்மூட்டு வலிக்க—
திரிலோகமும் திரிந்து
கோள்மூட்டும்—ஒரு
கலகப்பிரியன்—நாளும்
ஓயாமல் சுற்றும்—இந்த
உலகப் பிரியன்!

இவன்—
கோள்மூட்டுவான் என்று—
கோள்களே பயப்படும்;
எனினும்—
இந்த...

'நாரதன் கூறும்கோள்—
நன்மைக்கான கால்கோள்!'
என்பது—
பின்புதான் புலப்படும்!

பாரதம் பாடிய—வியாச
பகவானுக்கு—பாகவதம்
சொன்ன
நாரதன்தான்...

குறுமுனி—தனது
கமண்டலத்தில்—
வேகமாய் வந்த—காவிரி
வெள்ளத்தை வாங்க—
அதையொரு
காகமாய் வந்த கணபதியால்—
கவிழ்க்கச் செய்தவன்;

சர்ப்பத்தில் படுத்தவன்—
கீர்த்தியை—லீலாவதி

கர்ப்பத்தில் படுத்தவன்—
காதுகளில் பெய்தவன்!

இவன்—
மீட்டப் பிறந்தது—
மகதியாழாகும்; இவன்—
மீட்டாது விடுத்தால்—அது
அகதியாழாகும்!

அந்தப்
பொற்புள்ளயாழ்—மிகவும்
கற்புள்ள யாழ்!

நாரதன் மீட்டினால்—அதில்
நல்லிசை பிறக்கும்;
வேறொருவன் மீட்டினால்
அந்த
வீணை உடனே இறக்கும்!

இசைகொண்ட இசை—
இவனது இசை; இவன்—
இசைக்கு இசையும் எண்திசை!

ஆம்!
நாரதகானம்—கேட்டால்
நெகிழ்ந்து போகும்—
நிலம், நீர், வானம்!

அடர்சடையில்—
ஆறுமுகம் காட்டும்—
அஞ்சுமுகத்தான் பிள்ளை—அந்த
ஆறுமுகம்—வள்ளியின்
அறிமுகம் பெற்றது—கோள்
கூறுமுகம் கொண்ட—இந்த
குணாளனால் தான்;
எனினும்—
இந்த—

குணாளன்—எவர்க்கும்
மணாளன் ஆகாதவன்; பலர்—
மணம் புரிய தூது போயும்—
தான்
மன்மதனால் வேகாதவன்! (II—பக்:14-15)

அற்புதமான அறிமுகம். நாரதனை மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டுவது. நெட்டெழுத்து—எட்டெழுத்து, கலகப் பிரியன்—உலகப் பிரியன், வேகமாய்—காகமாய், சர்ப்பத்தில்—கர்ப்பத்தில், மகதியாழ்—அகதியாழ், ஆறுமுகம்—ஆறுமுகம்—அறிமுகம்— (கோள்) கூறுமுகம் என்ற சொல்லிணைகள் வீசும் ஒளிக்கதிர்கள் நம் உள்ளொளியை மேலும் பிரகாசிக்கச் செய்கின்றன!

39. சித்திராங்கதை: *பாண்டியன் மகளை அறிமுகம் செய்வது இதோ!*

பூங்காவில்—
பூப்பறித்த—
பூ—
வெறும் பூவல்ல; பாண்டிய—
வேந்தன் பெற்றெடுத்த—
நறும்பூ!

அரும்பு என்றிருந்து—அது
அலர்ந்த பின்பும்—ஒரு
சுரும்பு தொடவொண்ணாத—
சுத்தப் பூ; சுந்தரப் பூ!

ஆம்!
அந்த—
ஊதாப்பூ—வண்டு
ஊதாப்பூ; அந்த—
மகிழம்பூ—தனித்து
மகிழும்பூ!

வெண்பூ என—நகும்
பெண் பூ எனினும்—
நாணாப்பூ—அந்த
நாண்பூ; அது—
அறுபது சதவிகிதம்—ஓர்
ஆண்பூ!

அந்த—
அபூர்வமான—
பூவின் பெயர்—
சித்திராங்கதை! வந்தொரு—
சுந்தர புருஷன்—வாசிக்காத
சித்திரக்கதை!

அவள்—
வண்ணமிகு—
வனிதை; இரு—
கால் முளைத்த—
கவிதை!

நிசியை ஆளும்—
நிலவரசி—பாண்டி—
நிலம் வந்தது போலிருக்கும்
இளவரசி! (II—பக்:30)

இத்துடன் விட்ட அறிமுகத்தைத் தொடர்ந்து பிறிதோர் இடத்தில்,

அச்சம்—
இன்னதென்றறியா வல்லி; அவள்—
இன்னொரு திருநாமம் அல்லி! (II—பக்:30)

என்று அறிமுகத்தை முற்று பெறச் செய்கின்றார் வாலியார்.

'அல்லி' என்றவுடன் 'அல்லிதர்பார்' என்ற பொதுமக்கள் பேச்சில் அடிபடும் தொடர் நினைவிற்கு வருகிறது. 'பெண்கள் ஆட்சி' என்பது இதன் பொருள். 'அல்லி' என்பது பெண்களைக் குறிக்க உருவகமாகின்றது. அல்லிதர்பாரைப்பற்றி 'ஏணி ஏற்றம்' என்ற ஒரு மக்கள் காவியத்தைப் படித்தது (1958) நினைவிற்கு வருகின்றது. கவிஞரின் கற்பனையை உள்ளுந்தோறும் உவட்டாமல் இனிப்பதை அறியலாம்.

'ஆற்றுமணலை எண்ண முடிந்தாலும் அர்ச்சுனனின் மனைவிமார்களை எண்ண முடியாது' என்பது மக்கள் வாக்கில் அடிபடும் பழமொழி. வனவாச காலத்தில் இவர்களையெல்லாம் அர்ச்சுனன் அல்லியின் பாதுகாப்பில் விட்டுச் சென்றதாகக் கவிஞரின் கற்பனை. அன்றியும் இந்த அல்லியின்மீது துரியோதனனுக்கு ஒரு கண் இருந்தது. வனவாச காலத்தில் அல்லியை மோப்பம் பிரித்துப் பார்க்கலாம் என்ற நப்பாசையுடன் துரியோதனன் பாண்டி நாட்டு மதுரைமாநகர் போந்து அல்லியின் அரண்மனையருகில் வட்டமிடுகின்றான். அல்லியின் இரகசியக் காப்பாளர்கள் துரியனைக் கைது செய்துவிடுகின்றனர்.

கைது செய்தவனை ஒரு மந்திர ஏணியில் விடுவித்துக் கொள்ள முடியாத நிலையில் வலுவாகப் பிணித்து விடுகின்றனர். அதில் அடியிற்கண்ட வாசகம் கொண்ட அறிக்கையையும் பொருத்தி விடுகின்றனர்.

"இதனால் சகல மகளிருக்கும் தெரிவிப்பதாவது: மகாராஜ ராஜஸ்ஸ்ரீ அத்தினபுரத்து அரசனான துரியோதன மகாராஜர் மகளிரிடம் தகாத முறையில் நடந்து கொண்டதனால், இதனைக் கண்ணுறும் மகளிர் யாவரும் வாயில் வெற்றிலை பாக்கு அதிகமாக போட்டுக் குதப்பி அவன் முகத்தில் உமிழ வேண்டியது. மதுரையில் இப்பணி

முடிவுற்றதும், இந்த மந்திர ஏணியை நோக்கி, "அயோத்திக்குப் போ' என்றால் அஃது அயோத்திக்குப் போய்விடும். அங்குள்ள மகளிர் யாவரும் இதே சடங்கைச் செய்து "காசி நகர் செல்க" என்று பணிக்க வேண்டியது. இம்மாதிரி பன்னிரண்டு ஆண்டுக்காலம் துரியோதனன் ஏணியில் கட்டுப்பட்டு மகளிர்களால் தண்டனையை அநுபவித்தான் என்பது ஏணி ஏற்றத்தின் கதைச் சுருக்கம்.

இன்று விகடன், குமுதம், கல்கி போன்ற வெளியீடுகள் மக்கள் மனத்தைக் கவர்ந்து வருவன போல் அக்காலத்தில் 'அல்லி அரசாணிமாலை', 'பவளக் கொடி மாலை', 'பத்தினி நல்ல தங்காள் கதை', 'ஏணி ஏற்றம்' போன்ற வெளியீடுகள் மக்கள் மனத்தைக் கவர்ந்து வந்தன. அவை மட்டமான தாளில் "பிழை மலிந்த சருக்கமாக" வெளி வந்துள்ளன. அவற்றைத் தக்கவர்களைக் கொண்டு திருத்தம் செய்து நல்லதாளில் அழகிய முறையில் அச்சிட்டு வெளியிட்டால் பழைய சரக்குகள் புதிய கோலத்துடன் உலவி இக்கால மக்கள் நடுவில் நல்ல செல்வாக்குடன் திகழும் என்பது அடியேனின் நம்பிக்கை.

இந்த அறிமுகத்தில் எத்தனை விதமான பூக்கள்! எல்லாம் படிப்போரின் முகத்தை மலர்விக்கும் பூக்கள்!

40. சுபத்திரை: இவளது அறிமுகமும் சுருக்கமாகவே அமைகின்றது.

> அந்த—
> ஆயிழை...
> தேவகிக்கும்—வசு
> தேவருக்கும்—தோன்றிய
> தென்றல்; இன்னும் அந்தத்
> தென்றலுக்கு ஆகவில்லை
> மன்றல்! (II—பக்:36)

இவளைப் பார்த்தன் பரந்தாமன் துணையால் மணந்து கொண்டான். இவர்களுக்குப் பிறந்த பிள்ளைதான் அபிமன்யு.

41. பலராமன்: *இவனும் போக்கிற போக்கில் வாலியாரால் அறிமுகம் ஆகிறான்!*

பலராமன்—
பிறப்பால்—
ஆயர் வம்சம்; ஆனால்—
ஆதிசேஷன் அம்சம்!

வெள்ளை—
வெள்ளத்தில்—இவன்

பாயலா யிருக்க—இவன்மேல்
படுத்திருந்த—

வள்ளல் பெருமான்—முன்னம்
வையம் வந்தபோது...

இவன்—
இலக்குவன் எனும் பெயரில்
இளவலாய் வந்தவன்;

இப்போது
இன்னொரு முறை—
இம்பர் இறங்கி...

கண்ணனாய் நிற்கும்
கரியமாலுக்கு—
அண்ணனாய் வந்தவன்!

நேற்று—இவன்
நம்பி தம்பி;
இன்று—இவன்
தம்பி நம்பி!

கலப்பை—
கையேந்தும்...

இவனது—
இருப்பை—
ஏற்றிருந்தன—இரு
கருப்பை!
ஒரு தாய் கருவில்—
ஒரு சில நாளிலிருந்து—பின்
மறுதாய் கருவிற்கு—
மாறியவன்; ஆம்!

தேவகி வயிற்றில்—சில
திங்கள்க ளிருந்து—பின்
ரோகிணி வயிற்றில்—ஒரு
ராத்திரியில் குடியேறியவன் ![15]

'அண்ணன்—
அஞ்சுதலை நாகத்தின்—
அச்சு; அவன்—
நெஞ்சு கொதித்தால்—
நாவால் உமிழ்வான்
நச்சு!' (II—பக்:58-59)

இவனும் இலக்குவனும் ஆதிசேட அம்சமாதலால் இருவர் மூக்கின் நுனியிலும் கோபம் குதிக்கத் தயாராக உள்ளது. இராமகாதையில் நம்பியாயிருந்து தம்பியின் சினத்தை அடக்கி, ஈண்டுத் தம்பியாயிருந்து நம்பி (மூத்தபிரானின்)யின் கோபத்தைத் தணிக்கின்றான்.

இந்த அறிமுகத்தில் வம்சம்—அம்சம், நம்பி தம்பி—தம்பி நம்பி என்ற இணைகள் நயமாக அமைந்து நனிசிறக்கின்றன.

---

15 இக்கால அறிவியல் கருத்து-அஃதாவது ஒரு பெண்ணின் கருப்பையில் வளர்ந்து வரும் கருவுற்ற முட்டை மற்றொரு பெண்ணின் கருப்பைக்கு மாற்றப்படுவதை-நினைவுகூரச் செய்கின்றது. 'இவ்வாசிரியரின் **'வாழையடி வாழை'** பக்.272 காண்க. மணிவாசகர் நூலகத்தில் (சென்னை-108) கிடைக்கும்.

42. ஜராசந்தன்: *தருமனுக்கு கண்ணன் இவனை அறிமுகம் செய்வதாக அமைந்துள்ளது பாண்டவர் பூமியில்.*

ஒரு மன்னவனுக்கே—தன்
இருமகள்களையும்—
காசி நகர்க் காவலன்—
கல்யாணம் செய்து கொடுத்தான்;

....

காசிராஜன் பெண்களை—
கல்யாணம் செய்து
கொண்டவன்...
மகத நாட்டு—
மன்னன்;

....

—அந்தப்
பேரரசன் திருநாமம்—
'பிரகத்ரதன்'

....

—அவன்
அப்பாவாக வில்லை;
அகமுடையாள் இருவரும்
அரும்பாத கொல்லை!

....

பிருகத்ரதன்—தேசத்தை
பிரஷ்டம் செய்துவிட்டு—
பெண்டாட்டிகளோடு—
பெருவனம் போனான்;
'சீச்சீ! சிரங்காகி
சீழ்க்கை பிடிப்பது—
வாழ்க்கை!' என்று—
வேதாந்தியானான்!

அரணியத்தில்—
அவனொரு—
முனிவரைக் காண நேர்ந்தது;

....
முனிவர் கொடுத்த–
மாங்கனியை–இரு
மனைவியர்க்கும்–
பாரபட்சமின்றி–சரி
பாதியாக்கித் தந்தான்!

மாதங்கள் சென்றபின்–
மனைவியர் ஈன்றனர்–

....
ஓர்–
உடலின்...
ஒரு, பாதியை–
ஒருத்தி பெற்றாள்;
மறுபாதியை–
மற்றொருத்தி பெற்றாள்!

....
அச்சமுற்ற–
அன்னையர் இருவரும்...
பிண்டங்களை–
பணிப்பெண்கள் மூலம்–தெருக்
குப்பைத் தொட்டியிலிட்டனர்;
கண்ணீர் விட்டனர்!

அர்த்த ராத்திரியில்–ஓர்
அரக்கியானவள்...
புசிப்பதற்காக–அந்தப்
பிண்டங்களைத் தூக்கினாள்;
உண்ண வசதியாய்–அவற்றை
ஒன்றாக ஆக்கினள்!
ஒன்றானதும்–அது
உயிர் பெற்றது; ஒரு–
குழந்தை யாகி–
குவாகுவாவெனக்
கூச்சல் இட்டது!

அரக்கி குழந்தையை–
அரண்மனையில்–
சேர்த்தாள்!

....
'ஜரை' என்பவளால்—ஒன்றாகச்
சேர்க்கப்பட்ட பிள்ளைக்கு...
'ஜராசந்தன்' என்று—நாமம்
சூட்டினான் அரசன்; காசிப்
புரவலன் பெற்ற—இரு
புதல்விகளின் புருஷன்!

இதுதான்—
இரு பாதி சதை—
சேர்ந்து பிள்ளையான—
ஜராசந்தன் கதை! (II—பக்:86-88)

இந்த ஜராசந்தனின் புதல்வியர் இருவரையும் மணந்தவன் கம்சன். கம்சனைக் கண்ணன் கொன்றபின் மனைவியர் இருவரும் பூவையும் பொட்டையும் இழந்தனர். அதிலிருந்து ஜராசந்தனுக்கு கண்ணன்மீது கடுப்பு!

43. சிசுபாலன்: *இவன் சேதி நாட்டு மன்னன் கண்ணனுக்கு அத்தைப் பிள்ளை.*[16] *இராசசூய யாகத்தில் அக்கிர பூசை வீடுமன் யோசனைப்படி கண்ணனுக்கு வழங்கப்பெற்றது. இதனை ஆட்சேபித்து இவன் குதித்தான். முக்கியமானவர்கள்மீது வசைபுராணம் பாடினான். கண்ணனையும் பலவாறு திட்டினான்.*

மரியாதையைப் பெற...
எவ்வகையில் இக்கண்ண—
ஏற்றவன்? பதினெட்டு—
முறைகள் ஜராசந்தனிடம்
முண்டா தட்டித் தோற்றவன்!

16 இவன் பிறந்தபோது மூன்று கண்களும் நான்கு கைகளும் இருந்தன. இவற்றைக் கண்டு தாய் கலங்கினாள். அசரீரி எவனால் இவன் சாகப் போகின்றானோ அவன் மடியில் இக்குழந்தையை வைக்கில் இவனுக்குள்ள அதிகக் கண்ணும் அதிகக் கைகளும் மறையும் என்றது. அங்ஙனமே கண்ணன் மடியிலிருந்தபோது அக்குழந்தையின் கண்ணும் கைகளும் மறையக் கண்டு தாய் கண்ணனை நோக்கி 'என் மகன் செய்யும் நூறு குற்றங்களைப் பொறுத்தல் வேண்டும்' என்ற வரம் பெற்றனள்.

தீரன் அல்ல; சூராதி—
சூரன் அல்ல!
சோரன்;
சோப்பளாங்கி;
சோடை;
சோற்றுக்கு வீங்கி!

வஞ்சனை புரிந்து—தாய்
வழியில் வந்த மாமன்—
கஞ்சனைக் கொன்றவன்;
தண்ணீர்ப் பாம்பின்—
தலைமேல் ஏறி—
தைரியமாய் நின்றவன்! (II—பக்:99)

இங்ஙனம் தருமனை நோக்கி பொதுவாக வசைபாடியவன்,

கண்ண—
பிரானையும்—ஒருபிடி
பிடித்தான்!

'ஏ கிருஷ்ணனே! உனக்கிது
ஏற்குமா! செப்பு! அட—
செப்புவார் செப்பினாலும்—ஒரு
செம்பொன்னாகுமா செப்பு?
முறையில்லாத—
முறையில்—உனக்கு
முதல் மரியாதைக்குரிய—
முடியைச் சூட்டி...

பாண்டவர்—உன்னைப்
பரிகசிப்பது—உனக்குப்
புரியவில்லையா?

....
கை தவறிப்போய்—
கீழே சிந்திய அவியை—யாரும்
கவனிக்காவிடில்—ஒரு
குக்கல் நக்கல் போல்...

'அகப்பட்டவரை—
ஆதாயம்!'—எனச்
சுகப்பட்டவரை—ஈனச்
சாதியென்பர்; அவர்களே—
சிந்தியதைத் தின்பர்! அதுபோல்—
தரையில் சிந்தி—அதை நீ
தின்பாயா? சிந்தி!'

'இடையர் கோவே!
இது...
சுயநலம் கருதி—தருமன்
செய்கின்ற சூது; இதைப்—
புரிந்துகொண்டு—ஓடிப்போய்ப்
புல்லாங்குழல் ஊது!'

வாய் வலித்து—
வசை புராணத்தை...
சிசுபாலன் முடித்தான்; (II—பக்:99-101)
....

இங்ஙனம் பேசியவனை வாலியார் கிண்டலாக,

சிசுவாகி பாலனாகி—
சீரிளமை தாண்டிய பின்னும்....
சிசு; பாலன் மாதிரியே—
விளைவை
சிறிதும் சிந்தியாமல்—
சிசுபாலன் பேசினான். (II—பக்:98)

....
சிசுபாலன்—
செய்திருக்கும்—
குற்றங்களை விரல்விட்டு—
கண்ணன் எண்ணினான்;

'நூறு என்றறிந்து—அவனை
நூறுவதென்று—அய்யன்
முகுந்தன்—மனத்துள்
முடிவு பண்ணினான்!

சிசுபாலன் தாயிடம்—ஒரு
சந்தர்ப்பத்தில்....
'தாயே! உன்—
தனயன் புரிகின்ற—

பிழைகள் நூறுவரை—
பொறுப்பேன்; அவை—
ஒரு நூறு ஆனதும்—அவனை
ஒறுப்பேன்!' என்று...

வாக்குக் கொடுத்திருந்தான்—
வள்ளல்பிரான் கண்ணன்;
பிழை—
சதம் போட்டுவிட்டான்—
இன்று
சேதி நாட்டு மன்னன்!

எனவே,
எரிசினம்கொண்டு....

சக்கரப் படையை
சீதரன் ஏவினான்;
சேதி மன்னனின்—
சிரத்தைச் சீவினான்! (II—பக்:101-102)

இந்தச் சிசுபாலனின் அறிமுகம் மிகவும் இன்றியமை யாதது. இவன் ஆதி வரலாறு தெரிந்துகொள்ள. விட்டுசித்தன் என்ற பெரியாழ்வார் இவனை,

பலபல நாழும் சொல்லிப்
பழித்தசிசு பாலன் தன்னை [17]

17 பெரியாழ். திரு. 4.3:5

என்று குறிப்பிடுவர். வாலியாரும் பிரிதோர் இடத்தில் ஜயன், விஜயன் என்ற துவாரபாலகர்கள் துருவாசரிடம் பெற்ற சாபங்களைக் கூறி அதற்கு விமோசனம் சிசுபாலன், கம்சனுடன் இவர்கள் இறப்புடன் முடிவு பெறுவதாக விளக்குவார். (II—பக்:103-04)

44. துச்சாதனன்: இவனும் போகிற போக்கில் அறிமுகம் ஆகிறான். சூதாட்டத்தில் ஐவர் தோற்றதும் ஐவரின் மனைவி பாஞ்சாலியை அவைக்கு இட்டுவர துச்சாதனனை அனுப்பும்போது அறிமுகம் ஆகின்றான்.

அவன்—
ஆறறிவு அமைந்த—
அஞ்சறிவு; அந்த—
அஞ்சறிவும் நஞ்சறிவு!

அவன்—
பிரஜாபதி உடைய—
பேடு; அவனுக்குக்—
கேடயம்; கத்தி—ஒரு
கேடு!

அவன்—
மாடுதின்னும்—
மாடு;
பன்றி தின்னும்—
பன்றி; அவனுக்குக்
கைகால் ஓடாது—
கள்; கசாப்பு—
இவை இரண்டும்
இன்றி!
நல்ல—
நூல்நடை ஓராத—அந்தக்
கால்நடை—காந்தாரியெனும்

பூக்கடை பெற்றெடுத்த
சாக்கடை!

துச்சர்க்கு துச்சன்; அவன்—
துச்சாதனன் துச்சன்; அவன்—
துஷ்கிருத்தியம் புரிவதில்—
துரியோதனனுக்கும் அச்சன்.

அயோக்கிய சிகாமணியான—
அண்ணனையே நல்லவனாக்கும்
அந்த அற்பப் பதர். (II—பக்:145)

இந்த அறிமுகத்தில் அமைந்துள்ள ஆறறிவு—அஞ்சறிவு—நஞ்சறிவு; மாடு—மாடு; பன்றி—பன்றி; நூல்நடை—கால்நடை; பூக்கடை—சாக்கடை என்ற சொல்லிணைகள் அற்புதமாக அமைந்து துரியன் தம்பி விரியனை விரிவாக ஒளிவிட்டுக் காட்டுகின்றன.

இவ்விடத்தில் பாரதியின் பாஞ்சாலி சபதத்திலுள்ள இவனைப்பற்றிய அறிமுகத்தையும் நினைக்கச் செய்கிறது.

....

இவ்வுரை கேட்டதுச் சாதனன்—அண்ணன்
இச்சையை மெச்சி எழுந்தனன்—இவன்
செவ்வி சிறிது புகலுவோம்;—இவன்
தீமையில் அண்ணனை வென்றவன்; கல்வி
எள்ளளவேனும் இல்லாதவன்; கள்ளும்
ஈரக்கறியும் விரும்புவோன்;—பிற
தெவ்வர் இவன்றனை அஞ்சுவார்—தன்னைச்
சேர்ந்தவர் பேயென் றொதுங்குவார் (264)

புத்தி விவேகம் இல்லாதவன்;—புலி
போல உடல்வலி கொண்டவன்;—கரை
தத்தி வழியும் செருக்கினால்—கள்ளின்
சார்பின்றியேவெறி சான்றவன்; அவ

சக்தி வழிபற்றி நின்றவன்;—சிவ
சக்தி நெறிஉண ராதவன்—இன்பம்
நத்தி மறங்கள் இழைப்பவன்;—என்றும்
தலைவர் கேண்மை விலக்கினோன்;(265)

அண்ணன் ஒருவனை யன்றியே—புவி
அத்தனைக் கும்தலை யாயினோம்—என்றும்
எண்ணந் தனதிடைக் கொண்டவன்;—அண்ணன்
ஏதுசொன்னாலும் மறுத்திடான்;—அருட்
கண்ணழி வெய்திய பாதகன்;—'அந்தக்
காரிகை தன்னை அழைத்துவா'—என்றவ்
அண்ணன் உரைத்திடல் கேட்டனன்;—நல்ல
தாம்என்று உருகி எழுந்தனன் (266) [18]

இவற்றை ஓரளவு அடியொட்டியே வாலியாரின் பாடல் அமைந்திருப்பதாகக் கருதத் தோன்றுகிறது.

45. கீசகன்: *இவன் அறிமுகம் பேச்சுவாக்கில் நடைபெறச் செய்கின்றார் வாலியார். மச்ச தேசத்தின் தலைநகரம் விராடபுரி.*

ராஜன்!
ராணி!
ராஜகுமாரன்!
ராஜகுமாரி!

இந்த நால்வரையும்—தன்
இஷ்டம்போல்...

ஆட்டிப்படைப்பவன்—
அரசமா தேவியின் சகோதரன்!
சதா கள்ளருந்தி—வெள்ளாவிச்
சால்போல் வயிறுடைய
சகோதரன்!

18 பாரதி-பாஞ்சாலி சபதம்- ஐந்தாவது சபதச் சருக்கம் காண்க.

'கீசகன்!' என்னும்—அக்
கீழ்மகன்—இருகால்
விலங்கென ஊர்சொல—
வாழ்மகன்; தான்எனும்
வெறியினில் நெறிகெட—
வீழ்மகன்; நாணின்றி—
அருவருப்பான செயல்களில்—
ஆழ்மகன்!

அக்காள் புருஷன்—
அறுபதைத் தாண்டி
முக்கால் கிழமாய்—
முற்றிவிட்டதால்...

முற்றிய புள்ளிக்கு—ஒரு
முற்றுப்புள்ளி வைத்தான்—
மைத்துனன் கீசகன்;
மாய்மால வாசகன்!

அவன்—
ஆற்றும் பணி....

தானைத் தலைவன் எனினும்
'தானே தலைவன்'—என
சேனைக்கும்—ஊர்
சனங்களுக்கும்—

தெரியச் செய்தான்;
புரியச் செய்தான்; மன்னன்—
செல்வாக்கை—மெல்ல மெல்ல
சரியச் செய்தான்! (II—பக்:255)

வாசகர்கட்கு இது போதும். சைரந்தரியான பாஞ்சாலி மீது மோகம் கொண்டான். 'வல்லபன்' என்ற வீமனால் மடிந்தான்.

46. விராட மன்னன்: *இவன் பெயர் குறிப்பிடப் பெறவில்லை; மனைவி பெயர் 'சுதேட்டினை'. இவள் மன்னனை மணந்த "மஞ்சள் நதி". போகிற போக்கில் அறிமுகமாகிறான். துரியோதனன் படை பசுக்கூட்டத்தைக் கடந்தபோது அரசன் அறிமுகமாகின்றான்.*

....
வகையறியாது—
வயதான வேந்தன்—
வெகுவாய் விசனப்பட்டான்
....
ஒரு காலத்தில்—
ஒருவனாய் நின்று—
வாளைச் சுழற்றினான்! சுழற்றிய—
வாள் கொண்டு
வன்கணாளர் தம்—
வாழ்வைக் கழற்றினான்!

நெருநல்—
நேர்ந்த சமர்களில்—தனது
செருநர்—
செயலிழந்து போயினும்....

முழைநீங்கிய சீயமாய்—
மூரி முரித்துக்கிளம்பி—
விராட ராஜன்—தனது
விரல்களை....

கட்கத்தில் வைத்தால்—
கதிகலங்கி—தன் வாளைக்
கட்கத்தால் வைத்துக்—
கைகுவிப்பான் பகை;
பிறகு என்ன? விராடன்—
பாதங்களில் கிடக்கும்—
பரிதாபத்திற்குரிய—
பகையின் சிகை!

அத்தகு—
ஆளரி; இகலின்—
குலை நடுங்க கருச்சிக்கும்—
கோளரி....

முதுமையால்—இன்று
மெய்யொடிந்து போனான்; (II—பக்:271)

துங்கன் எனத்
துலங்கிய மன்னவன் துயரை—
‘கங்கன்’ எனும் தருமன்—
கண்டு கொண்டான்
ஆறுதல் வார்த்தைகளை—
அரசுக்குச் சொல்லி—
அவனுக்கு நேர்ந்த
அவலத்தை இவன் உண்டான்!

....
அமர்க் களத்தில்—
அரசே நீ இறங்கு;
நடுங்குது பார்!—அந்த
நீசனின் குறங்கு;

வயோதிகம்—
வந்தபோதும்—
விராடராஜன்—ஒரு
வீரன்தான் எனப் பிறங்கு!

ஒருவனின்—
உரத்தைத் தீர்மானிப்பது—
வயது அல்ல;
மனது!
உரம் எனும்—
உரம் போட்டால்—
கிடுகிடென வளரும்—வெற்றிக்
கருது எனக் கருது! (II—பக்:271-273)

பாண்டவர் நால்வரும் பக்கத் துணையாய் வர விராடன் விரைகிறான் தேரில் போரிட. சுதர்மனைச் சந்திக்கின்றான். அவனால் அடிபட்டு அடிமையாகின்றான். விரைவில் சுதர்மனைக் கொன்று மன்னனை விடுவிக்கின்றான் வீமன். கதையோட்டத்திற்கு இவன் அறிமுகம் தேவைப்படுகின்றது.

47. உத்தரை: கதைக்கு மிகவும் இன்றியமையாத பாத்திரம். ஆகவே இவளைப் பற்றியும் அறிமுகம் ஆக வேண்டியதாகின்றது. விராட மன்னனின் புத்திரி. இவள் அறிமுகம் இதோ:

அரசனுக்கும்—
அரசிக்கும்.....

....
உத்தரை என்றொரு
புத்திரி! (II—பக்:255)

....
சுதேட்டினையின்—
சுதை....

உத்தரை! உத்தரைக்கோர்—
உவமையைக் கண்டதில்லை—
இத்தரை!

சித்தரை; சீவன்—
முத்தரை; சித்தம் சிதறிய—
பித்தரைப் போல்—உன்
மத்தரைப் போல்...

ஆக்கவல்லார்—அவ்
அரம்பை; மேனகை!
அவர்களும்
வாய்க்கவில்லை—உத்தரையின்
வாய் வழங்கும் பூநகை!

அந்த—
அரசிளங்குமரி...

ஒடிசல் உடல் கொண்டு—
உலாவரும்—அக்கார
அடிசில்; தக்கதொரு—

குரிசில் கையில்—
கொடுக்க—பிரமன் படைத்த
பரிசில்!

வயது பதினாறை—இன்னும்
விழுங்காதவள்; எவன்மீதும்
மோகமாகி—மனக்கூர்மை
மழுங்காதவள்; ஆதலால்—
பொழுது சாய—விரகத்தில்
புழுங்காதவள்; பிரேமையெனும்—
அவஸ்தைக்கு ஆற்றாது—
அழுங்காதவள்! (II—பக்:255-56)

'பிரகன்னளை' எனும் பேடாயிருக்கும் பார்த்தன் இவளுக்கு ஆசானாகிவிட்டதால் மாணவியைத் தனது மகள் என எண்ணினான். கீசகனும் தன் உடன் பிறந்தாள் உந்தியில் வந்த உத்தரையை முறைப்பெண் என்னும் முறையைக் கொண்டு முறைக்கவில்லை. பின்னாளில் உத்தரைக்கும் அர்ச்சுனன் மகள் அபிமன்யுவுக்கும் திருமணம் நடைபெறுகின்றது.

48. உத்தரன்: *இவன் அறிமுகமும் நடைபெறுகின்றது. கதை ஓட்டத்திற்கு இவனும் தேவைப்படுகின்றான்.*

'உத்தரன்' என்றொரு
புத்திரன்; (II—பக்:255)

வடபுலத்தில் துரியோதனன் பசுக்கூட்டத்தைக்கவர வந்தவன்

நிரையிருந்த சேரியை—
நிர்த்தூளி யாக்கி—ஊர்க்குள்
நந்தரை ஓட்டினான்!

அவர்கள்—
அனாதைகளாக—
அலமந்து—
அரண்மனைக்கு ஓடிவந்து—

வேந்தின்—
வாரிசான—
உத்தரனிடம்
ஓலமிட்டனர்; (II—பக். 274)

....
பிருகன்னளையை—தேர்ப்
பாகனாகக் கொண்டு—
புறப்பட்டான்—
போர்க்களம் நோக்கி!

....
உத்தரன்—தேரில்
உட்கார்ந்தபடியே—
கவுரவர் படையை—
கண்ணுற்றான்;

....
நெஞ்சிலிருந்த வீரத்தை—
நழுவ விட்டான்.

....
ஊரை நோக்கி—
ஓட்டம் பிடித்தான்! (II—பக். 276)

....
பிருகன்னளை—விராடன்
பிள்ளையை விரட்ட—அவன்
ஒருவழியாய்ப் பிடிபட்டான். (II—பக். 277)

....
அகப்பட்ட உத்தரன்—
அர்ச்சுனனிடம்—'நான்

சுகப்பட்ட ஜன்மம்; சண்டை—
சுத்தமாய் வராது!' என்றான்;
அன்றாடம்—நான்
அம்மா பக்கத்தில்—
படுத்து வளர்ந்த—
பிள்ளை; எனக்கு—
குருதி; குத்தீட்டி;
குத்துவெட்டு என்றால்—
கொஞ்சநஞ்சமல்ல பயம்!
கொள்ளை!
வாளை எடு! நீ—
வீசு! என்னை—
ஆளைவிடு!' என்று—
அழுது வடிந்து நின்றான்! (II—பக். 276-78)

இதோபதேசத்திற்குப் பிறகு, உத்தரன் தேர் ஓட்ட அர்ச்சுனன் வன்னி மரத்திலிருந்த காண்டீபத்தை எடுத்துப் போரிலிறங்கி கவுரவர் சேனையைப் புறமிதுகிட்டு ஓடச் செய்தான். இங்கு உத்தரன் நகைச்சுவைக் காவிய மாந்தனாகக் காட்சி தருகின்றான். போர் இறுக்கத்தைக் குறைக்கின்றான்.

49. அபிமன்யு: இவன் சுபத்திரையின் மூலம் பார்த்தனுக்கு மகனாகப் பிறந்தவன். தன்னை உத்தரை மணக்குமாறு வேண்டுகோள் விடுத்த விராட மன்னனிடம் பார்த்தன்,

'அரசே! உன்—
திருமகள்—எனது
மருமகள் ஆகட்டும்;

....
என்—
காதலன் அபிமன்யுவின்—

கைத்தலம் பற்றி—உன்
புத்திரி உத்தரை—தன்
புகுந்த வீடு போகட்டும்! (II—பக். 290)

என்கின்றான். இவனைப்பற்றி அறிமுகம் செய்யும் போக்கில் கவிஞர் வாலி,

....
அர்ச்சுனன் பிள்ளை—
அபிமன்யு...

வாளிப்புக்கு—ஒரு
வியாக்கியானம்; எந்த—
வில்லிக்கு மில்லை—அவனை
விஞ்சிய ஞானம்; பற்பல—
வித்தகர் தந்தது—அவனது
வித்தியாதானம்; இந்த—
வயதிலேயே—அவன் புகழ்
விரிந்த வானம்!

ஒரு போதும்—
வைத்த குறி...

அகலாது அவன் வாளி; அவன்—
அத்துணை அறிவாளி; அவன்—
வெஞ்சமர்க் கேணியில்—வெற்றி
வெள்ளத்தை அள்ளும் வாளி! (II—பக். 290,292)

இந்த அறிமுகம் பாரதப் பெரும்போரில் அவன் ஆற்றிய பெரும்பங்கை விளக்கப் போதுமானது. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? என்பதை மெய்ப்பிப்பது!

50. பார்த்தசாரதி: *இவனுக்கு அறிமுகமா வேண்டும்? உபசாரமாக ஈண்டுச் செய்யப் பெறுகின்றது! கவிஞர் வாலி வாக்காக, இங்ஙனம் அறிமுகம் ஆகின்றார்.*

கண்ணன் என்னும்—
கருங் கடவுளை;

ஆரணங்களுக்கு—
அகப்படாது—ஆயர்பாடி
ஆரணங்களுக்கு—
அகப்பட்ட அருங்கடவுளை;

தயிர் கடையும் இடைச்சியர்—
உயிர் கடையும் இருடிகேசனை;

இருக்கு முதலாக—
இருக்கும் ஈரிரு மறைகளோதி—
உருக்கு மனத்தையும்—
உருக்கும் இருடிகள் நேசனை;
கரையும் போர்க்கு—கைகொடுக்க
விரையும் விரதனை;

இரை இருந்தும்—ஆ
நிரை...

வரையில் மேயாது—ஒரு
வரையில் மயங்கி நிற்க—வாய்
வரையில் இசைக் கோலம்—
அந்தி
வரையில் வரையும் வரதனை;
மாலை நிறங்கொண்ட—
மாலை;
வனசம் என்று—
வண்டுகள் வந்து—
மொய்க்கும் காலை—
மண்ணிலவன்
வைக்கும் காலை... (II—பக். 290-91)

இந்த அறிமுகம் கண்ணன் பாண்டவர் கரந்துறை வனவாசம் நிறைவு பெற்று விராடநகரில் நடைபெறும் அபிமன்யு—உத்தரை திருமணத்திற்கு வரும்போது நடைபெறுகின்றது. பிறிதோர் இடத்தில்,

அவரைக்கு நிகராய்—
அளவில் சிறிதா யிருக்கும்—
துவரைக்குத்தானே—அவன்
தலைவனென்று...

கண்ணனை—அற்பமாய்க்
கருதமுடியாது; அந்த—
அய்யன் திருமுன்—
ஆணவத்தை விட்டு—
வையம் தன்னில்—
வணங்காத முடி யாது? (II—பக். 299)

என்று குறிப்பிடுவார் வாலியார் பாரதப் பெரும்போருக்குத் துணைக்கு வருமாறு வேண்ட வரும்போது பார்த்தன் வாக்கில் வருவது இதோ:

'கேசவா! உன்—
கீர்த்தியை நான்—
பேசவா?

உன்னிலும்—
உறுதுணை—
உண்டோ உயிர்க்கு?
உரம் நீ
ஊருணி நீ; என—
வாழ்க்கைச் செம் பயிர்க்கு!

நாளும்—என்
நாசியின்...

சூரிய கலையில் வாங்கி—
சந்திர கலையில் விட்டும்;
சந்திர கலையில் வாங்கி
சூரிய கலையில் விட்டும்...

நான் பண்ணும்—
நல்ல பிராணாயாமத்திற்கு—

நீயே மூச்சு; நீயில்லையேல்—
நின்றுபோகும் மூச்சின் நீச்சு!

எளியேன்—நின்கரம்
ஏந்திடும் புரிசங்கு; நீ யெனை—
ஏந்தாவிடில்—
என் வாழ்வு திரிசங்கு!

தமியேன்—நின்கரம்
தாங்கிடும் சுதர்சனம்; நீ யெனை
தாங்காவிடில்—நான்
கரைசேர்தல் நிதர்சனம்!

நாயகனே!
நானும் நீயும்...

இருஅல்ல—எனும்படி
இரு; இருப்பின்—நான்
செயிக்கக்கூடும்—நூறு
செரு; சீதரா! நீயல்லால்—
ஏது நான் தழைக்க—வேறு
எரு? என்றும் நீ—நான்
கும்பிடும் தாய்; தந்தை;
குரு!' (II—பக். 303)

பிறிதோர் இடத்தில் குறிப்பிடுவது அற்புதம்:

இங்ஙனம் வாலியார் கண்ணனைப் பல இடங்களில் குறிப்பிடும்போது தம்மை மறந்து கண்ணனைப் போற்றுவர். அப்போதெல்லாம் அரங்க நகரில் பிறந்த வாலியாரின் அரங்கநகர் அப்பன் நினைவு அவர்தம் வாக்கில் வெளிப்படுவதைக் கண்டு மகிழலாம்.

உயிர் வரிசையிலும் நில்லாது—
மெய் வரிசையிலும் நில்லாது—
தனித்து நிற்கும்—
தமிழெழுத்து ஆயுதம்;

அருள்மிகு கண்ணன்—
அத்தகு ஆயுதம்!
அவசியமா என்ன—
ஆயுதத்திற்கு ஆயுதம்? (II—பக். 304)

51. **சல்லியன்:** *இவன் மத்திம தேசத்து மன்னவன். வாலியார் இவனைப்பற்றிச் செய்யும் அறிமுகம் இதோ:*

பாண்டவராகிய—
பஞ்சவரில்...

நான்காவதும் ஐந்தாவது மான—
நகுலன்; சகாதேவன்...

மாத்திரியன்—
மகன்கள்; மாசறு—
குணத்தில்—மற்றிரு
குகன்கள்!

அவர்களின்—
அம்மான்...

அரசன் சல்லியன்; அவன்—
அப்பழுக்கற்ற துல்லியன்;
வெல்லற்கரிய—
வில்லியன்; அறம்
பிழைப்போன்—அவன் கணக்கில்
புல்லியன்! (II—பக். 305)

உவப்பிலாவியத்திற்குரிய சேனையுடன் வந்து கொண்டிருந்த சல்லியனை வழிமறிக்க ஏற்பாடு செய்து, விருந்து உண்ணச் செய்து, 'விரியனை துவசத்தில் வைத்திருக்கும் விரியன்—துரியன்' தன் பக்கம் இழுத்துக் கொண்டான். சல்லியனும் காமராசர் பாணியில்,

'அப்படியே—
ஆகட்டும்!'
என்று—
இறுகிய மனத்தோடு...

வழங்கினான் சல்லியன்—
வாக்குத் தத்தம்;
சூரியனுக்கு—நன்கு
தெரியும்...

வாக்குத் தத்தம் செய்தவனின்
வாக்குச் சுத்தம்! (II—பக். 308)

இவன் அறிமுகம் போதும்—கதைத் தொடர்பைப் பார்த்துத் தெளிந்து கொள்வதற்கு.

52. **விசுவரூபன்:** *இவன் வரலாற்றைச் சல்லியன் பாண்டவர்க்குக் கூறுகின்றான் சல்லியன். எதற்கு?*

செய்வினை—
ஜென்மக்கடன்;
காலாவதியாகும்—
கட்டிய உடன்! (II—பக்:312)

என்ற பேருண்மையை உணர்த்துவதற்கு ஆணவத்தில் இந்திரன் தன் குலகுரு பிரகஸ்பதியிடம் மரியாதைக் குறைவாய் நடந்துகொள்ள அவர் தலைமறைவானார். ஆணவம் அடங்கிய அமரேசன் ஆசாரியரைத் தேடியும்,

அரசகுரு—
அமரேசனின்—
கண்ணுக்கு அகப்படாமல்—
கண்ணாமூச்சி ஆடினான்! (II—பக்:313)

நான்முகன் யோசனைப்படி 'விசுவரூபனைப்' பிரகஸ்பதியாகக் கொண்டனர்:

விசுவபன்—ஒரு
வேதவித்து;
ஆசைகள் அற்றிருந்தான்—
அஞ்சவித்து;
சரிந்ததில்லை—சித்தம்
சஞ்சலித்து;
அண்டங்கள் நின்றன—
அவனை
அஞ்சலித்து!
அறங்களுக்கு—
அமுதூட்டி வளர்க்கும்—
அனையவன்; அக்கினி—
அனையவன்!

ஆம்!
அவனை—
ஆக்கமுடியாது—
அழுக்கு; அவனது—
வைதிகம் என்னும்—
வழியினில் என்றும்—
வந்தது கிடையாது—
வழுக்கு; அவனை—
இழுக்கும் முயற்சியி லிறங்கி—
இழுக்கும் பெற்றது இழுக்கு;

ஓரிடத்தும்—
ஒரு சிறிதும்—
ஒழுக்கு இல்லாதது—அவனது
ஒழுக்கு;
முளைத்து—
மூன்றிலை விட்டவுடனேயே—
மூவாசைக்குப்
போட்டுவிட்டான்
முழுக்கு!

பொன்னுலகு–ஒரு
போக நாடு; அங்கு–
விசுவரூபன்
விளாம்பழத்து ஒடு!

அவன் தனது
ஆன்ம பலத்தால்–
அசுரரிடமிருந்து–
அமரரைக் காத்தான்;
உலுக்கிய நாவலாய்–
உதிர்ந்து கிடந்த–
உம்பர்களைப் பொறுக்கி–ஓர்
உறவு நூலில் கோத்தான்!

விசுவரூபனுக்கும்–
வாசவனுக்கும்...
இடையில்–மலர்ந்து
இருந்தது மெய்யுறவு;
இருப்பினும்–எழுந்தது
இந்திரனுக்குள் ஐயுறவு! (II–பக். 313-14)

விசுவரூபனின் தந்தை தேவர் குலம்; அன்னை அசுரர் குலம். அன்னை வழிஉறவால் அசுரர் வழி அவன் அன்பு சாயக்கூடும் என்று எண்ணினான்.

தேரான் தெளிவும் தெளிந்தான்பின் ஐயுறவும்
தீரா இடும்பை தரும் (குறள்–510)

என்ற வள்ளுவர் வாக்கிற்கு எடுத்துக்காட்டானான். விசுவரூபனின் தவவலிமையைக் கெடுக்க, பல்வேறு தந்திர உத்திகளைக் கையாண்டான்.

அமரேசன்–
அவன்பால்–
அனுப்பினான்–
அழகிய அப்சரசுகளை!

அகத்தில்—
அருவருப்பான—
அழுக்காடு மாதர்—நூறு
விழுக்காடு முயன்றும்...
விசுவரூபனை—
விழுக்காட்ட முடியவில்லை;

சேலைச் சுவடிகளில்—சாகசச்
செய்யுள் படிக்காமல்—அவன்
ஓலைச் சுவடிகளில்—உள்ளம்
ஒட்டிக் கிடந்தான் அட்டையாய்;
உந்திக் கமலம் காட்டி—
உசுப்பும் வேசையர்முன்—
புந்திக்கமலம் சிதறிப்
போகர் திருந்தான் கட்டையாய்! (II—பக். 314-15)

அளவற்ற அவமானம் அடைந்த அமரேசன் விசுவ ரூபனை வச்சிராயுதத்தால் கொன்றான். இக்கொலை யால் 'பிரம்மஹத்தி தோஷம்' அவனைப் பிடித்துக் கொண்டது; புகழ் ஏணி சரிந்து வாசவன் வெளிச்சமிழந்து போனான்.

சசி—
தேவியைத் தவிக்கவிட்டு—
தலைமறைவாக ஆனான்! (II—பக். 315)

அமரர்களும் முனிவர்களும் வேந்தன் இல்லாமல் தவித்தனர்; 'தன்வினை தன்னைச் சுடும்' என்பதற்குச் சல்லியன் தருமன் முன் வைத்த எடுத்துக்காட்டு. கதை ஓட்டத்தை அறிந்துகொள்ள இந்த அறிமுகம் போது மானது!

53. நகுஷன்: *இவனது அறிமுகமும் வினைப்பயனை விளக்க சல்லியன் காட்டிய மற்றோர் எடுத்துக்காட்டு.*

அவன்—
அம்புலி வமிசத்து—
அரசருள் ஒருவன்—பெயர்—
'ஆயு!'

தூய்மையில்—அவன்
தேயு; அவன் புகழை
வாய் வலிக்கப் பாடும்—
வாயு!

அந்த—
ஆயுவின் பிள்ளைதான்...

நகுஷன்!
நல்ல மனுஷன்!
மண்மிசை தோன்றிய—
மகாபுருஷன்!

அவனது—
ஆட்சியில்...
தவமும்—
தானமும்—
வேள்வியும்—
விரதமும்—

பல்கிப் பெருகின;
பாவங்கள் கருகின;

....
மன்னவன் வாயே—நான்கு
மறை பெய்தது; ஆதலால்—
மாதம் மழை—மூன்று
பெய்தது!

எனவேதான்—
என் கண்ணன்

தேவராஜனாய்—நகுஷனைத்
தேர்ந்தான்; அவனை—
ஓதற்கரிய ஒழுக்க சீலனாய்—
ஓர்ந்தான்!

நரசிரேஷ்டன் என்றிருந்த
நகுஷன்...
இந்திரனாய்—சொர்ண
இருக்கையில் அமர்ந்ததும்—
சிந்தை திரிந்தான்; சுரர்களின்—
சிந்தையிலிருந்து சரிந்தான்!

....
பதவிச் செருக்கும்
பாவைக் கிறுக்கும்—
உதவிக் கரங்களாய்—
உடனிருக்க...

அடக்கம் செய்தான்—புலன்
அடக்கத்தை; உடனடியாய்த்
தொடக்கம் செய்தான்—மதன்
தொழிலகத்தை!

....
நீரில் விளையாத
நிஜங்களோடு—ஒருநாள்
நீர்நிலையில்—
நீராடுகையில்...

இந்திரன் மனைவி—
இந்திராணியை—
நகுஷன்—
நேர் காண நேர்ந்தது; உடனே—
அவன் உள்ளம்—ஓடிப்போய்
அவள்மேல் ஊர்ந்தது! (II—பக்:316-17)

சசிதேவி அவனிடமிருந்து தப்பிக்க ஒரு சூழ்ச்சி செய்தாள். அந்தச் சூழ்ச்சியின்படி,

சப்த ரிஷிகள்—
சிவிகையை சுமக்க—

புறப்பட்டான் நகுஷன்—
புத்திகெட்டு; நடுவில்—
சோர்ந்தனர் ரிஷிகள்—
சத்தி கெட்டு!

காமம்—நகுஷனின்
குடுமிக்கு ஏறியதால்...

'சர்ப்ப! சர்ப்ப' என்று—
சத்தமிட்டான்; பாவம்!
தன் வாயால்—
தானே கெட்டான்!

'வேகம் போ! வேகம் போ!'
என—
விரட்டுவதைக் குறிக்கும்—
'சர்ப்ப! சர்ப்ப' எனும்—
சொல்லடுக்கு;

அதைச் சொல்லி—நகுஷன்
அகத்திய முனியை—காலால்
எட்டி உதைத்தான்; அடடா!
என்ன துடுக்கு!

'சர்ப்ப!' என்றவனை—மலை
சர்ப்பம் என்றாக்கினான்—
அகத்தியன் கோபத்தால்—
அளித்த சாபத்தால்!

'யுதிட்டிரனே!
விதி எவ்வழி; மதி அவ்வழி!
இது—
இந்தக்—

கதை சொல்லும் சேதி நாம்—
கற்க வேண்டிய நீதி!'
என்று—
உரைத்துவிட்டு—
விடைபெற்றான் சல்லியன்; (II—பக்.320-21)

54. உலூகன்:[19] இவன் ஓர் புரோகிதன். துரோபதை தகப்பன் பாஞ்சாலனால் தூதாக அனுப்பப் பெற்றவன். அவன் அரசவையை வணங்கி செய்தி கூறுகின்றான்:

'அறம்—
அநாதியானது; அதன்—
ஆற்றல்—
அலாதியானது!

அறத்தை—
அச்சாணியாகக் கொண்டுதான்—
அம்புவித்தேரின்—
ஆழி சுழலுகின்றது; அந்த
அச்சாணி—ஓர்
அச்சானியமாய் அகலுமாயின்—
ஆழி கழன்று—
அம்புவித்தேர்—
அதோ கதி அமையுமென—
ஆரணம் கழறுகிறது!

மாறக்கூடியது;
மாற்றம் உடையது:
தரணியின்—
தட்பவெப்பம்!

மாறாதது;
மாற்ற முடியாதது;
தருமத்தின்—
திட்பம் நுட்பம்!

19 வாலியார் காவியத்தில் இவன் பெயர் இல்லை. வில்லியின் காவியத்திலிருந்து இடமறிந்து ஈண்டு பெயர் குறிப்பிடப் பெற்றது.

....

தான் நினைப்பதே அறம்;
தான் நடப்பதே தடம்;
தான் வகுப்பதே நெறி;
தான் உரைப்பதே சரி;

என—ஓரரசு
எண்ணுவா னாயின்...

நாளாவட்டத்தில்—அந்த
நாட்டரசன் நடைசாயும்;
மன்பதையின் மனத்தில்—
மன்னனுக்கிருந்த எடை சாயும்;
கொற்றவன் ஆசனத்துக்—
கொற்றக் குடைசாயும்;
கொற்றக் குடை சாய்ந்தால்—
கொற்றமும் குடைசாயும்!

....

நான் சொன்ன—
நலிவுகள் எல்லாம்...

உங்கள் அரசுக்கு—உயரிய
திங்கள் அரசுக்கு—
நிகழக் கூடாது என்றுதான்—
வந்தேன் தூது; ஏழை
அந்தணன் சொல்—
அம்பலம் ஏறுமாயின்—
அடியேன் ஆனந்தம்—
அளவிலடங்காது!

....

'ஒன்று சொல்வேன்;
உள்ளத்தில் வைப்பீர்!
உரிய பங்கை—
உதிஷ்டிரன் உங்களிடம்...

இரந்துதான் பெறவேண்டும்—
என எண்ணாதீர்; அதை
நீங்கள்—
இறந்துதான் பெறவேண்டும்—
எனப் பண்ணாதீர்!' (II—பக். 322-24)

இங்ஙனம் சொல்லி முடிக்கின்றான் தனது தூதுச் செய்தியை.

55. சஞ்சயன்: *இவன் இரு கண் இல்லாத அரசனுக்கு அணுக்கத் தொண்டன். வெளியுலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அவ்வப்போது அரசனுக்குப் பதிவு செய்யும் பதிவாளன்! துரியனிடமிருந்து பாண்டவர்கட்கு தூதாக வந்தவன்; விழியிலா வேந்தன் உலூகன் என்ற வேதிய னிடம் தான் சஞ்சயனைத் தூதாக அனுப்புவதாக இருக்கும் கருத்தைத் தருமனிடம் தெரிவிக்குமாறு சொல்லி அனுப்பினான்.*

பின்னர், சஞ்சயனைத் தனியிடம் இட்டுச் சென்று வார்த்தைகளால் அவனுக்கு வெண்சாமரம் வீசினான். "என் பிள்ளைகளும் எம்பியின் பிள்ளைகளும் உன் சொல்லைத் தட்ட மாட்டார்கள்', 'என் மகன் தருமனுக்கு ஊசிமுனை யளவும் உதவேன்' என்று உறுமுகின்றான். நீ தருமனிடம் பேசிப் போர் வராமல் தடு" என்று சொல்லுமாறு வேண்டுகின்றான். மேலும்,

'நாட்டரசின் மேல் உள்ள—
நசையை விடுத்து—
வீட்டரசின் மேல் உளம்—
வைத்திடுமாறு...
அவர்களுக்கு—ஓர்
ஆலோசனை கொடு!

தருமனுக்கும்—அவன்
தாரம் தம்பியர்க்கும்—

வாழ்வின் நிலையாமையை
விளக்கு; நெடுந்தவம்—
இயற்றுமாறு அவர் நெஞ்சை
இளக்கு!' (II—பக். 325)

என்று சொல்லி அனுப்புகின்றான். அங்ஙனமே சஞ்சயனும் பாண்டவர்களிடம் சென்று தருமனைத் தனியே இட்டுச் சென்று,

அவன்
சிந்தையைத் தனது—
சொல்லேரால் உழுதான்!

....

மழலைப் பருவத்தில்—
மனிதன் மண் தின்கிறான்;
முதுமைப் பருவத்தில்—
மனிதனை மண் தின்கிறது!

இந்த ஞானமெல்லாம்—எடுத்து
இயம்பினாலும்—துரியனுக்கு
ஏறாது மண்டையில்; அவனது—
எண்ணம் பூராவும் சண்டையில்!

நாளை போர் வந்தால்—தருமா!
நீதான் வெல்வாய்;

....

வாழலாம்—நீ
வயதில் சதம்; ஆனால்—
விளக்கு; எது—
வாழ்வில் சதம்?

....

ஆதலால் நீ—துரியனை
ஆளவிடு; அவனை
மண்ணுலக மாயையில் சிக்கி—
மாளவிடு!

நீ
நீள் சடையை வளர்த்து–
துறவுகொள்; தெய்வத்துடன்
உறவுகொள்!

அரிதானது வீட்டரசு;
அதை நச்சு!
அண்டாதே நாட்டரசு;
அது நச்சு!' (II–பக்:326)

இதனைக் கேட்ட தருமன் தடுமாறினான். துணைக்கு வந்த துவரைநாதன், சில சொல்லிச் சஞ்சயனைத் தெருட்டுகின்றான்.

உண்மையில் உனக்கு–
உதிட்டிரன்பால் நேயமில்லை!
விற்கலை பயின்ற–
வீரர் ஐவரும்–
வற்கலை புனைய வேண்டுமா?
வள–
நாடுபெற முனையாது–
நாளும் வனம் திரிந்து–
வீடுபெற முனைய வேண்டுமோ?

தம்பி மகனுக்கு–
தருமோபதேசம்;
தனது மகனுக்கு
தண்ணீர் சூழ்தேசம்!

துறவும் நோன்பும்–
தருமனுக்கு–
துரவும் தோப்பும்
துரியனுக்கு!

....

ஒன்று சொல்வேன்—
உள்ளத்தில் வை;
செய்யமுடியுமாயின்—நான்
சொல்வதைச் செய்!

'என் தேசம் எனக்கு;
உன் தேசம் உனக்கு!' என—
இரு தரப்பார்க்கும்—ஓர்
இணக்கம் வரச் செய்தால்—
சயமாகலாம்—நீ வந்த
சந்தேசம் உனக்கு!

....

நாளிதுவரை—துரியன்பற்றி
நான்செய்த ஆய்வால்—
அறிந்த உண்மை யாதெனில்—
அவனொரு நாய்வால்!

சமாதானத்திற்கு—
சரிப்பட்டு வராவிடில்—
தருமன் பங்கை—
துரியோதனன் தராவிடில்...

அனேகமாக—
அதிசீக்கிரம்—
அமர் செய்ய நேரும்—
அஞ்சும் நூறும்;
அஞ்சைக் கண்டு—
அஞ்சும் நூறும்;
அஞ்சும் நூறை
அஞ்சும் நூறும்!

எனினும்—
இறுதி முயற்சியாக...

நியாயம் பேச–
நான் வருகிறேன் தூது; சஞ்சயா!
நீ சென்று–இதனை
நேத்திரமில்லாதானுக்கு ஓது!
வாசுதேவன் விவரமாய்–
விளம்பினான்; விடைபெற்று–
உடனே சஞ்சயன்–
ஊருக்குக் கிளம்பினான்! (II–பக். 327-28)

இவனைப் பற்றிய அறிமுகமும் போதுமானது—கதைத் தொடர்ச்சியை அறிவதற்கு. இவனைப்பற்றிய வேறு செய்திகளை அவை வரும் இடங்களில் கண்டு தெளியலாம்.

இங்ஙனம் கவிஞர் வாலி ஐம்பத்தைந்து காவிய மாந்தர்களைத் தமக்கே உரிய தனிப்பாணியில் அறிமுகம் செய்து வைத்துள்ளார், தம்முடைய 'பாண்டவர் பூமியில்'.[20] இவர்கள் யாவருமே 'பூமியைச் சுருட்டும் முயற்சியில்' பங்கு பெறுபவர்கள். இன்று வாலியார் சிலரை அங்கும் இங்குமாக ஓரிரண்டு வரிகளில் காட்டியுள்ளார். அவர்களை அடியேன் ஈண்டுக் காட்டவில்லை. வேறு சிலரை அவர் தவிர்த்தும் இருக்கலாம். அவர்களை அடியேனும் குறிப்பிட்டுக் காட்டவில்லை.

20 இன்று கறுப்புச் சந்தைக்காரர்கள் அரசியல் கொள்ளையாக தாம் திரட்டிய பணத்தை 'பூமியின் வடிவில்' புதை பொருளாக்கு வதை எல்லோரும் அறியும் அளவுக்கு நடைபெறுகின்றது.

அணிநலன்கள்

கவிதைக்கு அழகு செய்வன அதில் அமையும் அணிகள். ஒரு கருத்தை மொட்டையாகப்—பட்டவர்த்தனமாகச்—சொல்வதைவிட அழகாகச் சொல்வது கேட்போருக்கு இன்பம் பயக்கும். அணிகள் யாவற்றையும் உவமையின் விகற்பங்களாகவே கருதுவர். உவமம் (Simile) என்ற ஓர் அணியினின்றே எல்லா அணிகளும் தோன்றின என்பது பேராசிரியர் போன்ற பண்டைத் தமிழறிஞர்களின் கருத்து. இது கருதியே தொல்காப்பியரும் அணிகளுக்கு அடிப்படையாகவுள்ள 'உவமை' என்ற ஒன்றினை மட்டிலும் விளக்கும் போக்கில் 'உவம இயல்' என்ற ஒன்றிற்கு மட்டிலும் இடம் அளித்தார். உவமையினின்றே ஏனைய அணிகள் தோன்றின என்பதை,

உவமை என்னும் தவலருங் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய அரங்கில் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவர் இதயம்
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே [1]

என்ற வடமொழி அப்பைய தீட்சிதரின் சித்திர மீமாம்சைக் கூற்றினாலும் அறியலாம்.

உவமத்தொகை: உவமை நன்கு பயன்படுத்தப் பெற்ற பிறகு உவமையில் குறுக்கம் தோன்றத் தொடங்கியது. இக்குறுக்கத்தையே இலக்கண நூலார் 'உவமத்தொகை' என்று வழங்குகின்றனர். 'போல, புரைய' என்ற உவம

1 செந்தமிழ்-தொகுதி-7 பக். 144

உருபுகள் வெளிப்படையாகக் காணப்பெறுங்கால் ‘உவமவிரி’ என்றும், இவை தொக்கு வரும்பொழுது ‘உவமத்தொகை’ என்றும் வழங்கப் பெறுகின்றன. ‘தாமரை அன்ன முகம்’ என்பது உவமவிரி; ‘தாமரை முகம்’ என்பது உவமத்தொகை.

நாளடைவில் இவ்வுவமை உருபுகளின்றி உவமை வழங்கியது. மழைவண்கை, பொன்மேனி, துடியிடை என்பன போன்ற உவமத் தொகைகள் வழக்காற்றில் வந்தன; உவம உருபுகளுடன் சேர்த்துக் கூறுவதைவிட உருபின்றிக் கூறுவதற்கு வன்மை அதிகம் உண்டு. ‘பொன் போன்ற மேனி’ என்று கூறும்பொழுது எழும் உணர்ச்சிக்கும், ‘பொன்மேனி’ என்று கூறும்பொழுது எழும் உணர்ச்சிக்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்தனர். இவ்வாறு உவமத்தொகையும் உவமவிரியுடன் சேர்ந்து சில காலம் வழங்கி வந்தது.

உருவகம்: நாளடைவில் உவமப்பொருளையும் உவமிக்கப்பெறும் பொருளையும் வேறுவேறாகக் காணாமல் ஒன்றிலேயே மற்றொன்றினைக் காணும் முறை தோன்றியது. ‘தாமரை முகம்’ என்பதை மாற்றி ‘முகத்தாமரை’ என்று கூறத் தொடங்கினர். அங்ஙனம் கூறுவதால் புதிய அழகும் தோன்றுகின்றது. ‘தாமரை முகம்’ என்று கூறும்பொழுது இரண்டு சொற்களாக விட்டிசைப்பதையும், ‘முகத்தாமரை’ எனும்பொழுது ஒரு சொல்லாகி இரண்டினைச் சார்ந்த தனித்தனியுணர்ச்சி களும் ஒருங்கிணைந்து ஆற்றல்மிக்க உணர்ச்சியாய் வளர்வதையும் காணலாம். இதனைத்தான் உருவகம் (Metaphor) என வழங்குகின்றனர். பால் செறிந்து பனிப்பாலாடை (Ice-Cream) ஆவதுபோல் அடங்கிச் செறிந்த உவமையே உருவகம் ஆகின்றது. [2] இவ்வளர்ச்சி

2 *Metaphor is nothing but compressed simile – M.R.Ridley in his "Poetry and the Ordinary Reader* – *பக். 64.*

யால் கவிதை பெறும் பயன் பெரிது. கவிஞன் ஒரே கல்லில் அனைத்தையும் பெற விழைகின்றான்; திறமை மிக்க கவிஞனாயின் அதில் வெற்றியையும் பெற்று விடுகின்றான்.

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய் புக்காள்[3]

என்ற அடிகளில் தமயந்தி, சுயம்வரம் நாளன்று ஐம்பத்தாறு நாட்டுமன்னர்களும் நளன் உருக்கொண்டு வந்திருந்த நான்கு தேவர்களும் பிறரும் விழிக்கண் இமையாது காத்திருக்கும் கொலு மண்டபத்திற்கு வருவதைப் புகழேந்தி வருணிக்கின்றான். இதில் 'விழித்தாமரை பூத்த மண்டபம்' என்ற உருவகத்தில் காட்டும் காட்சியினை எண்ணி எண்ணி மகிழலாம். கரும்புச்சாறு திரண்டு பாகாகிக் கற்கண்டு நிலையைப் பெறும் பொழுது கற்கண்டு சுவைமிகுந்து காணப் பெறுவது போலவே, உவமையும் சுருங்கி அடங்கி உருவகமாக வெளிப்படுங்கால் அந்த அடக்கத்தில் புதிய ஆற்றலும் சுவையும் பிறப்பது விந்தையாகும்.

இந்த உவமை உருவகங்கள் பாரதி பாரதிதாசன் கவிதைகளில் புதுக்கோலங்கள் கொண்டு புதுமெருகு பெற்றுப் பொலிவதைக் காணலாம். இவை இக்காலப் புதுக்கவிதையில் தனித்தன்மை வாய்ந்த புதுவகை உவமஉருவகங்களாக 'அவதாரம்' எடுப்பதைக் கண்டு மகிழலாம். இனி, கவிஞர் வாலியின் புதுக்கவிதையில் அமைந்த 'பாண்டவர் பூமி'யில் உவம உருவகங்களைக்காண்போம். செந்தனு தாங்கும் சந்தனுவை 'புகழ்வாசம்—சந்ததம் வீசும்—சந்தனவத்தி' என்றும், வானதிப் பெண்ணை 'நெஞ்சைச் சுடும் நெருப்பு வல்லி' என்றும், 'சேலை கட்டும் கருப்பு வில்லி' என்றும் உருவகிக்கின்றார். அசுரர் குலத்து அரசன் விருஷபாலனையும் அவன் மகள் சர்மிஷ்டையையும் அறிமுகம் செய்யும் பாங்கில் வருவது:

3 நளவெண்பா-131

அசுரர் குலத்து—
அரசன்...
விருஷபாலனின்—ஒரு
புருஷ பர்வதம்; மகள்
சர்மிஷ்டை—அதில்
சனித்த—
சந்தன மாருதம்!

அழகு—
அங்கமெல்லாம்—
அப்பிக் கிடக்கும்;
அளகபாரத்தில்—
ஐப்பசி மேகம்—
கப்பிக் கடக்கும்.
விழி விளக்குகள்—
வெளிச்சத்தை—
துப்பிக் கிடக்கும்;
உதட்டுப் பூக்கள்—
உள்ளிருக்கும் கள்ளரல்—
உப்பிக் கிடக்கும்! (I—பக். 23)

இங்கு 'பர்வம்', 'மாருதம்', 'ஐப்பசி மேகம்', 'விழி விளக்கு', 'உதட்டுப் பூக்கள்', ஆகியவை உருவகங்களாக அமைந்து வேறு பொருள்களை விளக்கி நிற்றலைக் கண்டு மகிழலாம்.

துர்வாசர் அளித்த மந்திரத்தைச் சோதிக்க தினகரனை நோக்கிக் குந்தி உச்சரிக்க அவன் வருகின்றான். வந்தவன் அவளை அணுகிப் பேசுகின்றான்.

அழகியே!—நான்
அணைக்க முடியாத—
அக்கினி; ஆனால்...
என்னுள்—உன்னால்

எழுந்தது—எளிதில்
அணைக்கக் கூடிய—
அக்கினி!

ஆதலால்—முதலில்
அங்கி அணிந்த—இந்த
அங்கியை அணை;
அதன்பின்—இந்த
அங்கிக்குள் இருக்கும்—
அங்கியை அணை!' (I—பக். 92-94)

இதில் 'அக்கினி', 'அங்கி' என்ற சொற்கள் உருவகங்களாக நின்று வெவ்வேறு பொருள்களை உணர்த்துதலைக் கண்டு களிக்கலாம்.

ஆயர்குலத்து அரசன் சூரனுடைய மகள் பிருதை; வனப்பு மிக்கவள்(இவளே குந்தி). இவளைப்பற்றி வாலியார் கூறுவது:

அவள்
அமாவாசை இல்லாத—
வெண்கதிர்;
அத்தமனம் இல்லாத—
செங்கதிர்; ஓர்
ஆடவன் வந்து—
அறுவடை செய்யாது—
மண்கதிர்போல்—பருவம்
முதிர்ந்து நிற்கும்—ஒரு
பெண்கதிர்!

அத்தகு—
அரசிளங்குமரியின்...

நடைக்கு உவமை—
நதி;
சடைக்கு உவமை—
சாரை;

துடைக்கு உவமை—
தூண்;
இடைக்கு உவமை—
இறை!

ஏனெனில்...
இதைப் பற்றித்தான்—
'இலது' 'உளது'
என—
இரைகிறது உலகு! (I—பக். 85-86)

இப்பாடற்பகுதியில் 'வெண்கதிர்', 'செங்கதிர்', 'பெண்கதிர்' இவை உருவகங்களாக நின்று பிருதையைச் சுட்டுகின்றன. 'மண்கதிர்', 'நதி', 'சாரை', 'தூண்', 'இறை' என்பவை உவமைகளாக அமைந்துள்ளன. சாதாரணமாக இடைக்கு உவமை 'உளதோ? இலதோ?' என்று கூறி விடுவது வழக்கம். இறையை 'உண்டு என்பர் சிலர்; இல்லை என்பர் சிலர்'. இக்கருத்தை இடைக்கு ஏற்றிக் கவிஞர் வாலி கூறுவது அற்புதம்; இஃது அவர்தம் தனித்தன்மையைப் பறைசாற்றி நிற்கின்றது.

1. உவமைகள்

ஏழ்மை தீர்க்கும் தோழமை தேடி துருபதனை நோக்கி வரும் துரோணன் பழைய நினைவுகளை எண்ணி வரும் நிலையைக் கவிஞர் வாலி கூறுவது:

இளையராய்—
இருந்த காலத்தில்—
இருவர்க்கிடையே—
இயல்பாய் எழுந்த நட்பை—
இந்நாளில் எண்ணி எண்ணி—
இளகினான்; தனது—
மன வீட்டின்—
புழைக் கடையில்—

மண்டிக் கிடக்கும்—
குப்பை நினைவுகளை—
குக்குடம் போல்—
கிளறினான்! (I—பக். 202)

எப்பொழுதோ நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கவிஞர் 'குப்பை நினைவுகள்' எனக் கருதுகின்றார். அவை இருக்கும் இடம் 'மன வீட்டின் புழைக்கடை'. குப்பை என்ற சொல் கோழியை நினைவுகூரச்செய்து, 'குக்குடம் போல் கிளறினாள்' என்ற உவமையை அமைத்துப் பேசச் செய்கின்றது. கவிஞர் வாலி ஒருவரால்தான் இப்படிக் கூறமுடியும்.

அக்காலத்தில் இருந்த 'துருவதன்—துரோணர்' நட்பைக் கூறுவார் இன்னோர் உவமையை அமைத்து.

'அரசன் மகன்!
அந்தணன் மகன்!' எனும்—
பேதங்களால்—
பேதலிக்காமல்—
கூடுவிட்டுக்
கூடு பாய்ந்தாற்போல்—
ஒருவர்க்குள் ஒருவர்—
உள்ளோடி உறைந்ததும்... (I—பக். 203)

என்று கூறுவார். 'கூடுவிட்டுக் கூடுபாய்தல்' ஒருவர் உள்ளத்தில் மற்றவரும் மற்றவர் உள்ளத்தில் முன்னவரும் மாறிப் புகுதல். 'வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும், இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினார்' என்று கம்பன் கூறுவானே அதுபோல் என்று கருதலாம்.

ஆதவனாகிய அச்சனைக் கர்ணனாகிய எச்சன் கனவில் கண்டு பேசுவதாக அமைந்த கவிதைப் பகுதியில் வருவது:

தீயின்—
தாயே!

சோதி நதியின்—
தோற்றுவாயே!

வானவாவியில்—
விடியலில் விகசித்து—
பிரகாசத் தேனைப்
பிலிற்றுகின்ற—
நெருப்பு—
நிரஜமே!

விசும்பில்—
வீற்றிருந்தபடியே—
பசும்புல்—
பனியைத் துடைக்க—
நாளும்—
நீளும் கரமே!

எண்ணெயூற்றாமல்—
எரியூட்டாமல்—
விண்ணில் எரியும்—
மாயத்திரியே!

ஔபாசனத்தை—
அனுதினம் பேணும்—
சிரௌதிகள் ஓதும்—
காயத்திரியே (I—பக். 218)

இந்தக் கவிதைப் பகுதிகள் 'தீயின் தாய்', 'தோற்றுவாய்', 'பிரகாசத்தேன்', 'நெருப்பு நிரஜம்', 'மாயத்திரி', 'காயத்திரி' என்ற சொற்களும் சொற்றொடர்களும் உருவகங்களாக நின்று ஒப்பரிய ஒளி உமிழும் வெய்யோனைக் குறிப்பதைக் கண்டு மகிழலாம்.

கர்ணன் பிறப்பைக் காட்ட வந்த கவிஞர் வாலி வரைவது:

'மந்திரக் கல்லால்—சூரிய
மாங்காய் விழுமா?'

விட்டெறிந்து பார்த்தாள்—
விவாகமாகாதவள்—
சுட்டெறிந்த—
சூரியனை நோக்கி!

விழுந்தது—அந்த
வெளிச்ச மாங்காய்! அவள்—
கையில் அல்ல; கருப்
பையில்!

பையில் விழுந்தது—உடனே
பிள்ளையென்றாகி—அவளது
கையில் விழுந்தது!

கன்னி—
கையில் ஏந்திய—கொழுந்து
வெய்யில்...

பீச்சியடித்தது—வெளிச்சப்
பிரகாசத்தை; வனமே—
பிரதிபலித்தது—அதன்
பிரகாசத்தை!

மார்பில் கவசம்;
மணிச் செவியில் குண்டலம்;
அவை—
சிதறிய ஒளியோ—இன்னொரு
சப்தரிஷி மண்டலம்! (I—பக். 214)

ஈண்டு 'மந்திரம்' என்பது துருவாச முனிவர் குந்திக்கு உபதேசித்த மந்திரம். 'மாங்காய்' என்பது குந்தி பெற்றெடுத்த குழந்தை. இவை இரண்டும் உருவகங்களாக அமைந்து பொருள்களைத் தெளிவாக விளக்குகின்றன. 'வெளிச்ச மாங்காய்', 'கொழுந்து வெய்யில்', 'சப்தரிஷி மண்டலம்' என்பவையும் உருவகங்கள் நிலையில் நின்று கவிதையைக் கவர்ச்சியுடையதாக்கிப் பொருள் தெளிவையும் புலப்படுத்துகின்றன.

கர்ணனின் கவச குண்டலங்களைக் கவர்வதற்கு இந்திரன் அந்தணன் வடிவில் வந்த நிலையைக் கவிஞர் வாலி கூறுவது இப்பகுதி:

பஞ்சம்—
பஞ்சக் கச்சம் கட்டி
வந்தாற்போல்—
வந்தனன்!

....
வயதும்—
வறுமையும்—
வரிவரியாக...
வருத்தம் தோய—பாடிய
விருத்தம் போலே—அவனது
விருத்தம் இருந்தது; அந்த—
விருத்தம் வழங்கிடும்—
அருத்தம் போலே—
அவன் நடையில்
நிருத்தம் இருந்தது! (I—பக். 230)

'பஞ்சம்' வறியவனைக் குறிக்கும் உருவகம். 'பஞ்சக் கச்சம் கட்டி வந்தாற்போல்' என்பது உவமை. காரிகை கற்றுக் கவிபாடுபவர் சிரமப்பட்டு வரிவரியாக விருத்தப் பாடல் எழுதுவர். அதனைக் கிண்டல் செய்கின்றார் வாலியார். அவனது 'விருத்தம்' என்பது உடலில் வரிவரியாக உள்ள தசைச் சுருக்கத்தைக் குறிக்கின்றார் போலும்! விருத்தப் பாடல் சரியாக அமையாவிடில் அதன் பொருள் தள்ளாடும்; அல்லாடும். அதுபோல அவன் நடையிலும் 'ஆட்டம்—நடன ஆட்டம்' இருந்தது என்பதாகக் குறிப்பிடுவது அற்புதம்!

இந்திரன் அந்தணன் வேடத்தில் வந்து கர்ணனிடம் யாசித்தது போல் கர்ணனும் பார்ப்பன கோலம் கொண்டு பரசுராமனிடம் சென்று தனுர்வித்தையை வாசித்தான்.

இந்திரன்–
அந்தணன் வேஷம் போட்டு–
இவனிடம் யாசித்தான்; அதுபோல்–
இவனும்–
அந்தணன் வேஷம்
போட்டு–ஓர்
ஆசானிடம் வாசித்தான்! (I–பக். 234)

இந்திரனின் பார்ப்பன கோலம் கர்ணனின் பார்ப்பன கோலத்துக்கு உவமை என்பது வெளிப்படை. கதைகளில் ஒருவரை ஏமாற்றம் செய்ய பார்ப்பன கோலமே மேற் கொள்ளப் பெறுகின்றது. காரணம் என்ன? ஒரு செட்டியார் போல், ஒரு வேலையாள் போல் வரக் கூடாதா? அவை பொருந்தா. பார்ப்பனனுக்கு இருக்கும் பணிவு, நளினம், பாசாங்கு பிறருக்குத் தவம் கிடந்தாலும் வாரா.

ஏகலைவன் என்ற வேடச் சிறுவனைக் குறிப்பிடும் போது,

அவன்–
யாக்கை கருமை கண்டால்–
காக்கை கருவம் விடும்; அவன்
யாக்கை வலிமை கண்டால்–
தேக்கை தோல்வி தொடும்! (I–பக். 240)

ஈண்டு 'யாக்கை கருமை' 'யாக்கை வலிமை' என்பவற்றில் உவம உருபுகள் இல்லை. இவை உவமைத் தொகைகளாகச் செயற்பட்டு அருமையாகப் பொருளு ணர்த்துவதைக் காணலாம்.

துருபதனை வென்று பார்த்தன் அவனைக் கட்டிக் கொண்டு வந்து துரோணரின் கையில் கொடுத்ததை வாலியார் கூறுவது:

சிலையெடுத்தான்; சரம்போல்
சரம் தொடுத்தான்; துருபதனை

வலையெடுத்த வாளை போல்—
வாரிச் சுருட்டி வந்து...

துரோணாச்சாரியரின்—
திருக்கரத்தில் கொடுத்தான்! (I—பக். 246)

வாளை மீனை வலைஞன் வாரிச் சுருட்டிக் கொண்டு வருவதுபோல், துருபதனை வென்று சிறைப்படுத்திக் கொண்டு வந்துவிட்டான் விஜயன். 'சரம்போல் சரம் தொடுத்தது', 'வாளைபோல் வாரிச் சுருட்டுதல்' என்பவற்றிலுள்ள உவமைகள் அற்புதம்!

திரௌபதி சுயம்வரம் மண்டபத்திற்கு வந்த நிலையும் அப்போது ஆசை நெஞ்சங்களின் மனத்தில் எழுந்த உணர்ச்சிகளையும்பற்றிக் கவிஞர் வாலி கழறுவது:

திருச்சபைக்குள் நுழைந்தது
திரௌபதி என்னும்—
மனோரஞ்சித—
மலர்!

....

அங்கிருந்த—
ஆசை நெஞ்சங்கள்...

பாஞ்சால மன்னனை—
போற்றிக் கொண்டிருந்தன—ஒரு
மழைவில்லை—
மகளாகப் பெற்றதற்காக;
அதே—
ஆசை நெஞ்சங்கள்...

துருபதனை—
தூற்றிக் கொண்டிருந்தன—அம்
மழைவில்லைப் பெற—விலையாயொரு
மகாவில்லை வைத்ததற்காக! (I—பக். 347-48)

இங்கு திரௌபதியை 'மழைவில்' என்ற உருவகம் குறிப்பிடுகின்றது. மழைவில்லை மகளாகப் பெற்றதற்காக மகிழ்வோரும் அவளைப் பெறுவதற்கு மகாவில்லைத் தடையாக வைத்தற்காகத் தூற்றுவோருமாக இருவகை யினர்க் கூட்டங்கள் அங்கிருந்தன. இதனை நோக்கும்போது சீதையைப் பெறுவதற்குக் கன்யா சுல்கமாக வைக்கப்பெற்ற வில்லைப் பற்றி மக்கள் பேசுவதை நினைவுகூர்கின்றோம்.

வாலியார் அமைக்கும் சில உவமைகள் தனித்தன்மை வாய்ந்தவை. விசுவகர்மாவின் கலைத்திறமையைக் கூறும் முகத்தான் வாலியார்:

> **விதையிலிருந்து எழுகின்ற—**
> **விருட்சம் போல்—அவன்கை**
> **சுதையிலிருந்து எழுந்தன...**
>
> **சுந்தரமான மாடங்கள்;**
> **சோபிதமான கூடங்கள்;**
> **மூவாயிரம் கால்கள்—**
> **முளைந்த மகால்கள்!** (II—பக். 13)

ஆலமர் வித்திலிருந்து ஒரு சிறிய செடிக்கரு வெளிவந்து விருட்சமாவதை நினைந்து பார்க்கின்றோம். அவ்வளவு ஏன்? அடையாறு ஆலமரத்தைத்தான் கவனிப்போமே. வித்திலுள்ள அருங்குறளான சிறு செடி மரமாக, கிளைகளாக, சிறு சிறு கிளைகளாக, பூவாக, பிஞ்சாக, காயாக, பழமாக வளர்ந்து விரிவதைக் காண்கின்றோம். இவற்றை மனத்தில் கொண்டு விசுவகர்மாவின் படைப்பைக் காண்போம். அவன் கையிலிருந்த சுதையில் முகிழ்த்து எழுந்தவை சுந்தரமான மாடமாளிகைகள். சிதம்பரத்தில் பார்த்திருக்கின்றோம் ஆயிரங்கால் மண்டபங்களை. மதுரையில் பார்த்திருக்கின்றோம் திருமலை நாயக்கர் மகாலை. இங்கு மூவாயிரம் கால்கள் கொண்ட பல மகால்கள். நினைப்பிற்கும் எட்டாதவை

இவை. வாலியார் கூறுவார்: "இவன் கந்தையையும் காசிப் பட்டாக்கும் வித்தையையும் சொத்தையையும் சீத்தாப்பழமாக்கும் வித்தையையும் கற்றவன்" என்று.

உலூபியின் அழகை வருணிக்கும் பாங்கில் வாலியார் கூறுவது:

அவள்—
பாதம் முளைத்த—பாரி
ஜாதம்; பனிவிழிகள்
சீதம் விளைக்கும்—தனூர்
மாதம்!

இரண்டு புஜம்—
இடம் வலம்—இருக்க வரும்
ஏமாம் புஜம்;
வஸ்திரம்—
உடுத்திவரும்—மன்மதனின்
அஸ்திரம்!

நூபுரம் ஒலிக்கவரும்—மணி
கோபுரம்;
ராக்கொடி சொலிக்கவரும்—
சிறு
பூங்கொடி! (II—பக். 26)

உவமைகள் உறைந்து வருவதாகச் சொல்லப்படுவதை மேலே சுட்டினோம். உலூபியின் அழகை உருவகங்கள் மயமாக அமைத்துள்ளார் கவிஞர் வாலி. உலூபியை 'பாதம் முளைத்த பாரி ஜாதம்' எனக் குறிப்பிடுகின்றார். அவள் பாரி ஜாதமாக—தாமரையாக—உருவகப்படுத்தப் பெறுகின்றாள். குளிர்ச்சியான கண்கள்—பனிவிழிகள்—மார்கழி மாதமாக உருவகிக்கப்பெறுகின்றன. அவளது இரண்டு புஜங்களும் ஏமாம்புஜமாக உருவகம் ஆகின்றன.

அவளை ஆடை உடுத்தி வரும் 'மன்மதனின் அஸ்திர மாக'—'மலர்க்கணையாக'—உருவகிக்கின்றார். மற்றும் அவள் நூபுரம் ஒலிக்க வரும் 'கோபுரமாகவும்,' ராக்கொடி ஒலிக்க வரும் 'பூங்கொடியாகவும்' உருவகம் ஆகின்றாள். மொத்தத்தில் அவள் உருவகங்களாகவே காட்சி தரு கின்றாள்.

சத்தியவதியின் இளையமகனும் காசநோயால் இறந்து போனான். இவள் நிலையைக் கவிஞர் வாலி,

> முற்றுப்புள்ளி வைத்த
> வாக்கியம் போல்—
> முடிந்து போனாள்! (I—பக். 60)

அற்புதமான புது உவமை. இனி சத்தியவதியின் வமிசத்துக்கு வாரிசு இல்லை என்பது குறிப்பு. இதனை புதுக்கவிதையில் புதிய முறையில் அமைந்த உவமை மூலம் விளக்குவதில் பாவேந்தரையும் விஞ்சிவிடுகின்றார்.

மாண்டவ்யர் வாசம் செய்துவந்த முல்லை நிலத்தை வருணிக்கும் போக்கில் அங்கு ஓடிக் கொண்டிருக்கும் நதியைக் குறிப்பிடுவார்.

> அந்த
> முல்லை நிலத்தின்
> மார்பின் மேல்—
> யாரோ
> பிரம்மோபதேசம் செய்து—
> போட்டுவிட்ட
> யக்ஞோபவீதம்போல்...
> நெளிசலும் வளைசலுமாய்
> நதியொன்று ஓடும் (I—பக். 71)

ஏதாவது 'சடங்கு' செய்யும் போதும், திதி கொடுக்கும் போதும் அல்லது பிரம்மோபதேசம் செய்யும்போது தருப்பையால் வேயப்பெற்ற 'பூணூல்' ஒன்றைத் தரித்துக் கொள்வது மரபு. சடங்கு முடிந்ததும் அதனைக் களைந் தெறிவது வழக்கம். அவ்வாறு எறியப்பட்ட தருப்பைப் பூணூல் போல் முல்லை நிலத்தில் ஓடிக் கொண்டிருந்தது சிறுநதி; தருப்பையால் வனையப்பெற்ற பூணூலில் செய் நேர்த்தி இராது; கரடுமுரடாக இருக்கும். முல்லை நிலத்தில் ஓடும் 'ஓடை'யும் கரடுமுரடு போல் இருக்கும்; மருத நிலத்தில் ஓடும் ஜீவநதிபோல் இராது. அதன் 'களையை' இந்த ஓடையில் காணமுடியாது. இந்த எண்ண ஓட்டத்தின் அடிப்படையில் வாலியாரின் உவமையின் நேர்த்தியை ஓர்ந்து மகிழ வேண்டும்.

'சுள்ளென்று உறைக்கும்—சூரியனார் சித்தால்' குந்தி கருவுற்றாள்; மீண்டும் கன்னி உருவுற்றாள். இதனை விளக்கும் வாலியார்:

> **உலக வழக்கில்–குந்தி**
> **ஒருத்தியிடம்தான்...**
> **கெடுத்த பிறகும்–கற்பு**
> **கெடாமலே இருந்தது–ஒரு**
> **கலவியாலே; எடுத்துக்**
> **கொடுத்த பிறகும்–சற்றும்**
> **குறையாமலே இருந்திடும்–**
> **கல்வி போலே!** (I–பக். 96)

கொடுத்த பிறகும் குறைந்திடாத கல்வி போலே கலவியால் கெடுத்த பிறகும் குந்தியிடம் கற்பு கெடாமல் இருந்தது என்று கவிஞர் கூறும் உவமையின் சொல் நயம் பொருள் நயம் எண்ணி எண்ணி மகிழத்தக்கது

சில உவமைகள்: விரிவஞ்சி விளக்காமல் வாலியார் படைத்த சில உவமைகளைக் காட்டுவேன்.

(1) பாண்டு இறந்து படுகின்றான். குந்தியின் நிலை:

ஓர்
ஆயன் இல்லையென்று–
ஆயின்...
அலைமோதும்–
ஆநிரை போல...

கோவலர் குலத்து
குணவதி–
குந்திதேவி... (I–136)

(2) காட்டுத்தீயில்–
மாட்டிய–
கறவையொன்று–
கன்றுகளோடு...
தப்பு வழியறியாது–
தப்பித்து நிற்குமே–
அப்படி நின்றாள்...

தப்பு வழியறியாத
குந்தி: (I –137)

ஒரு சமயம் அத்தினபுரியை நோக்கி வருகிறான் பொற்றேரில் தேவகி மைந்தன். பழைய நினைவுகள் மனத்தில் குமிழியிட்டன. இதனை வாலியார்:

(3) இரையை–
மீட்டு மெல்லும்–
நிரையைப் போல்...
அந்நாள் நிகழ்வுகளை–
அய்யன் அசைபோட்டான்–
இந்நாள்! (I – 150)

கங்கைக் கரையில் ஒரு சமயம் நிலாச் சாப்பாடு நடைபெற்ற நிலையில் பீமன் காணாமற் போகின்றான். குந்தியின் எண்ணவோட்டத்தில் கவிஞர் வாலி:

(4) துரியோதனன் என்னும்—
துக்கிரிதான்—
தொலைத்துத் தலை முழுகத்
திட்டமிட்டிருப்பான்;
பதவி மாமிசத்தைப்
பறித்துத் தினை—
வல்லூறு போல—அவன்தான்
வட்டமிட்டிருப்பான்! (I – 183)

எட்டு நாட்களாக இருட்டில் உறங்கிக் கிடந்த வீமன் துயில் எழுந்த நிலையைக் கவிஞர் வாலி விளக்குவது:

ஒரு வாரமும்—
ஒருநாளுமாய்...
நீட்டி மடக்காமல்
நமுத்துக் கிடந்த—
கைவிரல்கள்—
ஐயிரண்டையும்...

நிதானமாக—
நெடுக நீவி நீவி—
நீள இழுத்து—
நெட்டி எடுத்தான்!

ஓர்—
ஈரத்துவாலையைப்போல்—
இடுப்பை முறுக்கி—
உடம்பை—
ஒன்பது கோணல்களாக்கி—
சௌக்கியமாக—ஒரு
சோம்பல் முறித்தான்! (I – 185)

துரோணரால் அர்ச்சுனனைக் கொண்டு வெல்லப் பட்ட துருபதன் அர்ச்சுனனது வீரத்தை மெச்சிய நிலையில் அவனது எண்ண ஓட்டம் வாலியாரின் வாக்கில்:

(5) துக்கமும் வெட்கமும்—
துருபதன் மனத்தை—ஒரு
தேங்காய் மூடிபோல்—
துருவின; அடிக்கடி—
இடுப்பு உடுப்பு
இழிவதுபோல்—அவனது
உடலும் உயிரும்—
வெருவின!

....
பாஞ்சால தேசத்தின்—
பரம்பரைச் சொத்து—அதன்
புரவலர் எழுதி வைத்த—
புகழ்நூல்! அதைப்
புழுதியில் சாய்த்தது—ஒரு
பூணூல்.

கோட்டை—
கொத்தளங்களில்...
முன்னம்—
முன்னோர் நட்டுவைத்த...

வெற்றித்துவசம்—
உயரப்பறந்து—
வானத்து நிலத்தை—
வழித்தது! அத்தகு—
பதாகையை—அந்தப்
பார்த்தன் கைக்கணை—ஒரு
கௌபினம்போல்—இன்று
கிழித்தது! (I – 250-251)

இப்பகுதியில் உவமைகள் கொஞ்சி விளையாடுவதைக் கண்டு மகிழலாம்.

பல பெரியோர்கள் யோசனைப்படி தருமனுக்கு 'யுவராஜ்' பட்டம் சூட்டப் பெற்றது. பெரியோர்கள்

மகிழ்ச்சியுற்றனர். ஆனால் சகுனி போட்ட தூபத்தால் துரியோதனன் தந்தையை எதிர்த்துப் பேசுகின்றான் கண்ணிலான் திருவுள்ளம் தெரிந்து. தன் தவற்றினை உணர்கின்றான். உடனே தம்பியின் தனயர்களிடம் கொண்டிருந்த சமநோக்கு சரிகின்றது. திருதராட்டிரனின் இந்த மனநிலையை வாலியார் வாக்கில்:

(6) தன் கைகளாலேயே–
தருமனின் கண்களில்...
வெண்ணெயை வைத்தவன்–அந்த
வெண்ணெயை
வழித்துவிட்டு–ஆங்கு
சுண்ணத்தை
வைப்பதுபற்றி–மூளை
சூடுபறக்கச் சிந்தித்தான். (I – 258)

மக்கள் அன்றாடவாக்கில் இடம்பெறும் வெண்ணெய்—சுண்ணம் உவமைகள் இங்கு இடம்பெற்றுத் திகழ்கின்றன.

பாஞ்சாலியைப் பணயப் பொருளாய்த் தருமன் வைக்கக் குறித்ததனைக் கவிஞர் வாலியார் வருணிப்பது:

(7) கந்தை நடுவே–பட்டுக்
கலையை வைப்பது போல்; கள்
மொந்தை நடுவே–பசு
மோரை வைப்பதுபோல்;
பிரேதங்கள் நடுவே–பிறந்த
பிள்ளையை வைப்பது போல்–வாடகை
திரேகங்கள் நடுவே–ஜனகன்
தனையையை வைப்பது போல,
கழிப்பறை நடுவே–மணக்கும்
கஸ்தூரியை வைப்பதுபோல்; (II– 140)

இவ்விடத்தில் பாரதியார் பாஞ்சாலி சபதத்தில் இதே சந்தர்ப்பத்தில் வைக்கும் உவமைகளையும் கருதலாம்.

வேள்விப் பொருளினையே—புலைநாயின் முன்
மென்றிட வைப்பது போல்,
நீள்விட்ட பொன்மாளிகை—கட்டிப் பேயினை
நேர்ந்துகுடி யேற்றல் போல்
ஆள்விற்றுப் பொன் வாங்கியே—செய்த பூணையோர்
ஆந்தைக்குப் பூட்டுதல் போல.[4]

ஈண்டும் புதியதும் மரபும் போட்டி போட்டுக் கொண்டு நிற்பதை அறியலாம்.

இருவரின் சிந்தையின் மனஓட்டத்தையும் எண்ணி மகிழலாம்.

2. உருவகங்கள்

உருவகங்களே வாலியாரின் கவிதையில் அதிக இடம் பிடித்துள்ளதைக் காணமுடிகின்றது. பாண்டு மரித்த அவலம் சிறிது சிறிதாகக் கரைகின்றது. விருந்தினர்கள் அத்தினபுரிக்கு வரத் தொடங்குகின்றனர். இதனை வாலியார் தொடங்குகின்றார்

கண்ணன் தேரில்—
கண்ணனும் வந்தான்;
கண்ணனின்—
அண்ணனும் வந்தான்!

பகலும் இரவும்—
பக்கத்துப் பக்கத்து—
இருக்கையில்—
இருக்கையில்...

4 பாரதியின் பாஞ்சாலியின் சப்தம்-நான்காவது-துகிலுருதல் சருக்கம்-245

ஊர் எல்லையில்
உள்ள—ஒரு
தடாகத்துத் தாமரைக்கு—
தலை சுற்றியது;

'கங்குல் வருகிறது என்று—
குவிவதா?—இல்லை,
வெய்யில் வருகிறது என்று—
விரிவதா?'

முடிச்சவிழ்க்க—
முடியாத வினாவொன்று—அந்த
முண்டத்தின்
முண்டாவில் தொற்றியது!

இந்தக்
குழப்பத்திற்கெல்லாம்—
காரணம்...

கண்ணன் வண்ணமும்—அவன்
அண்ணன் வண்ணமும்தான்!

அண்ணன் பலராமன்—
ஆயிரம் அம்புலிகளின்—
திரட்டு; அவனது—
இளவல் பரந்தாமன்
எழுந்து நடக்கின்ற—
இருட்டு!

இந்த—
இருட்டுதான்...

உலகு முழுவதற்கும்—ஒளியை
உமிழ்கிறது; இல்லையேல்
உலகுக்கேது பச்சை!—இந்த
இரவியின் வெளிச்சமும்—இந்த
இருட்டு இட்ட பிச்சை! (I – 156-58)

இங்கு 'பகல்', 'இரவு', 'ஆயிரம் அம்புலிகளின் திரட்டு,' 'எழுந்து நடக்கின்ற இருட்டு', 'பச்சை', 'பிச்சை' என்ற உருவகங்கள் அற்புதமாக அமைந்துள்ளன. இப்பகுதி வாலியாரின் கண்ணன் பக்தியைக் காட்டுவதுடன், ஒரு தடாகத்தின் தாமரை வாலியாரின் கற்பனைச் சிறகையும் தமுக்கடித்துக் காட்டுகின்றது.

தருமபுத்திரன் பிறப்பைப் பற்றி வாலியார் கூறுவது:

குந்தியின் வழியே—அவள்
உந்தியின் வழியே—
புறம் வந்த அறம்;
இராவும்
பகலும்—பாவங்களை
அராவும்
அரம்! (I – 122)

இதில் 'அறம்' 'அரம்' என்ற இரண்டு உருவகங்கள் வெவ்வேறு பொருளை உணர்த்தி நிற்பதைக் கண்டு மகிழலாம்.

பழைய காதலனாலும் இல்லறம் துறந்த நம்பி வீடுமனாலும் மறுக்கப்பெற்ற அம்பை ஆறு ஆண்டுகள் அங்கும் இங்கும் அல்லாடி பன்னிரண்டு ஆண்டுகள் சொர்ணமலைச் சாரலில் முருகனை நோக்கித் தவம் இயற்றினாள். முருகன் அம்பைக்குக் காட்சி தந்ததைக் கவிஞர் வாலியார் கூறுவார்:

அம்பையின் முன்—
அழகொளிரத் தோன்றியது...
ஏத்துவார்
எவர்க்கும்—
ஏறுமுகம் காட்டும்
ஆறுமுகம்!

கவலைக்
கடல் வீழ்ந்தார்—
குறைமுகம் கண்டால்...
குறைதீர்த்துக் கரைசேர்க்கும்—
துறைமுகம்!

தரைமுகம்—
பார்த்து நடந்த—வள்ளிப்
பாவையை மணந்த—
துரைமுகம்!
அன்பில்
அமிழ்முகம் பார்த்தால்—
அருள்முகம் காட்டும்—
தமிழ்முகம்!

பழ
மறைமுகம் தனக்குள்—
மறைமுகமாய் வைத்திருக்கும்—
இறைமுகம்

பனிசடையில்—
பிறைமுகம் காட்டுகின்ற—
பெம்மான் பெற்றெடுத்த
நிறைமுகம்! (I—51-52)

இப்பகுதியில் ஆறுமுகம், துறைமுகம், துரைமுகம், தமிழ் முகம், இறைமுகம், நிறைமுகம் ஆகிய உருவகங்கள் யாவும் முருகனை காட்டுபவை என்பது வெளிப்படை. 'முகம்' என்ற சொல் அனைத்திலும் முகம் காட்டுவது ஒரு நயம். அனைத்திற்கும் ஒரு வைணவரின் உருக்கமான முருக பக்தியைக் காட்டுவது அற்புதம். அவர்தம் சமரச சமய நோக்கு என்றும் வாழ்க.

சகுனியைப் பற்றிக் கூறும் வாலியார்:

..................அவன்
ஆணுருக் கொண்ட
ஆயிரம் கூனி!

அவன்–
மூவகை மலங்களின்
மொத்தக் கலவை (I–பக். 165)

கூனியும் கலவையும் உருவகங்கள். இவை சகுனியை மானசீகமாக முன்னிருத்துகின்றன.

வீமனின் பிரிவைக் கூற வந்த கவிஞர்!

இங்கு–
தாயின் கண்கள்–
துயிலாடையைப் புனைந்தன,
அங்கு–
தனயனின் கண்கள்
துயிலாடையைக் களைந்தன! (I–பக்.184)

என்பார். துயிலாடை என்ற உருவகம் இருவித செயல்களைப் புரிவது அற்புதம்!

கர்ணனது வள்ளண்மையைப் பற்றிக் கூறும் வாலியார்,

உதாரம்– அவன்
உவந்து மணந்த
முதல் தாரம்!

....
தீனர்களின்–
தரித்திர நோயை–
தீர்த்து வைக்கும்–
தந்வந்திரி! (I–பக். 214)

என்பார். இதில் 'தாரம்', 'தந்வந்திரி' என்ற உருவகங்கள் கன்னனைக் காட்டி நிற்கின்றன. சந்தர்ப்பத்திற்குகேற்ற உருவகங்கள்!

தொடர்ந்து அவனைப்பற்றிய மேலும் சில உருவகங்கள்: கன்னன் பிறந்து விடுகின்றான்—கன்னி குந்திக்கு.

கட்டைவிரல் சூப்பும்—
குட்டைச் சூரியனை...
கைகால் முளைத்திருக்கும்—
வைகாசி வெய்யிலை...

அழுகைக்
கக்கிச் சிரிக்கும்—
அக்கிப் பிஞ்சை... (I பக் 214-5)

'குட்டைச் சூரியன்', 'வைகாசி வெய்யில்', 'அக்கிப் பிஞ்சு'—இவை கன்னனைக் காட்டும் உருவகங்கள்.

கன்னனின் கனவில் வந்த ஆதித்தனை—அவன் அச்சனை—வாலியார் கூறுவது:

வான வாவியில்—
விடியலில் விகசித்து—
பிரகாசத் தேனைப்
பிலிற்றுகின்ற—
நெருப்பு—
நிரஜமே!

விசும்பில்—
வீற்றிருந்தபடியே—
பசும்புல்—
பனியைத் துடைக்க—
நாளும்—
நீளும் கரமே!

எண்ணெயூற்றாமல்—
எரியூட்டாமல்—
விண்ணில் எரியும்—
மாயத்திரியே!

ஔபாசனத்தை–
அனுதினம் பேணும்–
சிரௌதிகள் ஓதும்–
காயத்திரியே! (I – பக். 218)

இதில் *'நெருப்பு நிரஜம்', 'நீளும் கரம்', 'காயத்திரி'* என்ற *மூன்று உருவகங்களும் அருக்கனை உருக்கமாக உணர்த்துகின்றன. வாலியாரை உருவக நாயகனாகவும் காட்டுகின்றன.*

சில உருவகங்கள்:

(1) பீமனைப் பற்றியது
பிள்ளமையால்–
பீமன் புரிந்த பிழைகள்; தன்
நெஞ்சத்தறியில்–துரியோதனன்
நெடும்பகை ஆடையை–
நெய்ய உதவிய இழைகள்! (I – பக். 164)

(2) 'சரத்வான்' என்னும் சத்தியவானைப் பற்றியது:
அவன் சிந்தை–
மும்மல மேகங்கள்–
மொய்க் காத–
நிர்மல மான–
நெடிய வான்! (I – பக். 190)

(3) கன்னனின் கொடைமடத்தைப் பற்றியது:
தனக்கு மிஞ்சிதான்–
தானம் என்பது–அவனளவில்
திண்ணை வேதாந்தம்;
தன்னையும் மிச்சமின்றி–
தருவதுதான்–அவனது
தருமத்தின் விருத்தாந்தம்!

கொடை–அவன்
குடலில் ஓடும்
குருதி; (I – பக். 232)

(4) வீமனைப் பற்றியது

அவன்—
கொம்பில்லாத—
நந்தி! தும்பிக்
கை இல்லாத—
தந்தி! (I – பக். 251)

(5) திருஷ்டத் தூய்மனைப் பற்றியது:

வேள்வி வயலில்—
விளைந்த—
இந்த இளம்நாற்று—
துரோணன் உயிரைத்
தின்னப் பிறந்த கூற்று! (I – பக். 252)

(6) பூமிதேவியின் புலம்பலைக் கேட்டு, அவளைப் பயம் விடுமாறு பணித்துவிட்டு

அரவிந்த நயனம்—மீட்டும்
அறிதுயில் கொள்ள—ஏற்றது
அனந்த சயனம்! (I – பக். 156)

(7) பாண்டவர்கள்—கௌரவர்கள் பிள்ளைப் பிராயத்தில் உரசல் பற்றி:

ஆனால்—
அந்த...
விளையாட்டுதான்—
விரைவிலேயே—
வினையானது—அந்தவினை—
சன்மப் பகை—
சூல்கொண்ட—
சினையானது!

குறிப்பாக—
கூறப் போனால்...

குந்தி ஈன்ற–
குன்றுக்கும்;
காந்தாரி ஈன்ற
கன்றுக்கும்...
எடுத்ததற் கெல்லாம்–
ஏழாம் பொருத்தம் (I – பக். 163)

(8) கௌரவர்கள் பாண்டவர்களை விருந்துக்கு அழைத்த நிலையில்:

தம்மை–
விருந்துக்கு அழைத்தது–
வேங்கை என்பதை–
மருந்துக்கும் அறியாத
மறிகள்... (I – பக். 169)

(9) சத்தியவதியைப் பற்றியது:

அவள்–
பரதவர்குலத்துப்
பாவை!–இந்தப்
பூவில்–எந்தப்
பூவிலும் இல்லாத
வாசத்தை–தன்
கேசத்தில்–
வைத்திருக்கும் பூவை!
வலைச்சேரியில்–
உலவும்
வாசனைச் சேரி;
நெய்தல் நிலத்தில்
பெய்த–
நறுமண மாரி! (I – பக். 32)

(10) சந்தனு–சத்தியவதிமீது கொண்ட காதல் பற்றியது:

புத்திர வாஞ்சை–
ஒருபுறம்;

சத்தியவதியின்
சித்திரவதனம்—
ஒருபுறம்; இங்ஙனம்—
இழுபறி நிலையில்—சந்தனு
இளைத்துப் போனான்;
இருபுறம் அடிவாங்கும்
மிருதங்கம் ஆனான்! (I—பக். 34)

(11) சந்தனு காமக்கடலில் திளைத்தது பற்றியது:

வானவப் பெண்—முன்னம்
வாரி சுருட்டிய மெத்தையை—
மீனவப் பெண்—தூசுதட்டி
மீட்டும் விரித்தாள்;
பிறகு—தன்மேல்
பிச்சாய் இருக்கும்
புருஷனையே—மார்புக்
கச்சாய் தரித்தாள்!

காவலன்—
குடம்குடமாய்க் குடித்தான்—
காய்ச்சிய பாலை; பின்—
கும்மிருட்டில் படித்தான்
காமத்துப் பாலை!
அரசன் நினைவில்—
அந்நியமானது—
அத்தினபுரம்; அதிக
அந்நியோந் நியமானது—
அந்தப்புரம்! (I—பக். 35-36)

(12) காட்சியில்லாத காவலன் கணிகனிடம் கூறும் போக்கில் வாலியாரின் வாக்கு:

பிள்ளைப் பாசம் என்பது—ஒரு
பிள்ளைப் பூச்சியல்ல; தேள்! (I—பக். 259)

(13) பகாசூரனுக்கு விருந்தாக வேண்டி முறைவரும் பிராமண குடும்பம்; குடும்பத் தலைவன் பேசுகின்றதை வாலியார் வாக்கில்

ஒன்றின் மீது—
ஒருவன் மனம்...

பற்று வைக்கிறது; அந்தப்
பற்று—
பற்று வைத்தவன் நெஞ்சிலேயே
புற்று வைக்கிறது; அந்தப்
புற்று—
புற்று வைத்தவன் உயிருக்கே—
முற்று வைக்கிறது; இந்த—
முற்றுக்கு—ஒரு
முற்று வைக்கும் ஞானத்தை—
முற்றாக—எந்த மனம்
கற்று வைக்கிறது?
....
பாசம் என்பது—நம்
பாதத்தை வழுக்கும்—
பாசம்;
பந்தம் என்பது—நமை
பஸ்பமாய் பொசுக்கும்
பந்தம்! (I – 312)

(14) அந்தணன் தன் மகள், மகனைப் பற்றிக் கூறுவது—வாலியார் வாக்கில் காண்பது:

நம்—
பிரியமுள்ள—
புதல்வியோ—
இன்னும்—

பூப்படையாத—
பூ; பூத்துப்—
பூ முடிய வேண்டிய—
பூ!

இது—
ஏழைப்பூ என்றாலும்—
எவரும் உண்ணுகின்ற—
வாழைப்பூ அல்ல;
வாசப்பூ சூடி—மண
வாசல் கண்டு—ஒரு
நேசப்பூ தோள்தழுவி—
நெடுநாள்—
குங்குமம் சுமக்கவேண்டிய—
குங்குமப் பூ!
....
இதோ! நம்—
இனிய மகன்; நம்—
எண்ண மயில் மீது—
எழுந்தருளும் குகன்;
சின்னஞ்சிறுவன்;
சீலத்தில் இன்னொரு துருவன்! (I – பக். 312-13)

(15) வீற்றிருந்தது
வியாசன் அருளிய ஞானக்கண்;
வினவியது
வெளிச்சமிலா ஊனக்கண்! (II – 382)

இங்கு 'ஞானக்கண்', 'ஊனக்கண்' என்ற இரு உருவகங்கள் முறையே சஞ்சயனையும் திருதராட்டிரனையும் குறிக்கின்றன.

இங்ஙனம் எண்ணற்ற புதுவகை உவம உருவகங்கள் பாண்டவர் பூமியை அணி செய்கின்றன. அனைத்தையும் காட்டிவிட்டதாகக் கருதவேண்டா. நூலெங்கும் தடுக்கி விழும் இடங்களிலெல்லாம் இவற்றைக் கண்டு மகிழலாம். 'பாண்டவர் பூமி'யை ஊன்றிப் படிப்பவர்கள் சிந்தைக்கு இவை சிறந்ததோர் விருந்தாக அமைந்து களிப்பூட்டுவதைக் கண்டு மகிழலாம்.

சொல்லாட்சிச் சிறப்பு

சொற்கள் கருத்துகளை உணர்த்தும் குறியீடுகள். ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் என்பார் ஒரு சொல்லுக்கு வெவ்வேறான நான்கு பொருள்கள் இருப்பனவாகக் குறிப்பிடுவார்.[1] அவற்றை அவர் கருத்து (Sense), உணர்ச்சி (Feeling), தொனி (Tone) உள்நோக்கம் (Intention) என்று முறைப்படுத்தி ஓதுவர். கருத்து என்பது பேசுவோர் கூறுவது; அது பொது அநுபவத்தில் இருப்பதை அல்லது நிகழ்வதைக் குறிக்கும். அஃது அறிவு நிலையைச் சார்ந்திருக்குமேயன்றி உள்ளக்கிளர்ச்சிகளைச் சார்ந்திராது. அதை ஒருவித 'மனச்சுட்டு' என்றுகூடக் கருதலாம். பேசுவோர் கையாளும் சொற்கள் அவர் எண்ணிக்கொண்டிருக்கும் கருத்தினையே கேட்போரையும் எண்ணுமாறு சுட்டுகின்றன. கேட்போர் புரிந்துகொண்டால் கருத்து கடத்தப்பட்டு விட்டதாகக் கருதலாம். பேசுவோரும் தம் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டார் என்று நினைக்கலாம்.

உணர்ச்சி என்பது அகவயமானது. (Subjective); உட்பகுதியைச் சார்ந்தது. அது கருத்தினைத் தழுவியிருப்பினும், அதனின்று எளிதாகப் பிரித்தறியக்கூடியது. வண்ணப் படங்கள் அணி செய்யும் நூலொன்றினுக்கு மதிப்புரை எழுதுவோர், "படங்களை நோக்க இந்நூலை எவரும் விரும்பி ஏற்பர்; நூற்பொருளை நோக்க எவரும் புறக்கணிக்கவே செய்வர்" என்று கூறினால் அவர் நூலாசிரியர்தம் கருத்தை வெளியிடுவதில் வெற்றி கொண்டார் என்று கருதலாம். ஆனால், அவர்தம்

1 காண்க: The Practical Criticition pp. 79-88; 330-1, 353-7. Principles of Literary Criticition pp. 195-286

சொல்நயத்தால் களிப்பினை அவருக்கு உணர்த்தினாரா என்பது ஐயத்திற்குரியது.

தொனி என்பது கூறுவோர் கேட்போரிடையே கொண்டுள்ள மனப்பான்மையே (Attifude) என்பது ரிச்சர்ட்ஸின் கருத்து. பேசுவோர் கேட்போருக் கேற்பத் தம் பேச்சின் சொல் வளத்தை (Diction) மாற்றியமைத்துக் கொள்வதுடன், கேட்போரிடம் தாம் கொண்டுள்ள மனப்பான்மைக் கேற்பவும் அதனை மாற்றி அமைத்துக் கொள்கின்றார். கேட்போரிடம் தாம் இணக்கமாக இருக்க வேண்டும் என்று விரும்பினால் மேற்கொள்ளும் தொனி வல்லந்தமாகச் சண்டைக் கிழுக்கும்போது கையாளும் தொனியினின்றும் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும். இன்று நாம் காணும் கேட்கும் அரசியல் பேச்சு எழுத்துக் களில் இங்ஙனம் மாறுபட்ட தொனிகளைக் காணலாம்.

உள்நோக்கம் என்பதை தொனியினின்று வேறு பிரித்து அறிய முடியாது. வஞ்சப் புகழ்ச்சியை (Irony) உள்நோக்கத்திற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். சொல்லுவோர் ஒன்றைக் கூறுகின்றார்; அஃது எதிரான பொருளைத் தருகின்றது. கேட்போரைத் தம் சொல்வழிப் பொருளை (Literal meaning) அப்படியே முற்றிலும் எதிரான பொருளாக மாற்றிக்கொள்ள வேண்டுமென்பது கூறுவோரின் உள்நோக்கமாகும். எனவே, நாம் ஒரு சொல்லின் பொருள் அஃது உணர்த்தும் கருத்தென்றும், அதுவே ஏனைய மூன்றிற்கும் அடிப்படையாக அமைகின்றது என்றும் அறிகின்றோம்.

சாதாரணமாக நாம் பேசுங்கால், கருத்து மட்டிலும் உணர்த்தப்பெறுகின்றது; அதில் உணர்ச்சியைப் புலப்படுத்துவது அரிது. ஏனைய இரண்டு கூறுகளைப் புலப்படுத்துவது மேலும் அரிது. எனவே, ஒரு சொல்லின் பொருளை அறிய வேண்டுமாயின், அது சுட்டும் எல்லை

முழுவதையும் அறிதல் வேண்டும். சொல்லால் ஆக்கப் பெறுவது கவிதையாதலின் கவிதையை அநுபவிக்க வேண்டுமாயின் அதிலுள்ள சொற்களின் பல்வேறு பொருள்களை இடம் நோக்கி அறிதல் இன்றியமையாதது.

சொற்களைக் கொண்டே கவிஞன் தன் கற்பனைத் திறனால் கவிதைகளைப் படைக்கின்றான். இக்கருத்தை நன்னூலாரும்

பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூல்முடியு மாறு. [2]

[பனுவல் – கவிதை]

என்று கூறியுள்ளமையைக் காணலாம். உரைநடையில் கையாளப்பெறும் சொற்களுக்கும் கவிதையில் கையாளப் பெறும் சொற்களுக்கும் வேற்றுமை இல்லை. கவிஞன் அந்தச் சொற்களைக் கையாளும் முறையால்தான் அந்த வேற்றுமை உள்ளது. கவிதைகளில் சொற்கள் அமையும் பொழுது இடத்திற்கேற்றவாறும், சந்தர்ப்பத்திற்கேற்ற வாறும், உணர்ச்சிக்கேற்றவாறும், சுவைக்கேற்றவாறும் அமைந்து கவிதையைப் பொலிவுடையதாக்குகின்றன. இச்சொற்களைக் கையாளுதல் கவிஞனின் திறனைப் பொறுத்தது; அவனது மேதைத்தன்மையையும் பொறுத்தது.

மகாவித்துவான் திரிசிபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் கவிதை இயற்றும் திறனைக் குறித்து,

எனைவைத்தி எனை வைத்தி யெனப்பதங்கள்
இடைஇடைநின்று இரந்து வேண்ட
இனிவைப்பாம் இனிவைப்பாம் பொறுத்திடுமின்
பொறுத்திடுமின் என்று கூறி

2 நன்னூல்-நூற்பா 24

நினைவுற்ற ஒருகடிகைக் களவில்கவித்
தொடைதொடுத்து நிமலர் பூணப்
புனைவுற்ற மீனாட்சி சுந்தரவள்
ளலைப்போலப் புவியில் யாரே.

என்று இராமசாமி அய்யர் என்ற பிள்ளையவர்களின் நண்பர் பாடியுள்ளது ஈண்டு சிந்திக்கற்பாலது. சொற்கள் அகராதியினின்றும் புறப்பட்டு வந்து தேன் கூட்டில் ஈக்கள் பல வரிசைகளாக நிற்பதைப் போல் ஏவல் கேட்டு நிற்கும். ஆனால் கவிஞர் வாலியிடம் சொற்கள் அவரைக் கேட்காமலேயே கவிதையின் அடிகளில் அமைந்து கவிதையைப் பொலிவுடையதாக்குகின்றன. இந்நிலையில் அவரது 'பாண்டவர் பூமியில்' சொற்கள் அமைந்து கிடக்கும் நேர்த்தியைச் சில தலைப்புகளில் கண்டு மகிழ்வோம்.

1. சொல்வீச்சுகள்:

வாலியாரின் புதுக்கவிதையில் கல்வீச்சை நிகர்த்த, வாள்வீச்சையொத்த சொல்வீச்சு ஒரு சிறப்பான அம்சம். பாண்டவர் பூமியில் இவை தொட்ட இடங்களிலெல்லாம் தட்டுப்படுவதைக் காணலாம்; தடுக்கி விழும் இடங்கள் தோறும் இவை அமைந்து ஒவ்வொன்றும் ஒருபடித் தேனாக இனிப்பதையும் கண்டு மகிழலாம்.

நூலின் தொடக்கத்திலேயே சொல்வீச்சைக் காட்டுவதற்குப் பிள்ளையார் சுழி இடுகின்றார்.

மூவரசு காத்து வந்த
முத்தமிழை—அந்தப்
பூவரசு சுற்றி வந்து
பெற்றவன் நான்;

3 சாமிநாதய்யர் உ.வே.சா. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் இரண்டாம் பாகம் - பக் 255

யாப்புக் கரணம் போட்டு
யாக்கும் வித்தையை—அங்கு
தோப்புக் கரணம் போட்டுக்
கற்றவன் நான் (I – பக். 6)

அந்த ஆனைமுகத்தானைச் சுற்றிவந்து வழிபட்டதால் தமக்கு இயல்பாக உள்ள பூனை பலம் ஆனை பலமாக வளர்ந்ததாகச் சாற்றுகின்றார்.

எதுகை பலம்;
மேனை பலம்;
இவையெல்லாம் எனக்கு—
பூனை பலம்! செழும்
பயிருக்கு எங்ஙனம்
சோனை பலம்? அங்ஙனம் என்—
பாட்டுக்கு அவன்தான்
ஆனைபலம்! (I – பக். 6)

இங்கு 'யானை பலம்', 'பூனை பலம்', 'சோனை பலம்', 'ஆனை பலம்' என்ற நான்கு சொற்றொடர்களும் சதுரங்கம் ஆடி சதுரங்கத்தால் சந்தி சிரிக்கும் கதைக்கு நம்மை இட்டுச் செல்கின்றன.

பிள்ளையார் சுழியைப்
பிள்ளையாரே போட்டு—
எழுதிய ஒரே கதை—
இந்தக் கதைதான்! (I – பக். 157)

என்ற அடிகள் நம் நாவில் தாண்டவம் ஆடும்போது மயிர் சிலிர்க்க வைக்கின்றன. ஏட்டில் பிள்ளையார் சுழியைக் காணும்போதெல்லாம் பாரதக் கதையை நம் மனத் திரையில் இரத்தினச் சுருக்கமாகக் காட்டுகின்றது!

கவிஞர் 'தன்அடக்கமாக'க் கூறும் அடியிற் கண்ட சொல் வீச்சுகள்:

இன்னும்—
இறவாதிருக்கும்—
ஒரு கதை; கிராமத்து—
மண்ணும்—
மறவாதிருக்கும்—
ஒருகதை; இதன்—
மகத்துவத்தைப் பேச—என்
கவித்து வத்திற்கு—ஏது
அருகதை?

உப்புக் கடலின்
உள்ளீ டெல்லாம்—ஒரு
செப்புக் குடமா
செப்பக் கூடும்?— நாகம்
கக்கும் மணியின்
கீர்த்தியை முழக்கி—சிறு
நாக்குப் பூச்சியின்
நாக்கா பாடும்?

திருப்பதிக் குடையின்
தெய்வீகத்தை—ஒரு
நாய்க் குடை கூறியா
நானிலம் அறியும்?—நிலத்தைப்
போர்க்கும் ஈட்டியின்
பெருமை ஈதென—ஒலை
ஈர்க்குப் பேசியா
ஊர்க்குப் புரியும்? (I – பக். 7-8)

மிக அற்புதமானவை. வைணவ சம்பிரதாயம் தன் — அடக்கத்திற்குப் (ஒருவிதமான நைச்சியாநுசந்தானம்) பேர் போனது. கம்பன் போன்ற மேதைகளிடம் இதனைக் காணலாம். ஆனால் வாலியார் கம்பனையும் மீறிவிட்டார் தம் கற்பனையில். 'உப்புக்கடல்—செப்புக்குடம்', 'நாகம் காக்கும்மணி—நாக்குப்பூச்சியின்நாக்கு' 'திருப்பதிக்குடை—

நாய்க்குடை', 'நிலத்தைப் பேர்க்கும் ஈட்டி—ஓலை ஈர்க்கு'— என்ற சொல்இணைகள் கவிஞரின் கற்பனைத் திறத்தை, அடக்கத்தின் சிறப்பை அற்புதமாகப் புலப்படுத்துகின்றன. புதுக்கவிதைக்கும் ஒருவித புனிதத் தன்மையையும் நல்குகின்றன. இதில் அமைந்துள்ள சொல்லாட்சியும் அற்புதம்.

கங்கை எட்டாம் குழந்தையை வெள்ளத்தில் வீசப்போன நிலையில் வேந்தன் சந்தனு ஈரமில்லா ஈரமங்கையை நோக்கிப் பேசிய நிலையை விவரிக்கும் வாலியார்:

வாழையடி வாழையென—
வந்துதித்த வாரிசுகள்—
ஏழை இழந்த ஏழை—
ஏந்திழையை வெறுத்தான்; அவள்
துட்டை எனத் தெரிந்து—இந்த
எட்டை இழக்குமுன்—தன்னை
இதுகாறும் பிணைத்திருந்த
கட்டை இறுத்தான் (I – பக். 14)

இதில் சிறப்பு 'ழகர' ஆட்சி அதிகமிருப்பதால் தமிழ் தேனாக இனிக்கின்றது. 'ஏழை—ஏழைகள்—ஏந்திழை', 'துட்டை—எட்டை—கட்டை' என்ற மூவிணைப்புகள் பொருள்நயந் தோன்ற நம் சிந்தனையில் குமிழியிடும் போது அங்கு மகிழ்ச்சித் துளிகளும் கொப்புளிக்கின்றன!

சந்தனு தன்னைப் புல்ல வந்தவள், பிள்ளை பெற்றுக் கொல்ல வந்தவள் என்று வசவுமாரிகளை முற்றுப்புள்ளி யில்லாமல் பேசி ஏசும் நிலையில், வாலியார் விவரிப்பது:

வானதி சிரித்தாள்! தன்
வழக்கை விரித்தாள்!

'ஒப்பரிய வேந்தே!
ஒப்பம் வைத்து நீ—

ஒப்புதல் ஈந்ததோர்
ஒப்பந்தம்—இப்பொழுது
ஒப்புக் கென்றானது;
இப்பந்தம்—இக்கணமே
இல்லையென்று போனது;
நிர்ப்பந்தம் செய்யினும்—
நில்லேன்; செல்வேன்! (I – பக். 14)

ஒரேமாதிரியாகப் பிறந்த சொற்கள் ஓரிடத்தில் அமைந்து நம்மிடத்தில் உவகையை விளைவிக்கின்றன. தவிர, ஒப்பந்தம்—இப்பந்தம்—நிர்ப்பந்தம் என்ற இணைப்பு நம்மிடம் 'பந்தம்' விளைவித்து பாப்பகுதியில் நம்மை ஆழங்கால் படச் செய்து மகிழ்விக்கின்றது.

சத்தியவதியைச் சந்தனுவிடம் சேர்த்து வைக்கும் வாய்ப்பினைக் காட்ட விரும்பிய வாலியார் கூறுவது.

சந்தனு மன்னனின்—
சரித்திரத்தில்....
தீர்த்தக் கரைகளே—
திருப்பு முனைகளைத்
தீர்மானிக்கின்றன!

நீளக் கிடக்கும்—ஏதோஒரு
நீல நதிக் கரையில்தான்—
நிகழ்கிறது—அவனது
நிச்சய தாம்பூலம்;...

....

ஒருநாள்—
யமுனைக் கரையில்—சந்தனு
உலா வருகையில்....
வழி நெடுக—சிறு
வாடை வீசியது;
வாடையில்—நறு
வாடை வீசியது!

அவன்—
மூக்கு நுனியை
முதலில் அது—
முத்தமிட்டது; பின்பு
மூக்குக்குள்ளேயே—
முகாம் இட்டது!

....

வாசத்தையே—தனக்கு
வழிகாட்டியாக—
அழைத்துக் கொண்டு—
அரசன் சென்றான்!

....

வாடையில் வந்த—நறு
வாடையை வீசியது—நூல்
ஆடையில் நின்ற—பால்
ஆடையென்று கண்டான்!

....

நறுமணத்தை—
நுகர்ந்த மணம்—
மறுமணத்தை
விரும்பியது; அதற்கு—
மறுபடியும் வாலிபம்
திரும்பியது! (I – பக். 31-32)

இப்பகுதியில் ஒரு மணம் கங்கைக் கரையில் நடைபெற்றதைச் சுட்டுகின்றது; மறுமணம் யமுனைக் கரையில் நடைபெறுவதைக் காட்டுகிறது. 'சொல்லுமுறை' நம்மை வசீகரிக்கின்றது. மேலும் 'வாடை—வாடையில்—வாடை' என்ற ஒரே சொல்லின் நளின நடைப் போக்கு நம் கவனத்தைக் கவர்கின்றது. வாடை 'மூக்கு நுனியை முத்தமிடல்—மூக்குக்குள்ளேயே முகாமிடல்' என்ற தொடர் நம் மூக்கு நுனியை வேர்க்க வைக்கின்றது. 'வாடை—நூல்

ஆடை—பால் ஆடை' என்ற தொடர் வாடை நூல் ஆடையில் நின்ற பால் ஆடையைக் காட்டுவது அற்புதம்! நறுமணம் மறுமணத்தில் கொண்டு செலுத்திய முறை மேலும் அற்புதம்! அற்புதம்!

அம்புலி குலத்து சந்தனு மீனவப் பெண்ணை மணந்து இன்பம் அநுபவித்ததைக் கூறும் போக்கு படிப்போரின் கவனத்தை ஈர்க்கும் போக்காக மாறுகின்றது.

மன்னனுக்கு—
மறுபடியும் ஒரு
'முதல் இரவு!'—இந்த
முதல் இரவு—
முடியாமலே நீண்டது—பல
பகல் இரவு!

வானவப்பெண்—முன்னம்
வாரிச்சுருட்டிய மெத்தையை—
மீனவப்பெண்—தூசுதட்டி
மீட்டும் விரித்தாள்;
பிறகு—தன் மேல்
பிச்சாய் இருக்கும்
புருஷனையே—மார்புக்
கச்சாய்த் தரித்தாள்!

காவலன்
குடங்குடமாய்க் குடித்தான்—
காய்ச்சிய பாலை; பின்—
கும்மிருட்டில் படித்தான்—
காமத்துப் பாலை!
அரசன் நினைவில்—
அந்நியமானது—
அத்தினபுரம்; அதிக
அந்நியோந்நிய மானது—
அந்தப்புரம்!

கிழக்கு வெளுப்பதில்
கவலைப் படாது—ஆசை
மனத்து
அழுக்கு வெளுப்பதில்
ஆலாப் பறந்தான்;
அல்லெது? பகலெது?
அறவே மறந்தான்!
அவனை—
ஆட்டிவைத்தன—அகத்திணை
ஆவல்களின் ஏவல்கள்; செவி
சேராதொழிந்தன—சிறுகாலைச்
சேவல்களின் கூவல்கள்! (I – பக். 35-36)

இப்பகுதியைச் சொல்லும் முறையில் வாலியாரின் புகழ் வானத்தின் உச்சியைத் தொட்டுவிடுகின்றது. 'முதலிரவு'—முதல் இரவு முடியாமல்—'பகல் இரவு' என்ற தொடர் இரவு பகல் ஓயாமல் அநுபவித்த சிற்றின்ப நுகர்ச்சியின் அளவை அறுதியிடும் பாங்கு சிறப்புடையது. 'வானவப் பெண்—மீனவப் பெண்' 'பிச்சாய்—கச்சாய்' 'காய்ச்சிய பால்—காமத்துப் பால்' 'அத்தினபுரம்—அந்தப்புரம்' 'கிழக்கு வெளுப்பு—அழுக்கு வெளுப்பு' அகத்திணை ஆவல்களின் ஏவல்கள்—சிறுகாலைச் சேவல் கள்' இந்த சொல்லிணைகள் உணர்த்தும் பொருள்களின் சாயல்கள் (Shades of meaning) *இந்திர வில்லைப்போல், பல வண்ண ஒளிகளைப்போல் அமைகின்றன.*

சகுனியைப் பற்றி வாலியார் கூறும் சொல்வீச்சுகளில் சில:

அவன்—
மூவகை மலங்களின்
மொத்தக் கலவை; அவனது
முக்கிய தொழில்
மூளைச் சலவை!

அப்பழுக்கற்ற—
ஆர் மூளையும்...
சகுனியின்—
சலவைக்குப் பின்—

அண்டா அண்டாவாய்
அழுக்கை அள்ளி அப்பிக்கும்;
அதன்பிறகு—
அவன்...
அஞ்சும் மூணும் ஆறு என்றால்
அப்படியே அதை ஒப்பிக்கும்
....
சகப் புரட்டனான—
சகுனி மாமன்தான்—

கெட்ட—
பெண்ணாவி போல்—
துரியோதனனைப்
பிடித்துப் பாடம் நடத்தும்—
அண்ணாவி!

அப்பாவி அக்குளில் சித்தி—
ஆடுகின்ற துரியோதனன்—ஓர்
அப்பாவி! உடல்—
விட்டாவி பிரிந்தாலும்—மாமன்
விரலசைக்காது விடமாட்டான்
கொட்டாவி!

....
மருகனுக்கு—
மூக்கு அரித்தாலும்....
மாமன்—
சொன்னால்தான்—
சொறிவான்; மாமன்—
சொல்லாவிடினும்—அவன்

மேல்
சொல்லணா அன்பை
மருகன்
சொரிவான்! (I – பக். 165-166)

அற்புதமான சொற்கள் அமைந்தது இப்பகுதி. கம்பன், வில்லி, பாரதி போன்ற கவிஞர்கள் தீய கதைமாந்தர்களைக் கூறும்போது அவர்களையும் மீறி கடுமையான சொற்கள்அவர்கள் நாக்கிலிருந்து உதிரும். கவிஞர் வாலியும் இதற்கு விலக்கல்லர்.

கடுஞ்சொற்களே அவனைச் சாடுகின்றன. 'பெண்ணாவி—அண்ணாவி', 'அப் பாவி—அப்பாவி—விட்டாவி— காட்டாவி', 'சொறிவான்—சொரிவான்' என்ற சொல்லிணைகள் உணர்த்தும் பொருள் நயங்கள் பல்சுவை கொண்ட மிளகு மிட்டாய்களை ஒருங்கே வாயும் நாக்கும் அநுபவித்து மகிழ்வனபோல் நமது மனம் அநுபவித்து மகிழ்கின்றது.

விடங்கலந்த உணவை உண்ட பீமன் நாகலோகத் திற்குப் போகின்றான்; ஆயிரம் ஆனை பலம் தரும் இரசங் களைப் பருகி உறங்கிவிடுகின்றான். வாலியார் கூறுவார்:

(அ) எட்டு நாட்கள்–
இமைகளைத் திறவாமல்–
இருந்தான் பிள்ளை;
எட்டு நாட்கள்–
இமைகளை மூடாமல்–
இருந்தாள் அன்னை! (I – பக். 178)

வீமனைக் காணாமல் நால்வரும் கவலைப் பட்டனர். குந்தி குமுறுகின்றாள். பெற்ற வயிறு அல்லவா? விதுரனின் ஆறுதல் மொழியைக் கேட்டு குந்தி தேவி குழப்பம் நீங்கினாள். கவிஞர் வாலி இந்நிலையைக் கூறுவது:

(ஆ) எட்டு நாட்களுக்குப் பின்
இமை மூடித் தூங்கினாள்!

இங்கு—
தாயின் கண்கள்—
துயிலாடையைப் புனைந்தன
அங்கு—
தனயனின் கண்கள்
துயிலாடையைக் களைந்தன! (I – பக். 184)

இந்த இரண்டு பகுதிகளும் இரண்டு இயல்களின் முடிவுகளைக் காட்டுபவை. முதலாவதில் பிள்ளை தூங்குகிறான்; அன்னை விழித்திருக்கின்றாள். இங்கு போதை உறக்கத்தை விளைவிக்கின்றது; கவலை உறக்கத்தைத் தவிர்க்கின்றது. இரண்டாவதில் தாயின் கவலை நீங்குகின்றது; உறங்குகின்றாள். இங்கு தனயனின் போதை நீங்குகின்றது; உறக்கமும் ஓடுகின்றது. இரண்டையும் படிக்கும் நாம் கவிஞரின் கவிதைத் திறனைக் கண்டு மகிழ்கின்றோம், பாராட்டுகின்றோம்.

இயல்களின் முடிவுகளை சிறப்பாய் அமைப்பதை போல் இயல்களின் தொடக்கங்களையும் அற்புதமாய் அமையச் செய்யும் ஆற்றலை உடையவர் வாலியார். சொல் வீச்சிலேயே இதனைக் காணலாம். வீமனைக் காணாத நிலையைக் கூறும் இயலின் தொடக்கம் இது:

நீர் விளையாட்டும்—
நிலாச் சாப்பாடும்—
முடிந்தபின்—இலேசாய்
விடிந்தபின்—

நகரம் திரும்ப
நிச்சயிக்கையில்தான்....

ஒரு
கைவிரல்கள் நான்கும்—

கவலைப்பட்டன; கண்ணீர்த்
திவலை விட்டன! (I – பக். 178)

வீமன் வந்து சேர்ந்த இயலைத் தொடங்கும் தொடக்கம் இது:

உறக்க ஊசியின்–
ஒற்றைக் காதில்–

மயக்க நூலை–
மெல்லக் கோத்து–

நன்கு தைக்கப்பட்டிருந்த
நான்கு இமைகளிலும்...
பையப் பையத்
தையல் விட்டது;

எட்டு நாள்களாய்–
இருட்டில் கிடந்த...
வீமனின்
விழிகளின் மேல்–
'பளிச்'சென–காலை
வெளிச்சம் பட்டது!

பிலம் போன்ற–தனது
பேய் வாயைத் திறந்து...

அதன் வழியே.
கொட்டாவி ஒன்றை–
அனுப்பினான் வெளியே! (I – பக். 184-185)

வீமனைக் காணாத நிலையில் நால்வரும் கவலைப் பட்ட நிலையை 'கட்டைவிரலைக் காணாமல் கைவிரல் நான்கும்' கவலைப்பட்டனவாகக் கூறினார். வீமன் விழித்த பின் வருவதை நான்கு இமைகளிலும் தையல் பையைப் பைய விட்டதாகக் கூறினார். இரண்டிலும் உருவகங்கள் உள்ளத்தைத் தொடுவனவாக அமைந்துள்ளன. ஈண்டும் கவிஞரின் கவிதைத் திறனை வியந்து போற்றுகின்றோம்.

வில்விஜயனைக் கொண்டு தம்மை அவமதித்த துருபதனை வென்ற துரோணர் அவனை நோக்கிப் பேசியதில் ஒரு பகுதி:

'உன்—
சொல் அன்றுகொல்லும்; என்—
புல் நின்று கொல்லும்!

இந்தப்
பார்ப்பனன் உனக்கு—
பழைய முகம்;
பாலியத்தில் பல நாள்—
பழகிய முகம்!
ஆயினும்—நமக்குள்
அறிமுகம்—
ஆகாதது போல் காட்டினாய்—
பாரா முகம்!
நீ—
நூறுமுகம் விரித்தபடி—
நைச்சியமாய் நடித்தாலும்—
ஆறுமுகம் விதித்தபடிதான்—
ஆர்வாழ்வும் நடக்கும்;
ஆவனவும்—
அல்லாதனவும்—ஆகிப்
போவனவும்—அந்தப்
பெருமான் கைக்குள் அடக்கம்!

ஏறுமுகம் ஆயினும்—
இறங்குமுகம் ஆயினும்—
மாறுமுகம் இல்லாதான்—
மட்டுமே மனிதன்!

அத்தகு—
சுமுகம் உள்ளவனைத்தான்
தலைமேல் வைத்துக் கூத்தாடும்—
சமூகம்!

ஒருமுகம் இல்லாது—எதிலும்
இருமுகம் காட்டும்—உனது
திருமுகம் என்பதால்தான்—அது
செருமுகம் கண்டு விழுந்தது! (I – பக். 247)

சுடுசொல் நிறைந்த இந்தப் பகுதியில் 'முகம்' என்ற சொல்லின் ஆதிக்கம் சொல்லுந்தரமன்று. பல்வேறு விதமான முகபாவனைகளைத் துரோணன் ஒரு காலத்தில் பல்வேறு முகபாவனைகளைத் தனக்குக் காட்டிய துருபதனுக்குக் காட்டுகின்றான். இந்த இருவேறு முகபாவனைகளைக் கவிதையில் காட்டுபவர் கவிஞர் வாலி என்பதைக் காண்பவர் நாம்; நம் மனத்திரையில் அனைத்து முகபாவனைகளும் விழுந்து நம்மை மகிழ்விக்கின்றன. சொல் வீச்சுகள் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன.

துருபதனிடம் அவமானம் அடைந்த துரோணர் அர்ச்சுனனைக் கொண்டு வென்று அவனை அடிமையாக்குவதைக் கவிஞர் வாலி கூறுவது

பாஞ்சால தேசத்தின்
பரம்பரைச் சொத்து—அதன்
பாவலர் எழுதி வைத்த—
புகழ்நூல்! அதைப்
புழுதியில் சாய்த்தது—ஒரு
பூணூல்!

....

முன்னோர் நட்டு வைத்த...

வெற்றித் துவசம்—
உயரப் பறந்து—
வானத்து நீலத்தை—
வழித்தது! அத்தகு—
பதாகையை—அந்தப்
பார்த்தன் கைக்கணை—ஒரு
கௌபீனம் போல்—இன்று
கிழித்தது! (I – பக். 251)

இந்தப் பகுதியில் சொல் வீச்சில் உள்ள 'புகழ்நூல்—பூணூல்', 'வானத்து நீலத்தை வழித்தது—கௌபீனம் போல் கிழிந்தது' என்ற சொல்லிணைகள் துருபதனின் புகழ் அதல பாதாளத்தில் வீழ்ந்ததைக் காட்டுகின்றன.

அர்ச்சுனனின் அத்திர ஆற்றலையும் பிறவற்றையும் கண்டு மகிழ்ந்த துருபதனின் மனஓட்டத்தைக் காட்டுவதாக வாலியார் கூறுவது:

அவனொடு–
விற்போர் புரிபவர்–
வீரத்தை– அவனிடம்
விற்போர் ஆவர்!

அவனொடு–
மற்போர் புரிபவர்–
மண்டியிட்டு–அவன்முன்
நிற்போர் ஆவர்!

அவன்–
கொம்பில்லாத–
நந்தி! தும்பிக்
கையில்லாத–
தந்தி! ஆண்தகை–
ஆருமே அவனுக்குப்
பிந்தி!
அவனைப் பெற–
ஆற்றியிருக்க வேண்டும் தவம்...
குந்தி–மணி
உந்தி–நெடுநாள்
முந்தி! (I – பக். 251)

அற்புதமான சொல்வீச்சுகள். அவை நம் உள்ளத்தில் கல் வீச்சுகள்போல் விழுகின்றன. இப்பகுதியிலுள்ள 'விற்போர்—விற்போர்', 'மற்போர்—நிற்போர்', 'நந்தி—தந்தி—பிந்தி—குந்தி—உந்தி—முந்தி' என்று ஒரே விதமான

ஓசையூட்டும் சொல்லிணைகளைப்பற்றி என் சொல்ல? சொல்லால் சொல்லமுடியாத சொல்லமுதம்! ஆழியின் அமுதம் போல் இனிப்பது!

அரக்கு மாளிகையிலிருந்து தப்பிய பாண்டவர்களும் அவர்களைப் பெற்றெடுத்த குந்திதேவியும் பல காதம் நடந்து, கடந்து, மரக்கலம் ஏறி மந்தாகினியைக் கடந்து ஓர் ஆலமரத்தடியில் ஓய்வு கொண்டபோது அனைவரும் உறங்க, உறங்காத வீமனின் கருத்தோட்டத்தில் ஒரு பகுதி:

வீமனின்—
உள்ளம் வாடியது.
தாயும் தமையனும்—
தம்பியரும்—
தரையில் துயில்வது கண்டு...
விழிகளில்—
வெள்ளம் ஓடியது!

'யாதவ குலம்—
யாத்த வெண்பா;
குருகுலம் மருகியாய்—
கொஞ்சிய பெண்பா!
எங்கள்—
தாயெனும் தெய்வதம்—
தரையே—பட்டுப்
பாயெனப் படுப்பதா?
அரைத்த சந்தனத்தை
அமேத்தியம்
அவமதிக்க விடுப்பதா?

இதோ!
இங்குத் துயில்கின்ற—எனது
தமையன் தருமன்—எனக்குத்
தாயைப் போன்றவன்; மகா—
தருமிஷ்டன்; தூசதும்பற்ற—
தீயைப் போன்றவன் !

இந்த—
நெருப்புக்கு—
நெருப்பு வைக்க முயன்றானே—
கால்
செருப்புக்கு—
சமமாகாத சுயோதனன்; தன்
சுவாதீனம் அற்று—
சனியின் காலடியில்—ஒரு
சுவானம் போலிருக்கும் ஈனன்!

என்—
தாய்; தமையன்;
தம்பியர் தவிக்க—அந்த
நாய் தவிசு கொள்ள—
நான் விடுவதா?
வெய்யிலை—
வெந்நீர் சுடுவதா?

துரியோதனனே!
துள்ளாதே! எங்களை—
எரித்து விட்டதாய்—
எள்ளாதே!
தருக்கியே! நீ—
தாயின்...

குடல்வழி வருகையில்—
ஜடம்; பின்பு—
குடம் வழி வருகையில்
விடம்! (I – பக். 288 -290)

இவ்வாறு வீமன் மனத்திற்குள் புலம்புகின்றான். வெகுளியில் அவலம் வெளிப்படுகின்றது. 'வெண்பா—பெண்பா' என்ற இணை கொஞ்சுவதையும், 'நெருப்புக்கு—நெருப்பு வைக்க—செருப்புக்கு சமமாகாத' தொடரில் வெகுளியும் அவலமும் சேர்ந்து வெளிப்படுவதையும் கண்டு மகிழலாம்.

இராசசூய யாகத்தினால் பாண்டவர்களின் ஏற்றம் கண்டு பொறாமைப்பட்ட துரியன் நிலையை விவரிப்பார் வாலியார்:

உழவுக் கொடியை—நீள்
வயலில் உயர்த்தி—தனது
முழவுக் கொடியை—மனை
முகட்டில் உயர்த்தி—வெற்றி
விழவுக் கொடியை—பெரும்
வேள்வியில் உயர்த்தி—தருமன்
இழவுக் கொடியை—துரியன்
இதயத்தில் உயர்த்தினான்;

இழுக்காற்றில் எப்பவும்—
இருந்து புரள்பவனை—இப்போது
அழுக்காற்றில்—தருமன்
அழுத்தி அயர்த்தினான்!
நாகக் கொடியை—
நிமிர்த்திப் பிடிப்போன்—நிதம்
சோகக் கொடியை—
சுமந்து நின்றான்;

'சமத்காரம் இல்லாத—
சாதாரண தருமனுக்கு—
சார்வ பௌமன் என்று—
சோடசோப சாரமா?
தவளையைத் தின்னும்—
தண்ணீர்ப் பாம்பிற்கு—
ஆதிசேஷன் என்னும்—
அங்கீகாரமா?'
என—
எரிச்சல் கொண்டான்! (II – பக். 109)

என்பதாக. 'துரியோதனன் இழவுக் கொடியை உயர்த்தினான்' என்று சொல்வதற்கு அமைத்த பீடிகை அற்புதம்! உயர்த்தியது எங்கே? தன் இதயத்தில்.

பீடிகையாக வருவதில் உயர்த்திய கொடிகள் யாவும் கண்ணுக்குப் புலனாகுபவை. இழவுக் கொடியோ இதயத்தில் உயர்த்தப் பெற்றதால் கட்புலனுக்கு எட்டாதது! அழுக்காற்றில் அழுந்தியவனாதலால் அவன் உயர்த்திய கொடி இதயத்தில் அமைந்தது. நாகக் கொடியோன் 'சுமப்பது' சோகக் கொடி என்று கூறும் வாலியார் உயர்த்திய கொடி என்பதை நம் உள்ளம் காண்கின்றது! 'அழுக்காறு உடையார்க்கு அது சாலும்' (குறள்—165) என்ற வாக்கால் அழுக்காறே பகையாக நின்று துரியனை அழிப்பதைக் காண்கின்றோம். இதனால் வள்ளுவரே அழுக்காற்றின்மீது வெகுளி கொண்டு அதைப் 'பாவி' என்று ஏசுகின்றார் (குறள்—168)

வனவாசத்தை அடியோடு வெறுத்த பாஞ்சாலி உதிஷ்ட்ரனைப் பேச்சால் சுடும்போது, அதனால் வீமனின் சினத்தீ விசிறப்பட்டுச் சீறி எழுந்த அவனது பேச்சு:

'அன்புள்ள—
அண்ணனே!

தாயொரு பக்கம்; நம்—
தாரமும் நாமும் ஒரு பக்கம்;
வாய் கிழிய தருமம் பேசி—
வந்ததால் வந்தது துக்கம்!

தடித்தடியாய்த்—
தம்பிகளை வைத்துக் கொண்டு—
தடியாலடிக்காமல்—நீ
தருமத்தாலடித்தால்...

சொறிகள் மிகுந்த
சுணங்கங்களிடம்—நல்ல
நெறிகள் ஏற்படுமா?
விழுந்து விழுந்து—
உபதேசித்தாலும்—அவற்றின்
வெறிகள் விடுபடுமா?

தீரனுக்கு—
தொண்டையில் கூட—
இருக்கக் கூடாது கோழை;
இருந்தால் அவன் கோழை.

நீ—
ஏழையானதில்—
எனக்கு வருத்தமில்லை;
கோழையானதுதான்—நம்
குலத்திற்குப் பொருத்தமில்லை! (II – பக். 162)

இதில் அன்புள்ள அண்ணனை வீமன் தன் சொற்களால் மெதுவாகவே அடிப்பதைக் காண்கின்றோம். 'தடியாலடிக்காமல் தருமத்தால் அடித்தல்' வீமனுக்குப் பிடிக்காத செயல். 'கோழை—கோழை', 'ஏழை—கோழை' என்ற இணைகளில் உள்ள சிறப்பு ழகர ஆட்சி வீமனின் சொல்லடியை மென்மையாக்கி விடுகின்றது. சொற்பொருள் நம் உள்ளத்தைக் கவர்கின்றது.

'ஓம வயலில் பூத்த பஞ்சாலி' தான் பெண்ணாய் பிறந்ததே பூமிக்குப் பாரம் என்று சொல்லி கண்ணீர்ப் பெருகிய நிலையில் இருந்ததைக் கண்ட கண்ணபெருமான் தேற்றிய நிலை:

உத்தமியே!
உன்னைத் துன்புறுத்திய...
மூர்க்கர் வாழ்வை—காலம்
முடித்து வைக்கும்; முடியா உன்—
மழைக் கூந்தலையும்—அதுவே
முடித்து வைக்கும்!

கண்ணீரில்—உன்னைக்
குளிப்பாட்டியோர்—
புண்ணீரில் மிதப்பர்—
புணைகளாக; அந்தக்—

கயவர்கள் தேகமெங்கும்—
கணைகளாக!

....
இனியவளே! உன்—
இருட்டுகளை—
வெளிச்சங்கள்—
விழுங்குவது உறுதி;
நீளமான துன்பங்களுக்கும்—
நிச்சயம் உண்டு ஓர் இறுதி!

ஆதவன் தேரின்—
அச்சு முடிந்து—
அகிலம் மீது—அது
பொக்கென வீழினும்...

அலையெறியும்—
ஆழிகள் யாவும்—ஆரும்
வலையெறிய—
வழியின்றி வற்றிப் போயினும்...

மேருமலை—
மெலிவுற்று—குப்பைகள்
சேருமலை—எனச்
சுருங்க நேரினும்...

நேமி போல்—
நாளும் சுறும்—
பூமியோர விபத்தில் சிக்கிப்
பொடிப் பொடியாக ஆயினும்...

பெண்ணே! என்
பிரதிக்ஞை—
பொய்த்துப் போகாது; அது—
பொருளற்ற தாகாது! (II – பக். 165-166)

பரந்தாமனின் பிரதிக்ஞை நம் உள்ளத்தை உருக்குகின்றது. இந்தப் பிரதிக்ஞை பாஞ்சாலியின்

விழிப்புனலைத் துடைக்கின்றது. நம் கண்ணில் வழியும் நீரை நாமே துடைத்துக் கொள்ளுகின்றோம். 'முடியா—முடித்து' , 'கண்ணீர்—புண்ணீர்', 'புணைகள்—கணைகள்', 'அலை—வலை', 'மேருமலை—சேருமலை', 'நேமி—பூமி' என்ற சொல்லிணைகளில் பொருள் நயம் சொல்வீச்சின் ஆழத்தையும் அருமைப்பாட்டையும் உணரச் செய்கின்றது.

அஞ்ஞாத வாசகாலத்தில் அர்ச்சுனன் தான் ஏற்கப் போகும் வேடத்தைப்பற்றி இயமன் புதல்வனுக்கு எடுத்துரைக்கும் பகுதி இது:

பால் கணக்கு—
பார்க்கும் குடும்பத்தில்
பெண்ணெடுத்தேன்; இப்போது—
பால் கணக்கு—
பார்க்க வொண்ணாத—
பிறப்பெடுப்பேன்!

....
அப்பாலும் அல்லாது—
இப்பாலும் இல்லாது—
எப்பாலும் தன்பாலாய்
ஏற்பதற்கு ஏலாது...

அப்பால் நின்றிருக்கும்—
அப்பால் நானாவேன்; ஓர்—
அலிப்பால் என்றாகி—விராடன்
அந்தப்புரம் நான் போவேன் !
....
அரச குடும்பத்து—
அரிவையர் தம்மை—
ஆனந்த வாவியில்
அமிழ்த்துவேன்...

....
'பிருகன்னளை!' எனும்—
பெயர் பூணுவேன்;

நாணலைவிட—அதிக
நளினமாக நாணுவேன்!
அருங்கலைகளால்—நான்
அந்தப்புரத்தை ஆளுவேன்;
ஆறிரண்டு திங்கள்—அன்பின்
ஆண்மைக்கு மீளுவேன்!' (II – 247-49)

இப்பகுதி 'பீடுநடைபோட்ட என் பின்னவன் ஒரு பேடு நடைபோடுவதா?' என்று தருமனைத் துக்கிக்கச் செய்கின்றது. நாம் விதியை நொந்து கொள்ளுகின்றோம். 'அப்பால்—இப்பால்—எப்பால்—அலிப்பால்' என்ற இணையின் சதுரங்க ஆட்டம் நம்மையும் ஆட்டம் போட வைக்கின்றது. 'பூணுவேன்—நாணுவேன்', 'ஆளுவேன்—மீளுவேன்' என்ற இணைகளும் இணையற்றவை.

விராடநகரில் போர் தொடங்கும்போது போர்க்களத்தில் அர்ச்சுனன் நிற்பதைச் சுட்டிக் காட்டித் துரோணர் அபாயத்தை அறிவுறுத்தியபோது அருக்கன் மகன் ஆணவத்தோடு பேசியதைக் கவிஞர் வாலி:

'தொடை நடுங்கும்—
துரோணர் பேச்சால்—நம்
படைநடுங்கும்;

நடுங்கட்டும்;
ஓட்டுக்குள் கூர்மம் போல்—
ஒடுங்கட்டும்!

தனியனாய் நின்று—நான்
தனஞ்சயனை எதிர்ப்பேன்;

....

தந்திருக்கிறேன் வாக்கு—என்
தோழன் துரியனுக்கு; என்—
யாக்கை; உயிர்; வாழ்க்கை—
யாவும் உரியனுக்கு!

அருமை நண்பனுக்கு—நான்
அன்றுபட்ட கடனை—

இன்று தீர்ப்பேன்; ஒற்றையாய்–
நின்று தீர்ப்பேன்–விஜயனை
வென்று தீர்ப்பேன்
இல்லையேல்–
கொன்று தீர்ப்பேன் !

கவுரவர் சேனை–
களத்தில்–
கைகட்டி நின்றாலும் சரி!
இல்லை–
கடைகட்டி சென்றாலும் சரி!' (II – 280-81)

என்று சொல் உதிர்ப்பார்.

கர்ணன் வாக்காக வாலியாரின் சொல்வீச்சில் 'யாக்கை—வாழ்க்கை', 'அன்று—இன்று—நின்று—கொன்று', 'கைகட்டி—கடைகட்டி' என்ற சொல் இணைகள் விடும் பல்வேறு பொருள் ஒளிகள் வாலியின் சொற்றிறனை உணர்த்துகின்றன.

நடைபெற வேண்டியவற்றை யோசிக்கக்கூடிய சபையில் ஆழிப்படையானும் மேழிப்படையானும் பேசி முடித்தபின் சாத்தகி என்னும் யாசுவ சூரன் வெடித்த பேச்சில் வாலியாரின் வாக்கு:

'தன் கருத்தை–ஒருவன்
தாபிக்க–
தலைகீழாய் நிற்கலாம்; பல–
தேவனிடம் அதைக் கற்கலாம்!

வக்கணையாய்–
வாதிப்பதாலும்;
வாதித்து வாதித்து–
சாதிப்பதாலும்...

மறம்–
அறம் ஆகாது; குடம் குடமாய்
நீராட்டினாலும்–காகத்தின்
நிறம் போகாது!

எனக்கு—
ஏற்புடையது—
கண்ணன் சொன்னது;
ஏற்காதது—
அண்ணன் சொன்னது!

வெறுங்கிளையும்; பழம்—
தரும் கிளையும்—ஒரே
விருட்சத்தில்—
உண்டாவது போல்...

அச்சமும் ஆண்மையும்
அண்ணன் தம்பி ஆவதுண்டு;
அவரவர் குணத்திற்கேற்ப—
அவரவர் புத்தி போவதுண்டு!

....
பலராமன்—
பரிந்து பேசும்...
கௌரவர்க்கு ஏது—
கௌரவம்?
பெட்டைகளுக்கு ஏது
பௌருஷம்!

....
கௌரவர் பாண்டவர்—
கலப்பை—பலராமன்
காண விருப்பினால்—ஏந்தட்டும்
கலப்பை!

பழிக்கு அஞ்சாத துரியன்—
படையெடுத்தா லன்றி—
வழிக்கு வரமாட்டான்;
அவனை—
ஊழ்வினை உறுத்துவதால்—
உதிர்ஷ்டிரனுக்கு—உரிய
வாழ்வினைத் தரமாட்டான்!' (II – பக். 295-96)

யாதவவீரன் பேச்சில் கவிஞர் வாலி அமைத்த கவிதைப் பகுதியில் உள்ள 'வாதிப்பதாலும்—சாதிப்ப தாலும்', 'அறம்—மறம்—நிற' 'கண்ணன்—அண்ணன்', 'வெறும் கிளை—பழம் தரும் கிளை', 'கலப்பை—கலப்பை', 'பழிக்கு—வழிக்கு', 'ஊழ்வினை—வாழ்வினை' என்ற சொல்லிணைகள் சாதாரணமானவைதாம். ஆனால் அவை உணர்த்தும் பொருள் நளினங்கள் அற்புதமானவை. இவற்றுடன் சொல் வீச்சுகளை நிறுத்திக் கொள்வோம்.

2. பழமொழிகள்:

ஒரு நாட்டின் பண்பாட்டை உணர்வதற்கு அந்நாட்டு மொழியுள் வழங்கும்—பழமொழிகள் பெரிதும் பயன் படுவன. பழமொழிகளே அந்நாட்டு மக்கள்பால் அடிபட்டு வரும் மனஇயல்புகளை எடுத்துக் காட்டுவன வாகும். உலக வழக்காகிய இப்பழமொழிகளின் மேன்மையைக் கருதி இவற்றைக் கையாண்டு பொருள் சிறக்கச் செய்தல் நாவன்மையுடைய கற்றோர்க்கும் மற்றோர்க்கும் இயல்பாகின்றது. பழமொழிகளை சிறந்த உரைநடை ஆசிரியர் எவரும் கையாளுவர். பழமொழிகள் பயின்று வரச் செய்யுள் நூல் இயற்றும் தன்மை பேரறிஞர் நூல்களில் காணப்படும். சைவ சமயப் பெரியார்களும் ஆழ்வார் பெருமக்களும் பெருங்காப்பியப் புலவர்களும் பழமொழிகளைக் கையாண்டு தம் படைப்புகளைச் சிறப்படையச் செய்தனர். இம்மரபையொட்டி கவிஞர் வாலியும் தம் 'பாண்டவர் பூமியில்' பழமொழிகளைக் கையாண்டிருப்பதால் அப்புதுக்கவிதைக் காவியம் புதுப் பொலிவினைப் பெற்றுப் புது மெருகுடன் திகழ்கின்றது.

இனி, இப்பழமொழிகளின் ஆட்சியை இக்காவியத்தில் காண்போம்.தம்மை அவமானப்படுத்தி அனுப்பிய துருபதனைத் தன் அருமைச்சீடன் அர்ச்சுனனைக்

கொண்டு வென்று தம்முன் நிறுத்தப்பெற்றபோது துரோணன் அவனை நோக்கிப் பேசியது:

உன்–
துருப்பை வென்று–
துப்பியது மென்று–என்
தருப்பை என்று–
தெரிந்ததா இன்று?
உன்–
சொல் அன்று கொல்லும்; என்–
புல் நின்று கொல்லும்! (I – 247)

துருபதனுடைய சொல் தாடி வைத்த தனுர்வேதத்தை அன்று கொன்றது. இன்று புல் (தருப்பை) அவனை நின்றுகொன்றது.

ஏறுமுகம் ஆயினும்–
இறங்குமுகம் ஆயினும்–
மாறுமுகம் இல்லாதான்–
மட்டுமே மனிதன்! (I – 247)

என்ற உண்மை ஈண்டு உணர்த்தப் பெறுகின்றது.

துருபதனுக்கு துரோணன் பல்வேறு புத்திமதிகளைக் கூறுகின்றான். அந்த உபதேசம் ஒவ்வொன்றும்,

செவிடன் காதில்
ஊதிய சங்காய்ப் போன்றதுதான்–
விசேஷம் (I – பக். 250)

இதில் 'செவிடன் காதில் ஊதிய சங்கொலி' என்ற பழமொழி அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம்.

'கணிகன்'[4] கண்ணிலான் மைந்தன் துரியனுக்கு நரியின் கதைமூலம் கூறும் அரச தருமத்தில் வருவது

சாமானியன்–
தருமம் வேறு;

4 'கணிகன்' சொன்னதுதான் நரிக்கதை.

சத்திரியன்—
தருமம் வேறு!

சாமானியன்—
செய்யும் கொலை—
தன் பொருட்டு; ஒரு
சத்திரியன்—
செய்யும் கொலை—
மண்பொருட்டு!

அது—
நீச தந்திரம்;
இது
ராஜதந்திரம்!

ரத்தமும்—
யுத்தமும் இல்லாமல்;
ராஜாக்கள் இல்லை;
அத்தரும்—
முட்களும் இல்லாமல்
ரோஜாக்கள் இல்லை! (I – பக். 261)

இந்தப் பகுதியின் இறுதியில் உள்ள பழமொழி 'No Roses are with thorns' *என்ற ஆங்கிலப் பழமொழியின் சாயலுடன் அமைந்துள்ளதைக் கண்டு மகிழலாம்.*

தவிர கணிகன் வாக்கில் அமைந்துள்ள அரச தருமத்தைப் பாரதியார் துரியன் வாக்கில் அமைக்கின்றார் என்பதை அவர்தம் 'பாஞ்சாலி சபதத்தில்' காண முடிகின்றது.

நாகலோகத்தில் வீமன் இருக்கும்போது 'வாசுகி' என்னும் பெயரில் விளங்குகின்ற கட்டுவிரியன் தன் பிரஜைகளை நோக்கிப் பேசுவது

'என்—
பிரியமான
பிரஜைகளே!

பாம்பென்றால்–
படைநடுங்கும்;
படைஞர் தம்
துடை நடுங்கும்;

இந்தப்
பழமொழியை–இன்றொருவன்
பொய்யாக்கியிருக்கிறான்; ஒரு–
நடுக்கமோ–
நலிவோ இன்றி–
நம்மில் சிலரை நொறுக்கி
நொய்யாக்கியிருக்கிறான்! (I – 174)

என்று கூறுபவன், வீமன். நிலத்தில் காட்டும் பலத்தை சலத்தில் காட்டுகிறானே என்று மெச்சி வியக்கின்றான். இதில் 'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்ற பழமொழி பளிச்சிடுவதைக் காணலாம். இதனை ஒரு பாம்பையே வாலியார் பேச வைப்பது அற்புதம்! இது கதைக்கு மெருகூட்டுவதைக் கண்டு மகிழலாம்.

நரிக் கதையில் இது ஒரு பகுதி. நரி ஒரு புலி, ஓர் எலி, ஒரு செந்நாய், ஒரு கீரிப்பிள்ளை இவர்களை நோக்கிப் பேசுவது. மான் கறியை முழுவதையும் நரி, தான் மட்டும் தின்ன நினைத்ததற்கு மேற்கொண்ட தந்திரம் இது.

'நண்பர்களே!
நீராடாமல்–
அருந்தக் கூடாது–
ஆகாரம்; இது–
அருந்தவத்தோர் கூறிய–
ஆசாரம்!

'கூழைக் குடித்தாலும்–
குளித்துக் குடி!' என்று–
மூத்தோர் உரைத்திட்ட–
மூதுரைப் படி...

அதோ!
அந்த நதியில்—
களைப்புத் தீரக்
குளியுங்கள்; பிறகு வந்து—
கலைவினை உண்டு
களியுங்கள்! (I – பக். 264)

'கூழானாலும் குளித்துக் குடி; கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்பது பழமொழி. இந்தப் பழமொழியின் முற்பகுதி இதில் அமைந்து சந்தர்ப்பத்தையொட்டி நிகழ்ச்சியை விளக்குகின்றது. நரியின் தந்திரத்தையும் விளங்கச் செய்கின்றது.

இதே நரிக் கதையில் நரி கீரியை நோக்கிப் பேசும் பேச்சிலும் இன்னொரு பழமொழியின் சாயல் தலை காட்டுகின்றது. பேசும் பேச்சு இது:

'உனக்கு—
பலமிருந்தால்—என்னோடு
போரிடு; இல்லையேல்—
'பிழைத்தது புண்ணியம்' என்று
போய்விடு!'

நரியை
கையெடுத்துக் கும்பிட்டது—
கீரி; நாலு வார்த்தை—
கீழ்க்கண்டவாறு—
கூறி! (I – பக். 266-67)

'பிழைத்தது புண்ணியம்' என்பது 'தப்பித்தது தம்பிரா புண்ணியம்' என்ற பழமொழியின் பிரதிபலிப்பு என்பதாகக் கொள்வதில் தவறு இல்லை! என்று கூறுகின்றது.

அரக்கு மாளிகையில் பாண்டவர் இருந்தபோது அம்மாளிகை பற்றி ஐவருக்கும் ஐயம் எழுகின்றது. தருமன்

பேசுகின்றான். அவன் பேச்சில் 'நாய்வாலை நிமிர்த்த முடியாது' என்ற பழமொழி அமைகின்றது.

இனி—
எத்துணை முயன்றாலும்...

துரியோதனனை—
திருத்த முடியாது—
துரோணர் போன்ற—
தொல்லறிவாளர் புகட்டும்—
நல்லறிவால்; அவன்—
நிமிர்த்த முடியாத—
நாய்வால்! (I – பக். 279)

பழமொழி அமைந்த பகுதி பளிச்சென்று ஒளிவிட்டு பொருளைத் தெளிவாக விளக்குகின்றது.

சஞ்சயன் தூது வந்த இடத்திலும் 'நாய்வால்' துரியனைச் சுட்டுகின்றது. இங்கு கண்ணன் பேச்சில் இது வருகின்றது.

'என் தேசம் எனக்கு;
உன் தேசம் உனக்கு!' என—
இரு தரப்பார்க்கும்—ஓர்
இணக்கம் வரச் செய்தால்—
சயமாகலாம்—நீ வந்த
சந்தேசம் உனக்கு!

அப்படியோர்—
அமைதி ஒப்பந்தம்—
உருவானால் சந்தோஷம்;
ஆனால்—
உருவாகும் என்று சந்தேகம்!

நாளிதுவரை—துரியன் பற்றி
நான்செய்த ஆய்வால்—
அறிந்த உண்மை யாதெனில்—
அவனொரு நாய்வால்! (II – பக். 328)

கண்ணன் கருத்திலும் அவன் திருத்தமுடியாத— நிமிர்த்த முடியாத நாய்வால் போன்ற—சன்மம் என்பது பெறப்படுகின்றது.

பகாசுரனைப் பற்றிக் கூறும் பகுதியில் வருவது; தான் ஓட்டிவந்த வண்டியில் இருக்கும் உணவு வகைபறாக்களை உண்டு முடித்து விட நினைக்கின்றான் வீமன்.

ஒவ்வொரு கவளமாய்—வாய்
உள்ளே நுழைத்தான்;
பகாசுரனை—இடைஇடையே
பேர் சொல்லி அழைத்தான்!

புகை நெருப்பாய்—வெளிப்
போந்தான்—
குகை நெருப்பாய்—
குடியிருக்கும் பகாசுரன்;
நண்டு கொழுத்தால்—வளையை
நீங்குமெனும் பழமொழிப்படி—
உண்டு கொழுத்து—ஊர், நடுங்க
உலவுகின்ற மகோதரன் ! (I – பக். 319)

உண்டு கொழுத்தவன் பகாசுரன். தன் உணவை ஒரு தடியன் தின்பது கண்டு சினத்துடன் ஓடி வருகின்றான். சந்தர்ப்பத்துக்கேற்றவாறு பழமொழி அமைந்து படிப் போருக்கு மகிழ்ச்சியூட்டுகின்றது.

சினங்கொண்ட பகாசுரன் பீமன் முதுகில் குத்தினான். பீமன் அதனைப் பொருட்படுத்தவில்லை.

பீமனின்—
பிடர்பிடித்திழுத்து—
பூமியில் புரட்டினான்;
அவனைப்
பிட்டுப் பிட்டுப் பிட்டு—
பிட்டுபோல் புசித்திடப்
போவதாய் மிரட்டினான்!

ஓடவிட்டு—எலியின்
உயிர் வாங்கும் பூசைபோல்
சிறிது
ஆடவிட்டு—அசுரன்
ஆவி வாங்க எண்ணினான்...

பீமன்!
பலாயணன் என்னும்
நாமன் ! (I—பக். 318-19)

அரக்கன் கொடுத்த அடிகளைப் பொறுத்திருந்து பின்னர் அவனைக் கொல்ல நினைத்த பீமனுக்கு ஓடவிட்டு எலியைப் பிடிக்கும் பூனை ஒப்பாகின்றது. இந்தப் பழமொழி நிகழ்ச்சிக்குப் புதுப்பொலிவு தந்து புகழாரம் சூட்டிக் கொள்ளுகின்றது.

கௌசிகன் என்னும் பார்ப்பனனிடம் தருமவியாதன் பேசும் பேச்சு இது:

'அந்தண னாயினும்—நீ
அடைந்த அறிவு—
அருளற்றது; அனைத்தும்—
தெய்வ சித்தம்—எனத்
தேராததால்—அது
தெருளற்றது!

பிறப்பால் நானொரு—
புளிஞன்; எனினும்—
தெய்வானுக் கிரகத்தால்—நான்
தெளிஞன்!

....
முத்தொழில் புரியும்—
மூலம்தான்—ஒருவனை
'இத்தொழில் புரிக!' என—
ஏவுகின்றது; எனவே—

எத்தொழில் இங்கு—
எவன் புரிந்தாலும்—
அத்தொழில் பலாபலன்—
அதனையே மேவுகின்றது!

எதையும்—தனது
எண்ணப்படி...

கைவாளா வெட்டும்! வாள்
பிடித்த—
கைதானே வெட்டும்! இதில்
வாளுக்கு உண்டோ—ஒரு
வாழ்த்தும் திட்டும்? (II – பக். 220)

இங்கு 'எய்தவன் இருக்க அம்பை நோவதால் பயன் என்?' என்ற பழமொழி புதைந்து—மறைந்து—கிடப்பதைக் காணமுடிகின்றது.

புளிஞன் பேச்சு தொடர்கின்றது.

நான்—
கடவுள் கையிலிருக்கும்—
கருவி; என்னை நான்
இங்ஙனம்
கண்டு கொண்டதால்—
ஆகவில்லை
கருவி!

....
என்—
குடிப்படை வாழ—
கொலைத் தொழில்
செய்தாலும்—நான்
அடிப்படை தருமத்தை விட்டு—
அகன்றதில்லை; என்—

பிள்ளைப்—
பிராயம் முதல்—நான்
புத்தியறிந்து—பொய்கள்
புகன்றதில்லை!

அடுத்தவர் நலம் கண்டு—
அசூயைப் பட்டதில்லை;
எனைக்—
கெடுத்தவர் தம்மையும் நான்
கடுஞ்சொல்லால் சுட்டதில்லை;

எனை—
நம்பிய பேர்களை—நான்
நடுவில் விட்டதில்லை; ஈன்ற—
கும்பியை—கோயிலாக—நான்
கும்பிடாமல் கெட்டதில்லை! (I – பக். 220-21)

இந்தப் பகுதியில் 'நம்பிய பேர்களை நட்டாற்றில் விடலாகாது', 'தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை', 'பொய் சொல்லலாகாது' என்பன போன்ற பழமொழிகள்—முதுமொழிகள்—பொதிந்து கிடக்குமாற்றைக் கண்டு மகிழலாம்!

பாண்டவர்களின் சொத்தைப் பறிமுதல் பண்ண வேண்டும் என்ற திட்டத்தைச் சகுனி சொன்னதும் சீறி எழுந்து பேசுகின்றான் திருதராஷ்டிரன். கண்ணனுக்கு முதல் மரியாதை தந்தது சிறப்பு என்பதை ஆமோதிக்கும் பாங்கில் இவன் பேச்சு அமைகின்றது. அவன் ஓர் அவதாரம் என்பதை உணர்கின்றான்.

கோனார்—
குடிப்பிறந்த கண்ணன்—
ஊனார்—
உடலெடுத்த கடவுள்; வாக்குத்
தந்தான்—

தரைமகளைக் காக்க; ஆதலால்—
வந்தான்—
ஒருத்தியின் கருவுள்!
நீ—
மலர்மாலையின் மேன்மையறியா—
மர்க்கடம்;
கர்ப்பூர வாசமறிந்திடாத—
கர்த்தபம்!' (II – பக். 122)

என்று சகுனியைத் திட்டித் தீர்க்கிறான். 'குரங்குக்குப் பூமாலையின் பெருமை தெரியுமா?' 'கழுதை அறியுமா கர்ப்பூர வாசனை?' என்பன பழமொழிகள். இந்த இரு பழமொழிகளும் கண்ணிலான் பேச்சில் அமைந்து கருத்துகளைத் தெளிவாக்குவதுடன் சகுனியின் இழி நிலைக்கு மார்க்கடமும் (குரங்கு), கர்த்தபமும் (கழுதை) உவமைகளாக அமைகின்றன.

பதின்மூன்று ஆண்டு வனவாசம் முடிந்தபின் மேற்கொண்டு நடைபெற வேண்டியவற்றைச் சிந்திக்கக் கூடிய அவையில் ஆழியான் பேச்சு முடிந்தபின் மேழியான் பேசுகின்ற பேச்சில் ஒரு பழமொழி அமைகின்றது. 'கண்ணைத் திறந்துகொண்டு கிணற்றில் விழுகின்ற கதை' என்பதும் உலக வசனம். மேழியான் பேச்சு:

'என்—
இளவல்—
கண்ணன் சொன்னபடி—
ஒன்றும்
கட்டாயமல்ல;
தேசம் பாதி—
தருமனுக்குத்—
துரியோதனன்—
தந்தாக வேண்டுமென்று
சொல்ல!

....
கண்ணைத் திறந்துகொண்டு—
கிணற்றில் விழுந்த கதையாய்...
தவறு என்று—தருமன்
தெரிந்தே ஆடினான்—
கவறு;
கவறில் விட்டதைக் கேட்பது—
கவறைக் காட்டிலும்—
தவறு!
இழந்தது—
இழந்ததுதான்; கிணற்றில்—
விழுந்தது—
விழுந்ததுதான்! (II – பக். 294)

இதில் பழமொழி அமைந்திருப்பதைக் காணலாம். பன்னிரண்டு ஆண்டு அடவி வாசம்; அதற்குப் பிறகு ஓராண்டு ஆரும் அறியாவ்வாசம். இவை முடிந்தபின் வந்தால் பாதி தேசம் தருவது என்பது ஒப்பந்தப் பேச்சு. அதைக் கேட்பதற்கு முறை ஏற்படுத்துகின்றான் ஆழியான். இராமாவதாரத்தில் இலக்குவன் தம்பியாக இருந்து கூர்மையாகவும் நியாயமாகவும் பேசுவதையும் கிருஷ்ணாவதாரத்தில் பலராமன் அண்ணனாக அமைந்து சற்று மழுங்கலாகவும் அநியாயமாகவும் பேசுவதையும் காண்கின்றோம்.

விசுவரூபன் வரலாறு கூறுமிடத்தில் இரண்டு பழமொழிகள் வருகின்றன. சல்லியன் கூற்றாக இஃது அமைகின்றது.

தேவராஜன்—
திரிலோகாதிபதி;
'எவர் வரினும்—அவன்
எழுந்திருக்கத் தேவையில்லை!'
என்பது எழுதப்படாத விதி!

இந்திரன் காதில்—ஒருவன்
இதை ஓதினான்; சும்மா
இருந்த சங்கை—அவன்
எடுத்து ஊதினான்!

....
அமரர்களின்—
அரசனான—
பிரகஸ்பதி—ஒருநாள்
புரந்தரன் சபைக்கு வர...

எதிர்கொள்ளவில்லை—அவன்
எழுந்து;
கூனிக் குறுகியது—அறிவுக்
கொழுந்து!

அவமானத்தை—
அரசகுரு—
அரைக்கணம் தாங்கினார்;
அடுத்த கணம் நீங்கினார்!

குருபோன பின்—
குறு குறு வென்று—
குறுகுறுத்தது—
குற்றமுள்ள—நெஞ்சு;

கண்ணிமைக்கும் நேரத்தில்—
காலுக்கு இறங்கியது—
குடுமிக்கு ஏறியிருந்த
கர்வமெனும் நஞ்சு! (II – பக். 312-13)

'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி' 'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்' என்ற இரண்டு பழமொழிகள் இங்குத் தலைகாட்டி சந்தர்ப்பத்திற்கேற்பப் பொருள் விளக்கம் தருவதைக் கண்டு மகிழலாம்.

தூதுவனாக துருபதன் அனுப்பிய புரோகிதன் பேச்சில் ஒரு பழமொழி அமைந்துள்ளது. அவன் அரசவையை நோக்கிப் பேசிய பேச்சின் ஒரு பகுதி இது. ஈண்டு அறம் அதிகமாக வற்புறுத்தப் பெறுகின்றது.

'அறம்–
அனாதியானது; அதன்–
ஆற்றல்
அலாதியானது!

அறத்தை–
அச்சாணியாகக் கொண்டுதான்–
அம்புவித் தேரின்–
ஆழி சுழலுகின்றது;

....
மாறக்கூடியது;
மாற்றம் உடையது;
தரணியின்–
தட்பவெப்பம்!

மாறாதது;
மாற்ற முடியாதது;
தருமத்தின்–
திட்ப நுட்பம்!

அது மட்டுமல்ல;
அறம் எது? எது–
அறம் அல்லாதது? என–
அறிய மாட்டாது...

சில–
சந்தர்ப்பம் நேரலாம்;
அப்போதெல்லாம்–
ஆன்றோர் கருத்தைக் கோரலாம்!

அங்ஙனம்—
ஆன்றோர் துணையைக்
கோடாது...

தான் நினைப்பதே அறம்;
தான் நடப்பதே தடம்;
தான் வகுப்பதே நெறி;
தான் உரைப்பதே சரி;

என—ஓரரசு
எண்ணுவானாயின்...

நாளாவட்டத்தில்—அந்த
நாட்டரசன் நடை சாயும்;
....
கொற்றக் குடைசாவும்!

....
அரசு—
அன்று கொல்லும்; அறம்—
நெடுநாள்—
நின்று கொல்லும்!

அதற்குக் காரணம்—
அறம் பிழைத்தார்க்கு...

வருந்தவும்—
திருந்தவும்—
அது—நீண்ட
அவகாசம் கொடுக்கும்;(II – 322)

'அரசு அன்று கொல்லும்; தெய்வம் நின்று கொல்லும்' என்பது பழமொழி; அன்றாட வாழ்க்கையில் மக்கள் வாக்கில் அடிபடுவது. இது புரோகிதன் வாக்கில் அமைந்து கௌரவர்களின் போக்குக்கு நல்லொளி காட்டி அவர் களைத் திருத்த முயல்கின்றது.

இந்தப் பழமொழி விதுரன் பேச்சிலும் வருகின்றது. தன் மகன் தாயத்தார் தேயத்தைச் சூதில் வெல்ல நினைக்கும் திட்டத்தை விதுரனிடம் சொல்லும்போது அவன் வெகுண்டு உரைத்த மறுமொழியில் வருகின்றது இது.

‘அரசே! இது—
அம்புலி குலத்தை—
அழிக்கக்கூடிய செயல்; ஓர்—
அய்யம் இல்லை;
அத்தினபுரத்தில்—
மையம் கொண்டுவிட்டது புயல்!

....

தருமனின் தோல்வி—
தருமத்தின் தோல்வி; பின்
கவுரவர் கதி என்ன? விடை—
காணமுடியாத கேள்வி?

அரசு அன்று கொல்லும்;
அறம் நின்று கொல்லும்;
ஆனால் கொல்லும்; இது—
ஆன்றோர் வார்த்தை; செல்லும்! (II – பக். 125)

பெரும்பாலும் இப்பழமொழி பெரியவர்கள் பேச்சில்—அறிஞர்களின் பேச்சில்—தான் அடிபடும்;

கண்ணன் தூது வந்தபோது கண்ணன் தேசத்தில் பாதியைத் திரும்பக் கொடுப்பது தான் நியாயம் என்று சொன்னபோது துரியோதனன் மறுத்துப் பேசின பேச்சில் ஒரு பழமொழி வந்து விழுகிறது. பழமொழி இது: ‘ஒரு கண்ணுக்கு வெண்ணெய்; மறு கண்ணுக்கு சுண்ணாம்பு’ என்பது. துரியனின் பேச்சில் ஒரு பகுதி:

‘கண்ணா! தருமன்—
கைக்குழந்தையா என்ன—
கிலுகிலுப்பையை ஆட்டிக்—
கிட்டத்தில் வரவழைக்க?

கவறாடக் கூப்பிட்டால்—
'கூடாது! பிசகு!' என்று
கூறியிருக்கலாமே—எங்கள்
குலப்பெருமை பிழைக்க!

....
இஷ்டப்பட்டுதானே ஆடினான்!
இஷ்டமில்லாமலா கூடினான்!

'ஆடுவது தவறு!' என அறியாதா—
ஆடினான் கவறு?
தருமன் தோற்காமல்—இந்தத்
துரியன் தோற்றிருந்தால்....
'தோற்றது தோற்றதுதான்!' என்று—
துரத்தியிருப்பாய் என்னை
தேவகி மைந்தனே! எனக்குத்—
தெரியாதா என்ன உன்னை?
வேண்டியவர்க்கு ஒருநீதி;
வேண்டாதவர்க்கு ஒருநீதி; நீ—
ஒரு கண்ணில் வெண்ணெய் வைத்து—
மறுகண்ணில் வைப்பாய்
மண்ணை!

இதோ!
இறுதியாகச் சொல்லுகிறேன்...
பங்காளிகளான—
பாண்டவர்க்கு
ஊசிமுனை நிலம்கூட—
உதவமாட்டேன்;
ஈயிருக்கும் இடம்கூட
ஈயமாட்டேன்!

செல்லுக; சென்று—
சொல்லுக!' (II – பக். 347)

இந்தப் பகுதியில் பழமொழி அமைந்து கருத்தைத் தெளிவாக்குவதைக் கண்டு மகிழலாம்.

தளமைத் தளபதியைத் தேர்ந்தெடுக்கும் கட்டம். சாது தருமன் சகோதரரோடு விவாதிக்கச் சபையைக் கூட்டிப் பேசும்போது வருவது:

முடிந்த மட்டும்–
முயற்சித்தேன்–
ரத்த வேள்வியை–
ரத்து செய்ய;
சிறியன் துரியன்–
சீண்டிவிட்டான் நம்மை;
சாபங்கள் கொண்டு–சமரில்
சித்து செய்ய!

'விழாதே! விழாதே!' என்று–
விளக்கே வேண்டியும்–
'விழுவேன்! விழுவேன்!' என்று
விழுகிறது விட்டில்;
என்ன செய்வது? அப்படி–
எழுதி வைத்திருக்கிறது–
விதி–
விட்டிலின் பொட்டில்! (II – பக். 357)

'விளக்கில் விட்டில் விழுவது' என்ற பழமொழியைப் பாமரர்களும் அறிவார்கள். துரியோதனன் விட்டில் போல் போரில் விழுகின்றான் என்று தருமன் விளக்குகின்றான்.

இங்ஙனமாக மக்கள் வாக்கில் நிரந்தரமாய் வாழும் பழமொழிகளைக் காவியத்தில் இடம்பெறச் செய்து 'பாண்டவர் பூமி' எனும் புதுக்கவிதைக் காவியத்திற்கு புத்துணர்வு ஊட்டிப் பொலியச் செய்துள்ளார் வாலியார் என்ற புதுக்கவிதை நாயகர்; புதுக்கவிதை யாப்பதற்கே பிறப்பெடுத்த புனிதர்.

3. சொல்–பொருள் நயப் பகுதிகள்

இறைவனையோ பெரியோர்களையோ குறிப்பிடு மிடத்து அருளாசிரியர்கள் அருள் மொழிகளில் சொற்களை அடுக்கி அடுக்கி வந்து அழகு கொழிப்பதைக் காணலாம்.

அப்பர் சுவாமிகளின் திருத்தாண்டகத்தில் பல இடங்கள் இவ்வாறு அமைந்துள்ளன.

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
கலையாகிக் கலைஞானம் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோ ராணுமாகிப்
பிரளயத்துக் கப்பாலோர் அண்டமாகி
எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்துமாகி
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்றவாறே (6. 94: 2)

இஃது அப்பர் சுவாமிகளின் திருத்தாண்டகப் பாடல்

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னையென் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாம் தவிரப் பணிப்பானை,
இன்னதன்னயன் என்றறி யொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை,
அன்னம் வைகும் வயற்பழனத்து அணியார்
ஊரானை மறக்கலு மாமே. (7.59:1)

இது தம்பிரான் தோழரின் சுந்தரக் கவிதை.

இத்தகைய அருளிச் செயலின் சாயலில் கவிஞர் வாலியின் 'பாண்டவர் பூமியில்' சில இடங்கள் அமைந்து காவியத்திற்குப் பொலிவினையும் சிறப்பினையும் நல்குகின்றன. சில இடங்களைக் காட்டுவேன்.

(1) துருவாசமுனிவர் அருளிய மந்திரத்தைச் சோதித்து அறிய ஆதித்தனைச் சிந்தையில் வைத்து ஓத, அவன் பிரசன்னமானான்:

ஞாயிறு வனப்பை—
தரையில் பூத்த—
திங்கள் கண்டது;
அதன்—
செவ்வாய் வியந்து—

‘அடடா!
அற்புதன்!’ என்றது;
அந்த—
வியாழன் நிகர்த்த—துர்
வாசன் அருளால்—சொக்க
வெள்ளி நிகர்த்த—ஒரு
வெளிச்சம் ‘பளிச்’சென—
சனித்து நின்றது; ஒப்பின்றி
தனித்து நின்றது! (I – பக். 90)

இப்பகுதியில் ‘ஞாயிறு’ முதல் ‘சனி’ முடிய ஏழு வார நாட்களும் அமைந்துள்ள அற்புதத்தைக் காணலாம். வாலியாரின் தன்னிகரற்ற கவித்துவத் திறமையையும் மெச்சிப் பாராட்டலாம்.

(2) நிலாச்சாப்பாடு முடிந்ததும் பீமன் காணப்பட வில்லை. சகோதரர்கள் பதறுகின்றனர். குந்தி குமுறுகின் றாள். பெற்ற வயிறு பற்றி எரிகின்றது. இந்நிலையில் அவள் எண்ணமாக வாலியாரின் வாக்கு:

என்—
பெறற்கரிய பேற்றை;
பெருவீரம்—
பொங்குகின்ற ஊற்றை;
பேசற்கரிய—
பேராண்மையின் ஈற்றை;
பொன்மடியில்—
பூத்தெழுந்த நாற்றை;
புகழ் வெளிச்சம்—
பாய்ச்சும் ஒளிக் கீற்றை;
பீமன் என்னும்—
புண்ணியப் பூங்காற்றை... (I – பக். 183)

அடுக்கடுக்காக அமைந்த உருவகங்கள் சொல்நயம்—பொருள் நயத்தைப் பொலிவுறச் செய்கின்றன.

(3) நாகலோகத்தில் வீமன் அதிதியாகக் கொள்ளப் பெறுகின்றான். அவனைக் கண்டதும் அரவுகளில் ஒருவனான ஆர்யகன் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றான். இரத்தபாசம் துடிக்கின்றது. இவன் ஆயர்குலத்து ஒருவனாக விளங்கியவன். பீமன் இவனது பௌத்திரனுக்குப் பௌத்திரனாக அமைகின்றான். இந்நிலையில் வாலியார் வாக்கு:

பெயரனுக்குப் பெயரானை; பல—
பெயர் பெயர்த்தாலும்—தனது
பெயர் எஞ்ஞான்றும்
பெயரானை;

ஆண்யானை—
அனையானை;
இனிய தருமனின்
இளையானை;
வன்கணாளர் எவர்க்கும்
வளையானை;

கதையேந்தும்—
கரத்தானை; நெஞ்சு—
உரத்தானை; அத்தின—
புரத்தானை;

சோமனை—
குலமுதலாய்க் கொண்ட
பீமனை...
ஆர்யகன்—
அடையாளங்கண்டு—
ஆரத்தழுவினான்; (I – பக். 175)

வாலியார் தமக்குப் பிடித்த கதைமாந்தனாக அமைந்து விட்டால் தம்மை மறந்து அவனிடம் ஆழங்கால்பட்டு விடுகின்றார். சொற்கள் பொறிமத்தாப்புப் போல் உதிரத் தொடங்குகின்றன. நாமும் அவற்றின் ஒளியில் ஈடுபட்டுத் திளைக்கின்றோம்.

(4) தடுக்கில் படுத்திடுக்கும்
தரும புத்திரனை...
உத்திருட்டமான நரனை;
ஒருத்தி—
உதரத்தில் உதித்த—
சூரியனை; உயர்—
ஆர்யனை...
அறவான்களின்—
ஆதர்ச புருஷனை; நாளை—
அத்தினபுரியை—
ஆளவல்ல அரசனை...
குதலைச்
சொற்களாடும்—
கற்கண்டை; உயிர்
மூச்சிழுக்கும்—
பூச்செண்டை...

ஈரைந்து மாதங்கள்
இன்னமும் நிறையாத—
கீரைத் தண்டை; மானிட
சாதியின் மேன்மையைச்
சாற்றவந்த—சம
நீதியின் நிகண்டை... (I – பக். 122)

ஈண்டும் அடுக்கடுக்காக அமைந்துள்ள உருவகங்கள் தருமனைப் பல்வேறு ஒளிகளில் காட்டி நம்மை மகிழ் விக்கின்றன.

(5) பிறிதோர் இடத்தில் துருபதன் வாக்காக பீமன் காட்டப் பெறுகின்றான்.

அவனொடு—
மற்போர் புரிபவர்—
மண்டியிட்டு—அவன்முன்
நிற்போர் ஆவர்!

அவன்—
கொம்பில்லாத—
தந்தி! தும்பிக்
கையில்லாத—
தந்தி! ஆண்தகை—
ஆருமே அவனுக்குப்
பிந்தி!
அவனைப் பெற—
ஆற்றியிருக்க வேண்டும் தவம்...
குந்தி—மணி
உந்தி—நெடுநாள்
முந்தி! (I—பக். 251)

இரண்டு உருவகங்கள் (நந்தி, தந்தி) வேறு பல ஒத்த ஓசைகளையுடைய சொல்லடுக்குகளால் பெருமை பெறுகின்றன.

(6) அரக்கு மாளிகைக்குப் [5] *பாண்டவர்கள் வந்த நாளன்று ஆண்டுதோறும் நடைபெறும் பெருவிழா (பிரம் மோத்சவம்) கொடியேற்றும் நாள்; உருத்திரனுக்கு காளை வாகனம். இந்தச் சிவபிரானைப் பற்றிய வாலியின் வாக்கு.*

கலை நிலவில்—
கால் வாசியை—
குடுமியில் குடிவைத்த
காசி வாசியை;

எலியூரும்—
ஏரம்பன் ஏத்துகின்ற
புலியூரின்—
பெரு வாழ்வை;
அவத்தைப் புரிந்து—
அவத்தைப்படுவார்—

5 கட்டப்பெற்ற ஊர்-வாரணாசி; வடகாசி. வில்லிபாரதத்தில் 'வாரணாவதம்' என்றே வழங்குகின்றது.

பவத்தைப் போக்கும்
சிவத்தை;

கொன்றைமலர் சூடும்—
ஒன்றை;
நன்றுக்கெல்லாம் நன்றான—
நன்றை;

நீலத்தை—
நீள்மிடற்றில் ஏற்ற—
மூலத்தை;

நீரை—
நீறை—
உச்சியில் உடம்பில்—
உவந்து அணியும்—அறத்தின்
வேரை;
வினை—
வேதனை நீக்கும்
வேதனை; காசிவிசுவ

நாதனை...
தேசமே—
தெருவில் நின்று—
தரிசித்தது (ஊர்); (I – பக். 275-76)

(7) பிறிதோர் இடத்தில் தாயும் சேய்களும் இந்தச் சிவத்தைப் பூசிக்கும் செய்தியை வாலியார் வரைவது:

எருதுமேல் எழுந்தருளும்—
ஏகனை; அநேகனை;
மாதொரு—
பாகனை; பினாகனை;

ஒலிதரும்—
உடுக்கையைக் கையிலும்—வரிப்
புலிதரும்—
உடுக்கையை மெய்யிலும்—

சந்ததம் தாங்கி—
சதிர் நடத்தும்—
சந்திர சூடியை;
சுடலை யாடியை;

தண்—
தமிழின் தந்தையை—செம்
தழலேந்தும் விந்தையை...

கொன்றைப்
பூவும் வில்வமும் தூவி—
பூசித்தனர்; (I – பக். 276-78)

(8) இந்திரன் அறவுரைப்படி விசயன் சிவபெருமானை நோக்கித் தவம் செய்யும் நிலையில் அவன் சிவத்தை மனத்தில் இருத்தும் நிலையை வாலியார் வரைந்த சொல்லோவியம்:

சுத்தமான—
சித்தம் மொத்தமும்—
சிவவெள்ளத்தை நிறைத்தான்!

அரையை—
அம்பிகைக்கு அளித்த—அழகு
துரையை; மேரு—
வரையை—
வில்லாய் வளைத்த—ஆதி
விரையை;

மரையை—
மணிக்கை ஏந்தி—நடஞ்செயும்
மறையை; மகவெனும்—
இரையை—
ஏற்றருளிய—எருதூரும்
இறையை;

கறையை—
கழுத்தில் கொண்ட—பவக்கடல்
கரையை; அருட்சுவையின்
நிறையை—
நிறுக்கவொண்ணா—ஆனந்த
நிறையை;
மயிலை மயிலை—
மணம் முடித்த—
கயிலை வெயிலை;

வந்தியெனும் மூதாட்டி—
வந்தித்த...

பண்சுமந்த—
பாடல் மதுரையில்—கூடை
மண்சுமந்த தயவை;

வில்வத்தை—
விரும்பியணியும்—அருட்
செல்வத்தை; சீதமதியின்
அரத்தத்தை;

தேனைக்கா—
தினஞ்சொரியும்—திரு
ஆனைக்கா அப்புவை;

உண்ணாமுலையாளை—
உண்ணும்—திரு
அண்ணாமலையானை;
நச்சு அரவை—
நச்சும் அரனை; திரு
முறைகள் ஈராறும்—
மெச்சும் பரனை; (II – 17)

இந்த மூன்று பகுதிகளிலும் சிவபெருமான் அற்புத மாகக் காட்டப் பெறுகின்றான். சிவபெருமானைத் தம் மனத்தில் நிறுத்துவதில் ஒரு சைவ அடியாரையும் விஞ்சி

கற்பை—தன்னுள்
பொதிந்து வைத்திருக்கும்
பொற்பை;
எம்மனை புகினும்
செம்மனை எனும்படி—
அம்மனை பொலியச் செய்யும்—
அம்மனை... (II – பக். 140)

இவ்விடத்தில் இதே சந்தர்ப்பத்தில் பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் வரும் பகுதியையும் ஒப்பு நோக்கலாம். கண்டு மகிழலாம். தற்காலத்தில் எங்கும் புகழ்பெற்று நிற்கப் போகும் புதுக்கவிதையுடன் மோதுவதற்கென்றே பல்லாண்டுகட்கு முன்னே காத்து நிற்கும் மரபுக் கவிதையைக் கண்டு மகிழ்கின்றோம். கவிஞர் வைரமுத்து கூறுவதுபோல் மரபுக் கவிதையைப் புது மெருகுடனும் கற்பனையுடனும் கையாண்டால் மரபுக் கவிதையும் புதுப்பாணியுடன் பொலிவு பெறும் என்று கருதலாம்.

பாவியர் சபைதனிலே—புகழ்ப்
   பாஞ்சால நாட்டினர் தவப்பயனை;
ஆவியில் இனியவளை,—உயிர்த்
   தணி சுமந்துலவிடு செய்யமுதை,
ஓவியம் நிகர்த்தவளை—அரு
   ளொளியினைக் கற்பனைக் குயிரதனைத்
தேவியை, தவத்திருவை—எங்குத்
   தேடினும் கிடைப்பருந் திரவியத்தை;

படிமிசை இசையுறவே—நடை
   பயின்றிடும் தெய்விக மலர்க்கொடியைக்
கடிகமழ் மின்னுருவை,—ஒரு
   கமனியக் கனவினை காதலினை,
வடிவுறு பேரழகை—இன்ப
   வளத்தினைச் சூதினில் பணயம் என்றே [6]

6 பாஞ்சாலி சபதம்-நான்காவது: துகிலுரிதல் சருக்கம்-243, 244

இவ்விருவருடைய கவிதைப் பகுதிகளை ஒப்பிட்டு நோக்கினால் இரண்டின் சொல்வளமும் சொல்லழகும் போட்டி போட்டுக் கொண்டு நிற்பதைக் கண்டு மகிழலாம்.

(10) கண்ணன்—காயாபூ வண்ணன்—தூது போனபோது அவன் யோசனைப்படி குந்தி கன்னன் இல்லத்திற்கு ஏகித் தன்னை உண்மையான தாய் என விளக்கி, புத்திரன் வைத்த தேர்விலும் வென்று அவனைத் தன் பக்கம் வருமாறு பணிக்கின்றாள்:

'நன்மகனே! உனை—
நானாவிட்டேன் நதிவழி!
எவர்—
வாழ்க்கையும் நடப்பது—
வல்லான் வகுத்த விதி வழி!

ஆனது ஆயிற்று; இனி இவ்—
அன்னையோடு வருக;
அஞ்சோடு ஆறு ஆகி—எனக்கு
ஆனந்தம் தருக!

தூரியன் உறவைத்
துண்டி;

....
தாய் சொல் தவறா? சரியா?
நீயே—
தேறு;
ஆத்திரம் வரலாம்; வந்தால்—
ஆறு!' (II – பக். 352-53)

இங்ஙனம் குந்தி வேண்ட அதற்கு ஒப்பவில்லை தலைச்சனின் மனம்; வள்ளலின் புத்தி. இப்போது கன்னன் பேச்சாக அமைந்த பகுதியில் வாலியாரின் சொற்பொருள் நயத்தைக் கண்டு மகிழலாம்.

'அம்மா! உனக்கு—
அதிகம் பிடித்த சொல்லோ
ஆறு?
ஆசையாய்ப் பேசுகிறாயே—
அடிக்கடி அவ்வாறு!

அன்றெனைச் சேர்த்தது—
ஆறு என்கிறாய்;
ஆத்திரப்படாதே—
ஆறு என்கிறாய்;
அனைத்தும் விதி வகுத்த—
ஆறு என்கிறாய்! (II – பக். 353)

இதில் ஆறு என்ற சொல் பல பொருளில் ஒளிவிடுவதைக் கண்டு மகிழலாம். வாலியார் தம் புதுக்கவிதையில் பல இடங்களில் வழக்கமாக இலக்கிய வழக்குச் சொல்லையும் மக்கள் அன்றாட வாழ்க்கையில் அடிபடும் சொற்களையும் விரவுவதால் அவர் கவிதை புலவர்களையும் ஈர்க்கின்றது; புலவரல்லாத பொது மக்களையும் கவர்கிறது.

4. மரபுத்தொடர்கள்

ஒரு மொழிக்கே உரிய சொற்றொடர்கள் மரபுத் தொடர்கள் எனப்படும். அவை இலக்கண வரம்புக்கு உட்படாதவை. ஒரு மரபுத் தொடரில் உள்ள ஒரு சொல்லை நீக்கி வேறொன்றை இட்டுக் கூறமுடியாது. ஒரு மொழியில் உள்ள மரபுச் சொல்லைச் சொல்லுக்குச் சொல் பொருள் கூறிப் பிறமொழியில் பெயர்த்து எழுதவும் இயலாது. ஒரு மரபுத் தொடரில் பொருளுக்கும் அதில் உள்ள தனித்தனிச் சொல்லின் பொருளுக்கும் வேறுபாடு உண்டு. எடுத்துக்காட்டாக 'அவன் எரிந்து விழுகின்றான்' என்பதற்குச் 'சினந்து பேசுகின்றான்' என்பது பொருள்

மரபுத் தொடரில் உருவக அணி பெரும்பாலும் காணப் பெறும். ஒரு மொழியிலுள்ள மரபுச் சொல்லின் கருத்தை அதனைத் தாய்மொழியாகக் கொண்டவரே எளிதில் நன்கு உணரமுடியும். நன்னூலார் மரபுச் சொல்லைக் குறித்து,

எப்பொருள் எச்சொலின்
எவ்வாறுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச்
செப்புதல் மரபே.

என்ற நூற்பாவும் செய்துள்ளார். எனவே, மொழியில் தொன்மையாக வழங்கி வரும் வழக்கினை அறிந்து அவ்வாறே வழங்குதல் தக்கது. தமிழ் மொழியில் உள்ள ஒரு சில மரபுத் தொடர்களைப் பொருளுடன் அறிதல் இன்றியமையாதது.

அகடவிகடம்—தந்திரம்; அகலக் கால் வைத்தல்—வரைகடந்து போதல்; அமளி பண்ணுதல்—சச்சரவு பண்ணுதல்; அவசரக் குடுக்கை—பதற்றக்காரன்; அள்ளிக் கொட்டுதல்—மிகச் சம்பாதித்தல்; ஆறப் போடுதல்—காலந் தாழ்த்துதல்; இரண்டுங்கெட்டான்—நன்மை தீமையை அறியாதவன்; இழுக்கடித்தல்—அலைய வைத்தல்; ஈயோட்டுதல்—வேலை செய்யாமல் சும்மா இருத்தல்; தென்காசி வழக்கு—இரு திறத்தார் கருத்துக்கும் இடைப் பட்ட நிலையில் வழக்கைத் தீர்த்தல்—என்பன போன்றவை தமிழ்மொழியில் பேச்சுவழக்கில் ஏராளமாக உள்ளன.

இத்தகைய மரபுத் தொடர்களை கவிஞர் வாலியார் தமது "பாண்டவர் பூமியில்' ஆங்காங்கே கையாண்டி ருப்பது காவியத்திற்குத் துடிப்பூட்டுவதாக அமைந்துள்ளது. இவற்றைக் காண்போம்.

1. கொம்பு சிவி விடுதல்: சண்டைக்குத் தயாராக்குதல் என்ற பொருளில் தோன்றிய மரபுத் தொடர்.

7 நன்னூல் - நூற்பா 388

(அ) முருகப் பெருமான் அருளிய மாலையைப் பெற்ற அம்பை பேசியது

'இனி,
இந்த மாலையை—
எந்தக் காளைக்குப் போட்டு—
கொட்டு முழக்கோடு
கொம்பு சீவிவிட்டால்...
அது—

....
பீஷ்மன் பெருங்குடலை—
ஒரே குத்தாகக் குத்தி—
உருவி வெளியே போடும்?' (I – பக். 53)

பாடற்பகுதியை ஊன்றிப் படித்து பொருளை உணரலாம்.

(ஆ) தந்தையை எதிர்த்துப் பேசப் பிள்ளையை (துரியோதனனை)த் தயாராக்குகின்றான் சகுனி.

சகுனி—கொம்பை
சீவிவிட்டான்; பெற்றவனை
எதிர்த்துப் பேச—பிள்ளையை
ஏவிவிட்டான்! (I – பக். 255)

பாடல் பகுதியைப் படித்துப் பொருளை உணர்ந்து கொள்ளலாம்.

(2) கை கழுவினான்: *காதலன் சால்வன் தன்னைத் துறந்ததை அம்பை கூறுவது*

மெய்தழுவிய காதலன்—எனைக்
கை கழுவினான். (I – பக். 54)

இங்கு 'கை கழுவினான்' என்ற மரபுத் தொடர் 'புறக்கணித்தான்—கைவிட்டான்' என்ற பொருளில் வருவதைக் காணலாம்.

(3) **'முதுகைக் கொள்ளிக் கட்டையால் ஆரேனும் சொறிவரோ ?'** *பன்னிருகைப் பெருமான் தந்த மாலையை வாங்க முன்வரவில்லை என்ற பொருளில் வருவது.*

'ஆயிரம் பொன்னை—
அள்ளிக் கொட்டினும்—
முதுகைக்
கொள்ளிக்கட்டையால்—
ஆரேனும் சொறிவரோ?' (I – பக். 54)

பாடல் பகுதியை ஊன்றிப் படித்தால் மரபுத் தொடரின் பொருள் தெளிவாகும்

(4) **முதுகின் அச்சொடித்தது:** *வலியை இழக்கச் செய்தது என்ற பொருள் வருவது. பீமனின் பிரிவைப் பற்றி கவிஞர் வாலி கூறுகூது*

பீமனின்—
பிரிவானது...

அர்ச்சுனன் முதுகின்
அச்சொடித்தது; (I – பக். 179)

சந்தர்ப்பத்தை நினைத்து பாடலைப் படித்தால் பொருள் தெளிவாகப் புலனாகும்

(5) **கதை அளத்தல்:** *இல்லாததைக் கூறுதல் என்ற பொருளில் வருவது பொருள் உதவி நாடி வந்த துரோணனை துருபதன் கிண்டல் செய்து எள்ளுவது*

'ஆரிடம்—
அளக்கிறாய்?
வெற்றுக் கதைகளை—ஏன்
வளர்க்கிறாய்?' (I – பக். 206)

இடம் நோக்கி பாடலைப் பயின்றால் மரபுத் தொடரின் பொருள் பளிச்சிடும்!

(6) வெற்றியை பாக்கு வைத்து அழைத்தல்: *மரியாதையாக வருமாறு அழைத்தல் என்ற் பொருளில் வரும் மரபுத் தொடர். கவிஞரின் கூற்றாக ஒரு பூங்காவைப் பற்றி வருவது*

ஆரும்–
அதற்கு–
வேலிகள் வேய்ந்ததில்லை; ஆயினும்–
வெற்றிலை பாக்குவைத்து
வருந்தியழைத்தாலும்–வந்து
காலிகள் மேய்ந்ததில்லை! (I – பக். 207)

ஊன்றிப் படித்தால் மரபுத் தொடரின் பொருள் மயக்கமின்றித் தெளிவாகும்

(7) காறித்துப்புதல்:– *மிகவும் இகழ்தல் என்ற பொருளில் வருவது. கன்னியாயிருக்கையில் குழந்தையீன்ற குந்தியைப் பற்றிய பாடற்பகுதி:*

'குந்திபோஜன் மகள்–
குமரியாயிருக் கையிலேயே–
ஒரு
குழந்தைக்குத் தாய்!' என்று–
கேள்விப்பட்டால்–
காறித்துப்பியே கொன்று
விடும்–
கோபாலர் வாய்! (I – பக். 215)

பாடலை இடம் நோக்கிப் படித்தால் மரபுத் தொடரின் பொருள் தெளிவாகும்.

(8) கண்ணெச்சில்– *திருஷ்டி, கண்ணேறு என்ற பொருளில் வருவது. கன்னனின் வளர்ப்புத் தாய் (ராதை) திருஷ்டி கழித்ததைக் கூறுவது*

உப்பு மிளகாய் சுற்றி—தனது
உள்ளங்கையில் வைத்து—அதில்
'துப்பு' என்று சொல்லி—அந்தக்
கையெச்சிலை—கர்ணனுக்குக்
கண்ணெச்சில் படாதிருக்கக்
கனலில் கொட்டினாள்! (I – பக். 216-17)

பாடலில் மரபுத்தொடரின் பொருள் வெளிப்படை

(9) தலையும் புரியாமல்— வாலும் புரியாமல்— *என்பது மரபுத்தொடர். 'முதலும் முடிவும் தெரியாமல்' என்பது இதன் பொருள். கர்ணன் கண்ட விநோதமான கனவு கலைகின்றது. அப்போது அவன் பேச்சில் வருவது:*

'தலையும் புரியாமல்—
வாலும் புரியாமல்—
தம்பித்து நின்றான்; (I – பக். 220)

இடம் நோக்கிப் படித்தால் மரபுத் தொடரின் பொருள் வெளிப்படை.

(10) அட்டியின்றி— *தவறாமல், இத்தொடர் அடிக்கடிப் பாவேந்தர் கவிதைகளில் தலைக்காட்டுவது*

பாண்டவர்களும் கௌரவர்களும் அவரவர் கற்ற ஆயுதப்பயிற்சியை அரங்கேற்றும்போது பார்வையாளர்கள் வியப்பு எய்தினர்.

இறுதியில்—
எல்லாவற்றிற்கும் சிகரம்போல...
அர்ச்சுனன் ஆற்றிய—
அம்புவித்தைகள்—
ஆரையும்—
அதிசயிக்க வைத்தன;
அவன் அனுப்பிய சரங்கள்—
அவன் குறித்த இலக்குகளில்—
அட்டியின்றி சென்று தைத்தன! (I – பக். 222,

(11) முண்டாதபடினான்– *சவால் விடுத்தான் என்ற பொருளில் வருவது. இந்த அரங்கேற்றத்தில் கர்ணன் பங்குபெற முயன்றபோது வருவது*

அவ்வமயம்–
அவையே அஞ்சுமாறு...

முனிவர் துரோணரின்–
மாணாக்கரில் ஒருவன்–
முண்டா தட்டினான்;
முண்டாவில்–
முன்கை மணிக்கட்டால்–
முரசு கொட்டினான்! (I – பக். 223)

பாடற்பகுதியைப் பக்குவமாகப் படிக்கும்போது மரபுத்தொடரின் பொருள் ஒளி தட்டுப்பட்டு நம்மை அதிசயிக்க வைக்கும்.

(12) சிரக்கம்பம் செய்தல்–*தலையை அசைத்து ஒரு செயலைப் பாராட்டுதல். இதுவும் அரங்கேற்ற காலத்தில் வருவது.*

அர்ச்சுனன் நிகழ்த்திய–
அற்புதங்களைக் கண்டு–
அவையெல்லாம்–
'ஆஹா!' என்று
அவையெல்லாம்...

சிரக்கம்பம் செய்ததை–
சூரியன் மகனால்–
சீரணிக்க முடியவில்லை;
எனவேதான்–
ஏட்டிக்குப் போட்டியாய்–
ஏந்தினான் நெடியவில்லை! (I – பக். 220)

பாடற்பகுதியைப் படிக்கும்போது மரபுத் தொடரின் பொருள் ஒளியைக் காணலாம்.

(13) முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி–குத்துதல்– அவமானப்படுதல் என்ற பொருளில் வருவது. இதுவும் அரங்கேற்றம் நிகழ்ந்தபோது வருவது. கர்ணன் கைவில் ஏந்தும்போது கிருபாசாரியர் கர்ணனின் குலம் பற்றிய வினாவை எழுப்பியபோது வருவது.

> **கிருபையே இல்லாமல்–**
> **கிருபாசாரியர்–இப்படிக்**
> **கேட்டதும்...**
> **கர்ணன்–**
> **கூனிக் குறுகிக்**
> **கூசிப் போனான்; முகத்தில்–**
> **கரும்புள்ளி செம்புள்ளி–**
> **குத்தினாற் போலானான்!** (I – பக். 227)

இதில் கர்ணன் அவமானப்பட்டதை மரபுத்தொடர் மின்வெட்டுபோல் பொருள் ஒளிவிடுவதைக் காணலாம்.

(14) 'ஆலமரமாக ஆவதற்கு–ஆசைப்படலாமா சவுக்கு?'– என்பது குருடன் இராஜவிழி விழக்கலாமா என்ற பொருளில் வருவது. இதுவும் அரங்கேற்றத்தின்போது வருவது. தாதை ஓரமாய் நிற்பதைக் கர்ணன் தெரிந்து கொண்டு அவனை வணங்க, இது பீமன் கண்ணில் படுகிறது உடனே,

> **'ஓ!**
> **உன் அப்பன்–**
> **தேர்ப்பாகனா?–நீ**
> **தேரோட்டி மகனா?' என்று–**
> **தொந்தி குலுங்கச் சிரித்தான்;**

தொடர்ந்து—அவனைத்
தொக்கென எண்ணிக் கரித்தான்!

'கர்ணா! உன்—
குலத்திற்கு ஏற்றது
குதிரைச் சவுக்கு!
அதை எடு; அதை விடுத்து—
ஆலமரமாக ஆவதற்கு—
ஆசைப்படலாமா சவுக்கு? (I – பக். 229)

என்று பேசுகிறான். பேசுவதில் மரபுத் தொடரின் பொருள் மின்னொளி விடுவதைக் காணலாம்.

(15) கவுரவம் குடை சாய்ந்தது—மதிப்பு தரைமட்டமாகியது என்ற பொருளில் வருவது. கல்வி முடிவில் குருதட்சிணை கேட்டபோது வருவது. கௌரவர் முதலில் துருபதனை எதிர்த்துத் தோற்றனர் இதனைக் கவிஞர் வாலி,

கவுரவர் கவுரவம்
குடை சாய்ந்தது;
பாஞ்சாலர் முன்—அவர்கள்
படை சாய்ந்தது! (I – பக். 246)

என்று கூறுவார். பாடல் பகுதியைப் படித்தால் மரபுத் தொடரின் பொருள் தெளிவாகத் தட்டுப்படும்.

(16) துடைதட்டுதல்—வீரம் பேசுதல்;
கடைகட்டுதல்—தோற்று ஓடுதல்

இவையிரண்டும் துருபதனிடம் துரியோதனன் நடத்திய போரைப் பற்றிக் கூறுகையில் வாலியாரின் வாக்காக வருவது

துரியோதன்தான்—முதலில்
துடுக்கு மிடுக்காய்—

துடைதட்டியவன்;
துடைதட்டிய வேகத்திலேயே–
துருபதனிடம் தோற்று–
கடைகட்டியவன்! (I – பக். 253)

பாட்டுப் பகுதியை மேலோட்டமாகப் படிப்பதிலேயே மரபுத்தொடர்களின் பொருள் ஒளி வீசுவதைக் கண்டு மகிழலாம்.

(17) கால்மாடு தலைமாடு தெரியாமல் குதித்தல்: *மகிழ்ச்சிப் பெருக்கால் ஆனந்தப்படுதல். குந்தியின் மகன் உதிட்டிரன் இளவரசுப் பட்டம் ஏற்க இருக்கிறான் என்பதை அறிந்து ஊரார் மகிழ்ந்தனர்,*

ஊர்–
ஊர்ப்பட்ட சந்தோஷத்தில்–
கால்மாடு தலைமாடு
தெரியாமல்
குதித்தது; (I – பக். 254)

என்ற பகுதி தெரிவிக்கிறது. இதில் மரபுத் தொடர் மகிழ்ச்சிப் பெருக்கை அற்புதமாகப் புலப்படுத்துவதை அறிந்து மகிழலாம்

(18) தலையில் அடித்துக் கொள்ளுதல்–*துக்கப்படுதல்;* **தூபம் போடுதல்**–*தூண்டிவிடுதல். தருமபுத்திரனுக்குத் தன் தகப்பனே இளவரசுப் பட்டம் கட்ட ஏற்பாடு செய்து விட்டானே என்று அறிந்த துரியன் நிலை:*

என்று–
தலையில் அடித்துக்
கொண்டான்–
துரியோதனன்; அவனுக்கு–

தூபம் போட்டான்—தம்பி
துச்சாதனன்! (I – பக். 255)

பாடலில் மரபுத்தொடர்கள் பொருள் ஒளிவீசுவதைக் காணலாம்.

(19) ஆனாமுதல் அக்கன்னாவரை—*ஆதிமுதல் அந்தம் வரை; ஆங்கிலத்தில்* A to Z *என்று பேச்சு வழக்கில் அடிபடுவது. ஏகசக்கரபுரத்துக்கு வந்த விருந்தாளியான தேசாந் திரிக்கும் அனைத்தும் தெரியும் என்பதைக் கூற வந்தபோது:*

ஆனாமுதல்—
அக்கன்னாவரை—
அனைத்தும்—அவனுக்கு
அத்துப்படி; அவைபற்றி—
ஆர்கேட்டாலும்—
அள்ளிவிடுவான்; (I – பக். 330)

என்பது வாலியாரின் வாக்காக வருவது. பாடற்பகுதியைப் படித்து மரபுத்தொடரின் பொருள் ஒளி வீசுவதைக் காணலாம்

(20) திருமணம் செய்து கொள்ள தலையாட்டாது—*ஒப்புக்கொள்ளாது என்ற பொருளில் வருவது. ஆங்கிலத்தில்* To give nod *என்ற பொருளில் வருவதுடன் ஒப்பு நோக்கலாம். உதிட்டிரன் திரெளபதி ஐவர்க்கும் பொது என்று தாய் உரைத்ததை வேதவாக்கு எனக் கூறியபோது திருஷ்டத்துய்மனின் வாக்காக அதனை மறுத்துக் கூறியபோது வருவது.*

'என்—
தங்கை—

திரௌபதியை—ஐவர்
திருமணம் செய்துகொள்ள—
தலையாட்டாது என் மனம்; நான்—
தரவொண்ணாது சம்மதம்!' (I – பக். 361)

என்ற பாடற்பகுதியில் இந்த மரபுத்தொடர் அமைந் திருப்பதைக் கண்டு மகிழலாம்.

இறுதியாக ஒரே ஒரு சிறப்பான நயத்தொடரைக் காட்டுவேன். இராசசூய யாகம் நடைபெற்ற பொழுது முதல் மரியாதை கண்ணனுக்குக்—காயம்பூ வண்ணனுக்குத் —தரப் பெற்றது. இதைப் பொறுக்காத சிசுபாலன் கண்ணன் மீது வசைமாறி பொழியத் தொடங்கினான்.

'துவாரகை—சின்னஞ்சிறு
தீவு; அதுவா தேசம்?
தேசம் என்று சொல்லி—
தப்பிலித்தனமாக—
அளக்கிறானே கதை;
அட! அதுதான் மோசம்!

சிசுபாலன் இப்படிச் சொல்லிவிட்டு நக்கலாய்ச் சிரிக்க சபையிலும் சிலர் அதேபோல் சிரித்து இவனுக்கு ஒத்து ஊதினர். அது அவனைச் சீண்டிவிட்டது 'இன்னும் பேசு!' என்று இதனைக் குறிப்பிடும் வாலியார்,

சிசுவாகி பாலனாகி—
சீரிளமைத் தாண்டிய பின்னும்—
சிசு; பாலன் மாதிரியே—
விளைவை
சிறிதும் சிந்தியாமல்—
சிசுபாலன் பேசினான்; தருமனை—
சின்னத்தனமாய் ஏசினான்! (II – பக. 98)

என்று கூறுவார். இதில் வரும் 'சிசு' 'பாலன்' என்ற

சொற்களின் விளையாட்டில் நாம் ஈடுபட்டு மகிழ்கின்றோம்.

இத்துடன் இப்பகுதியை நிறுத்துவேன். நூலெங்கும் இத்தகைய தொடர்கள் மண்டியிட்டுக் கிடக்கின்றன. விரிவஞ்சி இப்பகுதியைத் தலைக் கட்டுகின்றேன். மேலும் வேண்டுவோர் வாலியாரின் நூலில் ஆழங்கால்பட்டுக் கண்டு தெளியலாம்.

கிளைக்கதைகள்

காவியத்தில் கிளைக் கதைகளின் (Episodes) பங்கு மிகப்பெரிது; மிகவும் இன்றியமையாதது. கிளைக் கதைகள் மூலக்கதை உணர்த்தும் உண்மைக்கும் பிறவற்றிற்கும் துணைபுரிந்து மூலக்கதையின் பெருமையைப் பன்மடங்கு உணர்த்துகின்றன. கம்பனிலும் வில்லியிலும் இவற்றைக் காண்பதைப் போலவே வாலியாரின் 'பாண்டவ பூமியிலும்' காண்கின்றோம். முக்கியமான சிலவற்றை ஈண்டுக் காட்டுவோம். இவற்றை வாலியாரின் புதுக்கவிதை யிலேயே தெரிவிப்பேன். கதைகள் இன்றியமையாத வையாக இருப்பினும் அதைவிட புதுக்கவிதையிலேயே தெரிந்து கொள்வது மிகவும் இன்றியமையாதது.

1. நரிக்கதை

பிள்ளைப் பாசத்தால் பீடிக்கப்பெற்ற கண்ணிலான் 'கணிகன்' ஒருவனைக் கூட்டி வருமாறு பணிக்க, அவன் வருகை புரிகின்றான். இவன் ஒரு கணக்குப் புலி; மன நோய்க்கு மருத்துவன்; இவன் ஒரு இராஜ தந்திரி; சகுனி யின் அரசாங்க அமைச்சன். காட்சியிலான் தன் நிலையைக் கூற, கணிகன் அரசியல் தத்துவத்தை விளக்கி விட்டு [1] ஒரு நரிக்கதையைக் கூறுகின்றான். வெற்றி விருட் சத்தின் விதையாகப் பாவித்து அதன்படி ஒழுகுமாறு பணிக்கின்றான்.

ஒரு காலத்தில்–
ஒரு காட்டில்–

* பா. பூ. பாகம்-1 பக். 262

ஒரு நரி—
வசித்து விந்தது;
சிறு—
சிறு—
பிராணிகளை—அது
புசித்து விந்தது!

அது நன்னெறி;
புன்னெறி;
நாலும் அறிந்த—

நுழை நரி!

பூர்வஜன்ம—
பிராப்தத்தால்...
தந்திரங்களோடு—
தரும சாஸ்திர—
மந்திரங்களும்—

கருவறையில்—
கற்றுத் தெளிந்த—
ஒரு நரி—அந்தக்
குறுநரி!

ஊளையிடும் நரியெல்லாம்—
அந்த
ஒப்பரிய ஒரு நரியின்—
மூளையிடம் மயங்கும்; அது—
மொழியும் வழியில் இயங்கும்!

அந்த அளவு—
அதனிடம் அமைந்திருந்தது—
அறமும்; அறிவுத்
திறமும்!

அது
வடிவத்தில் நரி;
வேகத்தில் பரி;

விவேகத்தில் கரி;
வீரியத்தில் அரி;

இயலாமை;
முயலாமை;
ஓதாமை;
ஓராமை;
உணராமை...

ஆகிய—
அஞ்சாமையை வென்றதால்—
அதனிடம் இருந்தது
அஞ்சாமை!

ஆதலால்—
அந்த நரி—
அனைத்தையும்
அறிவாயுதம் கொண்டு...

சாதுர்யமாக—
சாதிக்கும் ஒரு—
வம்பு வராமல்—
விதரணையாக—
வாதிக்கும்!

நரியின் நண்பர்கள்

நாளாவட்டத்தில்—அந்த
நரிக்கு....

ஒரு புலி;
ஓர் எலி;
ஒரு செந்நாய்;
ஒரு கீரிப்பிள்ளை....

என—
நான்கு நட்புகள்—
நேர்ந்தன!

அவை...
ஒன்றாகவே—
வனம் சுற்றும்;
வாய்த்த இரையைப் பற்றும்—
உண்ணும்;
உறங்கும்;
வளர்ந்தது அப்படியொரு—
வாஞ்சையும் பற்றும்!
அந்த வனத்தில்—
வண்ண வண்ண மான்கள்
உண்டு;
அநேக நாளாகிவிட்டது—அந்த
அஞ்சுபேரும் மான்கறி உண்டு!
பொழுது போனால்—
பொழுது வந்தால்—

புலி
புள்ளிமானைப் பிடிக்கப்
பாயும்; மான் தப்பும்; புலி—
ஓயும்!
நரி—ஒரு
நமட்டுச் சிரிப்பு—
சிரித்தது; பின்
வரிப்புலியிடம்—ஓர்
உபாயத்தை—
விரித்தது!

நண்பா!
நீ—
எப்போது பிடிப்பது—
மானை?
உன்னிலும் வேகமாக
ஓடுகிறது மான்; அந்தக்
கேவலத்தைக் கண்டு

கெக்கலிக்கிறது காண்!
உயிர்த் தோழனே!
வாழ்க்கையில்...

வீரம் வெல்லாததை—
சோரம் வெல்லும்;
உன்திறம் வெல்லாததை—
தந்திரம் வெல்லும்! (I – பக். 262-63)

நரியின் தந்திரம்:

என்
இனிய நண்பனே!
எலியே!
நீ—
கலைமானின்
காலைக்கடி!
வலி மண்டும்;
மான் நொண்டும்!
என்
பிரிய நண்பனே!
புலியே!
நீ—
நொண்டிய மானை—
நொடியில் பிடி!

மரநிழலில்
மான் இளைப்பாறுகையில்...
அதன்—
ஆடுசதையை—
எலி கடித்தது; சுளுவாய்—
புலி அடித்தது;
தரையில் விழுந்தது—
மரை; நெடுநாள்
எதிர்பார்த்திருந்த—
இரை!

மான் மாமிசம்—
மொத்தத்தையும்
தான் மட்டுமே—
தின்ன நினைத்தது....
கூனல் மனம் படைத்த சிறு
குள்ள நரி!

'இதர நால்வரை—
எப்படி ஏய்ப்பது?'
என்று—
எழுந்தது....
குள்ளநரி முகத்தில்—ஒரு
கேள்விக் குறி! (I – பக். 263)

சற்றுத் தொலைவில் சலசலவென்று ஓடிக் கொண்டிருந்த நதி நரியின் உள்ளத்தில் சதி உருவாகக் காரணமாகிறது. நண்பர்கள் தந்திரமாக ஒவ்வொருவராக விலக்கப் பெறுகின்றனர். நரியின் தந்திரம்;

உண்பதற்கு உட்கார்ந்த—
நண்பர்கள் மேல்—நரி
நேசப் பார்வை வீசியது; பின்—
நைச்சியமாகப் பேசியது!

"நண்பர்களே!
நீராடாமல்—
அருந்தக் கூடாது—
ஆகாரம்; இது—
அருந்தவத்தோர் கூறிய
ஆசாரம்!

'கூழைக் குடித்தாலும்—
குளித்துக் குடி!' என்று—
முத்தோர் உரைத்திட்ட—

மூதுரைப்படி...
அதோ! அந்த நதியில்–
களைப்புத் தீரக்
குளியுங்கள்; பிறகு வந்து–
கலைமானை உண்டு–
களியுங்கள்!

தீர்த்தமாடி விட்டு–நீங்கள்
திரும்புவதற்கு ஆகலாம்–
தாமசம்; ஆனாலென்ன? ஈகூட
மொய்க்காதபடி–என்
மேற்பார்வையில்–
இருக்கும்–மான்
மாமிசம்!"

நரியின் பேச்சில்–
நான்கு பிராணிகளும்–
நியாயத்தைக் கண்டன;
நீராடச் சென்றன!

முதலில்–மீசை
முடியில் ஈரஞ்சொட்ட...

புனலில் நீராடிவிட்டு
புலி திரும்பியது;
அந்த–
சமயம் பார்த்து–
நரியின் விழிகளில்–
நீர் அரும்பியது;

(1) புலியை நீக்கிய முறை

'நண்பா!
நம்மில் நீதானே–
நாலும் தெரிந்தவன்;
நெளிவு சுளிவு புரிந்தவன்!

உனக்கென்ன
உபத்திரவம்? விழியில்—
ஒழுகுகிறதே—
உப்புத் திரவம்!'

வினயத்தோடு—
வினவியது புலி;
மாய்மாலமாய்—
முனகியது நரி!

'இனிய சினேகிதனே!
இளப்பமாக எவரேனும்....
என்னைச் சொன்னால்—
கன்மனம் தாங்கும்;
உன்னைச் சொன்னால்—என்
ஒவ்வொரு நரம்பும் வீங்கும்!

நீ—
உகிர்கொண்டு—
வேழத்தை—
வகிர்கின்ற—
வீரன்!

யாளி வந்து—
எதிர் நிற்பினும்—
தூளி செய்யும்—
தீரன்!

இருப்பினும்....
இதோ! இந்த—
இளமானை...

உன்—
வலியால்—
வீழ்த்தாமல் இன்று—ஓர்
எலியால்—
வீழ்த்தினாய் என்று—

நக்கலாய்—நமது
நண்பனே பேசினால்—
என்மனம்
சுக்கலாய் உடையாதா?
தயிரைக் கடைவதுபோல்—
அந்தத்
தகாத வார்த்தை—எனது
உயிரைக் கடையாதா?

உன்பலத்தால்—
உணவு தேட—
உனக்கு வக்கில்லையாம்;
தன் போன்றோர்—
தயவில்லையேல்—
உனக்கு திக்கில்லையாம்!

இப்படியெல்லாம்—
எலி பேசியது; அப்பப்பா!
இருசெவியும்—
எனக்குக் கூசியது!

இந்த மானை—
இனியும் நீ...
உண்பது என்பது
உனக்கு அவமானம்;
அப்படியே உண்டாலும்—
ஆகுமா செரிமானம்?'

நரி—இங்ஙனம்
நையாண்டி செய்ததும்...

'சீச்சீ!
எனக்கெதற்கு—இந்த
இறைச்சி!
எலி கொடுத்தது—நான்
ஏற்பது என்பது—இகழ்ச்சி!'
என்று—
புறப்பட்டுச் சென்றது—
புலி;

(2) எலியைத் தவிர்த்த முறை

சிறிது நேரம்–
சென்றபின்...
ஈர உடம்போடு–
இரையுண்ண வந்தது
எலி!

'எலியே!
இனியும் நீ–
இங்கிருப்பது தப்பு;
இப்பவே தப்பு!

கொஞ்ச நேரம் முன்புதான்–
குளித்துவிட்டு வந்தது–
கீரிப்பிள்ளை; இந்த
இளமானின் இரைச்சியை–
இரையாக உண்பதில்–அதற்கு
இஷ்டமில்லை!

மான் மாமிசம்–
மகாவிஷமாம்–
எலி மாமிசம்–
இனிய பாயசமாம்!

உன்னைத் தின்ன–என்னிடம்
உத்தரவு கேட்டு நின்றது;
மறுத்துவிட்டேன் நான்!
நட்பை–
முறித்துக்கொண்டு சென்றது!'

சொச்ச விஷயத்தை–நரி
சொல்லி முடிப்பதற்குள்...
வளைக்குள் புகுந்தது
எலி; அதை–
விரட்டியடித்தது–
கிலி! (I – பக். 265-66)

(3) செந்நாயைத் தவிர்த்தமுறை

நீராடிவிட்டு—செந்
நாய் வந்தது; அதை—
நடுங்க வைக்கும் தகவலை—
நரி தந்தது!

'என் அன்பனே!
இனிய நண்பனே!
எனக்கே தெரியவில்லை;
ஏனென்று புரியவில்லை!

புலிக்கு உன்மீது—
பயங்கரக் கோபம்; நீ—
உடனே ஓடிப் போனால்—உன்
உயிருக்கு லாபம்!

மானிறைச்சியை உண்ண—தன்
மனைவியை
அழைத்துக் கொண்டு...
சில—
விநாடிகளில்;
வந்துவிடும் புலி; இங்கு—
நீயிருந்தால்—
நிச்சயம் பலி!

உடனே
உயிர்மேல் கண்ணாய்—
ஓடியது செந்நாய்!

(4) கீரியைத் தவிர்த்த முறை

நதியில்—
நிதானமாக நீராடிவிட்டு—
கீரிப்பிள்ளை—
கடைசியாய் வந்தது; ஓர்—
அதிர்ச்சி வைத்தியம்—நரி
அதற்குத் தந்தது!

கீரிப்பிள்ளையே!—நான்
கூறுவதை—நீ
கேட்பது நலம்; கேட்டால்—
தெரியவரும்! உனக்குப்
புரியவரும்! இந்த
நரியின் பலம்!

நான்
வியத்தகு—என்
வலிமையால்...

புலியைப் புடைத்தேன்;
எலியை உதைத்தேன்;
செந்நாயை செந்நீர்—
சொட்ட வதைத்தேன் !

மண்ணோடு—
மண்ணாக—
மூன்றையும் புரட்டினேன்;
மூன்று காதம் விரட்டினேன்!

உனக்கு—
பலமிருந்தால்—என்னோடு
போரிடு; இல்லையேல்—
பிழைத்தது புண்ணியம்—என்று
போய்விடு!

நரியை—
கையெடுத்துக் கும்பிட்டது—
கீரி; நாலு வார்த்தை—
கீழ்க்கண்டவாறு—
கூறி!

'வலியும் பொலிவும்—
வாய்க்கப் பெற்ற—
வீரனே! நரியெனும்—
திருநாமம் கொண்டு—
திசைகளை வென்று நிற்கும்—
தீரனே!

வரிப்புலியையே—நீ
வென்றாய் என்றால்...
என்போல் மடையனில்லை—
இன்னமும் இங்கு நின்றால்!'

ஒரே பாய்ச்சலில்—
ஓடிப்போனது கீரி; நரி—
'ஓ'வென்று ஊளையிட்டது—
உற்சாகம் தலைக்கேறி!

தான் மட்டுமே—
மான்கறி மொத்தமும்—
தின்றது; அதன் திட்டம்—
வென்றது! (II—பக். 266-67)

இந்தக் கதையைக் கூறிய கணிகன் மேலும் கூறுகின்றான், திருதராட்டிரனை நோக்கி:

வேந்தர் பெருமானே!
விளங்கியதா—
நரிக்கதை? மான்—
கறிக் கதை?

நரித்தனம் இல்லாது—
நடத்த இயலாது—
துரைத்தனம்; எதிலும்—
நெறித்தனம் நீங்காது—
நிற்பேன் என்பது—அசட்டு
வெறித்தனம்!

நமக்குக்
காயத்தை ஏற்படுத்தாதவரை—
கடைப்பிடிக்கலாம்—
நியாயத்தை; நியாயம்—
காயத்தை ஏற்படுத்தினால்—
கடைப்பிடிக்க வேண்டும்—
மாயத்தை!

அடியேன் சொல்வது—
அரசியலில் பாலபாடம்; இது—
ஆயிரம் அரசுகள்—
அனுஷ்டித்தது காலகாலம்!

வருங்காலத்தில்
வருந்தாதிருக்க—
நிகழ்காலத்தில்—
நிகழ்த்த வேண்டும்...

பாண்டவரை
பலவீனப்படுத்தும் வேலை;
இல்லையேல்—கௌரவர்
ஏற்க இயலாது செங்கோலை!' (I – பக். 267)

இந்தக் கதையைக் கேட்டபிறகு துரியன் தக்க திட்டம் தீட்டுகின்றான். பாண்டவர்கள் வாரணாவதம்[2] (அரக்கு மாளிகை கட்டப்பட்ட இடம்) அனுப்பப் பெறுகின்றனர்.

2. 'சுந்தன்'—'உபசுந்தன்' வரலாறு

இந்திரப்பிரஸ்தத்தில் யுதிஸ்டிரன் புதுமனை புகுந்து ஊராளுகையில் நாரதமுனிவன் வருகை நடைபெறு கின்றது யுதிஸ்டிரனைத் தனியாக அழைத்துச் சென்று இதனைக் கூறுவான்.

'தருமனே! பாண்டுவின்—
தனயனே!

....
உங்கள்—
ஒரைந்து பேருக்கும்—
திரௌபதி—
தாரமாயிருக்கிறாள்; ஒரு நூலில்—

---

2 வாரணாவதம்-வாரணாசி; வடகாசி. இக்காலத்தில் காசி யாத்திரையாக செல்லும் இடம். 1968-இல் அடியேன் துணைவியாருடன் சென்று 25 நாட்கள் தங்கிவிட்டேன்.

அஞ்சு முத்துக்களைக் கோத்த—
ஆரமாயிருக்கிறாள்!

அவள் பொருட்டு—உங்கள்
அஞ்சு பேருக்குள்—
விரோதம் எழக்கூடும்; உறவில்—
விரிசல் விழக்கூடும்!

உளிபிளக்கவொண்ணாத—
வலிய பாறையை—
பெண்ணென்னும்
கிளி பிளக்கும்;
மயிர்—
ஊடாடா உறவு—ஒரு
மயில்—
ஊடாடக் கெடும்!

இதற்கு—
இன்றளவும்—ஒரு
சாட்சியாக இருப்பது—இரு
சகோதரர்கள் கதை; கேள்!
சொல்கிறேன் அதை!

இரண்ய கசிபு என்னும்—ஓர்
இராக்கதனிருந்தான் முன்னம்;

அந்த—
அசுரனது—
வமிசாவழியாய்—
வந்தவர்கள்...
'சுந்தன்' 'உபசுந்தன்' எனும்—
சகோதரர் இருவர்; இருவரும்—
சிந்தையில் செயலில் ஒருவர்!

இந்த—
இருவரும்...
கால்—
கட்டை விரலை மட்டுமே—

தரையில் ஊன்றி—நெடுங்காலம்
தவம் இயற்றி—

பிரம்ம தேவனிடம்—
பெற்ற வரங்களால்...

மூவுலகும் திரிந்தனர்;
மாயங்கள் புரிந்தனர்;
முனிவரையும் தேவரையும்—
முனிந்து அரிந்தனர்!

இவர்களுக்கு மரணம்—
இவர்களா லன்றி—வேறு
எவர்களாலுமில்லை என்பது—
இவர்களுக்கு...

அந்த நாளில்—
அயன் தந்த வரம்; இவர்கள்—
ஆடிய ஆட்டத்திற்கெல்லாம்—
அடிப்படை அந்த வரம்!

பிரிவே அறியாத—இரு
பிராதாக்களுக்கிடையே—
புகை நுழையாது! பின்—
பகை நுழைவதேது?

'புகை புகாத—இரு
பிராதாக்களிடையே—
பூச்சூடிய
சிகை புகுந்தால் போதும்; பின்—
சினந்து ஒன்றையொன்று
மோதும்!'

என்று—பிரமன்
எண்ணினான்; ஒரு
பெண்ணழகுப் பெட்டகத்தைப்—
பண்ணினான்!

பெயர் திலோத்தனம்; [3]
ஆண் மனத்தை
பொசுக்கும் திராவகப் பதுமை!

இவள் பொருட்டு—
இரு சகோதரர்களான—

சுந்தனும்—
உபசுந்தனும்—
சண்டையிட்டனர்;
சாவைத் தொட்டனர்!

உதிஷ்டிரனே! இதுபோல்—
உங்களுக்கும்...

திரௌபதியால்—மனம்
திரியக்கூடும்!
திரிந்தால்—நீங்கள்
பிரியக் கூடும்!

ஆதலால்...
அதற்கு—

இடந்தராது—'ஓர்
ஏற்பாட்டை
இப்பொழுது வகுத்தல் நலம்;
இல்லையேல் வரும் சஞ்சலம்!'

நாரதன்—இங்ஙனம்
நவின்றதும்...
தருமன் சிந்தித்தான்; உடனே
தம்பியரை சந்தித்தான்! (II – பக். 16-18)

செய்துகொண்ட ஏற்பாடு இது:

3 திலம்-எள். நான்முகன் தான் படைத்த அழகிய நங்கையர் அனைவரிடத்திலுமிருந்து 'எள்' அளவு வீதம் அழகை எடுத்து வந்து அவற்றை ஒன்று சேர்த்து அழகிய மங்கையாக உருவமைத்தான்- இவள் திலோத்தமை என்பது நான் படித்து அறிந்த செய்தி.

'ஒவ்வொருவர் மனையிலும்—
ஒண்டொடி பாஞ்சாலி—
ஓராண்டு பரியந்தம்—
ஒழுகுவாள் இல்லறம்;
ஒருவரோடு—அங்ஙனம்
ஒழுகும் இல்லற இன்பத்தை—
பிறிதொரு பாண்டவர்—
பார்க்க நேர்ந்தால்...

அவர்—
ஆரண்யம் சென்று—
ஆறிரு திங்கள்—
அநுட்டிப்பர் துறவறம்!'

இவ்வாறு—தனது
இளவல்களின் ஒப்புதலோடு...
உதிட்டிரன்—ஒரு
விதியை வரைந்தான்; அது பற்றி—
பிரம தேவனின்—
புத்திரனிடமும் பறைந்தான்!

வீணை நாரதன்—அதனை
வழிமொழிந்து—அவர்களுக்கு
வாழ்த்துகள் கூறினான்; பின்—
விசும்பில் ஏறினான்! (II – பக். 18-19) [4]

இக்கிளைக் கதை முதற்கதை வளரத் துணைபுரிகிறது. விஜயனின் ஆறு திங்கள் வனவாசத்திற்கும் அதில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகட்கும் இக்கதை ஒரு விதை!

3. அந்தணன் கதை

தருமன் அறந் தவறாது நல்லாட்சி புரிந்து வருகையில் ஒருநாள் ஓர் அந்தணன் வருகின்றான். அரண்மனை வாயிலில் ஆத்திரமும் அழுகையுமாய் 'குய்யோ முறையோ' என்று கூச்சல் போடுகின்றான். விஜயன் வெளியே வந்து

4 பறைந்தான்-இது மலையாள மொழி. தமிழில் வந்தேறியது.

காரணம் கேட்க பசுக்கள் களவு போன செய்தியைத் தருகின்றான். அர்ச்சுனன்,

பசுக்களைத் திருடிய
பாவியர்—அஷ்ட
வசுக்களாயினும் விடேன்; நான்—
மீட்டு வராமல்—
மீட்டும் என்—
வில்லையும்
வாளியையும் தொடேன்!' (II – பக். 20)

என்று சூளுரைத்து,

ஆயுதங்களை எடுத்துவர—
அரண்மனைக்குள் சென்றான்;
ஆயுதங்கள் இருக்கின்ற—
அறையை நெருங்கியதும்—
அவன்
நிலை தடுமாறி—அப்படியே
நிலைப்படி யோரம் நின்றான்!

உள்ளே—
உதிஷ்டிரன்...
பாஞ்சாலியோடு—
பேசிக் கொண்டிருந்தான்; அன்பு—
வார்த்தைத்
தென்றலை—அவள்மேல்
வீசிக் கொண்டிருந்தான்!

தருமன் மார்பில்—
தவழ்ந்தபடி—
திரௌபதி என்னும்—
தாமரைக் கொடி...

நாணியது;
கோணியது—ஒரு
தோணியது—இன்பக்

கேணியது—எனத்
தோன்றும்படி—அந்தத்
தோகைக் கொடி—திரு
மேனியது—அலை
மோதியது;
இருவிழியால்—அது
இடைஇடையே—அந்த
உருவிலியன்—கதை
ஓதியது!

....
அவர்கள் இருவரும்—
அவசநிலையில்;
அர்ச்சுனனோ—
அவசர நிலையில்!

ஆயுதங்கள் எடுக்க—
அந்த அறைக்குள்—
அர்ச்சுனன் நுழைந்தான்...
....

சிறு
துணியொன்றினால்—
முகத்தை—மெல்ல
மூடிக் கொண்டான்;

....
ஆயுதங்களை அள்ளிக்கொண்டு—
விருட்டென்று—உடனே
வெளியே சென்றான்!

....
பசுக்களை ஓட்டிவந்து—
பார்ப்பனன் முன்நின்றான்;
அந்தண சிரேஷ்டன்—
அகம்கிழ்ந்து—
'அர்ச்சுனா! வாழ்க நீ!' என்றான்! (II – பக். 20-23)

ஒப்பந்தத்தை மீறித் தான் இழைத்த தவறுக்குப் பிராயச்சித்தமாக வனவாசகத்தை மேற்கொண்டான்

பார்த்தன். அந்தணன் கதை அர்ச்சுனனுக்கு ஆறிரு திங்கள் அடவி வாசத்தை அருளியது! மூலக்கதையின் ஓட்டத்தை ஒரு திசையில் முடுக்கியது.

4. முதலைகள் கதை

பாண்டி நாட்டில் சித்திராங்கையிடம் விடைபெற்ற பார்த்தன் தன் தீர்த்த யாத்திரையைத் தொடருகின்றான்.

தென்கடல்
ஓரத்திற்கு வந்தான்;

அங்கு—
ஆசிரமங்கள் அமைத்து—
வதியும் யதிகளுக்கு—தனது
வணக்கங்களைத் தந்தான்!

தவசிகளின்—
தபோவனத்தைச் சுற்றி...

'அகஸ்திய தீர்த்தம்;
சௌபத்ர தீர்த்தம்;
பௌலோம தீர்த்தம்;
காரந்தம தீர்த்தம்;
பரதவாஜ தீர்த்தம்!'
எனும்—

திருநாமங்களோடு—ஐந்து
தீர்த்தங்களைக் கண்டான்;
ஆனால்—
அதில் ஆரும்—நீர்
ஆடாதது ஏனென்று—
அறியாமல் நின்றான்! [5]

5 அர்ச்சுனன் வந்த இடம் 'இராமேசுவரம்' எனக் கருத இடம் உண்(அங்கு 'கந்தமாதனபருவதம்' போகும் வழியில் சில தீர்த்தங்கள் உள்ளஎ சிலவற்றில் நீர் உண்டு; சிலவற்றில் நீர் இல்லை. இவைதான் அவையோ எனக் கருத இடந்தருகின்றது, வாலியார் என்ன கருதுகிறாரோ?

முனிகள் விளக்கினர்; அவன்—
மயக்கத்தை விலக்கினர்!

'யாத்திரிகனே!
யாரும் இச்சுனைகளில்...
விழுந்து நீராட—
விரும்புவதில்லை;
விரும்புவோர்—உயிருடன்
திரும்புவதில்லை!

ஐந்து தீர்த்தங்களிலும்—
ஐந்து முதலைகள் உண்டு; அவை—
நீண்ட காலமாய் வாழ்கின்றன—
நீராடுவோரை உண்டு!'

அவர்கள்—
அச்சுறுத்தியும் கேளாது...
நீரில் இறங்க—
நெடிய முதலையொன்று—
பார்த்தனின்—
பாதங்களைப் பற்றியது;
பற்றியதும்—அது
பெற்ற சாபம் முற்றியது!

ஆம்!
அர்ச்சுனன் ஆவேசத்தோடு—
அதைத் தூக்க...
துள்ளிய முதலை—ஒரு
தோகையாய் மாறியது; அது—
தன் வரலாற்றை—
தனஞ்சயனிடம் கூறியது!

'வீரனே! என் பெயர்—
வர்க்கை! நான்—
வாழ்வது—தேவலோக
வாழ்க்கை!

நாளும்—என்
நான்கு தோழியருடன்—பூ
வனத்தில் விளையாடுதல்—என்
வாடிக்கை; ஒருநாள்—
வனத்தில் தவமிருந்த—ஒரு
வாலிப வேதியிடனிடம்—
வலியப் போய்—காட்டினேன்
வேடிக்கை!

வந்தது வினை;
வைதான் எனை!
நானும்—என்
நான்கு தோழியரும்—
நூறாண்டு காலம்—
நீரில்...
முதலைகளாய்க் கிடக்குமாறு—
மொழிந்தான்; பிறகு நான்—
கெஞ்சிக் கூத்தாட—
கோபம் ஒழிந்தான்!

ஓர்—
ஆற்றல்மிகு—
ஆண்மகன்
தண்ணீரிலிருந்து—
தொட்டுத் தூக்க—
தீரும் சாபம் என்றான்;
தவம் புரியச் சென்றான்!

உத்தமனே! இன்று—
உன்னால் தீர்ந்தேன் சாபம்!
எனைப்போல்—
என் தோழியரையும்—நீ
காத்தருளினால்—உன்
கையால் கழியும் பாபம்!'

அங்ஙனமே—
அனைவர் சாபத்தையும்—
அர்ச்சுனன் தீர்த்தான்;
அவர்களை வானம் சேர்த்தான்! (II – பக். 34-35)

இராம காதையில் வரும் விராதன், கவந்தன் போன்றவர்கள் தமது குறும்புச் செயல்களால் இத்தகைய சாபங்களைப் பெற்றவர்கள். ஆனால் சாபம் கொடுத்த வர்கள் இராம இலக்குவணர்களால் சாபம் விமோசனம் தந்து சென்றதை ஆங்குக் காண்கிறோம். ஆனால் அப்படிப் பெயர் சொல்லிக் குறிப்பிடாமல் 'ஆற்றல்மிகு ஆண்மகன்' என்று குறிப்பிடப் பெற்றுள்ளது இங்கு.

5. கற்புக்கரசியின் கதை

வானுலகத்திலிருந்து விஜயன் திரும்பியதும் 'பல்வேறு அத்திரங்கள், பாசுபதம்' ஆகியவற்றைப் பார்த்தன் பெற்ற பின்னர் பாண்டவர்கள் 'கந்தமாதனம்' விட்டுத் திரும்பி காம்யவனம் அடைந்து அங்கேயே எஞ்சியுள்ள வனவாச காலத்தைக் கழிப்பதெனத் தீர்மானித்தனர். அப்போது ஒருநாள் 'மார்க்கண்டேயர்' அவண் போந்தார். பெண்ணின் பெருமையைக் கூறிய தருமன் கருத்தையொட்டிக் கற்புக் கரசியின் கதையைக் கூறினார். அவர் வாக்கில் வாலியார் கூறுவது:

ஒரு—
பிராமணன் இருந்தான்
பழைய நாளில்; அவனது
பெயர் கவுசிகன்; பண்டிதன்—
பழமறை நாவில்!,

ஒருநாள் அவன்
ஒரு மரத்தடியில்—
அமர்ந்து—வேத
அத்தியயனம் செய்கையில்...

கிளைமேலிருந்த—ஒரு
கொக்கின் எச்சம்—அவன்
தலைமேல் விழ—உக்கிரம்
தொட்டது உச்சம்!
அடுத்த நொடி—
அந்தணன் அனல் பார்வை...

கொக்கின் மேல்பட்டது; அது—
கொக்கைச் சுட்டது; வெண்—
சாம்பல் நிறக் கொக்கு—கருஞ்
சாம்பலாகி விட்டது!

'கோபம்—ஒரு
கொக்கைக் கொன்றதே; மகாப்
பாபம்!' என்று...

வேதியன்—சற்று
வருந்தலானான்; பிறகு—
பிட்சை எடுக்க—
பக்கத்தூர் போனான்!

ஒரு—
வீட்டுவாசலில்—அவன்
வெகுநேரம் நின்றும்—
வரவில்லை பிட்சை; அவனை
வாட்டியது லச்சை!

இல்லறப் பணிகளை—
இயற்றியபடி இருந்தாள்—
இல்லத்தரசி; அவனுக்கு—
இடவில்லை அரசி!

அவ்வமயம்...
அதுகாறும்—
வெளியில் போயிருந்த—அவள்
வீட்டுக்காரன் வீடு திரும்பி...

'பசிக்கிறது;
போடு இலையை!' என்றான்
அவள்—
போட்டாள்; பரிமாறினாள்;
அவன்—
போக்கியமாய்த் தின்றான்!

பிறகு—அவள்
பிட்சை யோடு வந்து...
கணவன் பணியால்—
காக்க வைக்க நேர்ந்ததைக்—
கூறினாள்; மன்னிப்பைக்
கோரினாள்!

அவளது சொல்லை—அவன்
அங்கீகரிக்கவில்லை!

'கணவனுக்காக—என்னைக்
காக்க வைப்பதோ? ஒரு
பிராமணன் கோபத்தை—
மூக்கில்
பூக்க வைப்பதோ?'

உத்தமி பேசினாள்; பேச்சில்—
உஷ்ணத்தை வீசினாள்!

அந்தணனே!
'ஆற்று சினத்தை;
அடக்கு—உன்
ஆணவ மனத்தை!

நாயகன் பணிபுரியும்—
நற்குடிப் பெண்டிரென்றால்—
நினக்கென்ன தொக்கா!
நீயெரிக்க—
நானென்ன கொக்கா?'

கவுசிகனுக்குக்—
கலங்கியது பொறி;
தலைகுப்புற விழுந்தது
தலையிலிருந்த தானெனும் வெறி!

காட்டில் நடந்தது—ஒரு
காரியம் அப்படி!
வீட்டில் இருப்பவள்—அதனை
விவரிப்பது எப்படி?

விந்தையிலும் விந்தை; என்—
வித்தை இவள்முன் கந்தை!'
வருந்தினான் வேதியன்—
வாய்விட்டுச் சொல்லி; அவன்
குழப்பத்தைப் போக்கினாள்—
குடும்ப வல்லி!

'அந்தணனே!
அறம் என்பது நுட்பமானது;
அதுபற்றி இதுவரை நீ
அறிந்ததென்பது அற்பமானது!

கற்புடைய பெண்—முக்
காலமும் ஓர்வாள்; அவள்—
சக்தியும் புத்தியும்—
சாணை தீட்டிய ஓர் வாள்!

மறையவனே! நீ—
மறையைக் கற்றவன்தான்;
மறையைக் காறும்—'தான்'
மறையக் கல்லாதவன்;

வசையோ இசையோ;
வாழ்வோ தாழ்வோ;
நேர்வது எதுவாயினும்—
நிட்காமியமாய் நில்லாதவன் !

தானிடும் எச்சம்—உன்
தலைமேல் விழும் என்று...

அறியுமா கொக்கு?
அது வெகுளி!
அதை வீழ்த்தலாமா—ஓர்
அந்தணன் வெகுளி?

வைதிகனே! இவ்—
வேளை தொடங்கி—நீ
வெகுளிமேல் வெகுளிகொள்;
சுத்த—
வேதியன் என்னும் தகுதிகொள்!

ஒருவனுக்கு—
உடனிருக்கும் விரோதம்—
அவனது—
அகமிருக்கும் குரோதம்!

உத்தமனே!
உனக்கு...

தருமத்தின் சூட்சுமம்—
தெரியவில்லை; நீ—
அதுபற்றி வியக்தமாய்—
அறியவில்லை!

'தரும வியாதன்' எனும்—
திருநாமம் கொண்டு—ஒரு
மகாபுருஷன்—
மிதிலை நகரில் உண்டு!

அறநெறி—யாதென
அங்கு அறி!' (II – பக். 216-18)

6. தரும வியாதன் கதை

இது 'பஞ்சதந்திரக்கதை போல்'—Relay Race போல்—நடைபெறுகின்றது!

இல்லத்தரசியின்–
இன்னுரை கேட்டு...

'பெண்ணே! நான்–
பாதிவெந்த பருக்கை;
உன்னால் ஒழிந்தேன்–
உள்ள செருக்கை!' என்று...

கவுசிகன்–
கைகூப்பி–
நன்றி சொல்லிவிட்டு–மிதிலை
நகருக்குச் சென்றான்; தரும–
வியாதனைக் கண்டு;
விதிர்த்து நின்றான்!

வாடிக்கையாளருக்கு–
விற்றுக் கொண்டிருந்தான்...

மாடு;
மறி;
மான்;
மகிஷம்;

இவற்றின்–ஈர
இறைச்சிகளை–
எடைபோட்டு–கசாப்புக்
கடை போட்டு...

ஒரு–
வினோதன்–என

6 எந்தப் புற்றிலிருந்து எந்தப் பாம்பு வரும்? யார் கண்டார்கள்? தருமவியாதன் நிலை அவனை விதிர்க்கச் செய்து விடுகிறது.

விவரமறியார் பேசும்—தரும
வியாதன் ! (II – பக். 218)

'கறியை அறிவான்; இந்தக்
கசாப்புக் கடைக்காரனா—அற
நெறியை அறிவான்?'

என கவுசிகன்—
எண்ணி நிற்க...

'ஓர்—
உத்தமமான—
பதிவிரதை—என்பேர்
பரிந்துரைக்க...
எனைநீ பார்க்க வந்தனை;
என் மொழி கேட்க வந்தனை;
'எது அறம்?' அறிய வந்தனை;
ஏற்றிடுக எனது வந்தனை!'

என்று—
இருகரம் கூப்பியவாறு...

வேதியன்முன்—தரும
வியாதன் வந்து நின்றான்; பின்—
அவனைத் தனது வீட்டிற்கு—
அழைத்துச் சென்றான்!

'கொக்கை எரித்ததை—அந்தக்
கோதை அறிந்ததும்...
கோதை விரித்ததை—இந்தக்
கொலைஞன் அறிந்ததும்...

எங்ஙனம்?
எங்ஙனம்?'
என்று—
இறும்பூது எய்தியவாறு...
வேதியன் நடந்தான்—தரும

வியாதன் கூட—விழிகளில்
ஒன்று இரண்டு—என
வினாக்குறிகள் கூட!

'தோலுரித்து—ஆட்டைத்
தொங்கவிடும்
கடையினிலே—பழ
நூலுரித்து—அறத்தை
நூவல்கின்ற பார்ப்பனனை...

உட்கார்த்திச் செய்யலாமோ—
உபசாரம்? செய்தால்—அது
அபசாரத்திலும் பெரியதோர்
அபசாரம்!

எனவேதான்—
எழுதாக் கிளவியை—என்றும்
இசையோடு ஓதும்
ஒருவனை—நான்
இட்டு வந்தேன் என் திருமனை!'

இங்ஙனம்—
இங்கிதத்தோடு இயம்பி...
தருமவியாதன்—ஒரு
தடுக்கைப் போட்டான்;
கவுசிகன்—அதன்மேல்
குந்தியவாறு கேட்டான்!

அன்பார்ந்த—
அய்யனே!
உன்மேல் எனக்கு—
உண்டானது பச்சாதபம்; நீ—
ஊன் விற்கிறாய்;
உயிர்க் கொலை பச்சைப் பாபம்!'

கவுசிகன்—
கூறியது கேட்டு...

குறுநகை புரிந்தான் வியாதன்;
கூர்மையில் இன்னொரு
வியாழன் !

பிறகு—
பேசினான்—
புலவு விற்பவன்; ஊர்நாவில்—
புலவனாய் நிற்பவன் !

'பிராமணனே! உன்—
பச்சாதாபம்—
பொருளற்றது;
இறைச்சி விற்பினும்—என்
இதய இல்லம்—
இருளற்றது; ஓர்—
அந்தணனாயினும்—நீ
அடைந்த அறிவு—
அருளற்றது; அனைத்தும்
தெய்வசித்தம்—எனத்
தேராததால்—அது
தெருளற்றது!

பிறப்பால் நானொரு
புளிஞன்; எனினும்
தெய்வாநுகிரகத்தால்—நான்
தெளிஞன் !

இன்ன அம்பலம்;
இன்ன பாத்திரம்;
ஏற்று ஆடுக!'
என்கிறான் தேவன்;
ஏற்கமாட்டேன்—
என்பவன் யாவன்?
அபிநயம் கழித்து—
அரிதாரம் அழித்து—

அவனுள் போய்
அடங்குகிறது சீவன் !

என் தொழில் உன்தொழில்—
இதில்—
எங்கு வந்தது? நம்—
இச்சைப் பிரகாரமா—நாம்
இங்கு வந்தது?

பின்—இந்தப்
பிறப்பில் இறப்பில்—
பிழையோ? சரியோ?
நமக்கென்ன
பங்கு வந்தது?

முத்தொழில் புரியும்—
மூலம்தான்—ஒருவனை
'இத்தொழில் புரிக!' என—
ஏவுகிறது; எனவே—
எத்தொழில் இங்கு—
என்ன புரிந்தாலும்—
அத்தொழில் பலாபலன்—
அதனையே மேவுகிறது!

எதையும்—தனது
எண்ணப்படி...

கைவாளா வெட்டும்? வாள்
பிடித்த—
கைதானே வெட்டும்? இதில்—
வாளுக்கு உண்டோ ஒரு
வாழ்த்தும் திட்டும்

நான்—
கடவுள் கையிருக்கும்—
கருவி; என்னை நான்—

இங்ஙனம்
கண்டுகொண்டதால்—
ஆகவில்லை
கருவி!

கறிக்கடை நடத்தினாலும்—என்
கருத்தில் நான்—
நெறிக்கடை நடத்துபவன்;
கீழ்க்குணங்கள்—என்னுள்
கிளைக்குமாயின்—கீறிக் கீறிக்
கீழே கிடத்துபவன்!

என்—
குடிப்படை வாழ—
கொலைத் தொழில்
செய்தாலும்—நான்
அடிப்படை தருமத்தைவிட்டு—
அகன்றதில்லை; என்—
பிள்ளைப்—
பிராயம்முதல்—நான்
புத்தியறிந்து—பொய்கள்
புகன்றதில்லை!
எனைக்—
கெடுத்தவர் தம்மையும்—நான்
கடுஞ்சொல்லால் சுட்டதில்லை;

வாய்க்கும் உணவை—நானென்
வாய்க்கே இட்டதில்லை;
துயிலில்—
வாய்க்கும் கனவிலும்—பிறர்
காசை நான் தொட்டதில்லை;
நானென்—
உள்ள வயலில்—வஞ்சமெனும்
விதையை நட்டதில்லை;

ஒட்டிய—
உள்ள மிரண்டை—நான்
ஒருபோதும் பிட்டதில்லை;
எனை—
நம்பிய பேர்களை—நான்
நடுவில் விட்டதில்லை; ஈன்ற—
கும்பியைக் கோயிலாக—நான்
கும்பிடாமல் கெட்டதில்லை!

உலகில்—இவையெல்லாம்
உயர்ந்த தருமங்கள்—என
அறநூல்கள் ஓதாவா? ஒருவன்—
அனுஷ்டிக்க இவை போதாவா?

'நான்' என்பதை—
நீக்கியவன்—
ஊன் விற்றால் என்ன?
தேன் விற்றால் என்ன?
ஊன் பெறுவதாயினும்—
தேன் பெறுவதாயினும்—
இன்னோர் உயிரை—நீ
இம்சிக்காமலா பெறமுடியும்?
இளைஞனே! இம்பரில்—
இயற்றும் எத்தொழிலும்—
இன்னோர் உயிருக்கு—
இம்சைதான் எப்படியும்!

பயிர்விடும் நிலத்தில்—
பாய்ச்சும் ஏர்க்காலில்—
உயிர்விடும் பூச்சிகள்—
ஒன்றா? இரண்டா?

விட்டில்கள் வந்து—
விழுமே என்று—
விளக்குகள் ஏற்றாத—
வீடுகள் உண்டா?

மண்ணில் கால்வைத்து
மனிதன் நடக்கையில்—
விண்ணில் ஏறுகின்ற—
உயிர்கள் எத்துணை? நாம்—
வாங்கும் மூச்சினில்—
உள்ளே சென்று—உயிர்
நீங்கும் கிருமிகள்—
நீயறிவாயா? நானறிவேனா?
அறிந்து செய்வது பாதி; இங்கு—
அறியாது செய்வது பாதி; ஆக—
அன்றாடம் உயிர்க்கொலை—
ஆவதென்பது நிஜமான சேதி!

உயிர்களை—
உயிர்கள் உண்டு—
உயிர் வாழ்வதென்பது—ஓர்
உயிருள்ள உண்மை; இந்த—
உண்மையை ஒப்பாவிடில்—அது
உன்னுடைய வெண்மை!

புழுவைப்—
பூச்சி தின்கிறது;
பூச்சியைப்—
புறா தின்கிறது;
புறாவைப்—
பூனை தின்கிறது;
பூனையைப்—
பாம்பு தின்கிறது;
பாம்பை—
பருந்து தின்கிறது;
பருந்தை—வேடன்
பகழி தின்கிறது;
பகழி வேடனை—பிறகு
பூமி தின்கிறது;

இதனை உலகில்–
இயற்கை என்கிறது!

'செடிகள்;
கொடிகள்;
மூலிகைகள்; கந்த
மூலங்கள்;

விலங்குகள்;
பறவைகள்;
மச்சங்கள் மற்றுமுள–
எச்சங்கள்;

ஆக–உயிரினங்கள்
அனைத்தும்–மனிதனின்
உணவாக–அவனது
வாய்க்குள் செல்கின்றன!' என–
ஆகாயத்தைவிட–
அகவைகள்–
அதிகமான–
அறநூல்கள் சொல்கின்றன!

பச்சாதாபம்–
படவேண்டாம்–
நீ–
நான் நடத்தும் தொழில் கண்டு;
ஏற்றிருக்கும்–
என் தொழிலுக்கு–
சதுர்வகை–
சுருதிகள் சம்பந்தம் உண்டு!

எனவே...
இனியனே!
ஒன்று உணர்;
உலகில்...

இம்சையில்லாமல்—
இயக்கமில்லை; இதை—
மண்டையில் ஏற்றால்—உனக்கு
மயக்கமில்லை!

'உலகத்தில்—
உச்சமான—
அறம் எது? இதோ! பார்!
அதுதான் இது!'

என்று—தனை
ஈன்ற...
தாய்தந்தையிடம்—
தருமவியாதன்—
கவுசிகனைக்—
கூட்டிச் சென்றான்; என்
இறைவன் !
இறைவி!
இன்றும் என்றும்
இவர்களே!' என்றான்!

நல்ல ஆடைகளுடனும்—
நல்ல ஆரோக்கியத்துடனும்...

வியாதனின் பெற்றோர்—
தவிசில்
வீற்றிருந்தனர்; தனயனால்—
எல்லா நலன்களும்—குறைவற
ஏற்றிருந்தனர்!

அறைமுழுக்க—
அகலும் சந்தனமும்—
இறைந்தன மணத்தை; அவை—
இயம்பின வியாதன் குணத்தை!

குடியிருந்த—
கருக்கோயில்—தன்

தலைவனுடன்
திருக்கோயில் கொண்டிருக்க...

தருமவியாதன்–அவரது
திருவடித் தாமரைகளில்...

சாஷ்டாங்கமாய்–விழுந்து
சேவித்தான்; அவர்களை–
அறம் பொருள் இன்பம்–
அனைத்தும் நல்கும்–
பரம்பொருள் என்றே–
பாவித்தான்!

பார்ப்பன–
பிரமசாரியிடம்–
பிறகு பேசினான்; பேச்சில்–
பிரகாசத்தை வீசினான்!

'மறைச்சி ஒருத்தியின்–
மகனே! இன்று–
இறைச்சி விற்பவன்–
இயம்புகின்றேன் ஒன்று!

மண்ணில் பிறந்த–
மனிதன் எவனுக்கும்...

அன்னை;
அத்தன்;
அனல்;
ஆத்மா;
ஆசான் என்று–
அன்றாடம்–
அருச்சித்து–
ஆராதிக்க வேண்டிய–
அஞ்சு பேர் உண்டு!

இவர்தம்—
இதயங்களை—
எந்த மகன்—
இன்புறச் செய்வானோ...

அந்தமகன்—
அடைவான் ஞானதிருஷ்டி;
அவன்—
தீர்மானிக்கும் தேதியில்—
தரையிறங்கும் வானவிருஷ்டி!

கவுசிகனே!
கணவனுக்குச் செய்த—
பணிவிடையால்—ஞானப்
பார்வை பெற்றாள் பாவை;
அந்தப்—
பார்வையினால்—அவள்
பார்த்தறிந்தாள்—உனது
கோபத்தால்—ஒரு
கொக்குக்கு நேர்ந்த சாவை!

தாய் தந்தைக்குத்
தொண்டு செய்து—நான்
திவ்விய ஞானத்தைப் பெற்றேன்;
அந்தப் பெண்—உன்னை
அடியனிடம் அனுப்பியதை—
அதனால்தான் அறியலுற்றேன் !

கவுசிகனே!
கர்வத்தை விடு; தினம்—
தாய் தந்தை—
திருவடிகளில் விழு;
பெற்றோர்களுக்குப்—
பாதபூஜை புரி; அதுவே—

அறத்திற்கும் அறமான—
அறமென்று அறி!'

தருமவியாதனனின்—
திருவாசகங்களைக் கேட்டு...

கவுசிகன் திருந்தினான்; தன்
கருவத்திற்கு வருந்தினான்;
வீடு சென்று—
வண்ணமலர் தூவி—
பெற்றோரை பூஜித்து—அவர்தம்
பாதோதகம் அருந்தினான்!' (II – பக். 219-224)

கிளைக்கதைகள் யாவும் முதற்கதையை — மூலக்கதையை — விளக்குவனவாகவும், சில இடங்களில் அதன் வேகத்தை முடுக்கி விடுவனவாகவும் அமைகின்றன.

சுவைகளின் திறம்

கவிதையைக் கனிவித்துப் படிப்போருக்கு இன்பத்தை நல்குவது அதில் பொதிந்துள்ள உணர்ச்சி. அந்த உணர்ச்சியால் உள்ளம் பூரிக்கும் பொழுது பொங்கி வரும் இன்பத்தைத் தான் தமிழ் இலக்கண நூலார் 'மெய்ப்பாடு' என்ற சொல்லால் குறித்தனர். இந்த இன்பப் பெருக்கு மெய்யின்கண் புலப்படுவதால் 'மெய்ப்பாடு' என்று திருநாமம் இட்டதாகக் கருதலாம்.

உலகப் பெருள்களைக் காண்பது ஒருநிலை; அவற்றைக் கண்டு இன்புறுவது மற்றொரு நிலை. ஒவ்வொருவரும் பொருள்களைக் கண்டு மகிழ்வதற்கும் மகிழாது இருப்பதற்கும் அவரவர் மனநிலையே காரணமாகும். மனத்தின் போக்கும் ஒரு நிலையில் இருப்பதில்லை. அஃது இன்பமுற்றிருக்கும் பொழுது உலகமே இன்பமயமாகத் தோன்றும்; துன்பமுற்றிருக்கும் பொழுது உலகம் துன்ப மயமாகக் காட்சியளிக்கும். ஆனால் மனம் இன்பத்திலும் துன்பத்திலும் நிலைத்திருப்பதில்லை. அது பொருள்களின் நிலையைப் புறக்கணித்து இன்பதுன்பங்களை அநுபவிக் கின்றது. இவ்வாறு மனம் தொன்றுதொட்டு எத்தனையோ பொருள்களை அநுபவித்துள்ளது; மனம் அப்பொருள் களை அநுபவிக்கும்பொழுது அஃது அநுபவித்தவாறு அப்பொருள்கள் தமது உருவத்தை மனத்தில் செதுக்கி விட்டுப் போகின்றன. பிறகு மனம் மீண்டும் அப்பொருள் களைக் காண நேரிடுங்கால் அவை முன் அநுபவித்த சுகம் அல்லது துக்கம்—உணர்ச்சியைத் தட்டி எழுப்புகின்றன. இவ்வாறு மனத்தில் செதுக்குண்டிருக்கும் உணர்ச்சியைத்

தான் 'வாசனை' என்று கூறுவர். புறத்தே பொருள்களைக் காணும்பொழுது அகத்தே உறங்கிக் கிடக்கும் அப்பொருள்களைப் பற்றிய 'வாசனை' மலர்கின்றது. அவ்வாசனைக்கேற்றவாறு நாம் உலகப் பொருள்களை நல்லவை என்றும் தீயவை என்றும் கொள்ளுகின்றோம். எல்லாவற்றையும் உணரும் நிலை மனத்திற்குக் கிட்டிவிட்டால் அது பெறற்கரிய பேறாகும். அந்நிலை கொண்ட மனம் வாய்க்கப் பெற்றவனே கவிஞன். யாவற்றையும் இரசமாய்க் கண்டு உணரும் உள்ளத்தை யுடையவனே சிறந்த கவிஞன் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

இரசவிளக்கம்: இரசம் என்பது என்ன? ஒரு காவி யத்தைப் படிப்பதால் உண்டாகும் இன்ப உணர்ச்சியே இரசமாகும். மனம் உணர்ச்சியால் பூரித்திருக்கும் பொழுது அதில் ஓர் ஒளிவீசும்; அதுவே இன்பம்; அதுவே ஆன்மஒளி. ஆன்மா அங்குத்தான் பிரதிபலிக்கின்றது. அந்நிலையை அடைவதற்கு மனம் சலனமற்றிருக்க வேண்டும். அந்த அசைவற்ற நிலை மனத்திற்குப் பலவிதங்களில் உண்டாகலாம். யோகியர் தம் மனத்தை வசப்படுத்தி நிலைநிறுத்தி சமாதி நிலையில் ஆன்ம ஒளியைப் பெறுகின்றனர். உறக்கத்திலும் மனம் சோர்ந்து அசைவற்றுக் கிடக்கும்பொழுது அங்கும் ஆன்மா தோற்றமளிக்கின்றது; இன்பமும் தலைக் காட்டுகின்றது. காவியங்களைப் படித்து உணர்ச்சிப் பெருக்கால் மனம் பூரிக்கும்பொழுது ஆன்ம ஒளிவீசும்; மனத்திற்கும் மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படும். எனவே, காவியத்தைப் படித்து அதில் கவனத்தைச் செலுத்துகிறவர் கட்குச் சுவையின் தன்மை தெளிவாகப் புலனாகும்.

இரசப்பாகுபாடு: நம்முடைய பேச்சும் எழுத்தும் உணர்ச்சியுடன் நின்று விடுகின்றன. ஆதலால் இரசத்தைப்

பாகுபாடு செய்வது இயலாததாகின்றது. சுவை நிறைந்த மாம்பழத்தைத் தின்ற ஒருவன் அதன் சுவையைப் பற்றிப் பலவாறு வருணிக்கலாம். ஆனால் அதன் சுவையைப் பிறரால் உணரச் செய்வது இயலாது. பிறரும் அம்மாம் பழத்தைத் தின்று சுவைத்தாலன்றி அதன் சுவையை உணர முடியாது. இரசமும் அந்த வகையைச் சார்ந்ததே. இரசம் ஒருவருடைய அநுபவம். அதைப் பிறருக்கு எடுத்துக் கூற எவராலும் இயலாது. எனவே, சுவை இலக்கண நூலார் இரசநிலையை வைத்துக்கொண்டு அதனை வகுத்துக் காட்ட முற்படாமல் இரசத்திற்கு முன்னிலையாகின்ற உணர்ச்சியினை வைத்து இரசங்களையும் பிரித்தனர். அவர்கள் உணர்ச்சிகளை ஒன்பதாக வகுத்துள்ளனர். நம் மனத்திற்குத் தோன்றக் கூடிய எண்ணற்ற உணர்ச்சிகள் இந்த ஒன்பது பிரிவுக்குள் அடங்கும் என்பது அவர்கள் கருத்து; அவற்றிற்குப் புறம்பான மனநிலையே இல்லை என்பது அவர்களுடைய துணிவு. உலகப் பொருள்கள் எவ்விதமான மனோபாவங்களை எழுப்பினும் அவற்றை இந்த ஒன்பதற்குள் ஒன்றாகவே பாகுபாடு செய்துவிடலாம். ஒன்பது சுவைகட்கும் தனித்தனிப் பெயர்களிட்டுள்ளனர் அவர்கள். அவை:

	வடமொழி	தமிழ்
1.	சிருங்காரம்	உவகை
2.	கருணம்	அழுகை
3.	வீரம்	பெருமிதம்
4.	ரௌத்திரம்	வெகுளி
5.	ஹாஸ்யம்	நகை
6.	பயானகம்	அச்சம்
7.	பீபத்ஸம்	இழிவரல்
8.	அற்புதம்	மருட்கை
9.	சாந்தம்	(நடுவு நிலை)

என்று தமிழிலும் வடமொழியிலும் வழங்கப்பெறும்.

ஒற்றுமையில் வேற்றுமை : ஒன்பதாக வகுக்கப் பெற்றுள்ள ஓர் உணர்ச்சிகளுள் ஏதாவது ஓர் உணர்ச்சியுள் பிற உணர்ச்சிகள் கலக்காமல் இருப்பது அரிது; பிற உணர்ச்சிகளின் கூறுகள் அதில் இருக்கத்தான் செய்கின்றன. பூமியை எடுத்துக்கொண்டால் அதில் நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்னும் நான்கும் கலந்துதான் இருக்கும். மற்றவை இருந்த போதிலும், பூமியின் கூறு அதில் அதிகமாயிருப்பதால், அதைப் பூமி என வழங்குகின்றோம். அவ்விதமே நாம் சுவைகளின் வேறுபாட்டையும் உணர்தல் வேண்டும். பல இடையூறுகள் இருந்த போதிலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் ஒரே நோக்கமாகத் துஷ்யந்தனையே நாடிய சகுந்தலையின் மனவுறுதியை வீரத்தின் கூறாகக் கொள்ளலாம். ஆனால் கவிஞன் அதைக் காதலின் கூறாகக் கொண்டுள்ளான். அங்ஙனமே சிறை யிருந்த பிராட்டியின் மனஉறுதியை வீரமாகக் கொள்ளலாமேனும், காதலாகக் கொள்வதே மரபு. இவ்வாறே, இசைக் கலையிலுள்ள ஏழு ஸ்வரங்கள் ஒவ்வொன்றிலும் பிற ஆறு ஸ்வரங்கள் கலந்திருப்பதையும், கதிரவன் ஒளியிலுள்ள வெண்மை நிறத்தில் எழு நிறங்கள் கலந்திருப்பதையும் அறிஞர்கள் குறித்துள்ளனர். ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு ஒற்றுமையும் தோன்றும்; வேற்றுமையும் புலனாகும். சுவைகளின் அடிப்படையாகவுள்ள உணர்ச்சிகளை ஆராயும்போதும் ஒற்றுமையும் காணப் பெறும்; வேற்றுமையும் காட்சியளிக்கும். வேற்றுமையைக் கொண்டுதான் உணர்ச்சிகள் ஒன்பதாகப் பிரிக்கப் பெற்றன.

உலகியல் நிகழ்ச்சிகள்: உலகியல் நிகழ்ச்சிகள் சுவையன்று. உலகியலில் நிகழும் செயல்களால் உண்டாகும் இன்பத்தை இரசம் என்று கொள்ளுதல் பொருந்தாது. காரணம், ஒரு சுவைக்குக் கூறும் இலக்கணம் எல்லாவற்றிற்கும் பொருந்துவதில்லை.

உலகியல் செயல்களுள் நகை முதலிய சுவைகளில் இன்பம் உண்டாதல் போல் அழுகை, இழிவரல், அச்சம், வெகுளி முதலியவற்றில் இன்பம் உளதாதல் இல்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை. இதனால்தான் சுவை இலக்கண நூலார் உலகியலின்பத்தைச் சுவை என்று கொள்ளாமல் நாடகத்திலாவது காவியத்திலாவது அச்செயல்கள் நிகழும்பொழுது அவற்றைக் காண்டலும் கேட்டலும் செய்யும் நல்லறிவாளர் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளையே சுவை என்று அறுதியிட்டனர்.

உலகில் ஒரு தாய் தன் ஒரே மகன் இறந்ததைக் குறித்து அழுதலைக் கேட்குங்கால் நமக்குத் துயரம் உண்டாகின்றது. ஆனால் மேகநாதன் இறந்துபட்டபோது இராவணன் மண்டோதரி புலம்புவதாக உள்ள பாக்களைப் படிக்கும் போது அல்லது படிக்கக் கேட்கும்போது அளவிலா மகிழ்ச்சி உண்டாகின்றது. நாமும் அழுதுகொண்டே மகிழ்ச்சி அடைகின்றோம். அவலத்திலும் இன்பத்தைக் காண்பதால்தான் அப்பாக்களைப் பன்முறை படித்தும் கேட்டும் இன்புறுகின்றோம்.

ஒரு முக்கிய கருத்து: துஷ்யந்தன்—சகுந்தலை வரலாற்றை எடுத்து கொள்வோம் (1) அவர்கள் மனத்தில் எழும் உண்மை உணர்வினால் அவர்களிடம் எழும் நேர்காட்சியே காதல் சுவையா? (2) துஷ்யந்தன் சகுந்தலை கதையை நாடகமாக நடிக்கும்போது அந்த நடிகர்களின் மனத்தில் கனவினோ டொத்த ஓர் உணர்வே (சாயுஜ்ய ஞானம்) காதல் சுவையா? (3) நாடகம் காணும் நல்லறிஞர் உள்ளத்தில் தமக்குத் துஷ்யந்தன்—சகுந்தலை முதலானவரோடு அபேதம் கற்பிப்பதனால் எழும் உணர்வே காதல் சுவையா? என்ற கருத்துகள் அறிஞர்கள் மனத்தில் எழுந்ததால் அவர்கள் ஆராய்ந்து நாடகம் காண்பவர்களின் மனத்தில் எழும் உணர்வே காதல் சுவை என்று அறுதியிட்டனர்.

இரசம்பற்றிய இன்னோரன்ன முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு வாலியாரின் பாண்டவர் பூமியில் உள்ள சுவைகளை நோக்குவோம்.

1. நகைச்சுவை: தொல்காப்பியர் இதனை முதற்சுவை எனக் குறிப்பிட்டுள்ளார். மனிதன் ஒருவனுக்குத்தான் 'சிரிக்கும் பண்பு' இருப்பதாகக் கூறுவர். ஆனால் ஆஸ்திரேலியாவில் Laughing Jakas என்ற கழுதையும் சிரிப்புப் பண்பு உடையது என்று எங்கோ ஓர் உளவியல் நூலில் படித்ததாக நினைவு. பொறாமை முதலிய தீய குணங்கள் உள்ளவர்கட்கு நகைச்சுவை அரிதாகத்தான் ஏற்படும். ஒரு சமயம் துரியோதனனிடம் இது தோன்றுகின்றது—கிண்டல் பாவனையில்.

(i) நிலாச்சாப்பாடு முடிந்த மறுநாள் பீமன் காணப் படவில்லை. கட்டைவிரலைக் காணாமல் ஒரு கைவிரல் நான்கும் கவலைப்பட்டன [1] என்று சுவையாகக் கூறுவர் வாலியார். நால்வரின் கவலையை, குந்தி குமுறுகின்றாள். எப்பொழுதும் முதலில் விழிப்பது தருமன். ஆனால் சாப்பாடு முடிந்த மறுநாள் அதிகாலையில் தருமன் எழுந்ததும் வீமனைக் காணவில்லை. 'என்ன ஆனான்!—வீமன் எங்குப் போனான்?' என்று கவலையுடன் தருமன் துரியோதனனை வினவ, அவன் நகைச்சுவை துணுக்கு ஒன்றை நக்கலாக தூக்கிப் போடுகின்றான். இது இலக்கணப்படி நகைச்சுவைக்குப் பொருந்தாது எனினும், துரியோதனனிடம் இதற்குமேல் எழாது என்பதால் நாம் ஓரளவு இதனை நகைச்சுவையாகவே கொள்வோம். அவன் உதிர்ந்த துணுக்கு இது.

> **'தருமா!–உனக்குத்**
> **தம்பிமேல் ஆசை; உன்–**
> **தம்பிக்கு–அவன்**
> **கும்பி மேல் ஆசை!**

1 பா. பூ. பாகம்-2 பக். 219-224

கொண்டைச் சேவல் கூவுமுன்—அவன்
கும்பிக்குள்ளிருந்து—ஒரு
சண்டைச் சேவல் கூவியிருக்கும்—
சோறு கேட்டு;
கேட்டவுடன் போடாவிட்டால்—
குடல்களைத் தின்றுவிடும்—
அது
கொஞ்சம் கொஞ்சமாக—
கொத்திக் கூறுபோட்டு!

பலருக்குப்
பசி வந்தால்—
பத்தும் பறக்கும்;
பீமனுக்குப்
பசிவந்தால்—
பாதம் பறக்கும்!

கர்த்தபம் கெட்டால்
குட்டிச் சுவரு;
வீமன் கெட்டால்
வட்டிச் சோறு!

தருமனே!—என்
தமையனே!

உனக்கும் எனக்கும்
ஒரு சாண் வயிறு;
உம்பிக்கு உள்ளது—
உப்பு நீர்க் கிணறு!
அரண்மனைக்குப் போனால்—
அங்கே நீ பார்க்கலாம்...
அன்னக்குவியலை—
அள்ளி விழுங்கும்—உன்
அன்புக் குவியலை!' (I – பக். 179)

கவிஞர் வாலி இதற்குமேல் நகைச்சுவையைத் துரியன் வாயிலிருந்து பிறக்க வைக்க விரும்பவில்லை. அவனுக்குத் தகுந்தவாறு அளந்து போட்டுவிட்டார்.

(ii) கண்ணில்லாக் காவலனுக்கு அந்தப்புரத்தில் பணிவிடை புரிய வணிகர் குலமங்கையொருத்தி பணிக்கப் பெற்றிருந்தாள். வனப்பிற்கு எடுத்துக்காட்டு என்று சொல்லும்படியாகத் திகழ்ந்த மங்கை அவள். வாலியார் இவளது அழகைச் சுவைக்க முடியாத விழியிலான் நிலையைக் குறிப்பிடும்போது,

சதுர்முகன்—
செருக்கோடு செதுக்கிய—
சிருஷ்டி; அந்த—
சிருஷ்டியை ரசிக்க—
திருதராஷ்டிரனுக்கு—ஏது
திருஷ்டி?

எனினும்...
காமத்திற்குக்
கண்ணெதற்கு?
கண்ணிலா மன்னனால்—
கருவுற்றாள்—அந்தப்
பெண் விளக்கு! (I—பக். 269)

கவிதையின் இறுதிப் பகுதியிலுள் உள்ள 'காமத்திற்குக் கண் எதற்கு?' என்பதிலுள்ள வாலியாரின் நகைச்சுவைக் குறிப்பை நுணுகியறிந்து மகிழவேண்டும்.

2. வெகுளிச் சுவை : இது குரோதம் காரணமாக பிறக்கும் என்பதை மேலே கண்டோம். கவிஞர் வாலி இதனை ஐந்து பேரிடம் பிறக்கச் செய்கின்றார்.

(i) நாகம்: நிலாச்சாப்பாடு நடைபெற்ற நாளன்று நஞ்சு கலக்கப் பெற்ற பாலடிசிலைத் தன் கையாலே வீமனுக்கு ஊட்டிய துரியன் அவன் மயங்கியதும் காட்டுக் கொடிகளால் கட்டி கங்கை நீர்க்குள் சூலங்கள் நட்டிருந்த இடத்தில் உருட்டித் தள்ளினான். வீமனின் விதி சூலங்களின் மீது விழாமல் காத்தது. ஆனால் நீரில் இருந்த

நாகங்கள் அவனைக் கடித்தன. அவன் உட்செவிக்குள் ஒரு கட்செவி நஞ்சை உமிழ்ந்தது. இந்த நஞ்சு பீமனின் மூளையில் தாக்கியிருந்த துரியன் வைத்த நஞ்சுக்கு முறி வாயிற்று. பீமன் பிழைத்துக் கொண்டான். தன்னைக் கட்ட விழ்த்துக் கொண்டு தன்னைக் கொத்திய பாம்புகளனைத் தையும் தன் நகக்கூர் கொண்டு கிழித்து நாசப்படுத்தினான்.

இந்நிலையில் நல்ல பாம்பொன்று நாகராஜனிடம் பீமனைப்பற்றிப் பரிசீலிக்கப் பிராது கொடுத்தது; வெகுளியில் படமெடுத்து தம்முடைய பெருமையையும் மனிதனுடைய சிறுமையையும் பேசித் தீர்த்தது.

நமக்கு—
நாக்கு இரண்டு;
வாக்கு ஒன்று!
மனிதனுக்கு—
நாக்கு ஒன்று;
வாக்கு இரண்டு!
ஆகவே,
அவனை நாம்—
விடக்கூடாது; (I – பக். 174)

என்று கூறியது;

ரௌத்திரத்தோடு—
ராஜநாகம் ஒன்று
கூறியது; கூடவே—
சீறியது!
சீறியது என்றாலும்—அது
சொன்ன சொல்—
சீரியது என்பதனால்...

இதர நாகங்களும்—அதை
ஏற்றன; பீமனை—
அழிப்பதற்கு—ஆண்டையிடம்
அனுமதி கேட்டன! (I – பக். 174)

இங்கு இரண்டு நாகங்களின் வெகுளி காட்டப் பெறுகின்றது.

(ii) *பீமன்:* அரக்கு மாளிகையிலிருந்து தப்பி நெடுந்தூரம் நடந்து மரக்கலம் ஏறி மந்தாகினியையும் கடந்து இரண்டடி எடுத்து வைக்க திராணியுமின்றி ஓர் ஆலமரத்தின் நிழலில் பாண்டவர்கள் தங்கியிருந்த பொழுது மற்றவர் உறங்க வீமன் மட்டிலும் உறங்காது காத்திருந்தான். வீமனின் மனம் உள்ளுக்குள் குமுறிக் கொண்டு வெகுளியில் பேசலானான்.

இதோ!
இங்கு துயில்கின்ற—என்
தமையன் தருமன்—எனக்குத்
தாயைப் போன்றவன்; மகா
தருமிஷ்டன்; தூசுதும்பற்ற—
தீயைப் போன்றவன்!

இந்த—
நெருப்புக்கு—
நெருப்பு வைக்க முயன்றாளே—
கால்
செருப்புக்கு
சமானமாகாத சுயோதனன்; தன்—
சுவாதீனம் அற்று—
சகுனியின் காலடியில்—ஒரு
சுவானம் போலிருக்கும் ஈனன்

என்—
தாய்; தமையன்;
தம்பியர் தவிக்க—அந்த
நாய் தவிசு கொள்ள—
நான் விடுவதா!
வெய்யிலை
வெந்நீர் சுடுவதா?

துரியோதனனே!
துள்ளாதே! எங்களை—
எரித்து விட்டதாய்—
எள்ளாதே!
தருக்கியே! நீ—
தாயின்...

குடல் வழி வருகையில்—
ஜடம்; பின்பு—
குடம் வழி வருகையில்
விடம்!

என்
அண்ணன்—என்னை
அனுமதித்தால்...

ஒரு சில நொடிகளில்—
உன்னைச் சாப்பிடுவேன்;
அப்பொழுதும்—
அடங்காத பசிகொண்டு...
கர்ணனையும் சகுனியையும்-
கைதட்டிக் கூப்பிடுவேன் !

உங்களை—
உண்டு உமிழ்வேன்;
அதன் பின்பே—
அமைதியில் அமிழ்வேன்;

ஆனால்—என்
அண்ணன் மனம்
அதற்கு ஒப்பாது;
ஒப்பினால்—
உங்கள் தலை தப்பாது!' (II – பக். 289-90)

இங்ஙனம் பீமன் பிச்சேறியவன்போல் தனக்குள் புலம்புவதை—வெகுளி ததும்பப் புலம்புவதை—வாலியார் மிகஅற்புதமாகக் காட்டுகின்றார். பாசுரப் பகுதியில்

வீமன் சினம் குழியிட்டுக் கொண்டிருப்பதை நாம் மனத்தால் காண்கின்றோம்.

(iii) *பலராமன்:* காசிபர் ஓமம் வளர்த்து விசயனும் வசுதேவன் மகளும் கைத்தலம்பற்றிக் கண்ணனிடம் ஆசிபெற்று இந்திரப்பிரஸ்தம் ஏகின செய்தியைப் பலராமன் அறிந்து இதயம் இடிந்து கண்ணனைக் கடிந்து பேசுகின்றான். இவனது சினம் வெடிக்கப் பேசும் உரையை வாலியார் சித்திரிப்பது:

‘சாதுவாய் வந்து—விஜயன்
சுபத்திரையைக் கொண்டு
செல்ல—
ஏதுவாய் இருந்தது நீயா?
தழலூதும் வேதியனாய்—
வேடம்
தாங்கத் தோழனுக்குரைத்தது—
குழலூதும் வாயா?

முன்பே—
மணம் முடித்தவன்
‘அன்பே!’ என்று
அழைப்பதா என் தங்கையை?
அவளும்—
அவனை விரும்பி—
அவனோடு ஓட—
அக்கணமே விடுவதா
சங்கையை!

என்—
சகோதரி சுபத்திரை—
சூடு சுரணையற்ற மடந்தையா?
சகோதரனே—அத்தகு
சகோதரிக்கு உடந்தையா?

ருதுவான—
ரோஜாவை—
தென்றல்—
தூக்கிச் செல்ல...

உதவியது வேலி—என
ஊர் பேசாதா கேலி?

ஆயர்குலத்தார்—இளிச்ச
வாயர் குலத்தார்—என்றந்த
விஜயன் எண்ணிவிட்டான்;
விஷமம் பண்ணிவிட்டான்!

....
வழிபட்ட பாவத்திற்கு—என்
மூக்கைப் போர்த்தான்; என்னை
முட்டாள்களோடு சேர்த்தான்!

கிருஷ்ணா!
கீர்த்தி மிகு—

யாதவ குலத்தார்க்கு—
யாண்டும் உயிராயது...

மானம்; தன்மானம்! நமக்கது
மரபுவழி வந்த சன்மானம்!

மானம் காப்பதில்—கவரி
மானும் நமக்கில்லை சமானம்;

....
தம்பி! இதை நான்—
தாங்க மாட்டேன்;
பாண்டவர் குலத்தை—
பூண்டோடு அழிக்காமல்—
துளிப்பொழுதும்—இனி
தூங்கமாட்டேன்!'

வெண்ணிற மேனி—வேர்ப்பை
வெந்நீராய் வடிக்க...

கண்ணிரண்டில்—
கத்திரி வெய்யில் அடிக்க...

வெட்டுண்ட பல்லி வாலாய்—
உதடுகள் துடிக்க...
எரிசினத்தால் முகத்தில்
எள்ளும் கொள்ளும் வெடிக்க...

பலராமன்—பஞ்ச
பாண்டவரைக் கறுவினான் (II – பக். 56-58)

ஆதிசேஷன் அம்சமல்லவா? பலராமன் கோபத்தில் மெய்ப்பாடுகளையும் பாராட்டுகின்றார் வாலியார். பாடலின் இறுதிப்பகுதியில் இவற்றைக் கண்டு மகிழலாம்.

(iv) *துரியன்: தருமனின் இராசசூய வேள்வி முடிந்தது. வேள்வியில் கண்ணனுக்கு அக்கிரபூசை (முதல் மரியாதை) செய்யப் பெற்றது கண்ணனுக்கு வீடுமன் யோசனைப்படி. சதம் பிழை போட்ட சேதி நாட்டரசன் சிசுபாலன் கண்ண னின் ஆழிப்படைக்குப் பலியானான். பல்வேறு பரிசில் களை அவரவர் தகுதியறிந்து தருமன் வழங்கி விருந்தினர் கட்கு விடைகொடுத்தான். இவற்றையெல்லாம் கண்ட,*

பாம்புக் கொடியோனுக்கு
பாம்பினும்—
பத்து மடங்கு கொடியோனுக்கு;

பங்காளிக் காய்ச்சல்—
பகபக வென்று ஏற;
உஷ்ண வேர்ப்பு—
உடம்பெறலாம் ஊற—

வயிறு—ஒரு
வெள்ளாவியாய் எரிந்தது;

கொப்பூழ்—அந்தக்
காங்கையில் கரிந்தது (II – பக். 106)

இந்நிலையில் நகர் திரும்பிய துரியனுக்கு உறக்கம் வரவில்லை. அழுக்காறு அவனை அசத்தியது. இந்நிலையில் இவனுக்கு வந்த கோபத்தை விநோதமாகச் சித்திரிக்கின்றார் கவிஞர் வாலி.

நாகக் கொடியை—
நிமிர்த்திப் பிடிப்போன்—நிதம்
சோகக் கொடியை—
சுமந்து நின்றான்;

'சமத்காரம் இல்லாத—
சாதாரண தருமனுக்கு—
சார்வ பௌமன் என்று—
சோடசோபாரமா!
தவளையைத் தின்னும்—
தண்ணீர்ப் பாம்பிற்கு—
ஆதிசேஷன் என்னும்
அங்கீகாரம்?'
என—
எரிச்சல் கொண்டான்!

எண்ணற்ற பரிசில்களை—
எண்ணிப் பார்த்தான்; நெஞ்சில்—
எண்ணியதன்றி—விரல்
விட்டும்
எண்ணிப் பார்த்தான்!
விரல்களில் அடங்குமா?
விண்மீன்களின் கணக்கு?
வந்தது அவனுக்கும்—அவன்
விரல்களுக்கும் பிணக்கு!

பத்து விரல்களையும்
பளாரென்று—

பூமியில் அறைந்தான்; தெறித்த
முத்து மோதிரங்களைப்
பொறுக்க—
முடிச் சாத்துடைய பணியாள்—
மூலைக்கு மூலை விரைந்தான்!

துரியன்—மீசையைத்
துழாவிய படியே...
ஆடியின்முன்—தன்
அழகு பார்த்து நின்றான்!
அவன்மீது—
அவனுக்கே கோபம் வர...
அவனை
அவனே—
அடித்துக் கொன்றான்!

ஆடியும்—
ஆடியில் தெரிந்த—
சுயோதனனும்—
சில்லுசில்லாக...
குத்துவிட்ட முட்டியில்—
குளமாய் ரத்தம்; காழ்ப்பில்—
கன்னாபின்னா வென்றாகி—
சின்னா பின்னமானது சித்தம்! (II – பக். 109-10)

கோபம் வந்தால் மனிதன் என்ன செய்கின்றான் என்பதே அவனுக்குத் தெரியாது. இந்த நிலையில் நாம் அரவக்கொடியோனைக் காண்கின்றோம்.

(v) *விழியிலான்: துரியோதனனும் சகுனியும் கண்ணிலானிடம் வருகின்றனர். சகுனி துரியோதனின் கவலையை திருதராட்டிரனின் விரிவாக எடுத்தோதி தருமனின் எல்லாச் சொத்துகளையும் பறிமுதல் பண்ண வேண்டும் என்று அவன் குலமுதல் குதிப்பதாகச் சொல்ல,*

கண்ணிலான் தவிசிலிருந்து எழுந்து சகுனிமேல் எரிந்து விழுந்து பேசுவதை வாலியார் விரித்தோதுகின்றார்.

'ஆலம்போல் வளர்ந்துவிட்ட
ஆலமே! காந்தாரியின்—
கூப்பிறந்துவிட்ட—கஷ்ட
காலமே!

என்—
இஷ்டமகனைப் பிடித்து—தன்
இஷ்டம்போல் ஆட்டுவிக்கும்
அஷ்டமத்துச் சனியே! அறிவில்
அஷ்டகோணல் கொண்ட
சகுனியே!

மூக்கு முழியோடு உலவும்—
தீக்குறியே! மும்மலங்களின்—
மொத்தக் கலவையே! செய்து—
முடித்தனையே பாவி!—என்
முத்தனைய மூத்த மகனுக்கு
மூளைச் சலவையே!

மகனுக்கு—நீ
மாமனா; உயிரை—
எடுக்கப் பிறந்த—
ஏமனா?

ஒன்றுவிட்ட சோதரர்க்கிடை—
நின்றுவிட்ட நெடுஞ்சுவரே!
மஞ்சனாய் வந்து—எனது
மனைபுகுந்த மாபெரும் தவறே!

....
பாண்டவர்—எவரது
பொருளை போகத்தை—
திருடித் தின்றார்? எந்த—
தருமத்தைக் கொன்றார்?

....
உன் சொல் கேட்டு—என்
உத்தமபுத்திரன்...
அவர்க்கு—
அன்று தொட்டு—
ஊறு செய்தான்; அதுவும்
நூறு செய்தான்!
ஒரு—
துன்மகன்—இந்தத்
துரியோதனன் என்றறிந்தும்—
என் மகன் என்பதால்—பொறை
ஏற்றனர் பாண்டவர்; அவர்—
கோழையரல்ல; கூரம்பால்—பல
குடல்களைக் கீண்டவர்!

....
மகத்தில்—முதல்
மரியாதையைப் பெற்ற...
கண்ணனை—ஒரு
கச்சடா போல்—
கண்டமேனிக்குப் பேசுகின்றாய்;
உறுதலைக்கெல்லாம் உயரிய—
ஒரு தலையை—ஒரு
தறுதலை என்று நீ ஏசுகிறாய்!

கோனார்—
குடிப்பிறந்த கண்ணன்—
ஊனார்—
உடலெடுத்த கடவுள்; வாக்குத்—
தந்தான்—
தரைமகளைக் காக்க; ஆதலால்—
வந்தான்—
ஒருத்தியின் கருவுள்!
நீ—

மலர்மாலையின் மேன்மையறியா–
மர்க்கடம்;
கர்ப்பூர வாசமறிந்திடாத–
கர்த்தபம்!' (II – பக். 121-122)

இவ்வாறு சகுனியைத் திருதராட்டிரன் திட்டித் தீர்ப்பதில் அவனது சினம் வீறிட்டெழுவதைக் காணமுடிகின்றது.

(vi) *திரௌபதி: பூஞ்சோலையினின்றும் சகாதேவனோடு கண்ணன் நீங்க பாஞ்சாலி நேரில் நின்று சினம் வெடிக்கப் பேசுகின்றாள் மொத்தம் பொத்திப் பொத்திப் பதின்மூன்று ஆண்டுகள் வைத்திருக்கும் கோபத்தைக் காட்டுகின்றாள்.*

பொட்டை ஒருவன்–பெற்ற
பொட்டை ஒருவன்–என்
புடைவை உரிக்க–ஈனப்
புழுக்கள் சிரிக்க...

கண்ணா! என நான்–
கதறிய நாளில்–வந்துதவிய
அண்ணா! அச்சா!
ஆபத் சகாயா!
பதின்மூன்று ஆண்டுகள்–நான்
பொத்திப் பொத்தி
வைத்திருக்கும்...

கோபம் என்ன–
கொழுந்து வெற்றிலையா–
உடனே
கிள்ளி எறிய? கானகத்தில்
காய் கிழங்கைத் தின்று–
காலங்கழித்தேன்–உள்ளே ஒரு
கொள்ளி எரிய!
பாவி துரியனும்–அவன்

பின்னவன் துச்சனும்—ஐவர்
தேவி எனக்கிழைத்த—
தீங்குகள் அனந்தம்; அந்த—
நீசச் செயல்களை—
நினைவிற் கொள்ளது—சிறு
ஈசல் பூச்சியாய்—என்
ஈசன் இருத்தல் அசிங்கம்!

ஐந்து ஊர்களோ;
ஐந்து வீடுகளோ;
மைந்துமிக்க—என்
மணாளன்...

சுயோதனனிடம் பெற்று—ஒரு
சாது ஆவதோ? ஒரு சத்திரியன்—
சாது ஆகும் சிறுமையைக் கூற—
நீ
தூது போவதோ?

சண்டை போட்டு—துரியன்
செந்நீரைப் பூசாமல்—நான்
கொண்டைபோட்டு—என்
கூந்தலை முடிப்பது எவ்வாறு?

கவிழ்ந்த தலையோடும்—
கால காலங்கள்—
அவிழ்ந்த குழலோடும்—நான்
அலைந்திட வேண்டுமோ
இவ்வாறு!

ஒருகாலும்—இதற்கு
ஒப்பமாட்டாள்—இந்த
துருபதன் மகள்; செய்தே—
தீருவாள் துரியனைத் துகள்!

பாண்டவர்
பராமுகமாக இருப்பினும்...

தந்தையும்—என்—
தனயரும்—
அபிமன்யு தலைமையில்—
ஆற்றுவர் யுத்தம்; அவர்—
அள்ளித் தருவர்—நான்
அளகபாரம் முடிக்க—அந்த
அரவக் கொடியோன்—
ஆக்கையின் ரத்தம்!

விழிகளில் வைகாசி
வெய்யில் அடிக்க;
வெப்பில் வளமேனி—
வெந்நீர் வடிக்க;
கத்திரித்த கவுளிவாலாய்—
கனியதரம் துடிக்க;
கண்ணீரில் கிடந்து கிடந்து
கதுப்புகள் துடிக்க;
தீரஉரை நிகழ்த்தி நின்றாள்—
திரௌபதி! (II – பக். 335-36)

பாஞ்சாலியின் கோபத்தில் மெய்ப்பாடுகளும் தோன்றி யிருப்பதை நோக்கி மகிழலாம்.

3. காதல் சுவை: *வடமொழியில் இதனைச் 'சிருங்காரம்' என்பர். தொல்காப்பியர் இதனை 'உவகைச் சுவை' என்று குறிப்பிடுவர். சுவைநூலார் சிருங்காரத்தை முதல் சுவையாகக் குறிப்பிட்டுள்ளனர். இதனை 'இரசங்களின் மன்னன்' என்றும் பாராட்டுவர். 'காதல் இல்லாமல் கதை உண்டா?' என்ற உலக மொழியையும் கேள்விப்படுகின்றோமன்றோ? இதற்கு மூலகாரணம் இலக்கியங்களில் இச்சுவையைக் கவிஞர்கள் அளவுக்கு மீறி வளர்த்திருப்பதுதான். கவிஞர் வாலியின் பாண்டவர் பூமியில் சந்தனு—கங்கை, சந்தனு—சத்தியவதி,*

அர்ச்சுனன்—சுபத்திரை, நளன்—தமயந்தி போன்றவர் வாழ்க்கையில் இச்சுவை காட்டப்பெறுகின்றது. வருணனைப்பற்றிய இயலில் (இயல்—2) காம இச்சை (7ஆம் தலைப்பு) என்ற பகுதியில் இச்சுவைபற்றிய விவரங்கள் தெரிவிக்கப் பெற்றிருப்பதால், ஈண்டு அதைப்பற்றி விவரிக்கவில்லை. இந்த இயலின் முற்பகுதியில் சொல்லப்பெற்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இச்சுவையை அநுபவித்தால் சுவை தெளிவாகும்.

4. அச்சச் சுவை: கீசக வதம் துரியோதனனின் மனத்தில் ஐயத்தை விளைத்தது. வீமனைத் தவிர அவனை யாராலும் கொல்லவொண்ணாது என்று கருதிய கண்ணிலான் மைந்தன் விராட நகரை இருமுனைத் தாக்குதல் நிகழ்த்தி வெவ்வேறு வேடம் புனைந்து பாண்டவர் நிகழ்த்தும் வெளிவராத நாடகத்தை வெளிப்படுத்தினால் அவர்களை மீண்டும் பன்னிரண்டு ஆண்டு வரை வனவாசம் அனுப்பலாம் என்பது அவனது திட்டம். தென்புற இடைச்சேரியில் உள்ள கறவைகளைக் கவர சுதர்மன் தலைமையில் ஒரு சேனை வளைத்து நின்றது. கங்கன் என்ற தருமன் தந்த உற்சாகத்தால் வயதான விராட அரசன் தலைமையில் ஒரு சேனை தயாராகி சுதர்மனின் சேனையை எதிர்த்தது.

வடபுறத்தில் துரியன் தலைமையில் வந்த சேனையை பிரகன்னளை வேடம் பூண்டிருந்த அர்ச்சுனன் தேரோட்ட விராட அரசனின் மகன் உத்தரன் தயாரானான். உத்தரன் தேரில் அமர்ந்தபடியே கவுரவரின் பெருஞ்சேனையைக் கண்ணுற்று அச்சம் மேலிட்டு தேரிலிருந்து தொப்பெனக் குதித்து ஊரை நோக்கி ஓடலானான். பிரகன்னளை அவனைத் துரத்திச் சென்று ஒரு வழியாய்ப் பிடித்து நிறுத்தினாள். அகப்பட்ட அரசகுமாரன் பிரகன்னளையிடம் கூறுவது.

................'நான்
சுகப்பட்ட ஜன்மம்; சண்டை
சுத்தமாய் வராது!' என்றான்;
'அன்றாடம்—நான்
அம்மா பக்கத்தில்—
படுத்து வளர்ந்த—
பிள்ளை; எனக்கு—
குருதி; குத்தீட்டி;
குத்துவெட்டு என்றால்—
கொஞ்ச நஞ்சமல்ல பயம்;
கொள்ளை!
வாளை எடு! நீ—
வீசு! என்னை—
ஆளைவிடு!' என்று
அழுது வடிந்து நின்றான்!

ஆண்பால்—
அலிப்பாலாய்க் கூசியது;
அலிப்பால்—
ஆண்பாலாய்ப் பேசியது! (II – பக். 277-78)

அற்புதமான வருணனை. வாலியார் உத்தரனின் அச்சத்தை அற்புதமாகப் படைத்துக் காட்டி நம்மை அச்சச் சுவையை அநுபவிக்கச் செய்துவிடுகிறார்.

5. வீரச்சுவை: *தொல்காப்பியர் இச்சுவையைப் 'பெருமிதம்' என்று குறிப்பிடுவர். அச்சத்தால் நடுங்கி ஓடின உத்தரகுமாரனுக்கு பிரகன்னளை (தனஞ்செயன்) ஊட்டின அறவுரைவீரச்சுவை சார்ந்ததாகக் கருதலாம். கவிஞர் வாலியே,*

தனஞ்சயன்—உத்தரனைத்
தேரில் ஏற்றினான்; வீரத்தை
வாசகங்கள் மூலம்—அவன்
வேரில் ஏற்றினான் (II – பக். 278)

என்று கூறியிருப்பதனால் நம் கருத்துக்கு அஃது அரணாக அமைகின்றது. தனஞ்சயனின் உரை இது:

ராஜகுமாரா! நீ—
ரௌத்திரம் பழகு![2]
புலாலைப் புசிக்காது—
புறந்தள்ளிவிட்டு—
புளியோதரை புசிப்பதா—[3]
புலிகளுக்கு அழகு?

சாமானியனல்ல—சமர்வரின்
சமாதானமாய்ச் செல்ல; நீ—
சத்திரியன்—சமர்செய்;
சமர்த்தலில் காட்டு உன்—
சமர்த்து; சமர்செய்ய—பகை
அமர்த்தலில் வரின்—அடித்து
அமர்த்து!

மன்னன்
மரபே! உனக்குரிய—
தீரத்தில்—கூடாது
திரிபே!

குருதியை—உன்
குடிநீரெனக் கொள்;
குத்துவெட்டெனில்—கங்காருக்
குட்டிபோல் துள்;
உனைப் பொருதுவோன்—உன்
உள்ளத்தாள் முள்; எனினும்
உறங்கவிடாதே வாளை—
உறையின்உள்; நேர்—
இருக்கும் இகலை—அட!
இவனா? என எள்; அவனை—
இல்லையென்றாக்கு; அவனுறவு—
இறைக்கட்டும் எள்!

2 இது பாரதியின் புதிய 'ஆத்திசூடி' (பலவகைப் பாடல்கள் தலைப்பில் உள்ளது)யில் உள்ள வாக்கியம்.

3 'புல்லைப் புசிப்பதா?' என்றிருக்க வேண்டியது வைணவ உணவில் சிறப்பான 'புளியோதரை' வருகிறது. காரணம், கவிஞர் வாலி வைணவராதலால்.

உத்தரா!
உனக்கு உரிமையான...
காலிகளைக் கவர்ந்த—அக்
காலிகளை; கழனிகளின்—
சாலிகளை மேய்ந்த—பெருச்
சாளிகளை;

நீ—
நீள்வாள் எடுத்து...

சாடாதிருந்தால்—உனைச்
சாடாதிருக்குமா ஊர்? சண்டை
போடாதிருந்தால்—கெட்டுப்
போகாதிருக்குமா பேர்? —(II-பக். 278)

இந்த வீர உரையால் உத்தரன் உணர்ச்சிவசப்பட்டான். வீரத்துடிப்பு அவனை ஆட்கொண்டு பார்த்தன் சொற்படி பணிபுரியலானான். மேற்கொண்டு இவன் பேசிய வீர உணர்ச்சி நெருடுகின்றது.

'பார்த்தேன் உன்னை;
பாக்கியவான் ஆனேன்;
உன்னால்—
பயத்திற்கே நானொரு
பயமாகிப் போனேன்!

தெள்ளத் தெளியச்—
சொல்லிச் சொல்லியே—இந்தத்
தெள்ளைத் தேளாக்கினாய்!'

ஒரு
தென்னை ஈர்க்கை
வாளாக்கினாய்!' (II – பக். 279-80)

இதனைப் படிக்கும் நாம் உத்தரன் போல் ஆகிவிடுகின்றோம்; ஒட்ட உணர்தல் (Empathy) நிலை ஆகிவிடுகின்றோம்.

6. வியப்புச் சுவை: *இதுவே அற்புதச் சுவை என்பது. தொல்காப்பியர் இதனை 'மருட்கை' என வழங்குவர். தனஞ்சயன் உத்தரனை நோக்கிப் பேசுவது:*

'உனக்கு—
உதறலெடுத்தால்....
போர் நடத்த வேண்டாம்; நீ
தேர் நடத்து—துரகங்களின்—
வார்பிடித்து; பொருதுவேன்
நான்—
வில் பிடித்து!' (II – பக். 278)

பின்னர் விசயன் விதித்தபடி மணித்தேரை மயானப் பக்கம் விட்டு அதன் மையத்தில் உள்ள வன்னி மரத்தில் மறைத்து வைத்திருந்த ஆயுத மூட்டையை அவிழ்க்க காண்டீபத்தில் ஒளியில் உத்தரன் தலையைக் கவிழ்த்தான். அவனுக்கு இவை யாவும் பஞ்சபாண்டவரின் படைக்கலம் என்றும் அவர்கள் உத்தரனின் பிதாவிடம் அடைக்கலம் என்றும் விளக்கினான்; வியப்பெய்தினான் விராடனின் பிள்ளை. இந்த வியப்பைக் கவிஞர் வாலி,

'........................எச்சிலை—
மென்று விழுங்கி—உத்தரன்
மயங்கினான்!' (II-பக். 279)

என்று தன் கவிதையில் கூறுவார். தொடர்ந்து விளக்குவது:

'விராடன் மகனே! இனி
நாங்கள்—
வெளிச்சத்திற்கு வரலாம்;
பன்னிரு மாதங்கள்—நேற்றோடு
பூர்த்தியானதால்—
நாங்கள் யாரென்ற விவரத்தை—
நாங்களே தரலாம்!

உந்தையோடு—
உட்கார்ந்து—

கவறாடும்–
கங்கபட்டனம் தான்...

ஒப்பாரும் மிக்காரும் இல்லா–
ஒருவன்;
நமனின் அம்சமாய்–
நிலவின் வம்சமாய்–
தரணிக்கு வந்த
தருமன்!

பரிசாரகன்தான்–
பீமன்; பரிகளின்–
நலம் காப்பவன்தான்–
நகுலன்; கறவைகளின்–
சம்ரட்சிப்பிவன்தான்–
சகாதேவன்; நபும்சகனாய்–
ஆடிப்பாடிய அடியேன்தான்
அர்ச்சுனன்!

சோமன் வயப்பட்ட இரவில்–
காமன் வயப்பட்டானே–உன்
மாமன் கீசகன்; அவன்–
ஏமன் வயப்பட்டானே பின்பு...
அதற்குக் காரணமான–
அழகி சைரந்திரிதான்–எம்
அஞ்சு பேரின் பத்தினி; அனல்–
அனையவள் ஆனதோர் உத்தமி!'

விவரங்கள் அனைத்தையும்–
விஜயன் சொன்னதும்...

அவனது–
அடிமலரில்–
அடியற்ற மரம்போல்–
அப்படியே 'தடா'லென்று–

விழுந்தான் உத்தரன்;
விராடன் புத்திரன்!

என்பதாக. விழுந்தது வியப்பினால். இந்த வியப்பு அவனை,

'தனஞ்சயா! உன்—
தம்பிபோல் எனை நீ மன்னி;
என்—
தமையன் போல் நீ; உன்—
தாரம்தான் எனக்கு மன்னி!'

என்று பேச வைக்கின்றது. இங்ஙனமாக, காவியத்தில் வியப்புச் சுவை அமைகின்றது.

7. இழிவரல் சுவை: இழிவரல் என்ற சொல்லைத் தொல்காப்பியர் வழங்குவது. வடமொழியில் இச்சுவை 'பீபத்ஸம்' என வழங்கப் பெறுகின்றது. இதற்குப் பாண்டவர் பூமியில் எடுக்காட்டு சுட்டுதல் அரிதாகவே உள்ளது. கவுசிகன் தருமவியாதனைக் காண மிதிலைக்குச் செல்லுகின்றான்

...........தரும
வியாதனைக் கண்டு;
விதிர் விதிர்த்து நின்றான்!

வாடிக்கையாளர்க்கு—
விற்றுக் கொண்டிருந்தான்...

மாடு;
மறி;
மான்;
மகிஷம்;

இவற்றின்—ஈர
இறைச்சிகளை—
எடைபோட்டு—கசாப்புக்
கடை போட்டு...

ஒரு—
விநோதன்—என
விவரமறியார் பேசும்—தரும
வியாதன்! (II – பக். 218)

இதைப் படிப்போருக்குக் கசாப்புக் கடை அருவருப்பை (ஜுகுப்ஸையை)த் தருவதால் இது பீபத்ஸத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்து விடுகின்றது.

8. **அழுகைச்சுவை:** இதனை வடமொழியில் 'கருணம்' என வழங்குவர். இதற்கும் பாண்டவர் பூமியில் இடம் காண்பது அரிதாகவே உள்ளது. நிலாச்சாப்பாடு முடிந்த மறுநாள் அதிகாலையில் வீமன் காணப் பெறவில்லை. இந்நிலையைக் குந்தி அறிகின்றாள்.

சென்றது ஐவர்;
மீண்டது நால்வர்;
பெற்றவள் குடலை—மாவாய்ப்
பிசைந்தது கவலை!

பிரமை—
பிடித்தவள் போல்—குந்தி
பிச்சேறி நின்றாள்; பின்—
விதியை—
வினைப் பயனை—தன்
வாயில் போட்டுமென்றாள்!

'பொல்லா விதியே!
ஈவும் இரக்கமும்—
இல்லா விதியே!
என்—
பொட்டைப் பறித்தாய்;
பூவைப் பறித்தாய்;
பொட்டும் பூவும் தந்த—
தேவைப் பறித்தாய்!

என்—
இல்லை—உன்போல்
இங்ஙனம் சிதைத்தார்—
இல்லை!

என்
மகனையும் பறித்தாய்—நீ
மண்ணாகிப் போவாய்; ஒரு—
நோவு வந்து—நீயும்
சாவு வந்து சாவாய்!

காற்றுக்குப் பிறந்தவன்—
காற்றுக்கு வழியின்றி—
கூற்றுக்கு இரையாவதா—இங்கு
விதி வகுத்ததே—
வாழ்க்கையென்றால்—பின்
வெறுங்கல்லென இறையாவதா? (I – பக். 180-182)

இங்குக் குந்திக் கவலையில் மூழ்குகின்றாள். பிச்சேறி அழுகின்றாள். விதியை நொந்து கொள்ளுகின்றாள். அதனைச் சபிக்கவும் செய்கின்றாள். இறைவனே கல்லா? என்று கருதும் நிலைக்கு வந்துவிடுகின்றாள். இப்பகுதியை அழுகைச் சுவைக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

9. சாந்தச்சுவை: *இந்த சாந்தரசம் உலகியலின் நீங்கினார் பெற்றியராகலின் அதனையொழித்து ஏனைய எட்டனையுமே பரதமுனிவர் தம் நூலில் கூறியுள்ளார். ஆசிரியர் தொல்காப்பியனாரும் அவ்வாறே எண்சுவையையே கூறுவர்.*[4] *பாண்டவர்களின் வனவாசத்தைப் பற்றிப் பேசும் கவிஞர் வாலி:*

வெள்ளி நிலா—
வம்சத்தின்...

4 தொல். பொருள். மெய்ப். நூற் 3

விழுதுகள்—தாரமொடு
வனவாசம் ஏற்று—
பொழுதுகள் வேகமாய்ப் போயின;
பதின்மூன்று மாதங்களாயின!

காட்டில் வசித்தாலும்—
கந்தமூலம் புசித்தாலும்—இதழ்
ஏட்டில் புன்னகையை—
எழுதி வைத்தபடி இருந்தான்...

தரும பூபதி;
திரௌபதியின் பதி! அவனை—
வருத்த முடியவில்லையே என—
வருத்தப்பட்டது விதி! (II – பக். 158)

இந்தக் கவிதைப் பகுதியில் இக்கட்டான சூழநிலை யிலும் தருமனிடம் சாந்தம் நிலவியதாக நாம் அறிகின் றோம். சைவ சித்தாந்தம் 'இருவினையொப்பு' இதுவே எனக் கருதுவதில்' தவறில்லை.

இங்ஙனமாகப் 'பாண்டவர் பூமியில்' சுவைகளின் திறம் ஒருவாறு காட்டப் பெற்றது.

கிருட்டிணன் தூது

“**தூ**து போனவன் ஏற்றம் சொல்லுவது பாரதம்” என்பது ஸ்ரீவசனபூஷண வாக்கியம். ஆரண்யவாசம் அஞ்ஞாத வாசம் அனைத்தும் முடிந்தன. அவை கூடி இனி நடக்க வேண்டியதை ஆய்ந்தனர். துருபதனின் புரோகிதனைத் [1] தூது அனுப்புவதாக அவை அங்கீகரித்தது. இது முதல் தூது. இவன் சொன்ன செய்தி:

> ‘உரிய பங்கை—
> உதிஷ்டிரன் உங்களிடம்....
>
> இரந்துதான் பெற வேண்டும்; அதை
> நீங்கள்—
> இறந்துதான் பெற வேண்டும்—
> எனப் பண்ணாதீர்!’ (II – பக். 324)

இதனைச் செவிமடுத்த கங்கை மைந்தன்,

> ‘தருமன் பங்கை—
> தருவதே நன்று; மறுத்து—
> உரைப்பது அவ்வளவு—
> உசிதம் அன்று!’ (II – பக். 324)

என்று கூற வெகுண்டான் கதிரின் மைந்தன்.

> ‘கவறாடித் தோற்றதை—ஒருவன்
> கூச்சின்றி தரும்படிக் கேட்டால்....
>
> அந்தணனே! நீ—
> அவன் முகத்தில்—

---

1 வில்லிபாரதம் இவன் பெயர் உலூகன் எனக் குறிப்பிடுகின்றது. அங்கு தருமன் தூது அனுப்பியதாக உள்ளது.

'தூ'வெனத் துப்பாது—
தூதுவருவதோ தப்பாது?

சமாதான யோசனையை—என்
சித்தம் ஒப்பாது; என்வாள்—
உறையில் உறங்காது—விஜயுன்
உதிரம் சப்பாது; துரியன்
உப்புக்கு நன்றியுள்ள வாய்—
ஒப்புக்கு எதையும் செப்பாது;
தோழன் முகத்தில்—ஒருநாளும்
தோல்வியானது கரியை
அப்பாது!' (II – பக். 324)

விவகாரம் முற்றுவதை விழியிலா வேந்தன் உணர்ந்து வேதியனைத் திருப்பி அனுப்பிவிட்டான். தான் சஞ்சயனைத் தூதாக அனுப்பும் எண்ணத்தைத் தருமனிடம் சொல்லுமாறும் பணித்தான்.

சஞ்சயன் தூது இரண்டாவது. இவன் திருதராட்டிரனின் இணைபிரியா நண்பன். கண்ணிலானுக்குக் கண்போல் செயற்படுபவன். இவன் கொண்டு வந்த செய்தி கண்ணிலான் இதயத்தையே காட்டுவது.

நாளை போர் வந்தால்—தருமா!
நீதான் வெல்வாய்—எனினும்—
நானொன்று கேட்கிறேன்—நீ
நிஜத்தைச் சொல்வாய்!

வாழலாம்—நீ வயதில்
சதம்—ஆனால்—
விளக்கு; எது—
வாழ்வில் சதம்?

இரணியன் வதம்;
இராவணன் வதம்; இவை—
புராணங்கள் இன்றளவும்

பேசு வதம்; இவற்றின்—
சாராம்சம் என்ன?
எவனுமில்லை—
சாகுவதம்!

ஆதலால் நீ துரியனை
ஆளவிடு; அவனை—
மண்ணுலக மாயையில் சிக்கி—
மாளவிடு!
நீ—
நீள்சடை வளர்த்து—
துறவுகொள்; தெய்வத்துடன்—
உறவு கொள்!

அரிதானது வீட்டரசு;
அதை நச்சு!
அண்டாதே நாட்டரசு;
அது நச்சு!' (II – பக். 326)

இதை தருமன் கேட்டதும் தடுமாறிப் போனான். அவன் துணைக்கு வந்தான் தேவகிநந்தனன். சில சொல்லி சஞ்சயனைத் திருப்பி அனுப்பினான்.

நாளிதுவரை—துரியன் பற்றி
நான் செய்த ஆய்வால்—
அறிந்த உண்மை யாதெனில்—
அவனொரு நாய்வால்!

....
தருமன் பங்கை—
துரியோதனன் தராவிடில்...

அநேகமாக—
அதிசீக்கிரம்—
அமர் செய்ய நேரும்—
அஞ்சும் நூறும்;
அஞ்சைக் கண்டு—

அஞ்சும் நூறும்;
அஞ்சும் நூறை–
அஞ்சும் நூறும்!

எனினும்–
இறுதி முயற்சியாக
நியாயம் பேச–
நான் வருகிறேன் தூது; சஞ்சயா!
நீ சென்று–இதனை
நேத்திரமிலானுக்கு ஓது!' (II – பக். 328)

கிருட்டிணன் தூது மூன்றாவது; முடிவானது. தருமன் வேண்டுவது.

'தூது சென்று நீ–
தவிர்த்திடல் வேண்டும் போரை;
போர் வந்தால்–அது
போர்த்திடும் குருகுலப் பேரை!

....
மண்ணை–
முன்னிட்டு....
அண்ணன் தம்பிகள்–
அடித்துக்கொண்டால்–
மண்ணே
மண்ணை வாரி இறைக்கும்;

'மண்ணையும்–
மண்ணாள வொரு
மன்னனையும்–மெனக்கெட்டு
ஏனடா படைத்தோம்?' எனும்–
எண்ணம் வரும் இறைக்கும்!

....
இந்திரப் பிரஸ்தத்தை–
ஈவதற்கு மறுத்தானாகில்...

அஞ்சு பேருக்கும்—
அஞ்சு ஊர்களைக் கேள்;
அதையும் மறுத்தானாகில்—
அஞ்சு வீடுகளைக்கேள்;
அதையும் மறுத்தானாகில்—
அவனல்ல நமக்குக் கேள்;
அமர் புரிய நாம் தயார்—
அவன் தயாரா எனக் கேள்!'

என்பது தருமனின் வேண்டுகோள்.

வில்லிபாரதத்தில் தருமன் பேசுவது:

முந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரில்
நடந்துஉழவர் முன்றில் தோறும்
நந்தூரும் புனல்நாட்டின் திறம்வேண்டு;
நாடு ஒன்றும் நல்கான்ஆகில்
ஐந்தூர் வேண்டு; அவை இல்எனில் ஐந்துஇலம் வேண்டு;
அவைமறுத்தால் அடுபோர் வேண்டு;
சிந்தூரத் திலகநுதல் சிந்துரத்தின்
மருப்பு ஒசித்த செங்கண் மாலே [2]

இரண்டையும் ஒப்பிட்டுஅநுபவிக்கலாம். சொற்சுவை பொருட்சுவை இரண்டிலும் கிட்டத்தட்ட ஒன்றுபோலிருப்பதைக் கண்டு மகிழலாம்.

மூத்தோனின் சமாதானப் பேச்சைக் கேட்ட வீமனின் மனம் அனலாய் தகிக்கிறது. இந்நிலையில் பேசுகிறான்:

அண்ணனே! உன்பேச்சு—
அச்சத்தின் உச்சம்;
துரியன் என்னளவில்—
துச்சத்தில் துச்சம்; அத்—
தருக்கனைக் காட்டிலும்—

2 வில்லி பாரதம்-கிருட்டினன் தூது-9

தகவு மிக்கது—நான்
தரித்துத் துப்பிடும்
தாம்பூலத்தின் எச்சம்!

'கேள்! கேள்!' என்று—அந்தக்
கீழ் மகனைக்
கொண்டாடுகின்றாயே—
கேள்! அண்ணே! கேள்! எனது—
கேள்வியை கவனமாகக் கேள்!

உனக்கும் எனக்கும்—அவனா
உறவு? அவனாலன்றோ—
அனலில்
ஏற்பட இருந்தது—நமக்கு
இறவு! அவனாலன்றோ—
அவையில்
புலம்பியது நாம் பூமுடித்த
புறவு! அவன் அரசோச்ச—நாம்
துவராடையோடு
ஏற்க வேண்டுமா—
துறவு?

....
கண்ணன் தூதுசென்றும்—
கண்ணிலான் பிள்ளை—
எண்ணம் திருந்தமாட்டான்;
எதற்கும் வருந்தமாட்டான்!

முரசுக் கொடியுடைய—
மூத்தவனே! போர்—
முரசைக் கொட்டு;
பொறுமையை—
மூட்டை கட்டு!

கை சுழற்றும்—என்
கதாயுதத்தால்....

துடை பிளந்து—நான்
துரியனைச் சேய்யவேண்டும்—
துவம்சம்; இல்லையேல்—
துலங்காது நம் வம்சம்!' (II – பக். 330-31)

இதனைப் படித்து உணர்ச்சிப் பெருக்கில் திளைக்கும் நாம் வில்லி பாரதத்தில் வீமன் பேச்சையும் காண்போம்.

விரிகுழல்பைந் தொடிநாணி வேத்தவையில்
  முறையிடுநாள் 'வெகுளேல்!' என்று,
மரபினுக்கும் நமக்கும்உலகு உள்ளவும்,
  தீராத வசையே கண்டாய்!
எரிதழல்கா னகம்அகன்றும் இன்னமும்வெம்
  பகைமுடிக்க இளையா நின்றாய்!
அரவுஉயர்த்தோன் கொடுமையினும் முரசு உயர்த்தோய்!
  உனதுஅருளுக்கு அஞ்சி னேனே! (11)

கான்ஆள உனைவிடுத்த கண்இலா
  அருளிலிதன் காதல் மைந்தன்
தான்ஆளும் தரணிஎலாம் ஒருகுடைக்கீழ்
  நீஆளத் தருவன், இன்றே;
மேல்நாள்,நம் உரிமைஅறக் கவர்ந்தபெருந்
  துணைவன், உனைவெறாத வண்ணம்
வான்ஆள வானவர்கோன் தன்பதம் மற்று
  அவன்தனக்கே வழங்கு வேனே. (12)

தருமன் அவனைக் கையமர்த்தி சமாதானம் செய்யவும், அதற்கும் பொறாமல் போரையே வற்புறுத்துகின்றான்.

சூடுகின்ற துழாய்முடியோன், சுரருடனே
  முனிவர்களும் சுருதி நான்கும்
தேடுகின்ற பதம்சிவப்ப, திருநாடு
  பெறத்தூது செல்ல வேண்டா;
வாடுகின்ற மடப்பாவை தன்வரமும்,
  என்வரமும் வழுவா வண்ணம்,

கோடுகின்ற மொழியவன்பால், எனைத்தூது
விடுகஇனி, கொற்ற வேந்தே! (17)

மலைகண்ட தெனஎன்கை மறத்த;ண்டின்
வலிகண்டும், மகவான் மைந்தன்
சிலைகண்டும், இருவர்பொரும் திறல்கண்டும்,
எமக்காகத் திருமால் நின்ற
நிலைகண்டும், இவள்விரித்த குழல்கண்டும்'
இமைப்பொழுதில் நேரார் தம்மைக்
கொலைகண்டு மகிழாமல், அவன்குடைக்கீழ்
உயிர்வாழக் குறிக்கின் றாயே. [3] (18)

இரண்டிலும் வீமனிடம் குமுறி எழும் உணர்ச்சிப் பிழம்பை ஒப்பிட்டு நாமும் உணர்ச்சிமயமாகலாம். கண்ணன் தூதுபற்றிய அமைப்புகள் இரண்டிலும் ஒன்று போலிருப்பதையும் காணலாம்.

கண்ணபிரான் அத்தினபுரத்திற்கு வருகிறான் என்ற தகவல் விழியிலான் காதிற்கு எட்டவும் அவன் கட்டளைப் படி ஊர் தேவகிமைந்தனை வரவேற்கத் தயாராகின்றது. தன் மகன் துரியனுக்கும் நேரில் சென்று வரவேற்குமாறு சொல்லுகிறான். ஆனால் தாய்மாமன் நரியன் தடுக்க அவன்,

அழுக்குக் கூடையில்–
அப்பன் சொல்லைப்
போட்டான்!
எனவே–துரியன்
எட்டெழுத்தானை–
எதிர்கொள–ஊர்
எல்லைக்குப் போகவில்லை. (II – பக். 340)

ஊர் மக்கள் வரவேற்றனர்; அவனைக் கடவுளாக எண்ணினர்.

3 வில்லிபாரதம்-கிருட்டிணன் தூது 11, 12, 17, 18.

கண்ணன்—
கழலினை பற்றிக்—
கண்ணில் ஒற்றிக்கொண்டனர்—
கரும வினைதீர;
கள்ளமற்ற மக்கள்—தம்
கண்களில் நீர் சோர! (II – பக். 340)

வீடுமனும் பிறரும் பெருமானைக் கண்டு பெருமளவு பரவசமாயினர். அவனை இட்டுக்கொண்டு திருதராட்டிரன் மாளிகைக்குச் சென்றனர். கண்ணிலானும் காந்தாரியும் தன்மேல் கண்மூடித்தனமான அன்பைக் காட்டுவது கண்டு தாமோதரன் தனக்குள் சிரித்துக் கொண்டான். பின்னர் அவர்களிடம் இவ்வாறு கூறினான்:

எந்த வேலையை—நான்
ஏற்றிங்கு வந்தேனோ—
அந்த வேலையை...
செவ்வனே
ஆற்ற முடியாமல்...

நீங்கள் சம்பந்தி—என
நான் நினைப்பதும்;
காலை மாலை—இங்கு
கை நனைப்பதும்;

அவ்வளவு—
அழகல்ல; அது தீது;
அப்புறம்—
அர்த்தமற்றதாகும் தூது!

நீயாயினும் சரி; பாண்டுவின்—
சேயாயினும் சரி;
நான்—இருவர்க்கும்
நடு; இந்த—
நடுவிற்கு வரக்கூடாது—ஒரு
வடு!

தங்குவதற்கென்று—நான்
தீர்மானித்திருப்பது—உன்
தம்பிவீடு; விதுரரெனும்
நம்பி வீடு! (II – பக். 341-42)

பெரியோரை வணங்கியும் சிறியோரை வாழ்த்தியும் செயல்களை முடித்த வேணுகோபாலன் விதுரன் இல்லம் சென்றான்.

வணங்கி வரவேற்றாள்
விதுரன் மனை! [4]

ஜனார்த்தனன் திருவடி—தன்
ஜாகையில் பட்டதும்...

விதுரன் முகம்—வனசம்போல்
விகசித்தது; வாய்—
வனமாலியின் வாத்சல்யத்தை—
விவரித்தது!

'நாராயணனே! வெள்ளை—
நீத்தம்வீட்டு நிலம் வந்த—
ஆராவமுதனே! அசோதை—
தால்
ஆட்டிய ஆனந்தக் குட்டனே!

நேசிப்பார்க்கும்;
நெஞ்சாரப் பூசிப்பார்க்கும்—
நிழல் வழங்கும்—
நினது...

வண்ணத் திருவடிகள்—எனது
வீட்டில் பட;
வெளிச்சத்தில் வெந்து—எனது
வினைகள் பட;
விளைந்தது பேரின்பம்—

4 வில்லிபாரதத்தில் இவ்வாறு இல்லை. அங்கு அவன் மாணியாக இருப்பதால்.

உன்னை
வழிபட; வழிபட!

மாவலியின்—
மண்டையில் வைத்த பாதம்;
நெடிது வளர்ந்து—
நீள்விசும்பைத் தைத்த பாதம்;

மறையும்—
மாமுனியும் மொய்த்த பாதம்;
ஏழிரண்டாண்டு—வனம்
ஏகிநடந்து எய்த்த பாதம்;
என் இல்லத்தினுளும்—
என் உள்ளத்தினுளும்—
ஒருசேரப்புக; என்—
உள்வலி மிக;

அடடா! என்—
ஆனந்தம் என்னென்பேன்!
கண்ணா!
காயாம்பூ வண்ணா!

எளியேன்—
எய்திய பிறப்பு மனிதம்;
ஏந்தலே! உன்னாலது—
எய்தியது இன்னொரு புனிதம்!

ஆலிலைமேல்—
அயர்வானே கால்விரல் சூப்பி—

அவனே இவன்;
இவனே அவன்;
என்று—
எண்ணி இளகி...

விதுரன்—
வணங்கினான் கைகளைக் கூப்பி! (II-342)

வில்லிபாரதத்தில் விதுரன் இல்லத்தில் நிகழ்ந்தவற்றை யும் காண்போம்:

....

அந்தமாநகர் புகுந்தபின்அரசன்இல் புகாமல்
புந்திகூர்அருள் விதுரன்வாழ் வளமனை புகுந்தான் (73)

....

ஆய்ந்துவல்லவர் நவமணி அழுந்திய அரிஏறு
ஏந்தும் ஆசனம் இட, பொலிந்து அதன்மிசை இருந்தான்(74)

இருந்து உவந்தருள் இறைவனை இறைஞ்சினான்; இறைஞ்சி,
பெருந்துவந்தனைப் பிறப்பையும் இறப்பையும் பிரித்தான்;
'மருந்துவந்தனை அமரருக்கு அருளிய மாயோன்
விருந்து வந்தனன்!' என்றுளம் உருகிய விதுரன் (75)

கோடு கொண்டகைக் குரிசிலை,
அலர்ந்த கோகனதக்
காடு கண்டெனக் கண்டுதன்
கண்இணை களியா
தோடு கொண்டதார் விதுரன், இப்
பிறப்பையும் தொலைத்தான்;
வீடு கண்டவர்க்கு இயம்பவும்
வேண்டுமோ? வேண்டா. (76)

உள்ளினான்; உணர்ந்து உள்ளமும்
உருகினான்; எழுந்து
துள்ளினான்; விழுந்து இணைஅடி
சூடினான்; துயரைத்
தள்ளினான்; மலர்த்தடக் கையால்
தத்துவ அமுதை
அள்ளி னான்எனக் கண்களால்
அழுந்தினான் அளியோ (77)

'முன்ன மேதுயின்று அருளிய
முதுபயோ ததியோ?
பன்ன காதிபப் பாயலோ?
பச்சைஆல் இலையோ?
சொன்ன நால்வகைச் சுருதியோ?
கருதிநீ எய்தற்கு
என்ன மாதவம் செய்ததுஇச்
சிறுகுடில்! என்றான் (78)

'மும்மை ஆகிய புவனங்கள்
முழுதையும் அருந்தும்
எம்மை ஆளுடை நாயகன்
விருந்தினுக்கு இசைந்தான்;
அம்ம!' என்றனன்; ஆறுநூ
றாயிரம் மடையர்
தம்மை நோக்கினன்; அவர்களும்
விரைவுடன் சமைத்தார்! (79)

இங்குக் கண்ணன்மீது விதுரன் கொண்டிருந்த ஈடுபாடு, பக்தி முதலியவை புலனாகின்றன.

ஒருநாள் கண்ணன் விதுரன் வீட்டில் தங்கிவிட்டான். சகுனியின் சதிப்படி கண்ணனுக்குப் பொய்யாசனம் அமைக்கப்பெற்று, அவனை நிலவறைக்குத் தள்ளிக் கொல்லத் திட்டம் தயாராகிவிட்டது. காற்றுவாக்கில் கேள்வியுற்ற இச்செய்தியை வாசுதேவன் காதில் போட்டான் விதுரன்.

மறுநாள் மாயக் கண்ணன் துரியோதனனின் அவைக்கு வருகிறான் அடலேறுபோல். தன் கருத்தை இடியேறு போல் இயம்புகிறான். அவன் கூறிய செய்தி:

5 வில்லிபாரதம்-கிருட்டிணன் தூது-இங்கு விதுரன் மனைவிபற்றிப் பேச்சே இல்லை--அவன் மாணி என்பதால்.

துரியோதனா! நான்—
தூது வந்திருப்பது...

உதிஷ்டிரனைக் காக்க அல்ல;
உன்னைக் காக்க! உன்மேல்—
மாளாக் காதல் கொண்டிருக்கும்-
மன்னைக் காக்க!

புறம் தள்ளும் பொருளல்ல—
அறம்; தன்னைத்—
திரஸ்கரிப்பார்க்குத்—
திருந்த வாய்ப்பளித்து—பின்
தீர்க்கவல்லது—அதன்
திறம்!

'நாதி இல்லாதது—
நீதி!' என—
நினைப்பவன்—கழிவு
நீரில் கிடக்கும் மேதி!

அசுரத்தனம் மிக்க—
அத்தகு...

மேதியை சேதித்தவள்தான்—
மகிஷாசுர மர்த்தனி;
அவள்தான்—
அறத்தின் வடிவு; அவள்—
முனிந்தால் நேரும்—
மறத்தின் முடிவு! [6]

நீ சொல்லலாம்—
நாட்டை...
'சூதால்—நான்
செயித்தேன்!' என்று;
நானும் சொல்கிறேன்—

6 இந்த சக்தி கருத்து வில்லியில் இல்லை. வியாசரில் இருக்கலாம்; அல்லது வாலியாரே தம் கருத்தாக நுழைத்திருக்கலாம். 'பாண்டவர் பூமி' வரலாறு அல்ல; இதிகாசம். புராணமும் இதிகாசமும் மாறிவரக்கூடியவை.

நாட்டை...
'சூதால்—நீ
செயித்தாய்!' என்று!

நீ சொல்லும் சூதுக்கு
நீ குறிக்கும் பொருள் 'கவறு!'
நான் சொல்லும் சூதுக்கு—
நான் குறிக்கும் பொருள் 'கவடு!'
ஒரே எழுத்துதான்—
வித்தியாசம்; எனினும்—
வித்தியாசமின்றி—இரண்டுமே
விளைக்கும் நாசம்!

துரியனே!
தாய்மாமன் மகுடியில்—ஆடும்
விரியனே!

சந்திரகுலம்—
சருவநாசம் ஆகுமுன்—
தடுக்க வந்தேன்; எச்சரிக்கை
விடுக்க வந்தேன் !

இன்னமும்
இருக்கிறது அவகாசம்;
பங்காளிகளுக்குப்—
பங்காய்க் கொடு பாதிதேசம்!

இஷ்டம்—
இல்லையென்றால்...

ஐந்து ஊர்கள் கொடு; அல்லது—
ஐந்து வீடுகள் கொடு; அதுவும்—
முடியாதெனில்—போர்
மூளும்; உயிரைக் கொடு! (II – பக். 344-46)

கண்ணன் இவ்வாறு கர்ண கடூரமாகப் பேசி முடித்ததும் சர்ப்பக் கொடியோன் சாந்தமாகப்—பார்க்க மிகவும் பாந்தமாகப்—பேசுகிறான். அவன் பேச்சு இது:

'நந்தகுமாரனே! நீ–
நின்று கொண்டு பேச–
அமர்ந்திருப்பதோ நான்–
ஆதி அந்தம் கூச?
இதோ!
இந்த ஆசனத்தில்–
அமர்ந்து கொள்; என்–
ஆட்சேபனைக்குப் பதில் சொல்!' (II – பக். 346)

துரியன் கேட்டுக்கொண்டபடி துவரைநாதன் அந்த மிகு ஆசனத்தில் அமர்கின்றான் துளசி இலையை மென்ற படி. துரியன் அடக்கமாக—ஆனால் ஆணித்தரமாக—வினவுகிறான் அச்சுதனை நோக்கி:

'கண்ணா! தருமன்–
கைக் குழந்தையா என்ன–
கிலுகிலுப்பை ஆட்டிக்–
கிட்டத்தில் வரவழைக்க!
கவறாடக் கூப்பிட்டால்–
'கூடாது! பிசகு!' என்று–
கூறியிருக்கலாமே–எங்கள்
குலப்பெருமை பிழைக்க!

....
இஷ்டப்பட்டுதானே ஆடினான்?
இஷ்டமில்லாமலா கூடினான்?

'ஆடுவது தவறு!' என அறியாதா–
ஆடினான் கவறு?

தருமன் தோற்காமல்–இந்தத்
துரியன் தோற்றிருந்தால்...
'தோற்றது தோற்றதுதான்!' என்று
துரத்தியிருப்பாய் என்னை;
தேவகி மைந்தனே! எனக்குத்
தெரியாதா என்ன உன்னை?

வேண்டியவர்க்கு ஒரு நீதி;
வேண்டாதவர்க்கு ஒரு நீதி; நீ–
ஒரு கண்ணில் வெண்ணெய் வைத்து
மறுகண்ணில் வைப்பாய்
மண்ணை!

இதோ!
இறுதியாகச் சொல்கிறேன்...

பங்காளிகளான–
பாண்டவர்க்கு...
ஊசிமுனை நிலங்கூட–
உதவமாட்டேன்;
ஈயிருக்கும் இடம்கூட–
ஈயமாட்டேன் !
செல்லுக; சென்று–
சொல்லுக! (II – பக். 347)

வாலியார் கண்ணன் தூதினை இத்துடன் முடித்து விடுகின்றார். வில்லியில் கண்ணன் மேலும் பேசுகின்றான். அப்பேச்சு உள்ளத்தை உருக்கும் பாங்கில் அமைந்துள்ளது. துரியோதனின் இந்த வாழ்வுக்கு வீடுமனே என்று சுட்டிக் காட்டுகின்றான்.

தந்தை காதலுறு தன்மை கண்டு
இளைய தாய்பயந்தஇரு தம்பியர்
இந்த வாழ்வும் அரசும் கொடுத்தவனும்
நின்குலத்து ஒருவன் இங்குஉளான்;
முந்த மாநிலம் அனைத்தி னுக்கும்
உயர்முறை மையால் உரிய அரசருக்கு
ஐந்து மாநகரும் நீகொடா தொழியின்
என்ன தாகும் உனதரசியல் [7]

பாடலைப் பன்முறை படித்தால் கண்ணன் குத்திக் காட்டுவது தெரியும்.

7 வில்லிபாரதம்-கிருட்டிணன் தூது-115

விசுவரூபம்: *சகுனி யோசனைப்படி* [8] *அமைக்கப் பெற்ற பொய்யாசனம் நொடித்துப் 'பொக்'கெனச் சரிந்து நிலத்தின் கீழிருந்த நிலவறைக்குள் விழுந்தது; வாசுதேவன் எழுந்தான்; விசுவரூபம் எடுத்தான். விரிவஞ்சி அதனை ஈண்டுக் காட்டவில்லை. மூலத்தில் அதனைக் கண்டு மகிழலாம்.*[9] *அவசியம் படித்து மகிழவேண்டிய பகுதி.*

தூது வந்தபோது கண்ணனின் வேறு முக்கிய செயல்கள்:

(1) குந்திதேவியைக் கன்னனிடம் அனுப்பி, உண்மைத் தாய் என மெய்ப்பித்து பாண்டவர் பக்கம் வருமாறும், இயலாவிடில் அர்ச்சுனன்மீது அரவக்கணையை ஒரு முறைக்கு மேல் தொடுக்காதிருக்க இசைவு—வாக்குறுதி பெறச் செய்தலும் ஆகியவற்றை நிறைவேற்றுகிறான். கர்ணன் துரியனை விட்டுவர சம்மதிக்கவில்லை. அவன் கூறுவது:

'தாயே...
துரியனை நான் நீங்கினால்
என்
வாயே—அட! நாயே—என
வையும்; பையப் பைய—
நன்றி கொன்றதால்—என்னுயிர்
நையும்;

நாடு தந்தான்; நெஞ்சமெனும்—
வீடு தந்தான்; நான் பெறாத—
பீடு தந்தான்; நகைத்தோர்க்கு—
சூடு தந்தான்! நண்பருக்குக்—

காணிக்கையாக—அடு
களத்தில் கொடுக்கவே—

---

8 வில்லியில் திருதராட்டிரனே கண்ணனைக் கொல்ல வேண்டும் என்கின்றான்.

9 பா.பூ: II – பக். 348

கடவுள் எனக்கு—உயிர்உறை
கூடு தந்தான்!

தாயே!
துரியோதனனுக்கு நான்—
வாக்குத் தந்திருக்கிறேன்—
விஜயனைக் கொல்வதாக;
எண்ணவேண்டாம்—
ஏதோ பெருமைக்குச்
சொல்வதாக!

அர்ச்சுனனை நோக்கி—
அம்பு விடுவேன்; அவனைக்—
கொல்லுவேன்; அல்லது—
கொல்லப்படுவேன் !

எப்படியும்—
எங்களில் ஓர் உயிர் மிஞ்சும்;
அப்படியும் இருக்கும்—
அம்மா! உன் கணக்கு அஞ்சும்!' (II—பக். 354)

என்று வணங்கி வழியனுப்பினான் குந்தித்தாயை—அவள் உந்தியைக் கண்ணீர் கலக்க.

வாலியார் நாகக்கணையை ஒருமுறைக்குமேல் விடுவதில்லை என்ற உறுதி வாக்கு கன்னனிடம் பெறவில்லை. கதைக்கு இதுதான் முக்கியம். ஏன் தவிர்த்தாரோ தெரியவில்லை.

வில்லியில் இந்தப் பகுதி சரியாக அமைகின்றது. குந்தி இரு வரம் வேண்ட, கன்னன் மறாது கொடுத்தலை,

பார்த்தன்வெஞ் சமரில் நின்னுடன் மலைந்தால்,
  பகைப்பெறும் பாந்தள்அம் பகழி
கோத்தலும், பிழைத்தால், மறித்தும்நீ விடுத்துக்
  கோறல்!' என்று ஒருவரம் குறித்தாள்,
'வாய்த்தமற் றவர்கள் இளைஞர்என்று அவரை
  மலையல்' என்று ஒருவரம் குறித்தாள்;
மூத்தவன், காதல் இளைஞர்தம் பொருட்டால்
  மொழிந்தனம் கேட்டுஇவை மொழிவான் [10]

10 வில்லிபாரதம்-கிருட்டிணன் தூது-255

கன்னன் இருவரங்களையும் தந்தமையை வில்லியார்,

‘தெறுகணை ஒன்று தொடுக்கவும் முனைந்து
செருச்செய்வோன் சென்னியோடு இருந்தால்,
மறுகணை தொடுப்பது ஆண்மையோ? வலியோ,
மானமோ? மன்னவர்க்கு அறமோ?
உறுகணை ஒன்றே பார்த்தன்மேல் தொடுப்பன்;
ஒழிந்துளோர் உய்வர்என்று உரைத்தான்
தறுகணர் அவர்க்கும், தறுகண்ஆ னவர்க்கும்
தண்ணளி நிறைந்தசெங் கண்ணான். [11]

கன்னனும் கண்ணான அன்னையிடம் இரு வரங்கள் பெறுகின்றான். இதனை வில்லியார்:

பெருவரம் இரண்டும் பெற்றபின், தன்னைப்
பெற்றதா யினைக்கரம் குவித்து,
‘தருவரம் எனக்கும் இரண்டுஉள; உலகில்
சராசரங் களுக்குஎலாம் தாயீர்!
வெருவரும் அமரில் பார்த்தனால் அடியேன்
வீழ்ந்தபோது அவனியர் அறிய
மருவரும் முலைப்பால் எனக்களித்து உம்தம்
மகன்எனும் வாய்மையும் உரைப்பீர் [12]

‘உய்வுஅருந் திறல்வெம் போர்முடிப்பு அளவும்
உமக்குநான் மகன்எனும் தன்மை
ஐவரும் அறியா வண்ணம்நீர் காப்பீர்;
அல்லது,அங்கு அவர் சிறிதுஅறியின்
மைவரும் கடற்பார் அனைத்தையும் எனக்கே
வழங்குவர்; வழங்கினால் யான்என்
கைவரும் துணைவன் தனக்குஅலால் வழங்கேன்,
கடைப்பிடி, கருமம்ஈது என்றான் [13]

11 மேலது-256

12 மேலது-257. இதனால் தேரோட்டியின் மகன் என்ற ‘இழிசொல்’ இல்லையாகிறது.

13 மேலது-258

உருக்கமான கவிதைகள்; உணர்ச்சிகளைப் பொறி மத்தாப்புபோல் வெளியிடும் அற்புதப் படைப்புகள்!

(2) அசுவத்தாமனை மித்திரபேதம் செய்தல்: பேருருவத்தைச் சுருக்கிக்கொண்டு விதுரன் இல்லத்திற்குத் திரும்புவதற்குமுன் அசுவத்தாமனைக் கண்டு பேசுகின்றான் பரந்தாமன். அவனிடம் பாண்டவர்கள் ஐந்து ஊர் வேண்ட அதையும் மறுத்தான் துரியன். அதற்கு வரப்போகும் செருவில் அவனே சாட்சி என எடுத்துரைத்து மேலும் கூறுவான்;

“ஆனா உனதுஆண் மைக்குநிகர்
  அவனிதலத்தில் வேறு உண்டோ?
ஞானா திபனே! போர்க்களத்தில்
  நாகக் கொடியோன் பணிந்து உன்னை
‘சேனா பதிஆகு’ என்றாலும்,
  செலுத்தேன் என்று நீமறுத்தி–
ஆனால் உய்வர் ஐவரும்மற்று
  அவர்பால் நினக்கும் அன்புஉண்டோ!” [14]

கண்ணன் இவ்வாறு உரைத்து தன் மோதிரத்தை வீழ்த்த, அதனை அசுவத்தாமன் எடுக்கும்போது ‘வானில் ஊர்கோள் உற்றது’ என அவனும் வானை நோக்க, அவையோர், ‘அசுவத்தாமன் சூள் உரைத்தான்’ என்று பேசுகின்றனர். ‘அசுவத்தாமனை இனித் தெளியலாகாது’ என்று துரியோதனனும் அவையில் கூறுகின்றான். அசுவத்தாமன் கலக்கம் அடைந்து ‘திருமால் தன்னைத் துரியன் தெளியாவணம் பேதித்தான் போலும்!’ எனச் சிந்தித்து வருந்துகின்றான். [15]

14 வில்லிபாரதம்-கிருட்டிணன் தூதுது-222

15 இந்த நிகழ்ச்சியைக் கவிஞர் வாலி தம் காவியத்தில் தவிர்த்துவிட்டார்--யுத்த காண்டத்தைச் சுருக்கிவிட்டதால்.

(3) இந்திரனை அனுப்பி கன்னனின் கவசகுண்டலங்களை வாங்குமாறு கூறுகின்றான்.[16] *வில்லியார் பாடல்களில் இதனைக் காண்போம். கண்ணன் கூறும் முறையைத் தெரிவிக்கும் பாடல்கள்:*

கன்னன் விசயன்தனைக் கொல்லின்
   கடல்பார் முழுதும் கண்இல்லா
மன்னன் புதல்வன் தனக்கேஆம்
   ஒழிந்தோர் தாமும் மடிந்திடுவார்
முன்னம் சூதில் மொழிந்தபகை
   முடியாது இருக்கின் அவர்க்குஅன்று;
நின்நெஞ்சு அறிய, யான்அறிய
   நினக்கே வசையும் நிலையாமே. (230)

கவசம் கனக குண்டலம்என்று
   இரண்டு புனையின், கற்பாந்த
திவசம் பொரினும் கன்னன்உயிர்
   செகுப்பார் மண்ணில் சிலர்உண்டோ?
அவசம் கிளைஞர் உறதுணைவர்
   அரற்ற களத்தில் அடுகுரக்குத்
துவசம் படைத்தோன் படும்;பயந்த
   துணைவா! இன்னே சொன்னேனே. (231)

மைந்தற்கு உறுதி நீவேண்டின்,
   வல்லே முனிவர் வடிவுஆகி,
சந்தப் பனுவல் இசைமாலைத்
   தானாகரனை வினந்து எய்தி,
'அந்தக் கவச குண்டலங்கள்
   அளிப்பாய்!' என்றால், அவன்ஒன்றும்
இந்தப் புவியில் மறுத்து
   அறியான், உயிரேஎனினும் ஈந்திடுவான். (233)

16 இது வில்லிபாரதத்தில் கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில் வருவது. வாலியார் இந்நிகழ்ச்சியைப் பிறிதோர் இடத்தில் காட்டுவார்.

இரண்டும் அவன்பால் நீகவரின்,
   இருந்தேர் ஊர்ந்துஇப் படிஅரசர்,
திரண்டு வரினும் வெஞ்சமரின்
   திண்தேர் விசயன் எதிர்நில்லார்;
முரண்டு பொருவில் கன்னனும்தன்
   முன்னே எய்தி, முடிசிதறி,
புரண்டு மறியும்' என,வணங்கி,
   புத்தேள் அரசன் போகின்றான்! (234)[17]

இந்திரன் ஒரு படுகிழமுனி வடிவங்கொண்டு, கதிரவன் புதல்வன் முன்சென்று, அவனைப் புகழ்ந்து நிற்க, அவனுக்கு பொன்னின் ஆசனம் நல்கி மரியாதை செய்தான் கதிரவன் மைந்தன்; கேட்டவற்றைத் தருவ தாகவும் உறுதி கூறுகின்றான்.

வந்த அந்தணன் 'கவசகுண் டலங்களை
   வாங்கிநீ வழங்குஎனக்கு! என்ன,
'தந்தனன்பெறுக!' எனஅவன் வழங்க;
   தலத்தில்ஓர் தனிஅச ரீரி,
'இந்தி ரன்தனை விரகினால் மாயவன்
   ஏவினான்; வழங்கல், நீ!' எனவும்,
சிந்தை யின்கண்ஓர் களங்கம்அற்று அளித்தனன்,
   செஞ்சுடர்த் தினகரன் சிறுவன் (239)

[விரகு—தந்திரம்; மாயவன்—கண்ணன்; கலக்கம்—வருத்தம்]

இந்திரன் தன் வேடத்தைக் களைந்து நிற்க, கன்னன் அவனைக் கண்டு மனம் உருகிக் களித்திடுகின்றான். ஆயிரங் கண்ணனும் கன்னனுக்கு ஒரு கொற்றவேல் வழங்குகிறான். இது பாரதப் போரில் கடோற்கஜனை மாய்க்க உதவுகிறது (கண்ணனின் திட்டம் இது).

17 வில்லிபாரதம்-கிருட்டிணன் தூது-

வாலியார் இந்நிகழ்ச்சியை துரோணர் வைத்த தேர்வையும் போட்டியையும் அடுத்து அமைக்கின்றார். கர்ணன் அங்கதேசத்து அதிபதியான சமயமும் அதுவே.

இந்திரன் ஒரு தள்ளாடும் கிழ அந்தணனாக வருகின்றான். அந்த நிலையை வாலியார்,

'கிழடு' என்பதன்—
கதைச் சுருக்கம்—
சொல்லியது அவனது—
சதைச் சுருக்கம்! (I – பக். 230)

கர்ணனின் கட்டளைப்படி ஓர் அரசு ஊழியன் வயோதிக அந்தணனை அவைக்கு அழைத்து வருகின்றான். வந்த அந்தணன் வள்ளலை வானளாவப் புகழ்கின்றான்; வாழ்த்துகின்றான். அதற்கு அடக்கமாகக் கர்ணன் மொழிவது:

'அந்தணரே! தங்கள்—
ஆசிகளுக்கு நன்றி;
ஒருவனை—
வேறெது வாழ வைக்கும்—
நல்லோர் வாழ்த்துகள் அன்றி?

'ஈந்து—
இதயம் உவக்கும்—
வேந்து!'
என—
என்னை—
தாங்கள் புகழ்ந்தது—
தகாது; அந்த—
வான் தருவதைவிட—
நான் தருவது—
மிகாது!

எனினும்...
அடியேனால்—
ஆவதென்ன? இந்த—
எளியேன்—தங்களுக்கு
ஈவதென்ன?' என்று—

....

'கர்ணா!
சுற்றி வளைத்துச் சொல்லாமல்—
சுருக்கமாகச் சொல்லுகிறேன்;
கொடுக்க இயலாவிடினும்—உனை
கோபிக்காமல்
செல்லுகிறேன்! உன்
மார்போடிருக்கும் கவசம்!
செவி—
மடலோடிருக்கும் குண்டலம்!

அவை இரண்டு மட்டுமே—
இந்த
அந்தணன் கேட்கும் தானம்;
தந்தால்—உன்னைத்
தலையால் தொழும் வானம்!'

....

கவசத்தையும்—
குண்டலத்தையும்—
சூரியால்—உதிரம்
சொட்டச் சொட்ட....
அடுத்த கணமே—கர்ணன்
அரிந்து கொடுத்தான்;
அந்தணனாய் வந்திருப்பவன்
அமரேசன் என்பதை—
அறிந்து கொடுத்தான்!

....
நீ ஆவியைக் கேட்பினும்–
அருள்கின்ற ஆண்டகை!
ஆருக்கு உண்டு–உன்போல்
அருள்நலம் பூண்ட கை?

வள்ளலே கேள்!
விரும்பும் வரம்! என்னிடம்–
கொண்டால்
குற்றமில்லை–உனது
கொடுக்கும் கரம்!'

....
'வாசவனே! நான்–
வேண்டுவது...
சத்துருக்களை–
சங்கரிக்கவல்ல–உன்
'சக்தி' ஆயுதம்; அதை
நல்கினால்–
நானுனக்குச் சொல்வேன்–
நன்றி ஆயிரம்!'

....
'கர்ணா! இதைநீ–
கையில் ஏந்தி களம்புகுந்தால்...
எத்தகு எதிரியையும்–
இது நூறும்; ஒருயிரை–
வாங்கிய பின்–உடனேஇது
வானம் ஏறும்!'

இங்ஙனம் சொல்லிய வாசவன் வாரணம் ஏறி வானம் சென்றான்

பல இதிகாசங்களையும் புராணங்களையும் படித்தால் நிகழ்ச்சிகள் இடம்மாறி இருப்பதைக் காணலாம். சுவைக்கேற்றவாறு தன் கற்பனைக்கேற்றவாறு நிகழ்ச்சி களைப் பொருந்த வைப்பது கவிஞனின் தனி உரிமை; உரிமமும் கூட.

பூபாரம் தீர்க்க வந்த பெருமான் அவதாரகால நிகழ்ச்சிகளை அறிவான். நிகழ்ச்சி நிரலை அமைத்தவன் அவன்தானே. தூதுவந்த காலத்திலேயே போருக்கு அடிப்படையானவற்றை ஆயத்தம் செய்துவிடுகின்றான். தூது நிறைவு பெறுகின்றது இந்நிகழ்ச்சிகளுடன்.

கவிஞர் வாலியின் கிருட்டிண பக்தி

கண்ணன் தன் அவதார காலத்தில் தாரதம்மியம் பாராது எல்லாத் தொழில்களையும் உவப்புடன் செய்தான். சௌலப்பியமே வடிவெடுத்தது போன்றவன் கண்ணன். இத்தகைய கண்ணன்மீது, கவிஞர் வாலியார் எல்லையற்ற பக்தியுடையவர். '**பாண்டவர் பூமி**'யில் கண்ணனைப் பற்றி அவர் எடுத்துக் கூறும் முறையிலும் பிற இடங்களில் அவனது பெயர்களைக் குறிப்பிடும் பாங்கிலும் வாலியாரின் ஈடுபாடும் பக்தியும் புலனாகின்றன. அவற்றையெல்லாம் ஈண்டுக் காட்ட முயல்வேன்.

'கதை மாந்தர்கள்—அறிமுகம்' என்ற இயலில் பார்த்தசாரதி என்ற தலைப்பில் [1] எழுதியுள்ளவற்றை ஈண்டு மீண்டும் படித்துச் சிந்திப்பது பொருத்தமாகும். விடுபட்டவற்றை மட்டும் ஈண்டுக் காட்டி மேற்செல்வேன்.

வனவாசம், அஞ்ஞாதவாசம் எல்லாம் முடிந்த நிலை. சஞ்சயன் தூதிற்குப் பிறகு கண்ணன் தான் தூது செல்வதாகச் செப்புகின்றான். வீமனும் பார்த்தனும் அதற்கு ஒப்பவில்லை. சகாதேவனைக் கருத்து கேட்டபோது அவன் நடைபெற முடியாத சிலவற்றைச் சொல்லி "கண்ணன் கால்களைக் கட்டிப் போட்டால் போர் வராது தடுக்கலாம்" என்கின்றான் அத்தை மகன். அநுமதி கோர வித்தை மகன் வாசுதேவன்:

> பதினா றாயிரம்—
> படிவங்களாகி நின்றான்;
> 'பிரிய சகாவே! என்னைப்
> பிணித்திடுக!' என்றான்!

---

1 இயல் - 3. பக். 98

'சாத்தியமாகட்டுவது?' என
சகாதேவன் கலங்காது...

மொத்த வடிவங்களுக்கும்—
மூலத்தை;
சுத்த சைதன்னியமான—
சீலத்தை;
பீஜாட்சரத்துள் பிறங்கும்—
பீஜத்தை;
பிறப்பிறப் பொழிந்துநிற்கும்—
பிரமத்தை;
இயம்புவதற்கு இயலாத
சுயம்புவை;

சொரூபத்தை பலவாய்க்
கொண்ட அரூபத்தை;

ஏகமாய்த் தோற்றமளிக்கும்—
ஏகத்தை;

'உளதா? இலதா?' என—
உலவிடும்
ஊகத்தை;

ஒன்றே ஒன்றான—
ஒன்றை; ஒன்றாயது—
ஒன்றாத தொன்றுமில்லை—
என்று—
ஒவ்வொன்றிலும் ஒன்றியுள்ள
ஒன்றை;

மனத்துள் இருத்தி—அதை
மன்னும்படி பொருத்தி—அதன்
மலரடி இரண்டை
நினைவெனும்
மணிக்கயிற்றால் கட்டினான்;

விதை விருட்சமாகி—பின்
விருட்சம் விதையாவது போல்....

ஒன்றானவன்—பல
என்றாகி—பல
என்றானவன்—பின்
ஒன்றாகி—

சேவடிகளைக் கட்ட—
சகாதேவன் கைக்கு எட்டினான்!
குறடும்—தாழுங்
குடையும் தாங்கி—ஒரு
குறளாய் வந்து—மாவலி
குடுமியில் வைத்த...

பொன்னடியை; பங்கயப்—
பூவடியை...

விடாதுபற்றி—சகாதேவன்
வினைக்கடல் தாண்டினான்; (II – பக். 334-35)

இப்பகுதியில் கண்ணனைப்பற்றிய சகாதேவனின் கருத்துகளனைத்தும் வாலியாரின் வாக்காக வருவதால் அவை அவர்தம் கிருஷ்ணபக்தியை அற்புதமாகக் காட்டும்.

பார்த்தனைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு பேசிய பரந்தாமன் வாக்கில் வருவது:

எல்லாம் வல்லோனை;
எல்லாவற்றிற்கும்
தொல்லோனை;
எல்லைகள் இல்லோனை;
எல்லா உயிர்க்கும் நல்லோனை;

அணுவினும் அணுவாய்—
ஆனோனை;
புத்திக்கு எட்டாது
போனோனை;

ஆகாயம் அம்புவி—
ஆனோனை;

நீளநீளமாய்ப் புகழ்—
நீள்வோனை;

அந்தகாரத்திற்கு அப்பால்—
அமிழ்வோனை;
உதயபானுவிற்கு வெளிச்சம்—
உமிழ்வோனை;

கழுத்து வெளுத்த—
கருடனை— செலுத்தும்
புகழ்சால்—பரம
புருடனை;

எவன்—
மனத்தில் ஓயாது வரித்து— (III – பக். 476-77)

இவை பரந்தாமனைப் பற்றியனவாக வந்தாலும் வாலியார்தான் இவற்றைச் சிந்திப்பதால் அவர்தம் கிருஷ்ணபக்தியைத் தெளிவாக்கும்.

ஈண்டும் சிலவற்றைக் காட்டுவேன்.[2] *இவன் பிறப்புவளர்ப்புபற்றிப் பாரதியார்,*

பிறந்தது மறக்குலத்தில்;—அவன்
பேதமற வளர்ந்ததும் இடைக்குலத்தில் [3]

என்று கூறுவார்.

வசுதேவனுக்கும் தேவகிக்கும் சிறையில் மகனாகப் பிறந்து (சத்திரியர்), நந்தகோபன் இல்லத்தில் (இடையன்) வளர்ந்தவன். பிறந்த குலத்தை மக்கள் மறந்தனர். வளர்ந்த குலம்தான் அனைவருக்கும் தெரிகிறது. மக்கள் மனத்தில் இடையன் என்றே வழங்கப்பெறுகின்றான். அதனால்தான் கவிஞர் வாலியும் ஆயர்பாடியைக் கண்ணன் ஊராகக் குறிப்பிடுவர்.

2 கிருஷ்ணாவதாரம்-என்ற தலைப்பில் வருவன-I-பக். 144 தொடர்ந்து.
3 பா. க. கண்ணன் பாட்டு-கண்ணன் என் தந்தை-4

அங்கிருக்கிறான்—
அரி யாதவனாகி;
அங்கிருப்பவர்—
அறியாதவனாகி! (I – பக். 144)

அரியே யாதவனாக வந்துள்ளான். இதனை,

ஆதிமூலம்—
ஆகாயம் விட்டு—
அம்புவி வந்த—ஓர்
அன்னைமூலம்! (I – பக். 144)

பிறப்பில்லாதவன் தன் விருப்பத்தால்—நல்லோர் களைக் காக்கவும் தீயோர்களை அழிக்கவும்—தேவகியின் கருவில் புகுந்து புவிக்கு வந்தவன்.

பாலிலேயே—
படுத்துக் கிடந்தவன்தான்—
பால்கறக்கும் குடியில்—
பால் குடிக்கப் பிறந்தான்! (I – பக். 144)

பெரிய பால் பண்ணைக்கு நாதனான நந்தகோபன் "இதை அநுபவிக்கக் குழந்தை இல்லையே!" என ஏங்கிக் கிடந்த நிலையில் மகனாக அமைகின்றான்.

கோனார் குலத்துக்
குழவியாகி—அக்குலத்தோர்க்கு
வானார் புகழை—வாரி
வழங்கினான்! (I – பக். 144)

என்பார் வாலியார். இதனைப் படிக்கும் நமக்கு,

நந்தன் பெற்றனன்; நல்வினையில்லா
நங்கள் கோன் வசுதேவன்பெற் றிலனே [4]

என்ற குலசேகரப் பெருமாளின் வாக்கு நினைவிற்கு வருகின்றது.

4 பெரு.திரு.1-3

கண்ணன் கதையில் தம்மைப் பறிகொடுத்த கவிஞர் வாலி,

நோம்பால் கட்டமுடியாத
நுண்பொருளை—ஒரு
தாம்பால் கட்டினாள்.
தாய்; காரணம்—
தெருமண்ணைத் தின்றது—
அதன்
வாய்!

என்று யசோதைப் பிராட்டியாரின் செயலைப் பகர்வர்.

கண்ணிநுண் சிறுதாப்பாலே கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் [5]

என்ற மதுரகவிகளின் வாக்கை நினைத்தவண்ணம் இவ்வாறு பகர்ந்தார் போலும் என்று நாம் கருத இடந் தருகின்றது.

இவ்விடத்தில் ஒரு கருத்தை நினைத்தல் தகும். வெண்ணெயைத் திருடித் தின்றதற்காகக் குழந்தைக் கண்ணன் கட்டப் பெற்றான் என்பதுதான் ஆழ்வார்களின் அருளிச் செயல்கள்.

உறியார்ந்த நறுவெண்ணெய் ஒளியால் சென்றங்கு
உண்டானைக் கண்டாய்ச்சி உரலோ டார்க்க
தறியார்ந்த கருங்களிறே போல நின்று,
தடங்கண்கள் பனிமல்கும் தன்மையானை [6]

வெண்ணெய்தான் அமுது செய்ய
வெகுண்டுமத் தாய்ச்சி யோச்சி
கண்ணியார் குறுங்க யிற்றால்
கட்டவெட் டென்றி ருந்தான்

5 முதலாயிரம்-மதுரகவிகளின் பாசுரம்.
6 பெரி. திரு. 2.10: 6
7 பெரி. திரு. 5.9: 7

உறியார் வெண்ணெய் உண்டுர
 லோடும் கட்டுண்டு
வெறியார் கூந்தல் பின்னை
 பொருட்டு ஆன் வென்றான் [8]

ஒளியா வெண்ணெய் உண்டானென்று
 உரலோ டாய்ச்சி ஒண்கயிற்றால்
விளியா, ஆர்க்க ஆப்புண்டு
 விம்மி யழுதான் [9]

என்பன போன்ற பாசுரங்கள் இதனை அரண் செய்யும். ஆழ்வார் பெருமக்கள் கண்ணன் வெண்ணெய் உண்டதை நேரில் பார்த்தாரிலர்; மனக்கண்ணால் பார்த்திருக்க வேண்டும்—அநுபூதி பெற்றவர்களாதலின். அங்ஙனமே வாலியாரும் கண்ணனை அநுபூதி நிலையில் மனத்தில் கண்டு மண்ணைத் தின்றதையும் அதற்காகக் கட்டுண்டதை யும் பார்த்திருக்க வேண்டும் என்று கருதுவதில் தவறொன்றும் இல்லை. வாலியாரையும் ஆழ்வார் களனைய பக்தர் என்று கருதலாம்.

கண்ணனின் பலபல வீரச் செயல்களை நினைந்து தம் படைப்பில் களிக்கின்றார் வாலியார்.

ஒரு
கால் நடை கொண்டு—
நுவலர்க்கரிய நாயகன்தான்
கால் நடை கொண்டு
கால்நடை[10] மேய்த்தான்! (I – பக். 144)

கஞ்சன் அனுப்பிய பூதகி என்னும் அரக்கியைப் பற்றிய செய்தியைக் கூறுகிறார்.

8 பெரி. திரு. 6.5: 4

9 பெரி. திரு. 6.7: 4

10 கால்நடை-காலால் நடக்கும் பிராணிகள் மனிதன் உட்பட. மனிதன், பிராணிகள், வண்டிவாகனம், பேருந்து, விமானம் முதலியவற்றில் பயணம் செய்கிறான். பிராணிகட்கு காலைத் தவிர வேறு வசதி இல்லை. அதனால் அவை கால்நடை என்ற பெயரையே பெறுகின்றன.

பிள்ளை உயிரை—நச்சப்
பால் கொடுத்துக்
கொள்ளை அடிக்க...

ஆய்ச்சி வேடத்தில்
அனுப்பினான் [11]—ஒரு
பேய்ச்சியை!
அவள் பேர்—
பூதகி! எம
காதகி!—கொலை
பாதகி!

அந்தப்
பேய்ச்சியின் பெருமுலை—
பீச்சிய பாலை—
பிள்ளைப் பெருமாள்—
உண்டான்; அவள்
உதவிய பாலோடு—
உயிரையும் சேர்த்து—
ஒன்றாய் உறிஞ்சிக்
கொண்டான்! (I – பக். 147)

இவற்றை வரைந்த வாலியாரின் சிந்தையில் அவர் சிறந்த வைணவராதலால் கண்ணன் பற்றிய எண்ணம் எழுந்திருக்க வேண்டும்; ஆழ்வார்களது அருளிச் செயல்கள் அவர்தம் உள்ளத்தில் முகிழ்த்திருக்க வேண்டும். ஆகவே,

உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்தவேறாய்
உலகுய்ய நின்றானை; அன்று பேய்ச்சி
விடம்பருகு வித்தகனைக் கன்று மேய்த்து
விளையாட வல்லானை; வரைமீகானில்
தடம் பருகு கருமுகிலை...[12]

என்ற மங்கை மன்னனின் திருவாக்கும்;

11 கம்சன்

12 பெரி. திரு. 2.5: 3

வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை
மெத்தை யாக விரித்துஅதன் மேலே
கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம்
காண லாங்கொலென் றாசையி னாலே[13]

என்று விட்டுசித்தனின் வாக்கும் நினைவில் எழுந்திருத்தல் வேண்டும்.

சகடாசுரன் எனும்
சழக்கனை—இடைச்
சேரிக்கு அனுப்பினான்....
கண்ணனின் ஆவி—
கரந்துவர—
கஞ்சன்எனும் பாவி!

சகடமும்
சங்கமும் தாங்கும்—
சக்கரவர்த்தி....

சகடாசுரனை—
சகடம்போல்—
சுழற்றினான்; அவன்
ஆவியை—
ஆக்கையிலிருந்து
கழற்றினான்! (I – பக். 148)

இங்ஙனம் கண்ணபிரானின் தீரச் செயல்களை அநுபவிக்கும் வாலி

இருங்கைமா கரிமுனிந்து, பரியைக் கீறி,
இனவிடைகள் ஏழடர்த்து மருதம் சாய்த்து,
வரும்சகடம் இறவுதைத்து, மல்லைசுட்டு
வஞ்சஞ்செய் கஞ்சனுக்கு நஞ்சானான் [14]

பெண்மைமிகு வடிவுகொடு வந்தவளைப் பெரிய
பேயினது உருவுகொடு மாளஉயி ருண்டு
திண்மைமிகு மருதொடுநற் சகடம்இறுத் தருளும்
தேவன் அவன். [15]

13 பெரியாழ். திரு. 5.1: 7
14 பெரியாழ். திரு. 2.10: 7
15 பெரியாழ். திரு. 3.9: 6

என்பன போன்ற திருவாக்குகளிலும்

தாளால் சகடம் உதைத்துப் பகடுந்தி
கீளா மருதிடைப்போய்க் கேழலாய் [16]

என்ற பேயாழ்வாரின் பாசுரத்திலும்,

அடிச்சகடம் சாடி அரவாட்டி ஆனை
பிடித்தொசித்துப் பேய்முலை நஞ்சுண்டு [17]

என்ற திருமழிசையாரின் அருளிச்செயலிலும் ஆழங்கால் பட்டிருக்க வேண்டும்.

மீட்டும்....
மருகனைக் கொல்ல—
மாமன் ஒரு
மத்தவாரணத்தை ஏவினான்;
கஞ்சன் தங்கை
கருப்பை வளர்ந்த—
கறுப்பு நெருப்பு—அதன்
மருப்பைச் சீவினான்

வரையில் உதிரம்—
வாயில் வடியவடிய
தரையில் விழுந்து.... (I – பக். 148)

என்று பாடிய வாலியார்?

கும்பமிகு மதவேழம் குலையக் கொம்பு
மறித்துமழ விடைஅடர்த்துக் குரவைகோத்து
வம்பவிழும் மலர்க்குழலாள் ஆய்ச்சி வைத்த
தயிர்வெண்ணெய் உண்டுகந்த மாயோன் [18]

வெஞ்சினவேழம் மருப்பொசித்த
வேந்தர்கொல்? ஏந்திழையார் மனத்தை
நஞ்சுடை யாளர்கொல் [19]

16 மூன். திருவந். 54
17 நான். திருவந். 33
18 பெரி. திரு. 7. 8: 8
19 பெரி. திரு. 9. 2: 6

என்பன போன்ற பாசுரங்களில் ஆழங்கால் பட்டிருத்தல் வேண்டும்.

இடைச் சேரியில்—ஒருமுறை
இந்திரன் பெய்வித்தான்—
அடைமழை;
அனைவரையும் காத்தது—
அருள் மழை!

ஆம்!
குன்றை எடுத்தான்;
குடையாய்ப் பிடித்தான்; மாடு—
கன்றைக் காத்தான்—
கேசவன்;

வெட்க மழையில்—
முட்டமுட்ட நனைந்து—
வெலவெலத்துப் போனான்—
வாசவன்!

காளியன் எனும்—கொடிய
கட்செவி தன்னை—
மூளியன் ஆக்க—ஆயர்
முதுகுடியைக் காக்க...

மாதவன்—அதை
மர்த்தனம் செய்தான்;
அருள்மிகு
யாதவன் அதன்மேல்—
நர்த்தனம் செய்தான்! (I – பக். 149)

என்ற பாடற் பகுதியை அநுபவித்து வரையும்போது,

கன்றதனால் விளவெறிந்து கனியுதிர்த்த காளை,
காமருசீர் முகில்வண்ணன், காலிகள்முன் காப்பான்,
குன்றதனால் மழைதடுத்துக் குடமாடு கூத்தன்
குலவுமிடம். [20]

20 பெரி. திரு. 3. 10: 8

என்ற கலியன் பாசுரத்திலும்,

வழுவொன்று மில்லாச் செய்கை வானவர்கோன்
வலிப்படு முனிந்து விடுக்கப்பட்ட
மழைவந் தெழுநாள் பெய்துமாத் தடுப்ப
மதுசூதனன் எடுத்து மறிந்த மலை [21]

காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட்டுஅவன்
நீள்முடி ஐந்திலும் நின்று நடஞ்செய்து
மீள அவனுக்கு அருள்செய்த வித்தகன் [22]

என்ற விட்டுசித்தன் பாசுரங்களிலும்,

கடுவிடம் உடைய காளியன் தடத்தைக்
கலக்கிமுன் அலைகழித்து அவன்தன்
படமிறப் பாய்ந்து பண்மணிசிந்தப்
பல்நடம் பயின்றவன் [23]

என்ற கலியன் பாசுரத்திலும் தம்மைப் பறிகொடுத்திருக்க வேண்டும்.

முதலை வாய்ப்பட்ட களிற்றினைக் காத்த செயல் ஆழ்வார் பாசுரங்களில் காணலாம். இதனைக் கருத்தில் கொண்ட கவிஞர் வாலி,

முன்னம்—
முதலை வாய் வீழ்ந்த—
காட்டானை— தன்னைக்
காத்தானை; (I – பக். 148)

என்று கூறியது

முதலைத் தனிமா முரண்தீர அன்று
முதுநீர்த் தடத்துச் செங்கண்வேழம் உய்ய
விதலைத் தலைசென் றதற்கே யுதவி
வினைதீர்த்த அம்மான் [24]

21 பெரியாழ். திரு. 3. 5: 2
22 பெரியாழ். திரு. 3. 9: 7
23 பெரி. திரு. 4. 10: 3
24 பெரி. திரு. 3. 8: 2

குலந்தலைய மதவேழம் பொய்கை புக்குக்
கோள்முதலை பிடிக்க, அதற்கனுங்கி நின்று
'நிலத்திகழும் மார்ச்சுடரேய்சோதி!' என்ன
நெஞ்சிடர்தீர்த் தருளிய என் நிமலன் [25]

என்பன போன்ற பாசுரங்களை உளங்கொண்டு என்று கருதுதல் பொருத்தமாகும்.

ஒளிரும் தொடர்கள்: காவியத்தில் கண்ணன் வரும் இடங்களில் அவரைக் குறிக்கும் தொடர்கள் பக்திச் சட தெறிக்க சுவையாக வந்து இடம்பெற்று விடுகின்றன. அவற்றை இயன்ற மட்டும் ஈண்டுக் காட்டுவேன்.

'பீலியைச் சூடிய
பெருமான்—முன்னம்
காலிமேய்த்த கோவலன் (I – பக். 150)

மகரமாய் வந்த
சிகரம் (I – பக். 151)

மாய—
வித்தையை நிகழ்த்தும்—
மாயவன் கண்ணன் (I – பக். 158)

இருள் நிறத்துக் கண்ணன்
தரை
இறங்கி வந்த இறை (I – பக். 160)

சதுர்மறை நாயகன்தான்—
இடைச்
சேரிவாழ்
கண்ணன் (I – பக். 160)

ஆலில் உறங்கும்கண்ணன்
அமாவாசை வண்ணன் (I – பக். 160)

பீலி குழற்கற்றையில்—
பிரகாசிக்க—வன
மாலி (I – பக். 11)

25 பெரி. திரு. 7.8: 3

பரமாத்மா—எனும்
ஜீவாத்மா நாளும்
பாடிப் பரவும்—கண்ண
பரமாத்மா (II – பக். 54)

கண்ணனாய் நிற்கும்
கரியமால் (II – பக். 58)

ஆயர்குலத்தின்
அருஞ்செல்வம்;
கண்ணன் எனும்
கருந்தெய்வம் (II – பக். 62)

கண்ணன்—வார்கடல்
வண்ணன் (II – பக். 235)

உண்டான்வாசுதேவன்;
பழமறைகள்
பொழுதெலாம் பேசுதேவன் (II – பக். 235)

தயிர் கடையும் இடைச்சியர்—
உயிர் கடையும் இருடிகேசன் (II – பக். 290)

வேய்ங்குழல் ஏந்தும்
கையனே (II – பக். 330)

நிலம்வந்து நடக்கும்
நான்மறை நூல் (II – பக். 329)

அலகிலா விளையாட்
டுடையான் (II – பக். 332)

கோபாலன்; துலரையில்—
பொற்றவிசில் அமர்ந்தருளும்
பூபாலன் (II – பக். 33)

கண்ணன் என்னும்
கறுப்புக் கடவுள்; வினையை
நீறாய் ஆக்கும்
நெருப்புக் கடவுள்! (II – பக். 324)

'மூலமே!' என—முன்பு
மும்மதயானை யொன்று—
ஓலமே இட—ஓடிவந்த
ஒப்பிலியப்பன்' (II – பக். 335)

துட்டன் உதைத்த—
தூணில் தோன்றி—அவன்
குட்டன் சொல் காத்த—
குந்தன்; கோவிந்தன் (II – பக். 335)

மாவலியின்—
மண்டையில் வைத்த பாதம்;
நெடிது வளர்ந்து
நீள்விசும்பைத் தைத்தபாதம்; (II – பக். 342)

மறையும்—
மாமுனியும் மொய்த்தபாதம்;
ஏழிரண்டாண்டு—வனம்
ஏகிநடந்து எய்த்தபாதம் (II – பக். 342)

புறப்பட்டான் கண்ணன்;
பீலிசூடும் மன்னன் (II – பக். 337)

வெண்ணெய்—
வழியும் வாயனை— (II – பக். 339)

புதிர்கொண்டு விளங்கும்—
புண்ணியக் கண்ணனை— (II – பக். 339)

ஆரா அமுதனே! அசோதை—
தால்
ஆட்டிய ஆனந்தக் குட்டனே (II – பக். 342)

ஆலிலைமேல்—
அயர்வானே கால்விரல் சூப்பி— (II – பக். 342)

அவனே இவன்;
இவனே அவன்; (II – பக். 342)

வாசுதேவன்; திருத்துழாய்–
வாசம் எப்பவும்–
வீசு தேவன்! (II – பக். 355)

கண்ணன்.... வானமழை
வண்ணன் (III– பக். 387)

ஞாலம் அளந்தபிரான் (III– பக். 427)

சூதுநடந்த சபைக்குத்
தூதுநடந்த திருப்பாதன் (III– பக். 429)

மதவேழத்தின்–
மருப்பு ஒசித்த மாதவன் (III– பக். 438)

பரந்தாமன்; பழறை–
பாடிப் பரவும்
பல நாமன் (III– பக். 443)

ராதா மணாளன்;
குறையொன்றுமில்லாக்
கோவிந்தன்.... (III– பக். 453)

அகரம்
உகரம்
மகரம்–எனும்
மூவாசைகள்
மூலாட்சரம் கொண்ட (III– பக். 485)

முதற்கண் அனைத்திற்கும்–
கண்ணனே
முதுகண் (III– பக். 489)

கண்ணன் என்னும்–
கைவிளக்கு; கன்னங்கரிய–
மெய்யெடுத்து வந்த–
மெய்விளக்கு (III– பக். 491)

மறை
விளக்கொண்ணா
மகாசேதனன் (III– பக். 395)

பீலியும்–
பீதக அம்பரமும்–
அணிந்து உலவுகின்ற–
ஆதவன் (III– பக். 397)

வேய்ங்குழல் வேந்து (III– பக். 421)

புல்லாங்குழல் அரசு (III– பக். 422)

மதவேழத்தின்–
மருப்பொசித்த மாதவன் (III– பக். 438)

ஆரம்பம்; அத்தமனம்;
அற்றிருக்கும் ஆதவன் (III– பக். 438)

கூடையில் அமர்ந்து
கோகுலம் போனவன் (III– பக். 439)

பெற்றம் மேய்த்த
பெருங் கடவுள் (III– பக். 439)

மாடுகன்றுகள்–நாளும்
மேய்த்தவன் (III– பக். 466)

கழுத்து வெளுத்த–
கருடனை–செலுத்தும்
புகழ்சால்–பரம
புருடன் (III– பக். 497)

ஊழியாலும்–
ஊழிக்காற்றாலும்–
ஊதியணைக்க–
ஒண்ணாத தீபம் (III– பக். 498)

மாலன்;
மூங்கில் குழாய் ஏந்தும் பாலன் (III– பக். 499)

எட்டும் என–
எட்டும் போக்கு–
எட்டும்–
எட்டு (III– பக். 501)

எடுப்பு
தொடுப்பு
முடிப்பு
மூன்றுமில்லாத கீர்த்தனை (III– பக். 502)

குன்றெடுத்து–
கோபாலர்க்குக் குடை கவித்தவன் (III– பக். 514)

இவை யாவும் வாலியாரின் பக்திச் சுடர் தெறிக்கும் சொல்லோவியங்கள். அவர்தம் ஆழ்உள்ளத்தினின்றும் கிளம்பிய அருள்விளக்க அமிழ்த தாரைகள்.

விசுவரூபம்: 'பாண்டவர் பூமி'யில் இரண்டு விசுவரூபங்கள் நடைபெறுகின்றன. ஒன்று கண்ணன் தூது வந்தபோது நடைபெற்றது; மற்றொன்று கண்ணன் பாரதப் பெரும் போரில் பார்த்தனுக்குத் தேரோட்டியாக இருந்து கீதையை உபதேசித்த போது நடைபெற்றது. இரண்டையும் எடுத்து வாலியார் விளக்கும்போது வாலியாரின் ஈடுபாடும் கண்ணனைக் கூறும் பாங்கும் அவர்தம் கிருஷ்ண பக்தியைப் பிரகடனம் செய்கின்றன.

முதலாவது விசுவரூபத்தை மட்டிலும் ஈண்டு காட்டுவேன். துரியன் துவரைநாதனுக்கு அமைத்த பொய்யாசனம் நொடித்து சரிந்தபோது நடைபெற்றது இது.

வாசுதேவன் எழுந்தான்;
விசுவரூபம் எடுத்தான்

....

'காவலில் எனையொரு–
கடைமகன் வைப்பதோ?' என–
நாவலின் நிறத்து–
நாயகன் நிமிர்ந்து–

மாவலி பார்க்க–
மண்விண் அளந்த–தன்
மாவலி பார்க்க–
மறுபடி காட்டினான்;
உயர்ந்தான்;
உயர்ந்தான்; இனி–
உயர்விலா உயர்வுக்குத்–தன்
உயர்வினைக் கூட்டினான்!

விசும்பை வகிர்ந்தது–
விஷ்ணுமூர்த்தியின் திருமுடி;
பாதலத்தைப் பிளந்தது–
பன்னக சயனின் திருவடி;
நீக்கமற எங்கணும்
நிறைந்திட நின்றது திருமேனி;
உலகங்கள் ஈரேழையும்–
உள்வாங்கிக் கொண்ட ஒரு மேனி!

கிரீடத்தில் செருகிய–
கேகயப் பீலி; மாலையாய்க்–
கிரீடத்தில் சூடிய–
கிருட்டிண மூலி; மற்றும்–
கவுத்தவம்;
கத்தூரி திலகம்;
பீதக வஸ்திரம்; எனப்
பிறங்கினான் வனமாலி!

வலக்கையில்—
வாங்கி நின்றான்—
சுடர்மிகு—
சுதர்சனம்;
இடக்கையில்—
ஏந்தி நின்றான்—
பால்நிறப்—
பாஞ்ச சன்னியம்;
தடக்கை மற்றொன்றில்—
தாங்கி நின்றான்—
சார்ங்கம் எனும்—
சாபம்;

பிறிதொரு மணிக்கரத்தில்—
பற்றி நின்றான்—
கவின்மிகு கதாயுதம்!
பாதாதிகேசம்—
பாய்ச்சிய பிரகாசம்
பத்துத் திக்கிலும்—
பட்டொளி வீசியது;

பகலவன்—கண்களைப்
பொத்திக் கொண்டான்;
பார்க்க முடியாமல்—அவன்
பார்வை கூசியது!

'நாராயணா! நமோ
நாராயணா!' என

பீஷ்மனும் பிறரும்
போற்றித் தொழுதனர்;
அளவிட அரிய
ஆனந்தத்தால் அழுதனர்! (II– பக். 347-48)

பின்னர் விசுவரூபத்தை நீங்கி யதார்த்த ரூபத்திற்குத் திரும்பி திருச்சபை விட்டு நீங்கினான். நாமும் விசுவரூப

சேவையைப் பெற்று மெய்மயிர் புளகாங்கிதம் அடைகின்றோம்.

இரண்டாவது விசுவரூபம் மிகமிக அற்புதமானது. அக்காலத்தில் நாம் இருந்திருந்தால் அவனருளால் பார்த்து மகிழ்ந்திருக்கலாமே என்ற ஏக்கம் நம்மைப் பற்றுகின்றது. கண்ணன் நல்கிய மூன்றாம் கண்ணால்,

விசுவரூபத்தை
விழிகளால் விஜயன்
வழித்து வழித்து உண்டான்! (III– பக். 500)

தெளிவு பெற்ற நிலையில்,

'அறிந்தேன்–நீ
அழியாப் பொருள்;
அறிந்தேன்–நீ
அறியவேண்டிய பழம்பொருள்;
அறிந்தேன்–நீ
அணுவும் மாறா மெய்ப்பொருள்;
அறிந்தேன்–நீள்
அகிலம் நினது கைப்பொருள்! (III– பக். 502)

என்கின்றான். மயங்கி நின்றவன் மாயன் சொற்படி இயங்குகின்றான்.

மேற்கூறியவற்றால் கவிஞர் வாலியின் கிருஷ்ண பக்தியை ஓரளவு— ஒருவாறு—அறுதியிட முடிகின்றது. அவதாரங்கள் அனைத்திலும் கண்ணன்தானே அனைவரையும் ஆகர்ஷிக்கும் அவதாரம்! நம்மாழ்வாரின் கண்ணன் ஈடுபாடு இயம்புதற்கரியது.

உண்மைகளும் படிப்பினைகளும்

ஒரு காவியத்தைப் படிக்கும்போது நாம் கவிதை இன்பத்தில் திளைப்பதுடன் அக்காவியத்தில் கவிஞன் உணர்த்த விரும்பும் உண்மைகளையும் படிப்பினை களையும் அறிகின்றோம்; தெளிகின்றோம். தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தமட்டிலும் தமிழ்க் கவிஞர்கள் வாழ்க்கையைச் செம்மைப் படுத்துவதே இலக்கியத்தின் நோக்கம் என்ற கொள்கையினையுடையவர்களாக இருந்தனர் என்று கொள்ளலாம்.

உரத்தி வளம் பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கி பொல்லா–மரத்தின்
கனக்கோட்டம் தீர்க்குநூல் அஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டம் தீர்க்குநூல் மாண்பு [1]

என்ற வெண்பாவால் இதனை நன்கு அறியலாம். இதனால் மக்களினத்தின் அறியாமையைப் போக்கி அறிவு கொளுத்துதலே. கவிதையின்—காவியத்தின்—முக்கிய—முதன்மையான—வேலையாக இருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது. கவிஞர் வாலியின் பாண்டவர் பூமியை இவற்றின் அடிப்படையில் நோக்குவோம்.

1. வாழ்க்கை பற்றியவை

வாழ்க்கைபற்றிய சில கருத்துகள் 'பாண்டவர் பூமியில்' இழையோடுகின்றன. படிப்பவர்களின் மனத்திற்கு விருந்தாக அமைவதுடன் அவர்கள் நன்னெறிகளைச் சிந்திக்கவும் துணை செய்கின்றன.

---

1 நன்னூல்-25

(1) பற்று–பாசம்–பந்தம்: *ஏகசக்கரபுரத்தில் வாழ்ந் அந்தணன் வாய்மொழியாக வருவது:*

பற்று வைக்கிறது; அந்தப்
பற்று–
பற்று வைத்தவன் நெஞ்சிலேயே–
புற்று வைக்கிறது; அந்தப்
புற்று–
புற்று வைத்தவன் உயிருக்கே–
முற்று வைக்கிறது; இந்த
முற்றுக்கு–ஒரு
முற்று வைக்கும் ஞானத்தை–
முற்றாக–எந்த மனம்
கற்று வைக்கிறது?

பாசம் என்பது–நம்
பாதத்தை வழுக்கும்–
பாசம்;
பந்தம் என்பது–நமை
பஸ்பமாய் பொசுக்கும்
பந்தம்! (I – பக். 312)

(2) அறம்: *உலூகன் என்னும் புரோகிதன் வாயில் வைத்துப் பேசப் பெறுவது. தவிர, அறத்தின் நாயகனா இருப்பவன் உதிட்டிரன்.*

அறம்–
அநாதியானது; அதன்
ஆற்றல்–
அலாதியானது!

அறத்தை–
அச்சாணி யாகக் கொண்டுதான்–
அம்புவித் தேரின்–
ஆழி சுழலுகிறது; அந்த–
அச்சாணி–ஓர்

அச்சாணியமாய் அகலுமாயின்–
ஆழிசுழன்று–
அம்புவித்தேர்
அதோகதி அடையுமென–
ஆரணம் கழறுகிறது!

மாறக்கூடியது;
மாற்றம் உடையது;
தரணியின்
தட்பம்; வெப்பம்!

மாறாதது;
மாற்ற முடியாதது;
தருமத்தின்–
திட்பம்; நுட்பம்!

அது மட்டுமல்ல;
அறம் எது? எது–
அறம் அல்லாதது? என–
அறிய மாட்டாது...

சில–
சந்தர்ப்பம் நேரலாம்;
அப்போதெல்லாம்–
ஆன்றோர் கருத்தைக் கோரலாம!

....

அரசு–
அன்று கொல்லும்; அறம்–
நெடுநாள்–
நின்று கொல்லும்!

அதற்குக் காரணம்–
அறம் பிழைத்தார்க்கு...

வருந்தவும்–
திருந்தவும்–

அது—நீண்ட—
அவகாசம் கொடுக்கும்;
அவகாசம் அளித்தபின்னும்—
அந்தகாரம் நீங்கி—அறிவு
பிரகாசம் பெறாதிருந்தால்—
பிறகவன் ஆவி எடுக்கும்! (II – 322)

(3) வாழ்க்கை நியதி: *இதனைப்பற்றி நம் முன்னோர்கள் சிந்தித்துத் தெளிந்து*

கல்பொருள் திரங்கும் மல்லல் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புனைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் [2]

என்று கூறியுள்ளனர். 'கல்லை அலைத் தொலிக்கும் வளவிய பேரியாற்று நீரின் வழியே போகும் மிதவைபோல், அரிய உயிர் ஊழின் வழியே படும்' என்பது இதன் பொருள். நடப்பவையெல்லாம் ஊழின்படி நடக்கும் என்பது நியதிக் கொள்கை.

இந்தக் கொள்கை 'பாண்டவர் பூமியில்' வியாழனை யொத்த தருமவியாதன் வாயில் வைத்துப் பேசப் பெறுகின்றது.

நீ ஊன் விற்கிறாய்;
உயிர்க் கொலை பச்சைப் பாபம்

என்று அந்தணன் கூற, அதற்கு மறுமொழியாக இந்தப் புளிஞனின் பேச்சு அமைகின்றது. நீளமான பேச்சு. அதன் சுருக்கத்தை ஈண்டுக் காட்டுவேன். புலால் விற்பவன் புலவனாய்ப் பேசுகின்றான்.

'பிராமணனே! உன்
பச்சாதாபம்—
பொருளற்றது;
இறைச்சி விற்பினும்—என்
இதய இல்லம்—
இருளற்றது; ஓர்—

2 புறம்-192

அந்தணனாயினும்—நீ
அடைந்த அறிவு—
அருளற்றது; அனைத்தும்
தெய்வசித்தம்—எனத்
தேராததால்—அது
தெருளற்றது!

பிறப்பால் நானொரு—
புளிஞன்; எனினும்
தெய்வாநுக் கிரகத்தால்—நான்
தெளிஞன் !

'இன்ன அம்பலம்;
இன்ன பாத்திரம்;
ஏற்று ஆடுக!'
என்கின்றான் தேவன்;
ஏற்க மாட்டேன்—
என்பவன் யாவன்?
அபிநயம் கழித்து—
அரிதாரம் அழித்து
அதனுள் போய்—
அடங்குகிறது சீவன் !

என்தொழில் உன்தொழில்—
இதில் எங்கு வந்தது? நம்—
இச்சைப் பிரகாரமா?—நாம்
இங்கு வந்தது?

பின்— இந்தப்
பிறப்பில் இறப்பில்—
பிழையோ சரியோ?
நமக்கென்ன
பங்கு வந்தது?

'முத்தொழில் புரியும்—
மூலம்தான்—ஒருவனை
இத்தொழில் புரிக!' என—

ஏவுகின்றது; எனவே—
எத்தொழில் இங்கு—
எவன் புரிந்தாலும்—
அத்தொழில் பலாபலன்—
அதனையே மேவுகின்றது!
எதையும்—தனது
எண்ணப்படி...

கைவாளா வெட்டும்? வாள்
பிடித்த—
கைதானே வெட்டும்! இதில்
வாளுக்கு உண்டோ—ஒரு
வாழ்த்தும் திட்டும்?

நான்—
கடவுள் கையிருக்கும்—
கருவி; என்னை நான்—
இங்ஙனம்
கண்டு கொண்டதால்—
ஆகவில்லை
கருவி!

கறிக்கடை நடத்தினாலும்—என்
கருத்தில் நான்—
கறிக்கடை நடத்துபவன்;
கீழ்க்குணங்கள்—என்னுள்
கிளைக்குமாயின்—கீறிக்கீறிக்
கீழே கிடத்துபவன் !

என்—
குடிப்படை வாழ—
கொலைத்தொழில்—
செய்தாலும்—நான்
அடிப்படை தருமத்தை விட்டு—
அகன்றதில்லை;

....
'நான்' என்பதை
நீக்கியவன்–
ஊன் விற்றால் என்ன? (II – பக். 220-21)

(4) வையம்–ஒரு
வைத்தியசாலை;

அறியாமை நோயாளியாய்–
ஆரும்–இங்கு
பதிவு செய்யப்படுகின்றனர்–
பிறப்பெடுத்த காலை!

அந்த–
அஞ்ஞான நோய்க்கு...

கர்மம் செய்தலே–
கைகண்ட சிகிச்சை;
இந்த சிகிச்சைக்கு–
இடம் தருவதில்–
இருக்கலாம் ஒருவனுக்கு–
இச்சை; அனிச்சை!

ஒன்றுமட்டும்–
உண்மை!

முழுதும் சிகிச்சை–
முடிந்தாலும் முடியாவிட்டாலும்...

வையமெனும்–
வைத்தியசாலை வாசம்–
ஆர்க்கும்–தவிர்க்கவொண்ணா
அவத்தை; அந்த
அவத்தை–அவரது
ஆயுள் உள்ள மட்டுமே; அது
சீண்டாது–அவரது
சவத்தை! (III – பக். 432)

இது கண்ணன் காண்டீபனுக்குக் கழறியது.

(5) மனம்:

மனத்தால் ஆளப்படுபவன்–
மனிதரில் மனிதன்;
மனத்தை ஆள்பவன்–
மனிதரில் புனிதன்! (III – பக். 463)

மனம்–
மனிதனுக்குள் வசிக்கும்;
மெல்ல மெல்ல–
மனிதனையே நசிக்கும்;
அவனை–
ஆசை வயப்படுத்தி–
போராட வைக்கும்;
பகலுக்கும் நிசிக்கும்!

ஒன்றை–
விரும்பச் சொல்லும்;
ஒன்றை–
வெறுக்கச் சொல்லும்;
அதன்பிறகு–
அதுவே...
விரும்பியதை
வெறுக்கச் சொல்லும்;
வெறுத்ததை–
விரும்பச் சொல்லும்!

அதனால் விளைவது–
ஆனந்தம்; அவஸ்தை;
ஆனால்–
அது–
எப்போது–
எதை விளைவிக்கும்–
என்பதற்கு–
ஏதுமில்லை விவஸ்தை!

அதை இதைக் காட்டி—
உன்னை
அது மயக்குகிறது;
உன்னை—
ஒரு—
கைக் குழந்தையாய்த்—தன்
கையிலெடுத்து இயக்குகிறது!

சுயமாக—நீ
சிந்திக்கத் தொடங்கினால்—
உடனே—அது
உனது...

புத்தியோடு போராடி—அதைப்
புறங்காணும்;

....

மனம்—உன்னை
மெனக்கெட்டு—
அழைத்துச் செல்லும் ஆறு—
அழுக்காறு; அந்த—
வழியில் நடந்தால்—உன்
வாழ்க்கையில்—அமைதி
வாய்க்காது—நூறு
விழுக்காடு!

....

அனைத்து அவலங்களுக்கும்—
அச்சாணி—என்றிருக்கும்
உன்மனத்தை ஏற்றாதே
உச்சாணி!

அதை—உன்
அறிவால் அடக்கு; உன்—
கொத்தடிமையாய்—ஞானக்
கூட்டுக்குள் முடக்கு! (III – பக். 463-64)

(6) துறவு:

துறவு என்பது—
தொழிலைத் துறப்பதல்ல;
தொழிலின் விளைவான—
தோல்வி வெற்றியைத் துறப்பது!

யாது கிட்டும்?
யாது கிட்டாது? என—
யாதொன்றும் எண்ணாது—செய்யும்
யோகமே...

துறவு என்று—
தேர்க;
யாண்டும்—அத்தகு
யோகமும் துறவும்...

ஒன்றே என்று
ஓர்க!

நிட்காமிய கர்மத்தை—
நிதமும் பேணுவோன்...

அதையே—தனக்கு
ஆதாரமாகக் கொண்டு—
யோக நிலைக்கு—
ஏறுகிறான்; அங்கவன்
உரைக்கவொண்ணா
சாந்தத்தில்—
ஊறுகிறான்!

சமநிலையை...
சாந்தநிலையை...
துய்ப்பதன் பெயர்தான்—
துறவு; அங்கு நேர்வது—
இன்ப துன்ப உணர்வுகளின்—
இறவு! (III – பக். 460-461)

(7) நிலையாமை: *'நாள் என ஒன்றுபோல் காட்டி உயிரீரும் வாள்'[3] என்று நிலைமையைப் பற்றிப் பேசுவார் வள்ளுவர். 'பாண்டவர் பூமி'யில் இந்நிலையாமை பற்றிச் சில இடங்களில் குறிப்புகள் உள்ளன. நாரதமுனிவன் நவின்றபடி இராசசூய யாகம் செய்வது பற்றி யுதிஷ்டிரன் யோசனையில் ஆழ்கின்றான். நிலையாமைபற்றிய சிந்தனை யால் அவன் முடிவு இழுபறியாய் இருந்தது.*

வத்திகளில்—சந்தன
வத்தியாயினும்;
வேந்தர்களில்—சக்கர
வர்த்தியாயினும்...
ஒளிரும்வரை—
ஒளிர்ந்தபின்—
மிளிரும்வரை—
மிளிர்ந்த பின்—

சாம்பல்தானே—
சேஷம்!
வேறென்ன
விசேஷம்?

நாடு மேய்த்தவராயினும்—
மாடு மேய்த்தவராயினும்—
காடு மேய்கிறது—அவரைக்
கடைசியில்; அரண்மனையனைய—
வீடு வாய்த்தவராயினும்—சிறு
கூடு வாய்த்தவராயினும்—
காடுதானவர்—குடியுகும்
கடைசி இல்! (II – பக். 83)

என்பன போன்ற நிலையாமைபற்றிய சிந்தனைகளில் தருமபுத்திரனின் மனம் ஈடுபட்டிருந்தது.

பால சந்நியாசி பார்த்தன் வாயில் வைத்து நிலையாமை தத்துவம் பேசப் பெறுகின்றது.

3 குறள்-334 (நிலையாமை)

பெண்ஆண் இருவர்—
பிசைந்த மண்ணில்—
எண்சாண் உயரம்—
எழும்பிய வீடு—
என்பு சதையோடு—
இருக்கும் கூடு!
உள்ள மட்டும்—இதை
ஓம்புதல் பாடு;
உளுத்த பின்பு—இதனை
விழுங்கும் காடு! (II – பக். 56-57)

இது பலராமன் விடுத்த வினாவிற்கு ஒருவாறு விடையாக அமைகின்றது.

(8) எவருக்கும் எதுவும் சொந்தம் இல்லை:

கண்ணன் வாக்கில் வாலியார் சொன்னது:

தூதுபோய்த்—
திரும்பிவந்த...
கறுப்புத்தாமரை—முகம்
கன்றியிருப்பதை—
உதிஷ்டிரன் கண்டான்; ஒருவாறு
ஊகித்துக் கொண்டான்!

விளக்கினான்—
வாசுதேவன்; திருத்தமாய்—
வாசம் எப்பவும்—
வீசுதேவன் !
....

நிகழ்ந்தவற்றையெல்லாம் விளக்கிவிட்டுப் பேசுகிறான் கோபாலன்:

'ஈயிருக்கும் இடம்கூட—இங்கு
ஈயமாட்டானாம், நீயிருக்க;
பொருதும் போரில்—இந்தப்
புல்லன் மடிந்தால்—

பிரியப்படாது—இவன்
பிணத்தின்மீது ஈயிருக்க!

இடுகாடு சுடுகாடு தவிர—
இவ்வுலகில்—
எந்த இடம்—
எவனுக்குச் சொந்தம்? நான்—
சொன்ன இடுகாடும் கூட
சிவனுக்குச் சொந்தம்!

எனவேதான்—பிறவி
எடுக்கும் எவ்வுயிரும்...

'ஈயிருக்கும் இடம்கூட—இங்கு
ஈசன் இடம்!' என்றறிந்து—ஒரு
தாயிருக்கும் இடம்தேடி—வந்து
தஞ்சம் புகுந்து...

தங்குகிறது—பத்துத்
திங்கள்வரை; பின்—
இறை அநுமதிக்கும் நாளில்
இறங்குகிறது தரை!

குடிக்கூலி—
கொடுக்காமல்—
குடியிருக்கும் இடம்—
கருவறை; அது—
தயையே வடிவான—
தாய்மையின் திருவறை!

ஆனால்—இவ்
அம்புவியில்...

பெண்வந்து தங்கிடினும்—
ஆண்வந்து தங்கிடினும்—
மண்வந்து தங்குகின்ற—
மானுடர் தம்மிடம்...

வாடகையாய் மரணத்தை—
வசூலிக்காது—
விட்டதில்லை இதுவரை—
வல்லான் ஒருவரை!

இதுபோன்ற உபதேசங்களைத் தானும், விழியிலா வேந்தனும், விதுரனும் பீஷ்மனும் சொன்னதாக வாலியாரின் பதிவு.

2. விதி பற்றியவை

ஆதிமனிதன்முதல் இன்றைய மனிதன்வரையில் உள்ளவர்களின் எண்ண ஓட்டங்களில் இடம் பெற்றிருப் பது விதி பற்றிய கருத்து. 'ஊழிற் பெருவலி யாவுள?'[4] என்பது வள்ளுவம். 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டுவதும்' என்று சிலம்பு ஒலிக்கும். காவியங்கள் அனைத்திலும் விதி பற்றிய கருத்துக்கு இடம் வைக்கப் பெற்றுள்ளது. 'பாண்டவர் பூமி'யிலும் விதி பற்றிய கருத்துகள் பரந்துபட்டுக் கிடக்கின்றன.

(1) மான் வடிவங்கொண்டு புணர்ச்சி இன்பத்தில் ஈடுபட்டிருந்த முனிவரைப் பாண்டு அம்பெய்து கொல்லுகின்றான். பாண்டுவின் இறுதி வாழ்வு துறவறமாக அமைகின்றது. பீஷ்மன்,

'பாண்டு—அவனது
பூர்வ ஜன்ம ஊழ்வழி—
போகிறான்!' (I – பக். 111)

என்று முடிவு கட்டுகின்றான் திருதராட்டிரன். தம்பியின் நிலையை அறிந்து துக்கிக்கின்றான். இந்த இடத்தில் கவிஞன் கூற்றாக அமைகின்றது பிறப்பு பற்றிய கருத்து ஊழாக.

4 குறள்-380 (ஊழ்)

படிமிசை
பிறப்பெய்தும்—
ஒவ்வொரு மனுவிற்கும்—
வாழ்வு ஒரு வழிநடையாகும்!

எங்கெங்கே—
ஏற்றங்கள்;
எங்கெங்கே—
இறக்கங்கள்;
எந்தெந்த—
திக்குகளில்—
என்னென்ன—
திருப்பங்கள்...

என
ஏற்கெனவேயே—
அவற்றை—ஓர்
அட்டவணையாக்கி—அவன்
கபாலவாசலில்—அதைக்
கல்வெட்டாய்ப் பொறித்து...

பிதகுதான்—
பன்னீர்க் குடத்தைப்
பொத்து—அவனை
பூமியில் இறக்குகிறது ஊழ்! (I—பக். 111)

இங்கு ஊழ் என்பது பிராரத்தத்தைக் (நுகர்வினையைக்) குறிக்கின்றது.[5] *தக்க இடத்தில் இதனை வாலியார் குறிப்பிட்டுக் காட்டுவது அற்புதம்!*

5 வினைசஞ்சிதம் (பழவினை), பிராரத்தம் (நுகர்வினை), ஆகான்மியம் (எதிர்வினை) என மூவகையாகப் பிரித்துப் பேசுவர் தத்துவ அறிஞர். சஞ்சிதம்-பல பிறப்புகளில் சேர்ந்து அமைந்த தொகுதி. அத்தொகுதியினின்றும் 'பிராரத்தம்' என்ற ஒரு பகுதி இந்த உடலாக அமைகின்றது. இது நுகர்வினை. இந்தப் பிறப்பில் ஈட்டும் தொகுதிதான் ஆகாமியம் (எதிர்வினை).

(2) மகரிஷி மாண்டவ்யரின் வினைப் பகுதியைக் காட்ட. மூன்று திருடர்கள் வந்து பதுங்கினர் அவர்தம் ஆசிரமத்தில். அரண்மனையில் திருடிய ஆபரணங்களை மூட்டையாகக் கட்டி மாண்டவ்யரின் பர்ணசாலைக்குள் பத்திரப்படுத்தினர். அரண்மனைக் காவலர்க்ளால் மகரிஷி பிடிபட்டு மரணதண்டனைக்கு உட்ப்டுத்தப்படுகின்றார் தருமதேவதையால். முனிவர் சிறுவயதில் வண்டுகளையும் பட்சிகளையும் வதைத்த வினை இதுவாக அமைந்தது என்று விளக்கப் பெறுகின்றது. வாலியார் இதனை:

மகரிஷி
மாண்டவ்யரின்
முன்வினை—
மூவிரண்டு கால்களோடும்—
பொருள்
மூட்டையைச் சுமந்த தோள்களோடும்—
மூச்சு இரைக்க இரைக்க—உப்பு
வியர்வையை—உடம்பு
வாளிநீர் போல்—வாரி
இறைக்க இறைக்க—
ஓடிவந்து...

அவரது பர்ணசாலைக்குள்
புகுந்து கொண்டது; 'இதுதான்—
பத்திரமான இடம்!' என்று
புரிந்து கொண்டது!

முன்வினையாய்—
முளைத்து வந்தது—
மூன்று திருடர்கள்; ஆறு
விழிகளிருந்தும்—அறிவு
வெளிச்சமில்லாத குருடர்கள்!

என்று காட்டுவார். 'பிராரப்தம்' இறைவன் ஆணையால் செயற்படுவதால் சாதாரண ஆள், அரசன், முனிவர்

என்றவர்களிடம் வேறுபாடு காட்டாமல் நடை பெறுகின்றது என்பது ஈண்டு அறியப்படும்.

(3) துரியோதனனும் பீமனும் ஒரே நாளில் பிறந்தனர் என்பதைக் கூறும் கவிதைப் பகுதி இது

நன்றும் தீதும்—ஒரே
நாளில் தோன்றி—
ஒன்றையொன்று
பொன்றும் வகையில்—பின்னர்
போர்க்களம் புகுமென...
விதி—
விதித் திருந்த
விதி !—இதையெண்ணி
விதிர் விதிர்த்தது—
விழியிலான் ஆளும்
பதி ! (I – பக்.126)

விதிதான் அவர்களின் பிறப்பை இவ்வாறு அறுதியிட்டது என்பது ஈண்டு காட்டப் பெறுகின்றது. கதைப் போக்கில் நோக்கினால் இதன் உண்மை தெளியப்படும்.

(4) எந்த நிகழ்ச்சி நடைபெறினும் அது கர்மத்தின் காரணமாகவே நடைபெறும் என்பதனை தவசிகளும் காசியபரும் ஒருமுகமாகப் பேசினர். இந்த உண்மையைக் கூறும் கவிதைப் பகுதி:

பாண்டுவின்
பள்ளி நிலா...

....
—ஐந்து
பிள்ளைகளோடு நின்று—
பிரலாபிப்பது கண்டு...
'இது—

கருமவினை!' என்று—
கணித்தனர்—நாளும்
தருமவினை புரியும்—
தவசிகள்;
காசியபர்—
கூடவந்த—
துவராடை கட்டிய—
துளசிகள்!

காசியபர்—
பேசினார்;
கும்மிருட்டில் குமைந்த—
குந்தியின் மேல்—
விடியல் வார்த்தைகளை—
வீசினார்.

....
இன்னதிங்களில்
இன்னதிதியில்—
இன்ன பட்சத்தில்—
இன்ன பொழுதில்...
மன்னன் பாண்டுவின்
மரணம் என்பது—
முன்னமே அவனது—
முன்வினை மொழிந்தது!

மற்றபடி...
மான்தந்த சாபம்;
மாத்திரியின் சல்லாபம்;
இத்தியாதி...
இத்தியாதி...

அந்த
முன்வினை மொழிந்த
வாக்கு—

மெய்ப்பட—ஒரு
சாக்கு! (I – பக். 138-39)

(5) துரியோதனன் சூதால் செய்யப்போகும் சதியை விதுரனிடம் கூற அவன், இதனால் நடைபெறப் போகும் விபரீதத்தை விரிக்க, விழியிலான் விரக்தியால் சிரித்துப் பேசுவதில் விதியின் விபரீதத்தை ஒருவராலும் வெல்ல முடியாது என்ற கருத்து புலனாகின்றது.

'தம்பீ கை—
தேயத்தேயத் தேய்த்தேனடா...

ஏகப்பட்ட—
எலுமிச்சை; எதுவும்—
எடுக்கவில்லை—
என்மகன் பிச்சை!

நச்சுகிறான்—
நச்சை; அதற்கெனக்—
கட்டுகிறான்—
கச்சை; அசூயையால்—
இழிகடையான—
இச்சை; அனைத்தும்
விதிசெய்யும்—
விச்சை!

விதுரா!
வாழ்க கைச் செடி—
வளர்கிறது; வாடுகிறது—
விதிவிதித்த விதிப்படி!

'விதியே! நீயொரு
விதி விதிக்காதே!' என்று—
விதியிடம் சொல்லி—
விதிக்கொரு
விதி விதிப்பது எப்படி?

விதியை—
வென்றவனும் இல்லை; அதன்

நிழல்படாது—தள்ளி
நின்றவனும் இல்லை!' (II – பக். 125-26)

திருதராட்டிரன் வேறு வழியில்லாமல் துரியன் திட்டத்தை ஒப்புக்கொண்டு பழியை விதிமீது சுமத்துகின்றான்.

இதே கட்டத்தில் பாஞ்சாலி சபதத்தில் திருதராஷ்டிரன் பேச்சை ஒப்புநோக்கி அநுபவிக்கத் தக்கது.

'விதிசெயும் விளைவினுக்கே—இங்கு
வேறுசெய் வார்புவிமீ துளரோ?
மதிசெறி விதுரன் அன்றே—இது
வருந்திறன் அறிந்துமுன் எனக்குரைத்தான்;
"அதிசயக் கொடுங்கோலம்—விளைந்
தரசர்தங் குலத்தினை அளிக்கும்" என்றான்;
சதிசெயத் தொடங்கிவிட்டாய்—"நின்றன்
சதியினிற் றானது விளையும்" என்றான்.

விதி! விதி! விதி! மகனே!—இனி
வேறெது சொல்லுவன் அடமகனே!
கதியுறுங் காலனன்றோ—இந்தக்
கயமக னெனநினைச் சார்ந்துவிட்டான்?
கொதியுறு முளம் வேண்டா;—நின்றன்
கொள்கையின் படிஅவர் தமைஅழைப்பேன்;
வலியுறு மனைசெல்வாய்—என்று
வழியுங்கண் ணீரொடு விடைகொடுத்தான். [6]

(6) பாஞ்சாலியைப் பந்தயப் பொருளாய் தருமன் வைக்க நினைத்ததும் விதியின் விளையாட்டே என்பதைக் குறிக்கும் பகுதி:

அதிர்ஷ்டம் மிகுந்த—
தாரத்தை வைத்தாடினால்—
தருமன் வெல்லலாம்;
இழந்ததை யெல்லாம் மீட்டு—
இந்திரபுரி செல்லலாம்!'

6 பாஞ்சாலி சபதம்-107, 108

....
'இழந்ததை மீட்டலாம்!' என–
இழிமகன் கூற–தருமனுக்கு
எழுந்தது நப்பாசை; சூதில்–
எல்லோர்க்கு மெழும் தப்பாசை!

....
மண்ணிருண்டு நிற்காது–அற
மார்க்கம் காட்ட–வந்த நிலா
கண்ணிருண்டு நின்றது; அதை–
ஆட்டிப்படைக்க–தான்
ஆசைப்பட்ட வழியிலே–விதி
கூட்டிக் கொண்டு சென்றது!

....
நிந்தைக்குரிய
நீசர் சபையிலே...

அல்குலில்–
அரும்பாத–
ஓர்
உயிர்ப் பூவை; ஈர்
ஆக்கையில் ஆக்காத–
ஆக்கையை;

....
கந்தைநடுவே–பட்டுக்
கலையை வைப்பது போல்; கள்–
மொந்தை நடுவே–பசு
மோரை வைப்பதுபோல்;

....
ஊர்–
பழிப்புரை பேச; மறைநூல்–
பயின்றவர் ஏச...
பந்தயப் பொருளாய்–தருமன்
பாஞ்சாலியைக் குறித்தான்; (II–பக். 139-141)

இதனால் நேர்ந்ததைக் கவிஞர் வாலி:

சருமம் கொண்டு—
சகதலத்தில் உலவும்—
தருமம் தட்டழிந்தது; வந்த—
காலம் முதற்கொண்டு—சிறு
கீறல் விழாது காத்த—அதன்
சீலம் கட்டழிந்தது!

என்று தம் கண்களில் நீர் சொட்ட— படிப்போர் கண் திரையை நீர்ப்படலம் மறைக்க—கூறுவர்.

(7) தருமன் சூதாட்டத்தில் இறங்கப் போவதை நினைந்து வானமே அழுதது என்று கூறுவர் கவிஞர் வாலி:

'வெள்ளை வெளே'ரென
விடிந்தது பொழுது; எனினும்,
வான்முகம் வீங்கியிருந்தது—
விடியவிடிய அழுது!
நெடுநாளாய்—தன்
நீள வீதியில்—
உலாவி வரும்—
நிலாவின் குலம்...

சூதால்—
சுக்குநூறாய்ப் போவதை—

விதிசொல்லி—
வான் அழுதது; அதனால்தான்
விடியவிடிய—
விழிநீர் சொரிந்தது!

வான் அழுதாலென்ன? வான்—
மீன் அழுதாலென்ன?
கான் அழுதாலென்ன? கான்
மான் அழுதாலென்ன?

அது அழுதாலென்ன?
இது அழுதாலென்ன?
ஆர் அழுதாலென்ன?
ஊர் அழுதாலென்ன?

நிட்காமியமாய்—
நிற்கும் விதி;
நிர்தாட்சணியம்—அதற்கு
நிர்ணயிக்கப் பெற்ற விதி! (II—பக். 130-31)

வாலியாரின் கூற்றில் விதி செயற்படுவதைக் கண்டு மகிழலாம்.

(8) வனவாசமும் அஞ்ஞாதவாசமும் முடிந்த நிலை. அடுத்து ஆகவேண்டியதை யோசிக்க சபை கூடுகின்றது. கண்ணன் முதலில் பேசுகிறான். சூதுபற்றி பேச்சு வரும்போது,

அவனை (பாண்டுவை)
அழைத்ததும் சூது;
அவனோடு—
ஆடியதும் சூது!

ஆக—தனது
அம்மானைக் கொண்டு
அந்தகன் பிள்ளை—
அடித்தான் கொள்ளை!

விதி—சகுனியின்
விரல்களில் குந்தியது; குந்தி—
குந்திமகன் சொத்தை—அது
குறைவரக் கொந்தியது! (II—பக். 293)

விதியினால்தான் அனைத்தும் நடைபெறுகின்றது என்ற உண்மையைக் கார்முகில்வண்ணன் வாக்கிலேயே அமைகின்றது.

(9) சபையில் 'சாத்யகி' என்ற யாதவவீரன் பலராமன் சொன்னதை மறுத்தும் கண்ணன் சொன்னதை ஆமோதித்தும் கூறின்போது துருபதன் பேசுகின்றான்:

'சாத்யகி சொன்னது—
சரி;
நல்லவனல்ல துரியன்;
நரி!
இதமான வார்த்தைகளை
எடுத்துரைத்து...
திருதராஷ்ரன் பிள்ளையைத்
திருத்த வொண்ணாது;
தினம்தினம்—அவனுக்குத்
தின்ன சோறு செரிக்காது—
தினையளவாவது—பிறர்க்குத்
தீங்கு பண்ணாது!

அது—
அவன் ஊழ்;
ஊழை—
ஓட்டித்தான்—
ஒருவனுக்கு—
வாய்க்கிறது...

உள்ளம்; உறைவிடம்;
உறக்கம்; கூழ்!
ஊழ் வயப்பட்டவனுக்கு—
உபதேபிப்பதெல்லாம் பாழ்! (II– பக். 296-97)

சிந்தனையிலும் ஊழின் பங்கு உண்டு என்பதை துருபதனின் பேச்சால் அறிய முடிகின்றது.

(10) சூதாட்டம் நடைபெறுகின்றது.. தருமன் பணயம் வைத்த பொருள்களை எல்லாம் இழந்து விடுகின்றான். விதுரனுக்கு இது பொறுக்கவில்லை.

அண்ணனிடம் இதைத் தடுத்து நிறுத்துமாறும், சகுனியை அவன் ஊருக்கே அனுப்பிவிடுமாறும் வேண்டுகின்றான். துரியன் இதைப் பொறுக்க முடியாமல் சிற்றப்பன்மீது வசைமாரி பொழிந்து அங்கிருந்து வெளியேறிவிடுமாறும் கூறுகின்றான். நன்னெறி விதுரன்,

போக்கை மாற்றாது—
பதிலுறுத்தான்—
....
'புல்லனே! நான்
போவதை இருப்பதை—
நீ யாரடா நிர்ணயம் செய்ய?
நிகழ்த்தினேன் உரை நீ உரிய!

உன்
செவிக்கும் சிந்தைக்கும்—தேன்
சேர்க்கப் பேசுவோன்—உன்னை
அவிக்கும் அனல்; உன் புகழைக்
கவிக்கும் கங்குரைக் களையக்—
கைப்பாய்ப் பேசுவோன்—குளிர்
குவிக்கும் புனல்!

படுகுழியில்—
படுபாவிநீ விழாதிருக்கப்—
படுகிடையாய்—குறுக்கே
படுத்துத் தடுத்தேன்;
பீஷ்மன் வாய்க்கதவம்—
பூட்டிக் கிடப்பதால்—
பேதைநான் பேதலித்துப்
பெருங்குரல் கொடுத்தேன்!

சிவனே என்றிராமல்—
சிலபல சொன்னேன்—
மகனே! உன்—
மேன்மை கருதி;
வென்றது விதி;
வென்றது விதி;

வென்றது விதி; நான்–
விழுந்தேன் பொருதி!'

என்று–தன்
இருக்கையில்–
குந்தினான் விதுரன்–
குனிந்த தலையொடு; அருகில்–
நின்றனன் விதியெனும் தேவன்–
நிமிர்ந்த தலையொடு! (II– பக். 136)

இங்கு விதியின் வெற்றிநடை காட்டப்பெறுகின்றது. இறுதி அடிகள் இரண்டும் வாலியாரின் கூற்றாக அமைந்திருப்பதைக் கவனிக்க வேண்டும். நற்செயல் நடைபெறும் போதும் தீச்செயல் நடைபெறும்போதும் கவிஞன் வந்து பேசுவதைக் காவியங்களில் காணலாம். அந்த மரபையொட்டி வாலியார் பொறுக்க முடியாமல் விதியின் இறுமாப்பைக் காட்டுகின்றார்.

இவ்விடத்தில் பாரதியின் 'பாஞ்சாலி சபதத்தில்' வரும் விதுரனின் பேச்சைச் சிந்தித்தால் ஒப்புநோக்கி இலக்கியச் சுவையில் ஈடுபடத் துணை செய்யும். துரியோதனன்,

இன்பம் எங்ஙண் உண்டோ
அங்கே ஏகிடென்று உரைத்தான் [7]

என்று சொன்னவுடன் விதுரன் பேசுகின்றான்:

நன்றாகும் நெறியறியா மன்னன்; அங்கு
நான்குதிசை அரசர்சபை நடுவே தன்னைக்
கொன்றாலும் ஒப்பாகா வடுச்சொற் கூறிக்
குமைவதனில் அணுவளவும் குழப்பம் எய்தான்;
சென்றாலும் இருந்தாலும் இனிஎன் னேடா?
செய்கைநெறி அறியாத சிறியாய், நின்னைப்
பொன்றாத வழிசெய்ய முயன்று பார்த்தேன்;
பொல்லாத விதி என்னைப் புறங்கண்டானால்! (213)

7 பா. க. பாஞ்சாலி சபதம்-அடிமைச்சருக்கம் பக். 212

"கடுஞ்சொற்கள் பொறுக்காத மென்மைக் காதும்
கருங்கல்லில் விடந்தோய்ந்த நெஞ்சுங்கொண்டோர்
படுஞ்செய்தி தோன்றுமுன்னே படுவர்கண்டாய்;
"பால்போலும் தேன்போலும் இனிய சொல்லோர்
இடும்பைக்கு வழிசொல்வார்; நன்மை காண்பார்
இளகுமொழி கூறார்" என்றினைத்தே தானும்—
நெடும்பச்சை மரம்போல வளர்ந்து விட்டாய்—
நினக்கெவரும் கூறியவ ரில்லைகொல்லோ? (214}

'நலங்கூறி இடித்துரைப்பார் மொழிகள் கேளா
நரபதி! நின் அவைக்களத்தே அமைச்ச ராக
வலங்கொண்ட மன்னரொடு பார்ப்பார் தம்மை
வைத்திருத்தல் சிறிதேனும் தகாது கண்டாய்!
சிலங்கைப்பொற் கச்சணிந்த வேசை மாதர்
சிறுமைக்குத் தலைகொடுத்த தொண்டர், மற்றுங்
குலங்கெட்ட புலை நீசர் முடவர் பித்தர்
கோமகனே! நினக்குரிய அமைச்சர் கண்டாய்! (215)

'சென்றாலும் நின்றாலும் இனிஎன் னேடா?
செப்புவன். நினக்கெனநான் செப்பினேனோ?
மன்றார நிறைந்திருக்கும் மன்னர் பார்ப்பார்'
மதியில்லா மூத்தோனும் அறியச் சொன்னேன்;
இன்றோடு முடிகுவதோ? வருவ தெல்லாம்
யானறிவேன்; வீட்டுமனும் அறிவான் கண்டாய்!
வென்றான்உள் ஆசையெலாம் யோகி யாகி
வீட்டுமனும் ஒன்றுரையா திருக்கின்றானே (216)

'விதிவழிநன் குணர்ந்திடினும் பேதை யேன்யான்
வெள்ளைமன முடைமையினால் மகனே, நின்றன்
சதிவழியைத் தடுத்துரைகள் சொல்லப் போந்தேன்;
சரிசரிஇங் கேதுரைத்தும் பயனொன் றில்லை,
மதிவழியே செல்லு, கென விதுரன் கூறி,
வாய்மூடித் தலைகுனிந்தே இருக்கை கொண்டான்;
பதிவுறுவோம் புவியிலெனக் கலிம கிழ்ந்தான்;
பாரதப்போர் வருமென்று தேவர்ஆர்த்தார் (217)

இரண்டையும் ஒப்பு நோக்கி அனுபவிக்கும்போது இரண்டிலும் கருத்துகள் ஒன்று போல் இருப்பதை அறிகின்றோம். பாரதியின் தாக்கம் வாலியாரிடம் அமைந்திருப்பதையும் உணர்கின்றோம்.

20) போர் தொடங்குவதற்கு முன் உதிட்டிரன் பிதாமகனிடம் ஆசிபெறச் சென்ற போது அவன் பேச்சில் வருவது.

வாதி—
விரும்பினால்...

ஒருவன்—
விரலைக்கொண்டே—அவன்
விழியைப் போக்கும்; ஒருவன்—
சொல்லை கொண்டே—
அவன்
பல்லை நொக்கும் (III– பக். 571)

3. நம்பிக்கைகள்

மானிடனாகப் பிறந்து வாழும் காலத்தில் பல்வேறு கருத்துகள்பற்றிய நம்பிக்கைகள் அவன் வாழ்க்கையில் சாயல்களாகப் படிகின்றன. வழிவழியாக வரும் இத்தகைய நம்பிக்கைகள் மனிதப் பண்பாட்டின் ஒரு பகுதியாக அமைந்து விடுகின்றன. இவை காவியங்களிலும் இடம் பெற்றுவிடுகின்றன.

(1) சாபங்கள்:

கடவுளர்கள், முனிவர்கள், தவசிகள்—ஏன்? சாதாரண மக்கள்கூட—தகாத செயல்கள் நடைபெறும்பொழுது அவற்றைப் பொறுக்காமல் செயல்புரிந்தோரைச் சபிப்பதைக் கண்டு அஞ்சும் நம்பிக்கை இருந்து வருவதைக்

காவியங்களில் காணலாம். 'பாண்டவர் பூமியில்' இவை வரும் இடங்களைக் காட்டுவேன். பீஷ்மன்பற்றிய வரலாற்றில் இரண்டு சாபங்கள் குறிப்பிடப் பெறுகின்றன. கங்கையின் வாயில் வைத்துப் பேசப் பெறுகின்றன. ஏழு குழந்தைகளையும் ஆற்றில் வீசி எறிந்து எட்டாம் குழந்தையையும் வீசி எறியும் போது அதனைத் தடுத்த சந்தனுவிற்கு தன் வரலாறு குறித்துப் பேசுகின்றாள்.

(1) நான்முகன் போட்டது: கங்கை வாக்கில் வைத்துப் பேசுகின்றார் வாலி:

ஒருநாள்...
பிரமனை தரிசிக்க—நான்
பரலோகம் சென்றேன்;
உந்திக்கமலம் உதித்தானை—
வந்தித்து நின்றேன்!

புன்கண் போக்கும்—
எண்கண் நோக்க—
என் கண் கசிந்தேன்; வேத
நான்முகன் காட்டும்—
நான்முகம் மலர—
நான் முகம் மலர்ந்தேன்!

அன்று—
அரவிந்தன் அவையில்
அமரர் கூட்டம்—
அரவிந்தம் மொய்க்கும்
அறுகால்களாட்டம்!

அப்போது....
வாயுதேவன்—அந்த
வானவரின்—
சஞ்சலபுத்தியை
சோதிக்க எண்ணினான்;

'சட்'டென்று? ஒரு
சூழ்ச்சியைப் பண்ணினான்!

அவன்—
அனுப்பிய காற்று...
என் இடையைத் தடவி—
இலேசாகக் கொஞ்சம்—
உடையை உரித்தது;
உடையை உரித்ததும்—
உள்ளழகு உடனே—
கடையை விரித்தது!

அச்சமயம்...
அச்சபையோர் நெஞ்சமெல்லாம்—
அச்ச மயம்!
கைகளால் —தம்
கண்களைப் பொத்தினர்; எனைக்
காண்பதும்—பெரும்
குற்றமென ஒத்தினர்!

ஆனால்—
அச்சமே அச்சப்படும்படி...
வருணன் என்னும்—
வானவன் மட்டும்—தன்
விழிகளை விரல்களாக்கி—என்
விலாவை வருடினான்; பிடி
விடாமல் நெருடினான்!

....
வருணனைப் பார்த்து—அந்த
வேளையில்...
நானும் நகைத்தேன்; என்—
நாணத்தைப் பகைத்தேன்!

எங்கள்—
இருவரையும் பார்த்து...

நான்முகனின்–
நான்கு மூக்குகளின்–
நுனிகளிலும்–
நாற்காலி போட்டு–
உட்கார்ந்து கொண்டது
கோபம்; அது–
உடனே இட்டது சாபம்!

'வானம் கெட்டது உங்களால்–
வானத்தின் மானம் கெட்டது! இங்கு-
கண்ணில் பிறந்த காதல் கதைகளை-
மண்ணில் பிறந்து மீண்டும் பேசுக;
பேசிமுடித்துப் பித்தம் தெளிந்து–
பின்னர் இந்த விண்ணில் ஏறுக!'
சபித்துவிட்டுச்
சபையை நீங்கினான்–
சதுர்முகன். (I– பக். 15-16)

(ii) வசிட்டன் போட்டது: கங்கை விதியை நொந்து வானிறந்து வருகையில்....

எதிர்ப்பட்டனர்–
அஷ்டவசுக்கள்–
எனும் தேவகணங்கள்;
வசிட்டமுனிவன்–
இட்ட சாபத்தை
வாங்கிய பாவகணங்கள்!

வனத்தில் ஒருநாள்–
விச்சிராந்தியாய்–
வலம் வந்தது–
வசிட்டமுனிவனின் பசு;
பிடித்தமான பாரியை–
பிடித்த பிடிவாதத்தால்–

பிடித்து வந்தான் அந்த—
பிரபாசன் என்னும் வசு!

இதரவசுக்கள்—
இதுகுறித்து....
முதலில் பதறினர்;
முடிவில் உதவினர்!
திருட்டு நடத்தை—ஞான
திருட்டியால் முனிவன்
கணப்பொழுதில்—
கணித்தான்; உடனே
அஷ்டவசுக்களை
அஷ்டசிசுக்களாய்—
பூமியில் பிறக்கப் பணித்தான்! (I—பக். 16)

(iii) சுக்கிரர் ஏவியது: சுக்கிரன் மகள் தேவயானி; சர்மிஷ்டை அசுரகுலத்து அரசன் விருஷபர்வனின் மகள்; அழகு மிக்கவள். இருவரும் ஆருயிர்த் தோழியர். ஒருசமயம் இருவரும் ஆடைகளை மாற்றிக் கட்டிக்கொள்ள நேர்ந்தது. தேவயானி சர்மிஷ்டையைக் கோபித்தாள்; தேவயானியை ஒரு கிணற்றில் தள்ளிவிட்டாள்.. அம்புலி குலத்து அரசன் யயாதி அவளைக் கிணற்றிலிருந்து மீட்டான். இருவரும் தம்பதிகளாயினர். ஒரு சந்தர்ப்ப காரணத்தால் சர்மிஷ்டை அவர்கட்குத் தாதியானாள். யயாதிக்கு தேவயானி மூலம் இரு குமாரர்கள் பிறந்தனர். நாளடைவில் யயாதி சர்மிஷ்டை சபலத்தில் ஆட்பட்டு காற்றும் அறியாமல் கந்தர்வமணம் புரிந்துகொண்டான். இருவருக்கும் மூன்று பிள்ளைகள் பிறந்தனர். நெடுநாள் மறையாக இருந்த இந்த நிகழ்ச்சி ஒருநாள் அம்பலமானது. தேவயானி இதனைத் தன் தந்தை சுக்கிரரிடம் கூறி விம்மியழுதாள்.

யயாதியின் மேல்
ஏவ—சுக்கிரர்
மனத்துள்—ஒரு
மந்திரத்தைச் செபித்தார்;

'மூடனே!—உடனே
மூப்பில் விழுவாய்; நீ
ஆற்றிய பாவத்திற்கு—
அதுதான் கழுவாய்!' என்று
ஆக்கு ரோசமாய்ச் சபித்தார்!

(iv) துர்வாசர் வீசியது: இவரை வாலியார் 'துர்வாசம் வீசும் துர்வாசர்' என்பார்.

கோபம்—அவர்
குரல்வளையில்—
கபம்போல்—
கட்டியிருக்கும்;
சாபம்—அவர்
செந்நாவில்—
உமிழ்நீர் போல்—
ஒட்டியிருக்கும்!

சூரிய பகவான் வாக்கில் வருவது—அவனை அணையக் குந்தி தடுத்தபோது:

துர்வாசர் யார்?
தொல்புவி—
துதிசெய்யும்—
யதி! இது அந்த
யதி செய்த
விதி!

யதியின் மதியை—
யார் மீறினும்—
அவர் கதி—
அதோ கதி;
இது—
யதி இயற்றிய நியதி! (I– பக். 92)

(v) மானாக வந்த முனிவர் இட்டது: பாண்டு தன் மனைவிமார் இருவரோடும் இமயமலைச் சாரலில் தங்கியிருந்தான் வண்ண மான்களை வேட்டையாட. மனைவிமார் இருவருக்கும் காடு பிடித்திருந்தது. இயற்கைக் காட்சிகளை கண்டு களித்துப் பொழுதுபோக்கினர். ஒருநாள் பாண்டு தனியாகவே வேட்டைக்குப் புறப்பட்டான். அன்று மருந்துக்குக்கூட ஒரு மிருகம் அவன் கண்ணில் படவில்லை. ஒரு நாவல் மரத்தின் நிழலில் அமர்ந்திருந்தபொழுது சற்றுத் தொலைவில் அடர்ந்த செடிகளின் மறைவில் இரு மான்களைக் கண்டான்.

.................அவன்
வலக்கை உடனே—
வாளியைத் தொட்டது!
....

ஒரு
பிணைமானும்—அதன்
இணைமானும்—
புணர்ச்சியில் ஒன்றாய்ப்
பொருந்திக் கிடந்தன;
ஒருமேனி—பால்
வாரியாய்;
மருமேனி—நீள்
மத்தாய்; ஈர்
உயிரை இணைத்து—ஒரு
கயிறாய்த் திரித்து—
காதல் அமுதம்—
கடைந்து எடுத்து—
ஆசை ஆசையாய்—
அருந்திக் கிடந்தன.

முற்றும் கலவி—
முற்றா நிலையில்
சற்றும் எதிர்பாராவண்ணம்...

ஆண்மானின்—
அடிமார்பில்—
பாண்டு ஏவிய—
பாணம் பாய்ந்தது;
மறுகணம்—அந்த
மான்—ஒரு
முனிவனாய் மாறி—
மண்ணில் சாய்ந்தது!

பிணைமானும்—உடனே
பெண்ணுருக் கொண்டது;
பிரமித்துப் போய்—
பித்தேறி நின்றது!

பாண்டு—
பக்கத்தில் வந்தான்;
பயத்தில்—
பானைச் சோறாய் வெந்தான்!

மரணிக்கும் தறுவாயில்—
முனிவன் பேசினான்;
திராவகத்தில்—சொற்களைத்
தோய்த்து வீசினான்!

"ஒரு
கணையைக் கொண்டு—
இணையைப் பிரித்தவனே!

வெண்—
கதிர்குலத்துப் புகழை—
கறையானாய் அரித்தவனே!
நானொரு முனிவன்
என்பேர் 'கிந்தமன்!'—பொய்
மானிடம் வெறுத்து—இந்தக்
கானிடம் வந்தவன்!

நான்மறை—
ஓதி ஓதி—
நாக்குச் சிவந்தவன்; நாளும்
ஓமத்தை வளர்த்து—அதன்
தூமத்தை உட்கொண்டு—
மூக்குச் சிவந்தவன்!

என்
மனையாளும் நானும்
மனத்தில் காமம்—
மலர்ந்ததை உணர்ந்தோம்!

என்னை—
சாபத்தால் அடித்தவனே!
உன்னையும்—
சாபத்தால் அடிக்கிறேன்!
எக்கணம்—உன்
இல்லாளைப் புணர்வாயோ
அக்கணம்—உன்
ஆவிநீங்க விதிக்கிறேன்!" (I– பக். 106-07)

(vi) *ஊர்வசி சாபம் போட்டது:* வனவாசத்தின் போது அர்ச்சுனன் பசுபதியிடம் பாசுபதம் பெற்றதும் இந்திரலோகம் செல்ல நேர்ந்தது. அங்கு

ஊர்வசி உறக்கம்—
விஜயனால் கெட்டது;
ஆணுக்குஆணே—
ஆசைப்படும்—அந்த
அர்ச்சுனன் அழகு—
அவளைச் சுட்டது! (II– பக். 180)

................................தன்
விரகம் எனும் தமுக்கை—அவள்
விஜயன்முன் கொட்டினாள்!
.... (II– பக். 185)

இப்போது—
என்சிந்தை....

விஜயனே!
உன்னைச் சீந்துகிறது; உடற்—
பசிக்கு உணவு வேண்டி—
பிச்சைப்
பாத்திரம் ஏந்துகிறது!

உதவுக! என் பசியை—
உணருக!
புருஷ ரத்தினமே!
புணருக!

....
உணர்வு பொங்க—
ஊர்வசி...

தனஞ்செயனைத்
தழுவலானாள்; அவன்—
நெஞ்சு துணுக்குற்று—
நழுவலானான்!

....
விடவில்லை அவள்; சம்மதப்
படவில்லை அவன்; கைகூப்பிப்
போற்றினான் அவளை; பாவம்!
பாம்பின் வாய்த் தவளை! (II– பக். 187)

....
“மாத்திரிபோல என்—
மாதா குந்தி போல்;
அயிராணிபோல்—எனக்கோர்
அன்னை நீ!

சொல்லலாமா என்னிடம்—நீ
சரச வார்த்தைகளை? செவியில்—

விருச்சிகம் கொட்டினாற்போல்—
விரச வார்த்தைகளை?

....

எனவே,
என்தாயே! இருசெவியில்—
என் சொல் வாங்குக; பிழை—
ஏது மிருப்பின் தாங்குக!"

....

ஊர்வசி—
உக்கிரமானாள்;
உக்கிரத்தில்—புத்தி
வக்கிரமானாள்!

'.......................................

உன்னைக் கண்டு—
உன்மத்தம் கொண்டு—உனக்கு
என்னைக் கொடுக்க—இங்கு
எழுந்தருளினேனே....

எனக்கா—
இப்பரிசு? இழைத்த—
அவமானத்தை சகிப்பளோ—ஓர்
அப்சரசு?
ஊர்வசியாரென—உனக்கு
உந்தை சொல்வான் விரிவாய்;
பிடி என் சாபம்!
பின்னாளில்—நீ
பெண்டிர் நடுவே—ஒரு
பேடியெனத் திரிவாய்!'

விழியில் ஊர்வசி—
வெறியேறினாள்; சாபம்—
வழங்கிவிட்டு—
விறுவிறுவென்று—

விரியன் போல
வெளியேறினாள்! (II– பக். 188-89)

தேவலோகத்தில் தாசிகளுக்கும் சபிக்கும் ஆற்றல் உண்டுபோலும்! புராணங்களைப் படிப்பதற்கே மனம் கூசுகின்றது. இத்துடன் சாபங்கள் பற்றிய செய்தி நிறைவு பெறுகின்றது.

(2) சபதங்கள்:

ஒரு செயலை நிறைவேற்றுவதற்காக ஒருவர் செய்யும் சூள் 'சபதம்' எனப்படும். 'பாண்டவர் பூமியில்' வாலியார் மூன்று சபதங்களை மட்டிலும் தெரிவிக் கின்றார். இவை மூன்றும் உலகம் கேட்டிராத முறையில் கௌரவர்கள் செய்த அடாத செயல்களால் எழுந்தவை. அவையில் ஒரு பெண்ணின் ஆடையை உரியும் இழிசெயல் உலக இலக்கியங்களில் காணப்பெறாத அநாகரிகமானது.

(1) பீமன்: இச்செயலைக் கண்ட வீமன் செய்த சபதம். பத்தினி தெய்வம் துகிலுரிதலை நேரில் கண்ட வீமனது

பொத்தி வைத்த சினம்
பொத்துக்கொண்டு வர....

வீமன் நுதலில்
விழி படைத்த—
வாமன்போ லானான்; உள்—
வேக்காடு தாங்காமல்—
உணர்வுகள் வெந்து—
விபூதியாகிப் போனான்!

வாளுடைத்த மன்னர்—
வீற்றிருந்த சபையில்—ஒரு
சூளுரைத்தான்; சூளில்
சொற்களை—சூளைக்

கற்களாய்ச்—சுள்ளென்று—
சுடச்சுட இறைத்தான்!

'வேந்தர்களே! நீங்கள்
வாய்மைக்குக் கேளிர்—எனில்
வீமன் உரைக்கின்றேன்—என்
ஒருசொல் கேளிர்!

நடையில் நளாயினியின் —
நகலை; நள்ளிரவின்—
இடையில் எமக்குற்ற—
இனிய பகலை; உயிர்த்து—
உடையில் உலவுகின்ற—
உன்னதங்களின் புகலை;
புடையில் புயல்வரினும்—தன்
பொலிவழியா அகலை;

தருமத்தின்—
தோள்தழுவிய—
தொடையலை; தெய்வப்
படையலை; தனது
தொடையிலே வந்தமரத்—
தூண்டிய தூர்த்தனை...

கண்ணிலான் பெற்ற—
கண்ணிலானை; 'ஒரு
கருத்தன் இருக்கிறான்!' எனும்
கருத்திலானை....

துரியோதனன் என்னும்—இந்த
துஷ்ட ஜந்துவை—
படையை நடத்தி—நான்
பொருதும் நாளில்—
தொடையைப் பிளந்து—கொலைத்
தொழிலை முடிப்பேன்;
அஃதேபோல்—

துச்சாதனனின்—
தோள்களைப் பிய்த்து—அவன்
பச்சை ரத்தத்தைப்—
பாலெனக் குடிப்பேன்!

இது—
எம்பிரான்...

கண்ணன் திருவடிக்
கமலம் மேல்—ஆணை; எங்கள்
கண்மணி திரௌபதி—
கற்பின் மேல் ஆணை!

வெய்ய நாகம்போல் சீறி—
வீமன் அடங்கினான்; (II– பக். 155-56)

(ii) **விஜயன்**

வீமன் அடங்கியதும்
விஜயன் தொடங்கினான்!

'களத்தில்—இந்தக்
கர்ணனை—இரத்தக்
குளத்தில் கிடத்துவேன்; இவன்—
மெய்வில்லை ஒடித்து—உயிர்
மூச்சதனை—எனது
கைவில்லால் கடத்துவேன்!

இது—
எங்கள் முதல்வன்...
தேவகிநந்தனன்—செய்ய
திருவடிமேல் ஆணை! என்தோள்
தாங்கும் காண்டீப மெனும்—
தனுவின் மேல்ஆணை!

(iii) **பாஞ்சாலி**

பார்த்தனைத் தொடர்ந்து
பாஞ்சாலி மொழிந்தாள்;

பார்ப்போர் கண்களில்
பராசக்தியாய் வழிந்தாள்!

'மானம் காத்த–
மாதவன் மேல் ஆணை; குல
மாதரார் கற்பின்–
மாண்பின்மேல் ஆணை!

பொய்தடவி வாழும்–இந்தப்
புல்லர் துரியன்; துச்சன்–
மெய்தடவி வாழும்–உயிர்
மூச்சினை என் மன்னர்–தம்
கைதடவி வாழும்–கணையால்
கொய்வர்; கொட்டும் குருதியாம்–
நெய்தடவி நான் முடிப்பேன்; அந்
நாள்வரை நீள்குழல் முடியேன்!' (II– பக். 156)

போரில் இந்தச் சபதங்கள் நிறைவேறுகின்றன.

பாரதி 'பாஞ்சாலி சபதம்' என்ற துணுக்குக் காவியத்தை ஐந்து இயலில் நிறைவு செய்கின்றார். அற்புதமான படைப்பு இது. இங்குப் பாரதியார் காவியத்தில் வீமன், விசயன், பாஞ்சாலி என்ற முறையில் தான் சபதங்கள் அமைகின்றன. அங்குச் அச்சபதங்கள் ஆறு மரபுக் கவிதைகளில் [7] அமைகின்றன. ஆறும் உணர்ச்சிப் பிரளயங்கள். கவிஞர் வாலியும் இச்சபதங் களைச் சிறிதும் உணர்ச்சி குன்றாமல்—பாரதியின் படைப்புகட்கு நிகராக—தமது புதுக் கவிதையில் படைத்துள்ளார். இருவர் தம் படைப்பு களையும் படித்து ஒப்புநோக்கினால் இந்த உண்மை தட்டுப்படும்.

(iv) கிருட்டிணன் சபதம்: மேற்கூறிய மூன்று சபதங்களைத் தவிர கிருட்டிணன் சபதம் (பிரதிக்ஞை) என ஒன்று உண்டு. சகாதேவனுடன் தனியாகப் பேசிய

---

7 பாஞ்சாலி சபதம் - 303,304,305,306,307,308

கண்ணன் திரும்பி வரும்போது பாஞ்சாலி நேரில் நின்றாள்—இரு நீலோற்பங்கள் நீர்தாங்க. சினம் பொங்கி வழியும் நிலையில் பேசுகின்றாள். இதனைக் கேட்ட நெஞ்சு இளகிய துவரைநாதன் சமாதானம் கூறும் நிலையில் பேசுவது:

பாண்டவர் வாழ்வே!
பாஞ்சால வனப் பூவே!
....
நிறைவேறும்–
நீ உரைத்த சூள்;
நீசர் வாழ்வு–
நிச்சயம் தூள்;
அண்மையில் உளது–
அஃது ஆகும்நாள்;
அற்பரை நசுக்கும்
அறத்தின் நாள்!

எனவே–
எங்கையே! சினம்விடு;
எரியாது
எனக்கு செவிகொடு!

நான்–அத்தின
நகருக்கு....
தூது போவது–ஒரு
துளியும் பயன்படாது;
ஆர் சொல்லியும்–
அவரவர் பாவம் விடாது!
....
பாஞ்சாலியே! கேள்
பிரபஞ்ச நியதி என்று–
இம்மியும் மாறாமல்–
இன்றளவும் உளது ஒன்று!

சரீர
சம்பந்தம் உடைய எவனும்....

ஆற்றலாம்—இவை
ஆயிரம் தர்மவினை;
ஆயினும் விடாது—அன்று
ஆற்றிய கர்மவினை!

இது விதி; விலக்கல்ல—
இதற்கு கவுரவர் அதிபதி!

உந்து சக்தியாய்—
ஊழ் உளதால்—

துரியனுக்கு என்றுமே
தூயோர் உணர்த்துவர்; நல்லதை
விதைத்தாலும் விளையாத—
அவன்
உள்ளம் ஓர் உவர்!

வரும் யுத்தம்;
வடியும் ரத்தம்; என்—
குழல் பிடிக்கும் கையே—உன்
குழல் முடிக்கும்!' (II– பக்.336-37)

என்று பாஞ்சாலியிடம் பிரதிக்ஞை (சபதம்) செய்துவிட்டுப் புறப்பட்டான் கண்ணன்.

இதுவும் நிறைவேறுகிறது—கதையில்.

4. நிமித்தங்கள்

எல்லாக் காலத்திலும் நிமித்தங்கள், சகுனங்கள், கனவுகள் போன்றவை பலன் கொடுக்கும் என்ற நம்பிக்கை இருந்து வருவதைக் காவியங்கள் உணர்த்துகின்றன. பாண்டவர் பூமியில் இவை வரும் இடங்களைக் காண்போம்.

(1) உதிட்டிரன்: யுகம் கடந்தும் புகழ்முகம் காட்டும் உதிட்டிரன் பிறந்தபோது,

நாட்டில்—
நன்னிமித்தங்கள்—
நேர்ந்தன; நலம்பயக்கும்—
நாளும் கோளும்—
தோளொடு தோள்—
சேர்ந்தன! (I– பக். 118)

(2) துரியோதனன்: கௌரவர்களில் மூத்தவன். இவன் பிறந்தபோது,

தேசமெங்கும் தோன்றின—
துர்நிமித்தங்கள்;
ஆங்காங்கு நேர்ந்தன—
அநேக அனர்த்தங்கள்!
திக்கு திக்காக—
திடீர் திடீரன்று—
தீப்பிடித்தது; ஒரு—
பூகம்பம் இன்றியே—
பாளம் பாளமாக—
பூமி வெடித்தது.

ஊழிக்காற்று போல—
பூழிக் காற்று—
ஊரெங்கும்—
வீசியது; அது—
வீசும்பளந்த—
விருட்சங்களை—
வேரோடு கல்லி—
வீசியது!

நாய்களும்—
நரிகளும்—
வாய்விட்டு

அழுதன;
பீதியும்—
பீடையும்—
ஊரையே—
உழுதன!

ஆகமொத்தம்—எங்கும்
அமங்கல சப்தம்! (I– பக். 116)

(3) பீமன்: குந்தியிடம் இவன் காற்று நட்ட நாற்று.

மாதாவின்—
மடியிலிருந்து—
மாருதத்தின் மைந்தன்—
மண்ணில் விழுந்ததும்....

பூமி அதிர்ந்தது;
ஆலயந் தோறும்—
அமர்ந்திருக்கும்—
சாமி அதிர்ந்தது;
சாமியின்
வலக்கரம்—
வாங்கி நிற்கும்
நேமி அதிர்ந்தது. (I– பக். 124)

(4) அர்ச்சுனன்: ஆயிரம் கண்ணன் அருளிய பிள்ளை இவன்.

ஆயிரம் கண்ணன்—
அருளிய பிள்ளை—
கோமளம் சொன்னால்—
கொள்ளையோ கொள்ளை!
'வாழிய' என்று—
வானுலகு—
வாழ்த்தை வழங்கியது;

தேவகணம்
துந்துபி முழங்கியது!
ககனத்திலிருந்து—
கொட்டியது பூமாரி; அதில்
குளித்தது குந்தியின்—
குடல் சுரந்த தேன்வாரி!

வாசவன் வழங்கிய
வாரிசின் வனப்பு—
மீசுரம் என்றொரு
பாசுரம் படித்து....
அதன்
முளரிப்பூங் கன்னத்தில்—
முத்தம் வைத்தது—
மந்த மாருதம்; வெற்பின்—
முகடு நீங்கி—பிள்ளை
முகம் பார்க்க வேண்டி—
வந்த மாருதம்!

சதசிருங்க மலைவாழும்—
சகல ரிஷிகளும் வந்து—
அர்ச்சுனனைப் பார்த்தனர்;
ஆசீர் வாதங்களை வார்த்தனர்! (I– பக். 128)

(5) கண்ணன்: சினம் தெறிக்கப் பேசிய பாஞ்சாலிக்குச் சமாதானம் கூறும் முறையில் கண்ணன் கழறியது,

சமீப காலமாக—
சாலைகளில்....

நேர்வரும்—சில
நிமித்தங்களைப் பார்த்தால்—
போர் வரும்—என்றே
புலப்படுகின்றது; வானில்—

தூமகேது ஒன்று—
தோற்றுவதைக் காணில்—
அந்த சந்தேகம்—
அதிகம் பலப்படுகிறது! (II– பக். 337)

காவியத்தில் கண்ணன்கூட நிமித்தங்களில் நம்பிக்கை வைத்திருப்பது நமக்கு வியப்பைத் தருகின்றது. இதனை எழுதியவன் கண்ணனின் வாக்கில் வருவனவாக அமைந்தவை; அதுமட்டுமா? சிறு தெய்வ வழிபாடும் அவன் நாடியில் ஓடுகின்றது. காண்டீபனிடம் கண்ணன் சொல்லுகின்றான்,

'துர்க்கையைத்—
துதி!' என்று;
துதித்தான் தனஞ்செயன்—
தேர்விட்டு இறங்கி நின்று!

'ஆளிமேல் எழுந்தருளும்—
அம்மா! காளியே! என்—
துயரமெலாம் உன்திருவிழி
பட்டால்—
தூளியே! நீ—
வாழ்த்தினாலன்றோ
வெல்லுமென்—வாளியே!
இல்லையேல்—என்வாளி
வாளியல்ல; முனைமழுங்கிய
மூளியே!

மாயே!
மகாமாயே! நின்முன்—
தண்டனிட்டேன்;
தயை செய் தாயே!' (II– பக். 381)

இங்ஙனம் துர்க்கையைச் சேவித்துத் தேர் ஏறுகின்றான் தேவேந்திரன் சேய். எல்லாவற்றிற்கும் மூலமாயிருக்கும் ஆதிமூலமே சிறு தெய்வ வழிபாட்டுக்கு வழியமைக்கின்றது. இராமகாதையில் இராமன் சேதுகட்டுவதற்கு முன்

வருணனை வழிபடுகின்றான். இருவரும் மானிட சட்டையில் வந்தவர்கள்தாமே!

5. சூதால் விளையும் கேடுகள்

சூது மிகக் கொடியது; வாழ்வையே உலுக்கும் தன்மையது. நளனது வாழ்வும் உதிட்டிரனது வாழ்வும் இதனை விளக்கும் சான்றுகள். "வேண்டற்க வென்றிடினும் சூதினை" (குறள்—931) என்று வள்ளுவன் பேசுவான். ஓர் அதிகாரமே சூது பற்றி குறளில் இடம் பெற்றுள்ளது.

(1) ஒரு மண்டபம் எழுப்பி அதற்கு ஒரு விழா எடுத்து, அதற்குப் பாண்டவர்களை வருவித்து, சூது விளை யாட்டுக்கு ஏற்பாடு செய்து அதில் தருமனின் சொத்துக்கள் அனைத்தையும் கவர வேண்டும் என்று தந்தையிடம் குறிப்பிடுகின்றான் துரியன். அதனைக் கேட்ட அந்தக அப்பன் சினந்து அவனைக் கடிகின்றான். அப்போது அவன் பேசியது:

அடேய்! நீ—
ஆண்பாடுமிக்க—
நன்மகனா? அல்லது
நபும்சகனா?

போனதோ
புலிச்செயல்? வழிமறை—
ஆனதோ—
அலிச் செயல்?

களத்தில்—தாயக்
கட்டையில் வெற்றியை
ஈட்டும்...
கரத்தைக்கொண்டு—பிறரது
காசைப் பிடுங்குவோன்—ஆண்

பாரத்தை; குல கவுரவத்தில்
சிரத்தையில்லாச் சிறியன்; தானே—
சேதித்துக் கொள்ளலாம்—தனது
சிரத்தை!

அப்படியும் வாழ்பவன்—
அற்பத்திலும் அற்பம்;
அவமானப்படும்—
அவனைச் சுமந்த கற்பம்!

என்
சேய்புத்தி ஏனடா—
சீரழிந்து இப்படி—
நாய்புத்தி ஆனது?
நரகல் தின்னப் போனது?

தாயத்தார் வாழ்வை—
தாயத்தால் வவ்வினால்—
தேயத்தார் தூற்றுவர்;
தெருத் தெருவாய்ச் சாற்றுவர்!

ஆளாக்கினேனே உன்னை—
ஆசை ஆசையா! நீ—
அம்புலிக் குலத்தில்வந்த—
அமாவாசையா?

வேண்டாமடா—இந்த
விபரீதமான சூது; இது—
தீதுக்கும் தீதுக்கும்—
தீதான தீது! (II– பக். 124)

முதலில் உண்மையாகவே கடிகின்றான்—சூது கூடாதென்று. பிள்ளைப் பாசமும் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகக் கூறி அச்சுறுத்தலும் அவனது திட்டத்தை ஒப்புக்கொள்ளச் செய்துவிடுகின்றன.

(2) புதிய மண்டபம் புகுமனை விழாவுக்குப் பாண்டவர்களை அழைக்க வருகின்றான் விதுரன். செய்தி கட்கிடையே "கட்டிய மண்டபத்தில் கவறாட்டமும் உண்டு" என்பதையும் குறிப்பிடுகின்றான். இதனைக் கேட்ட தருமன் விதிர் விதிர்த்து தன் வியப்பையும் அச்சத்தையும் உதிர்த்துப் பேசுகின்றான்; சூதின் தீமைகளை விரிக்கின்றான்:

நம்புவதற்கில்லை—அவன்
நடத்தை; விருந்தோடு—
வைக்க நினைக்கிறான்—
சூதெனும் விடத்தை!

பாய்ச்சிகை உருட்டிப்
பந்தயம் வைப்பின்—அவலம்
ஆய்ச்சிகை மத்தாய்—
அகத்தைக் கடையும்;
அட்டையாய் ஒட்டிய—
அன்பு மனமெலாம்—தாயக்
கட்டையால் ஒருநூறு—
கூறுகளாய் உடையும்!

நற்—
குலத்தில் பிறந்தோர்—
குடியில்...

ஏசல்;
பூசல்;
உரசல்;
விரிசல்;
எனப்படும்—
ஏதோ ஒருசில...

கோது வந்தால்—குடி
கால்வாசி கெடும்; வேறு

யாதுவரினும்—அது
அரைவாசிதான் கெடும்; விலை
மாதுவந்தால்—அது
முக்கால்வாசி கெடும்;
பொல்லாச்—சூது வந்தால்—குடி
சுத்தமாய்க் கெடும்! (II– பக். 127-28)

சூது மிக மிகக் கேடானது என்பதை தருமன் பேச்சால் அறிய முடிகின்றது.

(3) நளன் பற்றிய காவியத்திலும் கவறாடல் நுழைக்கப் பெற்று அதன் கொடுமை விளக்கப் பெறுகின்றது.

6. சாதிக்கொடுமை

இதனைச் சாடுவதற்கும் இடம் அளிக்கின்றார் கவிஞர் வாலி தன் பாண்டவர் பூமியில். இது கண்ணிலான் மைந்தன் துரியன் வாயில் வைத்துப் பேசப்பெறுகின்றது. ஒருசமயம் துரோணர் குருகுலத்தில் கல்வி பயின்ற அனைவர்க்கும் தேர்வும் போட்டியும் வைக்கின்றார். ஊர் மக்கள் திரண்டிருக்க அரச குடும்பமே பார்வையாளர் நடுவில் ஆக்கிரமித்திருந்தது.

(1) பாண்டவரும் கவுரவரும் தாம் கற்ற ஆயுதப் பயிற்சியை அரங்கேற்றினர். இறுதியில் பார்த்தன் ஆற்றிய அம்பு வித்தைகள் அனைவரையும் அதிசயிக்க வைத்தன. துரோணரின் மாணாக்கரில் ஒருவனான கர்ணன்,

முண்டா தட்டினான்
முண்டாவில்—
முன்கை மணிக்கட்டால்—
முரசு கொட்டினான்

துவந்த யுத்தம் தொடங்கும் முன்பதாகவே கிருபர் தடுத்தார். போட்டியிட புய வலிமை மட்டிலும் போதாது;

அவரவர் குலம் கோத்திரம் முதலியவற்றை முன் வைத்து கர்ணன் பிறந்த குலத்தை கேள்விக்குறியாக்கினார் கிருபையே இல்லாத கிருபர். கர்ணன் கூனிக் குறுகிக் கூசிப்போனான்.

துடித்தெழுகின்றான் துரியோதனன். தந்தை பெரியார் போல பேசுகிறான்; சீர்திருத்தக் கருத்துகளைச் சிந்துகிறான்; சாதிக் கொடுமைகளைச் சாடுகின்றான்:

'குருவே!—தங்கள்
கூற்று நீதியல்ல; ஒருவனின்—
கல்வியை வீரத்தை—
கணிப்பது சாதியல்ல!

சாதிக்கும் ஆற்றல்—எந்த
சாதிக்கும் உண்டு; ஒருசில—
சாதிக்கே அது சாத்தியமென்று—
சாதிப்பதா நன்று?

வேதம்—
பயின்றிட ஒருசாதி; வாணிகம்—
புரிந்திட ஒருசாதி;
வாள்கொண்டு—
போரிட ஒருசாதி; உழைத்துச்
சோறிட ஒரு சாதி—
என வகுத்தால்—
எங்ஙனம் நாம் உய்வம்?
நாலில் எக்குலம் என்று—
நானிலத்தார் ஒவ்வொருவரின்—
தோலில் எழுதி யிருக்கிறதா—
தோற்றுவித்த தெய்வம்?

எவ்வுயிர்க்கும்—
இவ்வுலகு இட்டபெயர்...

பிறப்பில் சிசு;
இறப்பில் சவம்;
இடைப்பட்ட பெயரெலாம்—
கடைப்பட்ட அவம்!
எவர் எங்கே—
எவ்வகையில்—
எய்தினாலென்ன தோற்றம்?
ஆற்றும் பணியினாலன்றோ—
அமைகின்றது—
அவரவர்தம் ஏற்றம்!

முன்னம்...
மூங்கிலில் தோன்றினான்—
முக்கண்ணன்; தூணைப்
பிளந்து தோன்றினான்—காயாம்
பூ வண்ணன்;
அகத்தியரும்
ஆசாரியர் துரோணரும்
குழந்தையாய் விளைந்தது—
குடத்தில்;
தாங்களும்—
தேவசேனாபதி முருகனும்—
நயனங்கள் மலர்ந்தது—
நாணலில்!

பிறப்புக்கும்—
பெறும் பெரும்—
சிறப்புக்கும்...
உறவோ ஒட்டுதலோ—
ஒருதுளியும் இல்லை; பின்பு—
எதற்காகக் கர்ணன்—தான்
இன்னான் எனச் சொல்லி—
ஏந்த வேண்டும் வில்லை?

இன்னான்தான்—
இன்னது செய்யலாமென—
எவன்
சொன்னான்?
சொன்னால்—
சூதுமதி படைத்தவன் ஆவான்-
அன்னான்!

வனம் பார்த்தா மேய்கிறது—
வளி?
இனம் பார்த்தா காய்கிறது—
ஒளி?
நிலம் பார்த்தா பாய்கிறது—
நீர்?
குலம் பார்த்தா பெய்கிறது—
கார்?

குருவே!
கற்பிப்பவனுக்கு—
கூடாது பாரபட்சம்;
பாரபட்சம்தான்—
பாவங்களின் உச்சம்! (I—பக். 227-28)

துர்யோதனன் வெறும் அயோக்கியனாகப் படைக்கப் பெறவில்லை காவியங்களில். சிலசமயம் மின்வெட்டு போல நல்ல பண்புகளும் அவனிடம் தலைக் காட்டுகின்றன.

(2) கண்ணன் பேச்சிலும் வருணங்கள் நான்கு பிறப்பினால் வருவதன்று என்பது தெரிகின்றது.

என்னால்தான்—
வகுக்கப்பெற்றன—
வருணங்கள் நான்கு; அவை—
செயல்களை குணங்களைச்—
சார்ந்தவையாதலால்...

மண்மிசை—ஒரு
பெண்மிசை—
சனித்தலால் அல்ல என்பதைச்
செவிகளில் வாங்கு! (III– பக். 447)

என்பது காண்க. இது வள்ளுவர் பெருமானின்,

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான் (குறள்—972)

என்ற வாக்கை அடிப்படையாகக் கொண்டுள்ளதைப் போல் காணப்படுகின்றது.

இவண் கூறியவை யாவும் 'பாண்டவர் பூமியைப்' படிப்பதால் நம்மால் அறியப் பெறும் பயன்களாகும்.

கீதையின் சாரத்தின் சாரம்

"உபநிஷதங்கள் யாவும் பசுக்கள்; கிருட்டிணன் பால் கறப்பவன்; பார்த்தன் கன்று; அருந்துபவர் பேறறிஞர்; கீதை என்னும் அமிழ்தம் ஒப்பற்ற பால் ஆகிறது" (கீதை—தியான சுலோகம்—4)

குருட்சேத்திரப் போர்க்களத்தில் தேர்த்தட்டிலிருந்த வண்ணம் பார்த்தனுக்கு உபதேசிக்கப்பெற்றது கீதை. போர் தொடங்குவதற்கு முன் பத்து அல்லது பதினைந்து மணித் துளிகள் இந்த உபதேசம் நடைபெற்றிருக்கலாம்.[1] ஆசிரியர்க் குரிய இலக்கணம் எல்லாம் அமையப்பெற்றவன் கண்ணன்; காண்டீபனும் சீடர்கட்குரிய (மாணவர்கட் குரிய) இலக்கணங்கள் யாவும் அமையப்பெற்றவன். இதனை சொன்னால் நம் போலியருக்கும் பொது மக்களுக்குப் புரியாதென்று கருதியே வியாசர் பதினெட்டு இயல்களில் ஏழுநூறு சுலோகங்களில் விளக்கியுள்ளார். இந்தக் கீதை பல மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன. பல அறிஞர்கள் விளக்கமும் எழுதியுள்ளனர். வேதாந்த தேசிகரின் கீதார்த்த சங்கிரகம் (சங்கிரகம்—சுருக்கம்) மிகு புகழ் வாய்ந்தது. [2] இவையெல்லாம் பால் போன்றது.

---

1 பத்ரிகாசிரமத்தில் இவர்களே நாராயணனாகவும் நரனாகவும் தோன்றி நரனுக்கு நாராயணன் உபதேசித்தக் கருத்தும் இதுவே

2 தேசிகப் பிரபந்தம்-326-346=21 சுலோகங்கள். வங்கிபுரம் நவநீதம் சீராம தேசிகாசாரியர் விளக்கவுரையுடன் படித்துப் பயன்பெறக் கூடியது.

கவிஞர் வாலி தம் பாண்டவர் பூமியில் தரும் இதன் சாரம் அமுல்—பால் போன்றது. பாமரர்உள்ளத்தையும் கவரவல்லது. அந்த சாரத்தையும் சிறிது வடிகட்டி மிகச் சுருக்கமாக ஈண்டு தர முயல்கிறேன். முன்னுரையாக சில கருத்துகளை முன்னர்த் தருவேன்.

உயர்ந்த தத்துவங்களைப் புகட்டுவது உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத் கீதை. இவை உயர்ந்த வேதாந்த உண்மைகளைப் புகட்டுபவை. வேதாந்த ஆராய்ச்சி மன அமைதியைத் தருவதாகும். ஆரண்யங்களில் அமைதியாக இருந்துகொண்டு இத்தகைய பர தத்துவங்களை ஆராய்ந் தனர் ஆன்றோர். உபநிடதங்கள் யாவும் தபோ வனங்களி லிருந்து தோன்றியவை. பகவத்கீதையோ அல்லல் நிறைந்த அமர்க்களத்தில் உபதேசிக்கப்பெற்றது. வேதாந்தத்திற்கு 'சாந்தி பாடம்' என்ற ஒரு பெயர் உள்ளது. சாந்தியை மக்கள் நடமாட்டமற்ற ஏகாந்தமான இடத்திலும் பெறலாம்; பயங்கரமான போர்க்களத்திலும் அதனைப் பெறலாம். உலகவாழ்க்கை ஒரு முடிவில்லாத போராட்டம். எதைப் பெற விரும்பினாலும் உயிர்கள் அதன்பொருட்டுப் போராடியாக வேண்டும். எத்துறையிலாயினும் மனிதன் சிறிது முன்னேற்றம் அடைந்திருக்கிறான் என்றால், அவன் வெற்றிகரமாகப் போராடியுள்ளான் என்னும் பொருள் அடங்கியுள்ளது. அதில், சண்டைகள் பலவற்றைக் கண்ணன் தானே திறம்படச் செய்து முடித்துள்ளான். அவனுடைய வாழ்க்கையே போராட்டத்திற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது. போர் மயமான வாழ்க்கையில் மனிதன் எத்தகைய பாங்குடன் பிரவேசிக்க வேண்டும் என்பதைக் கீதை புகட்டுகின்றது. வாழ்வு என்னும் போராட்டத்திற்கு மனிதன் தகுதியுடையவனாக வேண்டும்.

கீதை பொருகுலம்ஆன குருகுலக் கதையில் அடங்கியது. போர் நடந்தது குருட்சேத்திரம்[3] என்னும் இடத்தில். போர்க்களமே ஒரு பள்ளியாக—பார்த்தன் பள்ளி[4] அமைந்தது. இதனைப்பற்றி வாலியார் கூறுவது:

குருகுலம் ஆனவனுக்கு—
குருகுலம் ஆனது—அந்த
குருநிலம் என்ற நிலம்;
கண்ணன்—
குருவாகி நின்ற நிலம்!

வெஞ்சமர்க்களம்—
வித்தியாலயம்;

வண்ணத்தேர்—
வகுப்பறை;

வாசுதேவன்—
உபாத்தியாயன்;

விஜயன்—
வித்தியார்த்தி!

திருக்கையில் கசை கடிவாளம் இவை இடக்கரத்தில் பிடித்தவண்ணம் அறிவு கொளுத்தும் அருளுரையைத் தொடங்கினான் அசோதை வளர்த்த பிள்ளை. இலேசாக ஓர் இளநகை செய்து அந்தகாரத்தில் அகப்பட்ட அர்ச்சுனன்மீது,

அருள் கூர்ந்து....

வைகறையில்—
வையமெங்கும் வழியும்—

3 குருட்சேத்திரம்-குருநிலம் (வாலியாரின் தமிழாக்கம்). இது அரியானா மாநிலத்தில் உள்ளது. கண்ணுக்கெட்டிய துரம் மைதானம். பல்லாயிரக் கணக்கான ஏக்கர் அளவு கொண்டது. தில்லியிலிருந்து பானிபட் வழியாகச் செல்ல வேண்டும்.

4 பார்த்தன் பள்ளி: 108 திவ்விய தேசங்களில் ஒன்று; சோழ நாட்டுத் திருத்தலங்களில் ஒன்று.

வானவெளிச்சம் போல—ஒரு
ஞானவெளிச்சம் பெய்தான்!

தொனித்தது—
தெய்வத்தின் குரல்; குரல்வழி—
தெறித்தது—
தத்துவப் பரல்! (III—பக். 403)

கண்ணன் தொடங்கிய பாடசாலையைப் பார்த்தவர்களும் கேட்டவைகளையும் பற்றிக் கூறுவார் வாலியார்,

பஞ்ச பூதங்களும்—
பார்த்தன வியந்து—
பகவான் தொடங்கிய—
பாடசாலையை!

பொற்றேரில்—
பூட்டியிருந்த புரவிகள்...

'போக்கலாமே—
பொல்லாப் பிறப்பென்னும்
வாதையை!'
என—
எழுதிய சித்திரமாய்—
இங்கங்காடாது—
இருசெவி நிறுத்தி...

கேட்களாயின—
கேசவன் வாய்மலரும் கீதையை! (III-402)

வாலியாரே சாரமாக்கியுள்ளார் கேசவன் கொட்டியுள்ள அருளுரையை. அதனை மேலும் சுருக்கி சாரத்தின் சாரமாக ஈண்டுத் தருகின்றேன். ஆனால் வாசகர்கள் வாலியாரின் வாக்கிலேயே படித்து அநுபவிக்க வேண்டும் என்பது என் பரிந்துரை. இதோ என் சாரத்தின் சாரம்.

1. ஆன்ம தத்துவம்: கண்ணன் உரையில் முதலில் வருவது இது. வாலியாரின் வாக்கிலேயே தருகின்றேன்.

படைப்பின்—
பாஷையில்—
உயிர் மெய்யாகும்;
மெய் பொய்யாகும்!

உயிர்; மெய்—
ஒன்றோடொன்றிருக்கும்;
ஆனால்—
உயிர் நீங்கி—
மெய் நிற்காது;
மெய் நீங்கி—
உயிர் நின்றிருக்கும்!

ஆன்மாவைப் பற்றி—
அது...

கொல்வது என்றும்;
கொல்லப்படுவது என்றும்
சொல்வது எல்லாம்—
சுத்த அறியாமை;

அநாதியான—
ஆன்மாவின்—
அருமை பெருமையே—
அதன் அழியாமை!

....
விழித்தல்;
தூங்கல்;
வடிதல்;
வீங்கல்;

ஆகிய அவத்தைகள்—
ஆன்மாவிற்குக் கிடையாது
....
ஆன்மாவை....

கொடுவாள்
கூறாக்காது;

நெருப்பு
நீறாக்காது;

நனைக்காது—
நீர்;

உலர்த்தாது
வளி!

பிளக்கவோ—
பொசுக்கவோ—
நனைக்கவோ
உலர்த்தவோ—

அரியதான—
ஆன்மா....

அன்றும் உளது;
இன்றும் உளது;
என்றும் உளது;
எங்கும் உளது!

உறுதி—
உற்றது;
அசைவு—
அற்றது!

புலன்களுக்குப்—
பலப்படாதது;
சிந்தனைக்குள்
சிறைப்படாதது;

மாறுதல்—
மேவாதது;
சாசுவதமானது;
சாவாதது! (III– பக். 408-11)

(2) யோக நெறி:

யோகம் என்பது—
யாதெனில்...
பயன்—
பாராது—
பணி புரியும்—
பணி; புத்தியைப்—
பயன்
பாராது—
பணிபுரியப்—
பணி; புத்தி—நீ
பணித்தபடி—
பணி புரிந்தால்—
பணிக்கும் உனக்கும்—இல்லை
பிணி; பணியோடு
பிணியில்லை யாயின்—
பீடிக்காது உன்னை—
புகழ் இகழ் என்னும்
பிணி!

யாண்டும்—இந்த
யோக முறையில்...

படுகின்ற பாடு—பழுதாய்ப்
போவதில்லை;
அநுட்டானம்—
அரைகுறையாயினும்—
அதுவொரு குற்றமென்று
ஆவதில்லை!

....
ஆபத்தானதல்ல—நான்
சொலும்

கர்மயோகம்; அதனால்—
கடுகளவும் கேடுறாது தேகம்!

விதைத்த அளவு—
விளைவு;
உழைத்த அளவு
உயர்வு!

சிறிது—
சாதகம் செய்தாலும்...

அது
ஆன்ம சொரூபத்தைக் காட்டும்;
பிறப்பிறப்பு பயத்தை—
பெருமளவு ஓட்டும்!
....

கர்மயோகத்தைக்—
கருத்தூன்றிக் கற்கும்—
நிச்சய புத்தி எதுவும்—
நூற்பிடித்தாற் போல் நிற்கும்!
....

மலையையும்
மல்லாத்தவல்லது—
மனிதனின்—
'மனம் குவிதல்!'
மனம் குவிந்த—
மனிதனுக்கு—
மெல்ல மெல்ல வாய்க்கும்—
'மனம் அவிதல்!'
....

பலாபலன்களை—
பகிஷ்கரித்து....

திறம்படத்—
தொழில் புரிதலே யோகம்;
அதைப்
புரிவார்க்கு வாராது—
பிறப்பென்னும் ரோகம்!

வெற்றி தோல்விகளை—
விட்டொழித்தார்...

யாண்டும் அறிவார்—கர்ம
யோகத்தின் சூட்சம்;
எளிதாய் அவர்கள்—
ஏறுவர் மோட்சம்! (III-415-420)

(3) ஸ்திதப் பிரக்ஞன்: *சமாதி நிலையை சார்ந்து நிற்பவனை—கர்மயோகத்தை யோக்கியமாய்க் கற்பவனை—இனம் காண்பது பற்றிக் கார்முகில் வண்ணன் கழறுவது,*

ஆன்மாவே—ஓர்
ஆனந்த சொரூபம்—
என்பதை—
எவன் நேர்வானோ;

சகத்துள் இருக்கும்—
சகல சந்தோஷங்களும்—தன்
அகத்துள் இருப்பதை—
ஆர் ஓர்வானோ;

நெஞ்சில் துளிர்க்கின்ற—
நசைகளை—எவன்—
நஞ்சில் தோய்ந்தவை—என
நிராகரிக்கிறானோ;

புயலடித்தாலும்—
புலம் பெயராப் புல்போல்—எந்த

மயலடித்தாலும்
மல்லாந்து விழாதபடி—

புந்தியை எவன்—
பராமரிக்கிறானோ!

....

அவனே
நாண் சுட்டும்
நிறைஞானி!

அத்தகு—
ஆன்ம ஞானிக்கு....

துன்பத்தில்—
தோன்றிடாது வாட்டம்;
இன்பத்தில்—
இருக்காது நாட்டம்!

உள்ளத்தின்—
உள்ளே—
பற்று வைப்பதும்;
புற்று வைப்பதும்;

ஒன்றே என
உள்ளுவான்; அவன்
தொந்தங்களை—தூரத்
தள்ளுவான்!

அச்சத்திற்கு—அவன்
அர்த்தம் கேட்டவன்;
முனிவுக்கு அவன்
முழுக்கு போட்டவன்!

தரணிவாழ் மாந்தரில்—அவன்
தனி; ஞானம்—

முற்றிய வகையினில்—அவன்
முனி!

இச்சைகளால்—அவன்
இழுபட மாட்டான்;

சம்பத்துமேல்—
சம்பத்து வந்தாலும்; காலம்—
துன்பத்தின் மேல்—
துன்பத்தைத் தந்தாலும்....

நகையோ அழுகையோ—அவன்
நீள்விழிகளில் காட்டான்!

அவன் அறிவு—
ஆடாதது; அசையாதது;
எத்தகு ஈர்ப்பிற்கும்—
எப்பொழுதும் இசையாதது;

கண்டதையும்—
காணாததையும்—
கருதிக் கருதிக்
கவலைப்பட்டு...

கண்ணீர்ச் சேற்றில்—அது
கண்களைப் போட்டுப்
பிசையாதது!

....

இந்த
ஸ்திதியை எய்தியவன்
ஸ்திதப் பிரக்ஞன் ஆவன் (III– பக்.415-423)

இவனது தன்மைகளை மேலும் விளக்குகிறார்கவிஞர் வாலி.

தவம்போல்—வாழ்வை
தினம்பேணி—உயிருள்ள

சவம்போல்—மனிதச்
சந்தையில் கலந்து போவான்!
....

வையத்தார் கண்ணுக்கு—அவன்
வெற்றுப்புள்ளி;
ஆனால்—
அவனல்லவோ வைத்தவன்—
யோகங்களுக்கு—
முற்றுப்புள்ளி!
....

விஷயங்களில்—
விரல்கள் படாது—
சச்சிதானந்தத்தில்
சதா களிப்பான்
....

அவனது
ஆக்கை....

கடைநாளில்—
காடு நோக்கிப் போகும்;
அவனது—
ஆன்மா....

விண்ணகரம் என்னும்
வீடு நோக்கிப் போகும்! (III—பக். 422-25)

(4) ஞான யோகம்:

ஆன்மாவின்—
ஆனந்த சொரூபத்தை...

தத்துவ விசாரத்தால்—
தெளிவு பெற்று—அத்

தெளிவினால்—
தரிசிப்பது ஞானயோகம்!

'கிருஷ்ணார்ப்பணம்!' என்று—
காரியங்களாற்றி—அக்
கருமத்தால்—
காண்பது கர்மயோகம்!

முன்னதில்—
முனைவோர்—ஞானம்
பூத்ததும்—பரத்துவமாய்—
பழுப்பவர்;

பின்னதைப்—
பயில்வோர்—படிப்படியாய்ப்
பிஞ்சாகிக் காயாகிப்—
பழுப்பவர்!

....

அதை அதை—
அனுட்டிப்பார்க்கு—
அவரவர் உறுதிக்கேற்ப—
ஆன்ம விடுதலை தருபவை! (III—பக். 430)

(5) அவதாரம்; *அவதார இரகசியத்தையும் அருளுகின்ற அச்சுதன் அர்ச்சுனனுக்கு:*

நான்...
பிறப்பற்றவன்தான்;
இறப்பற்றவன்தான்; சகல—
சீவன்களுக்கும் ஈசனெனும்—
சிறப்புற்றவன்தான்!

எனினும்—
என் யோக மாயையால்....

அவ்வப்போது—
அவ்வப்போது—
அவசியத்தை முன்னிட்டு—
அவதரிக்கின்றேன்;

அறம்—
அடிசறுக்கி விழுவதும்;
மறம்—
மேல்நோக்கி எழுவதும்;

எப்பொழுதெல்லாம் நேருமோ—
அப்பொழுதெல்லாம்...

உருக்குலைந்த அறம்—
உருப்படியாய் மீட்டும்—
உருப்பெற—நான்
உபகரிக்கிறேன்!

தூயோர்க்குத்—
தாயாய்;
தீயோர்க்குத்
தீயாய்;

குலவவும்—
கோபிக்கவும்—
தருமத்தைத்—
தாபிக்கவும்;

யுகந்தோறும்—
யான்—
தொல்புவியில்
தோன்றுகிறேன்! (III—பக். 443-44)

(6) **பிரம்மம்:** *மிகப் பெரியது என்பது இதன் பொருள். தாயுமான அடிகள் தம் பரசிவ வணக்கத்தில் 'பெரிய பொருளைப் பணிகுவாம்', 'தீதில் பரமாம் பொருளைப்*

பணிகுவாம்' என்று திருவாய் மலர்ந்திருப்பதைக் காணலாம்.

வையமிசை–
வாழ்வோர் தம்–
வழிகளும்–
வழிபாடுகளும்....

அநேகம் ஆயினும்–அவர்கள்
அடியொற்றுதல் எனையே;
நானும்–
அவரவர் இறையாய்–
அவரவர்க்கு இயைந்து–
அவரவர் வழியிலேயே அணுகி–
அகற்றுகிறேன் வினையே!
....

தொழுகை வேறாயினும்–
தோத்திரம் வேறாயினும்
மானுட
அழுகை; துடைப்பதென்–
அருட்கை; தெய்வ
இனத்துள் வெவ்வேறு–
இருப்பதாய் நினைத்தல்–
மனத்துள் விளைகின்ற
மருட்கை!
....
அனைத்துயிர்களையும்....
எங்குமுள பிரம்மம்–
எனஏற்று–செய்யும்
வினைகளை–ஒரு
வேள்வி போல் ஆற்று!

சாங்க்கியமும் பிரம்மமும்;
சமித்துகளும் பிரம்மம்;

தருப்பையும் பிரம்மம்;
தழலும் பிரம்மம்;

அவியும் பிரம்மம்;
ஆகுதியும் பிரம்மம்;
ஆசாரமும் பிரம்மம்;
அனுஷ்டானமும் பிரம்மம்;

மறையும் பிரம்மம்;
மந்திரமும் பிரம்மம்;
ஆசமநமும் பிரம்மம்;
அர்க்கியமும் பிரம்மம்;

அத்தகு வேள்வியை—
ஆற்றுபவனும்....

அவன் உட்பட—
அவ்விடம் உள்ள—
அனைத்தும் பிரம்மம்—என
அறிந்து ஆவான் பிரம்மம்! (III—பக். 446-48)

(7) கர்மயோகம்—கர்ம சந்நியாசம்

இரண்டிற்கு மிடையே—
இல்லை வித்தியாசம்!

இவை—
இரண்டிற்குமே—
உண்டு சம பலம்; ஓம்பினால்—
உண்டு சமநலம்!

இதுவேறு; அதுவேறு—என
இயம்புவோர்—

பண்டிதரல்லர்;
பாலர்! புரியாது—எதிலும்
பாலர் போல் பேசுவோர்—
பெரும்
பாலர்!

இருப்பினும்—
இவை இரண்டில்...

இயற்கை—
இயல்போடு—
இயைந்து இயற்ற
இலகுவாக இருப்பதால்....

கர்மயோகம்—
கர்மத்துறவை விட
கனம் மிகுந்தது; அன்றாடம்—
கடைப் பிடிக்கத் தகுந்தது!

உறவு கொண்டு—
ஒட்டாமலும்;
துறவு கொண்டு—
தள்ளாமலும்;

இது தன்—
இயல்புக் கேற்ப—
இடப்பட்ட பணியென்று—
இயற்றுவோன்...

துறவிக்குடிய
துவராடையில் இல்லாவிடினும்;

திரிதண்டம்—
தாங்கியபடி செல்லாவிடினும்;

மழித்தல் நீட்டல்
முகத்தில் கொள்ளாவிடினும்;

மக்கள்முன்—தானொரு
மகான் என்று விள்ளாவிடினும்;

....

அவனை நீ...
நித்திய சந்நியாசியாக—

நினை; அத்தகையோன்–
சித்தத்தில் இலை–செருக்கின்
சினை; வேண்டுதலும்
வேண்டாமையும் அற்றது–
அவன்
வினை; மாதிரியாய்–
வைத்துக் கொண்டு
அவன் போலுனை–
வனை! (III–பக். 454-55)

....
கர்மயோகத்தில்–
கையூன்றிக் கொண்டு–
கர்மத்துறவெனும்–
கரணம் போடுவோன்–

காலம் அதிகம்–
கடந்து போகாது–
கடவுள் தன்மையைக்
கடுகக் கூடுவோன்! (III–பக். 457)

(8) யோகம்–துறவு

துறவு என்பது–
தொழிலைத் துறப்பதல்ல;
தொழிலின் விளைவான–
தோல்வி வெற்றியைத் துறப்பது!

யாது கிட்டும்?
யாது கிட்டாது? என–
யாதொன்றும் எண்ணாது–செய்யும்
யோகமே...

துறவு என்று–
தேர்க.

யாண்டும்—அத்தகு
யோகமும் துறவும்....

ஒன்றே என்று—
ஓர்க!

நிட்காமிய கர்மத்தை
நிதமும் பேணுவோன்...

அதையே—தனக்கு
ஆதாரமாகக் கொண்டு—
யோக நிலைக்கு—
ஏறுகிறான்; அங்கவன்
உரைக்க வொண்ணா
சாந்தத்தில் ஊறுகிறான்!

சமநிலையை...
சாந்த நிலையை...
துய்ப்பதற்குப் பெயர்தான்—
துறவு; அங்கு நேர்வது—
இன்ப துன்ப உணர்வுகளின்
இறவு! (III—பக். 460-61)

....
சமம் என்பது...

ஒருவன்— செயலை
ஒழுங்குபடுத்திய நடுநிலை;
செயல்படாதவன் போல்—

அவனை
சமாதியில் இடுநிலை!

நடுநிலையில்—
நின்று—
படுவேகமாய்—ஒரு
பம்பரம் சுழல்கையில்...

தொழிலற்று—அது
தூங்குதல் போல் தெரியும்;
ஆனால்—
ஒழுங்கான—
ஓர் இயக்கம்—
அதனுள் நிகழ்வது
ஆருக்குப் புரியும்? (III—பக். 462)

(9) தியான யோகம்

தியானத்தில் இருக்கும்—ஒரு
தீர்த்தனின் தேகம்—ஏதும்
தொழில் புரியாது—
தெருக்கல்லாய்க் கிடக்கும்;
ஆனால்—
அவனுள்—
தியானத்தில் நிலைபெறலே—
ஒரு
தொழிலாக நடக்கும்!
....
அதுதான் தியானயோகம்; அதை
நீ (ஒருவர்)
அன்றாடம்—அநுட்டித்தால்—அவர்மனம்
காற்றில்லா இடத்தில்—
கொண்டுவைத்த தீபமாகும்! (III-462-63)

(10) இறைவன்

உலகில்—
உள்ள பொருள்களெல்லாம்—
ஊடுருவி—நான்
உறைந்திருக்கிறேன்; அது
மற்றவர்க்குப் புலப்படாது—
மறைந்திருக்கிறேன்!

என்னுள்—
எல்லாம் நிலை; ஆனால்—
அவற்றுள்—நான்
அப்படி இலை!

ககனத்தில்—
காற்று—
சுதந்திரமாய்ச்—
சுழல்கிறது;
ஆயினும்—
அது—
வானத்திற்குள்தான்
உழல்கிறது!

வானத்தைத் தாண்டி—அதற்கு
வாழ்வில்லை; அஃதேபோல்—
வையப் பொருள்
யாவிற்கும்—நானே
வாழ்வெல்லை!

ஊழிக் காலத்தில்—
உண்டான
வற்றையெல்லாம்—நான்
உண்டுவிடுவது—
உண்டு; உண்டவற்றை—பிற்பாடு
உமிழ்ந்துவிடுவதும்—
உண்டு!

எனக்குள் அடங்கிய—
இயற்கையின் மூலம்...

அனைத்தையும்—
ஆக்குகிறேன்; கடை—
நாளினில்—
நீக்குகிறேன்! (III—பக். 482-83)

(11) எம்பெருமானை அடையும் எளிய வழி:

அனன்ய பக்தி—
ஆர்செலுத்தினாலும்—நான்
அகப்படுவேன்—
அவர்தம் கண்ணுக்கு; கைக்கு!
....
எவன் கால்களுக்கு—
எனைவிட்டால் திசையில்லையோ;
எவன் காதுகளுக்கு—எனை விட்டால்
இசையில்லையோ;
எவன் கைகளுக்கு—
எனை விட்டால்
பசையில்லையோ;
எவன் கண்களுக்கு—
எனைவிட்டால்
நசையில்லையோ;

எவர் எழுந்தபோதும்—
எவன் புகையானோ;
எவர் விழுந்தபோதும்—
எவன் நகையானோ;
எவர் எண்ணத்திற்கும்—
எவன் தகையானோ;
எவர் என்றிருப்பினும்—
எவன் பகையானோ—

எச்செயலையும்—எவன்
என்பொருட்டுச் செய்வானோ;
எஞ்ஞான்றும்— எவன்
எனை எண்ணிநைவானோ;

....
அவன் என்னை
அடைவது சுளுவு;

ஆசாரம்–
அநுஷ்டானம் எல்லாம்–
அவனுக்கு–
அநாவசிய பளுவு!' (III–பக். 513)

(12) ஓம் தத் சத்!

இந்த மூன்றும்–
இறுதியும் முதலும் இல்லா...

பரம்பொருளாகிய–
பிரம்மத்தைக்–
குறிக்கும் என்று–நீ
குறித்துக்கொள்ளல் நன்று!

வேதியர்;
வேதம்;
வேள்வி;

ஆகிய மூன்றும்–
அந்த மூன்றைக் கொண்டு–
பிரம்மத்தால்–
படைக்கப்பட்டன பண்டு!

வேத விதிப்படி–
வேள்வி; தவம்; தானம்...

ஆகியவற்றைப் புரிவோர்–
அவற்றை
'ஓம்' என்று–
உச்சரித்துத் தொடங்குவர்;

பயன்களை விரும்பாமல்–
பரமபதம் விழைவோர்....

வேள்வியை; தவத்தை;
வழங்கும் தானத்தை;

'தத்' என்று—
தோத்திரித்துத் தொடங்குவர்;

'தத்' எனும்—
சொல்...

நன்மை; உண்மை;
நற்காரியம்; இந்த—
மூன்றிலும் நிலையாய்—
முனைந்து நிற்றல்;

முதலிய—
மங்களகரமான—
செயல்களை மட்டும்—
சுட்டும்!

சுருக்கமாகச்—
சொன்னால்....
'பிரம்மத்தை நோக்கி—இதனைப்
புரிகிறேன்!'
என்பதை—
எடுத்துக் காட்ட 'ஓம்';

'கடமைக்காக; பலனைக்
கருதியல்ல!'
என்பதை—
எடுத்துக்காட்ட 'தத்';

'சிரத்தையோடு—இதனைச்
செய்கிறேன்!'
என்பதை—
எடுத்துக்காட்ட 'சத்'!

....

'ஓம் தத் சத் என—
ஒன்றாய் உச்சரித்து—

ஆற்றுதல் நலம்; கூடும்—
ஆன்ம பலம்!' (III—பக். 553-555)

(13) வழிபாட்டு வகைகள்

'உன்னை....

உருவமாய்க் கொண்டு—
உபாசிப்பதும் உண்டு;
அருவமாய்க் கொண்டு—
அருச்சிப்பதும் உண்டு!

இவ்வழி;
அவ்வழி; இவற்றில்—
எவ்வழி—
செவ்வழி?'

என்று பார்த்தன் வினவ, பரந்தாமன் பகர்ந்தவை:

'அவ்வழியும்—
இவ்வழியும்—
எவ்வழியும்—
செவ்வழியே;
எல்லாமே நேர்வழியே;
எனைவந்து சேர்வழியே!

என்னிடம் தம்மையே—
எவரெவர் ஈர்ந்தார்?
என்னையே சரணென—
எவரெவர் போந்தார்?
எனையலால் சுகமெனும்—
எவ்ரெவர் சீந்தார்?
எனையலால் சுவையெதும்
எவரெவர் மாந்தார்?

அவரெல்லாம்—என்னை
அடைவது திண்ணம்; எனக்கு

முக்கிய மானது—
மார்க்கமல்ல; எண்ணம்!

....

அருவமாய்—என்னை
ஆராதிப்பது—ஓர்
அற்புதக் கிரமம்; ஆனால்—
அதை அனுசரிப்பது சிரமம்!

....

(உருவம் பற்றி)
பலவகை ஆய்வுகளும்
பண்டிதர்களோடு போகட்டும்;
பக்தியோகம்—
பாமரர்க்கென்று ஆகட்டும்!

அவரவர்—
அவரவர்க்குப்—
பிடித்த வடிவில்—என்னைப்
பிடித்து வைக்கட்டும்;
பிடித்த மொழியில்—என்பேர்
படித்து வைக்கட்டும்;

....

விக்கிரகம் வைத்து
வழிபடவழிபட—இந்திரிய
நிக்கிரகம் வாய்க்கும்—
நாட்பட நாட்பட!

படிப்படியாய் ஏறிப்
பதினெட்டாம் படிக்குப்
போய்ச் சேருவதுதான்—
பக்தி யோகம்;

....

கால்வாசி அரைவாசி யின்றி—
கடுந்தியானத்தில்—என்னுள்

முழுவாசி—எவன்
முழுகுவானோ;

அவனை—
அக்கணமே....

பிறப்பென்னும்—
பெருங்கடலினின்று—
காப்பாற்றுவேன்; கைதூக்கிக்
கரையேற்றுவேன்! (III—பக். 514-16)

(14) பிரம்ம நிலையைப் பெறும் வழி:

வேண்டுதல் வேண்டாமை—
விட்டொழி;

உள்ள பொழுதை—
ஒற்றையாய்க் கழி;

புரையற்ற புத்தியைப்—
பேண்;

காஞ்சனம்; கல்; ஒன்றாகக்
காண்;

உண்டியைக் குறை; ஓரளவே—
உதரத்தை உணவால் நிறை;
தியானம் தினம் பயில்;
தவிர் சோம்பல்; துயில்;

வெகுளி;
வீக்கம் விடு;
வேட்கைக்கு—
விடைகொடு;

மனம்; வாக்கு; காயம்;
மூன்றையும் ஆள்;

அவற்றை அடக்க—ஏந்து
அறிவென்னும் வாள்;

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! என்று—
உச்சரித்துப் பழகு;
சாந்தம்தான்—தெய்வ
சித்தத்திற்கு அழகு!

இவற்றை—நீ
இயற்றினால்...

பிரம்மநிலைக்கான—
பக்குவம்—
பெற்றவன் ஆவாய்;
பிறப்பற்றுப் போவாய்!

இவ்வாறு—
இனிய—
பிரம்மநிலை யெய்தி—
பித்தம் தெளிந்தவனுக்கு....

துயரம் இல்லை; அவன்தொட—

உயரம் இல்லை!

உயிர்கள் யாவும்—அவனுக்கு
ஒன்று. அவனுக்கு—
அவன் வேறு; பிற வேறு—
அன்று!

மெய்ஞ்ஞானம்—
மிகுந்து விடுவான்;
போகப் போக—என்னுள்
புகுந்துவிடுவான்! (III-565-67)

இறுதியாக இறைவன் பார்த்தனை நோக்கிச் சொல்வது:

பகவான் தாள்களைப்–
பற்று; வாழலாம்–
பரமபதத்தைப்
பெற்று!

ரகசியத்திலும்–
ரகசியமான–

உயரிய ஞானத்தை–
உரைத்தேன் உனக்கு; இதனை–
ஆய்வு செய்து–உன்
அறிவுக்குப் பொருந்தினால்–
அனுஷ்டி;
ஆனந்தம் எனக்கு!

முடிவுரை

ஆதவ வம்சம் அப்பழுக்கற்றது; பரம்பொருளே தசரத குமாரர்களாக அவதாரம் செய்தனர்–ஆதவன் தூய்மை யானவன். அறிவியலறிஞர்கள் கூறும் சூரியப் புள்ளிகளைத் தவிர வேறு குறையில்லை; அவையும் ஊனக்கண்ணுக்குத் தெரியாதவை. அம்புலி களங்கமுடையது. களங்கமற்ற பகுதி பாண்டவர்களையும் களங்கமுள்ள பகுதி கவுரவர்களையும் குறிப்பதாகக் கொள்ளலாம். தவிர பாண்டவர்கள் தேவர் களின் அமிசமாகத் தோன்றியவர்கள்; கவுரவர்கள் பிண்ட மாய்த் தோன்றி தாழிகளில் குழந்தைகளானவர்கள். இவை போன்ற செய்திகளுடன் இந்த நூலின் சுருக்கமும் தோரண வாயிலில் காட்டப்பெற்றுள்ளன. கண்ணன் தேவகி வயிற்றில் (அம்புலி வமிசம்) பிறந்தாலும் இடைக் குலத்தில் வளர்ந்து இடையனாகவே காட்சி அளிக்கின்றான் என்றும், எங்கிருந்தோ வந்ததுபோல் அடிக்கடி அத்தினபுரம் வந்த கண்ணனின் பங்கு கதையில் ஏனையோர் பாங்கினை விஞ்சி நிற்கின்றது என்றும் சுட்டப்பெற்றுள்ளன.

இயல் இரண்டில் .பாண்டவர் பூமியில் ஆங்காங்கே பொதிந்துள்ள வருணனை வளம் (1) இயற்கை–ஆற்றங் கரைகள்; வனங்கள், வரைகள்; (2) சூரிய மண்டலம்; (3) செயற்கை–இந்திரப் பிரஸ்தம், மயன் சமைத்த மண்டபம், ஏகசக்கரம்; (4) கடவுளர்கள்–முருகன், சூரியன்; (5) முனிபுங்கவர்கள்–வியாசர், நாரதன், மந்தபாலர், மாண்டவ்யர்; (6) அழகின் தத்துவம்–பெண்ணின் பெருமை, பெண்கள் அழகு, (சத்தியவதி, பிருதை, சித்திராங்கதை, இடிம்பி, ஊர்வசி, ஜாலவதி, தமயந்தி, உலூபி, பாஞ்சாலி); ஆணின்

அழகு—[பீமன், அபிமன்யு, அர்ச்சுனன்] (7) காம இச்சை—ஆண்கள் கீசகன், அர்ச்சுனன், சந்தனு, நகுஷன்; பெண்கள்—இடிம்பி, ஊர்வசி, சுபத்திரை, சித்திராங்கதை; (8) அர்ச்சுனன் தவநிலை—என்ற தலைப்புகளில் சுவையாக எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

இயல் மூன்றில் கதை மாந்தர்கள் அறிமுகம் தரப்பெற்றுள்ளது. கதைக்கு இன்றியமையாதனவுள்ள ஐம்பத்துஐந்து பேர் அறிமுகமாகியுள்ளனர்—வாலியாரின் வாக்கிலேயே.

இயல் நான்கில் அணிநலன்கள் காவியத்தில் அமைந்துள்ள நேர்த்தி நுவலப் பெற்றுள்ளது. உவமை, உவமத் தொகை, உருவகம் ஆகியவற்றை அமைத்து கவிதை பாடுவதில் வாலியாரின் தனித்தன்மை புலனாகின்றது என்பது தெளிவாக விளக்கப் பெற்றுள்ளது.

இயல் ஐந்து கவிஞர் வாலியின் சொல்லாட்சிச் சிறப்பினைச் சொல்லுகின்றது. இது (1) சொல்வீச்சுகள், (2) பழமொழிகள், (3) சொற்பொருள் நயப்பகுதிகள், (4) மரபுத் தொடர்கள் இவற்றை வாலியார் காவியத்தில் அற்புதமாக அமைத்து காவியத்திற்குப் புது மெருகூட்டப் பெற்றுள்ளமை தெளிவாக விளக்கப் பெற்றுள்ளது.

இயல் ஆறில் காவியத்தில் கிளைக்கதைகள் அற்புத மாக அமைந்து முதற் கதையின் ஓட்டத்தை முடுக்கி விடுவதையும் பல நீதிகளைப் பகர்வதையும் காண முடிகின்றது. இந்தப் பாங்கு வாலியாரின் கைவந்த கலையாக மிளிர்கின்றது.

இயல் ஏழில் நவரசங்கள் அமைந்துள்ள பாங்கு மிக நுணுக்கமாக எடுத்துக் காட்டப் பெற்றுள்ளது. இரச தத்துவம் இன்னதெனவும், காவியத்தில் அமைந்துள்ள வையே இரசம்

என்றும், வாழ்க்கையில் வருவது இரசம் ஆகாது என்றும் விளக்கப் பெற்றுள்ளன.

இயல் எட்டு கண்ணன் தூது போனதன் ஏற்றம் இயம்புகின்றது. இது வில்லி பாரதத்தில் அமைந்துள்ள பாங்கும் எடுத்துக் காட்டப்பெற்று இரண்டும் ஒப்பீடு செய்யப்பெற்றுள்ளன. பூபாரம் தீர்க்க வந்த புயல்வண்ணனின் பொறுப்பு நிறைவேற்றுவதன் அடிப்படையே இஃது என விளக்கப் பெற்றுள்ளது.

இயல் ஒன்பதில் காவியத்தைப் படைத்த கவிஞர் வாலியின் கிருட்டிண பக்தி விரிவாகக் காட்டப் பெற் றுள்ளது. ஆதிமூலம்தான் ஆகாயம் விட்டு அன்னை மூலம் அம்புவிக்கு வந்து செய்த திருவிளையாடல்களை கவிஞர் வாலி குறிப்பிடும்போது தம்மையே மறந்த நிலையாகி விடுகின்றார் என்றும், அவர் வாக்கில் கண்ணனைப்பற்றி வரும் ஒவ்வொரு சொல்லும் சொற்றொடரும் ஆழ்வார் பாசுரங்களின் அடியொற்றி அமைந்துள்ளன என்றும் எனக்குத் தோன்றுவதாகக் குறிப்பிட்டுள்ளேன்.

இயல் பத்து காவியத்தில் பொதிந்துள்ள உண்மைகளையும் படிப்பினைகளையும் எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன. இவை (1) வாழ்க்கை பற்றியவை—பற்று—பந்தம் பாசம்; அறம், வாழ்க்கை நியதி, மனம், துறவு, நிலையாமை முதலியவை; (2) விதி பற்றியவை, (10 நிகழ்ச்சிகள்), (3) நம்பிக்கைகள், சாபங்கள், (அறுவர் போட்டவை), சபதங்கள் (நால்வர் செய்தவை), (4) நிமித்தங்கள் (ஐந்து நிகழ்ச்சிகள்), (5) சூதால் விளையும் கேடுகள் (6) சாதிக் கொடுமை என்ற தலைப்புகளில் சாற்றப் பெற்றுள்ளன.

இயல் பதினொன்று கண்ணன் அருளிய கீதை பற்றியது. இராமன் வாழ்ந்து காட்டினான்; கண்ணன் வாழ்ந்து

காட்டியதுடன் மன்பதைக்கு என்றும் வழிகாட்டக் கூடிய தாகவுள்ள கீதையை விட்டுச் சென்றுள்ளான். ஏழுநூறு சுலோகங்களால் அமைந்துள்ள கீதையின் சாரமாக தம் காவியத்தில் தந்துள்ளார் கவிஞர் வாலி. இதனையே அடியேன் சாரத்தின் சாரமாக பதினான்கு தலைப்புகளில் தந்துள்ளேன்.

'பாண்டவர் பூமி' புதுக் கவிதையில் அமைந்த ஒரு 'கட்டுரைக் காவியம்'. வியாச பகவான் வடமொழியில் அமைத்த இப்பெருங்கதையை தமிழில் விருத்தயாப்பில் வில்லிபுத்தூராழ்வார் வழங்கியுள்ளார். தமிழில் 'நல்லாப்பிள்ளை பாரதம்' என்ற ஒரு நூலும் உண்டு. வியாச பாரதம் தமிழ் வசன நடையில் தோன்றி தமிழுலகத்தில் பெருந் தொண்டு புரிந்துள்ளது. அப்பதிப்பு இன்று அருகிவிட்டது. வில்லியும் நல்லாப்பிள்ளையும் புலவர்களின் சொத்துகளாக இருக்க, கவிஞர் வாலியின் புதுக்கவிதையில் அமைந்த 'பாண்டவர் பூமி' பொதுமக்களின் சொத்தாக அமைந்துவிட்டது; புலவர்கட்கு எட்டும் போக்கிலும் அமைந்துள்ளது. இதனை இவ்வுலகுக்கு வழங்கி உபகரித்த கவிஞர் வாலி 'தமிழ் வியாசர்' என்று கருதும் அளவுக்கு உயர்ந்துவிடுகின்றார்; தமிழர் நெஞ்சங்களில் நிலையான இடத்தைப் பெற்றுத் திகழ்பவருமாகின்றார்.

卐



First Paper: *என்ன ஆச்சரியம்?* **"Enna Aacharyam !" [1949]**

ஓர் அறிமுகம்

பேராசிரியர்

ந சுப்பு ரெட்டியார்



Books Published : **135 + 1**
Papers Published : **200** [Tamil 173 + English 27]
Endowments established: **10**
Endowment Lectures : **12**
Awards received: **8**
Prizes won : **14**
Titles conferred : **8**

Masterpieces:

1) Tamil Payitrum Murai [1957]
2) Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar [English][His PhD thesis] [1977]
3) Kalvi Ulaviyal Kotpaadukal [1989]
4) Vainava Selvam [1995]

Financial Aid for publishing the Books:

a) Tirumala Tirupathi Devasthanams - 21
b) Directorate of Tamil Development
Government of Tamil Nadu - 6

Research on Professor's Books

a) University of Madras - 1993 (leading to PhD)
b) Madurai Kamaraj University - 2017 (leading to PhD)



பேராசிரியரின் 135 நூல்களில், தெரிவு செய்யப்பெற்ற 100 நூல்கள் (முழுமையாக)
http://tinyurl.com/nsr100collections
எனும் இணையதளத்தில் உள்ளன. [freely downloadable]

India Book of Records

CERTIFICATE

CENTENARY CELEBRATIONS OF PROF DR. N SUBBU REDDIAR

Prof Dr S Ramalingam (born on 13 Oct 1949) Organizing Secretary, Na Subbu Reddiar 100 Educational Trust, Chennai, Tamil Nadu, has conceived, designed and meticulously executed 108 Centenary Events throughout Tamil Nadu during the Centenary Year (2015-2016) of Prof. Dr. N Subbu Reddiar who served the cause of education for 65 years andwritten 135 books in various fields (100 books after retirement).

Biswaroop Roy Chowdhury
Chief Editor
India Book of Records

Date: March 19, 2018

India Book of Records is registered with the Government of India with RNI no. HARENG/2010/32259.

India Book of Records is affiliated to Asia Book of Records and follows Asian Protocol of Records (APRs) as per the consensus arrived at the meeting of the Chief Editors of National Record Books, Ho Chi Minh City, Vietnam.

ISBN: 978-81-938927-4-9

9 788193 892749 >

